ஸ்ரீ ஆசாரிய மானதுங்க முனிவரின்

# ஆதிநாதர் புகழ்மாலையும் பக்திக் கதைகளும்



Q3
ΛΊ93
187889

வெளியீடு:
...யக் ஞான பிரசார சங்கம்,
6, 5வது தெரு, புதிய காலனி,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

48194
186

வெளியீடு: 18

ஸ்ரீ ஜினாய நம:

ஸ்ரீ ஆசாரிய மானதுங்க முனிவரின்

# ஆதிநாதர் புகழ்மாலையும் பக்திக் கதைகளும்

பதிப்பாசிரியர்:

பாணிபூஷன் காவ்ய தீர்த்த சாகித்ய ரத்ன, பிரதிஷ்டாசாரிய
எ.சிம்மசந்திர ஜைன் சாஸ்திரியார்

35

வெளியீடு:

சம்யக் ஞான பிரசார சங்கம்,

6, 5வது தெரு, புதிய காலனி,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

புத்தகத்தின் பெயர் — ஆதிநாதர் புகழ்மாலையும்
பக்திக்கதைகளும்

மொழி — சமஸ்கிருதமும், தமிழும்.

பதிப்பு — முதல்

பதிப்பு ஆண்டு — 1993

ஆசிரியர் — ஆசாரியர் ஸ்ரீமானதுங்க முனிவர்

பதிப்பாசிரியர் — செம்மசந்திர ஜைன் சாஸ்திரியார்.

பதிப்புரிமை — சம்யக் ஞான பிரசார சங்கம்.

அச்சு எழுத்து — 12, 10, 18 Pts.

பக்கம் — II + 262.

அச்சிட்டோர் — ஆசாரியர் குந்த குந்தர் அச்சுப் பயிற்சி
நிலையம்.

வெளியீடு — சம்யக் ஞான பிரசார சங்கம்,
சென்னை - 88.

பொருள் — வழிபாடும் கதையும்
விலை — ரூ.35.00

# முன்னுரை

மனிதனுக்கு இன்னல் வந்தபோது இறைவனை நினைக்கும் பழக்கம் பாரத நாட்டில் எல்லா நெறியாளரிடமும் உண்டு. ஆனால், இன்னல் வந்தபோது மட்டும் இறைவனை நினைக்காதே; அல்லும் பகலும் எந்நேரமும் பகவானை நினை: அவர் குணங்களை நினைத்து துதிசெய்; அப்பொழுதுதான் உன் மனமும் ஆன்மாவும் தூய்மை அடையும்; அதன் விளைவாக இன்னல் நீங்கி இன்பம் பெறலாம் என ஜைன நெறி கூறுகிறது.

மானதுங்க ஆசாரியர் பகவான் ஆதி தீர்த்தங்கரரைக் குறித்து துதி செய்து பாடிய பக்தாமரம் சுலோக வடிவில் அமைந்திருந்த போதிலும் மிகவும் சிறந்த முறையில் வருணனை செய்து போற்றத்தக்க காவியமாக அமைத்துள்ளார்.

இந்நூலைத் தமிழில் "ஆதிநாதர் புகழ் மாலை" என்று அழைப்பர்.

மனதைக் கவரக்கூடிய எளிய சொற்களைக் கொண்டு பொருள் நயமும், இலக்கிய நயமும் அமைந்த இந்தக் காவியம் பாராட்டுதற்குரியது. இதன் வருணனை பொருத்தமாகவும் மனதைக் கவரும் வண்ணமும் உள்ளது.

முதல் இரண்டு சுலோகங்கள் ஜைன பாரம்பர்யத்திற்கு ஏற்றவாறு அருகன் வாழ்த்து (மங்களா சரணம்) முறையில் அமைந்துள்ளன. மங்களம் என்னும் சொல்லுக்கு பாபத்தைப் போக்குதல், சுகத்தை அளித்தல் எனப் பொருள். எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் முதன் முதலில் மங்களா சரணம் கூறப்படுகிறது. பாபத்தைப்

போக்கிப் புண்ணிய சுகத்தைப் பெற வேண்டுமென்கிற நோக்கம் கொண்டுதான் மங்களா சரணம் கூறும் வழக்கம் தொன்றுதொட்டு வந்துள்ளது. இதற்கு இணக்கமாக மானதுங்க ஆசாரியர் முதன் முதலில் இரண்டு சுலோகங்களில் பகவான் ஆதிநாதரைக் குறித்து துதி செய்துள்ளார்.

முதல் இருபத்து ஏழு சுலோகங்களில் ஜின பகவானின் சிறந்த பெருமையைப்பற்றி அழகாக வருணனை செய்துள்ளார். பிறகு எட்டு சுலோகங்களில் எட்டு பிராதி ஹார்யங்களைப்பற்றி வருணனை செய்துள்ளார். முப்பத்தாறாவது சுலோகத்தில் தேவர்கள் ஜின பகவானுக்கு அமைத்த பொற்றாமரைப்பற்றியும், முப்பத்தேழாவது சுலோகத்தில் ஜின பகவானுக்கு மட்டும் பிராதி ஹார்யங்கள் உண்டு என்பதாகவும் முப்பத்தெட்டாவது சுலோகம் முதற்கொண்டு நாற்பத்தாறாவது சுலோகம் முடிய எண்வகை அச்சங்களைப்பற்றியும், நாற்பத்தேழாவது சுலோகத்தில் எட்டு அச்சங்களை ஒட்டுமொத்தமாக விளக்கி வருணனை செய்துள்ளார். கடைசி சுலோகத்தில் தம்முடைய விருப்பத்தை சிலேடையாக வருணனை செய்துள்ளார். ஒவ்வொரு சுலோகத்திலும் படிப்பவர் உள்ளத்தில் நன்மையையும், நற்பண்புகளையும், பக்தியையும் தோற்றுவிப்பதோடு ஆன்மீக உணர்வையும் தூண்டும் வண்ணம் அமைத்துள்ளார்.

ஒவ்வொரு சுலோகத்திற்குப் பதவுரையும், தெளிவுரையும் விளக்கவுரையுடன் ஆய்வு உரையும் உள்ளன. இதைப் படிக்கும் பக்திமான்களுக்கு இந்த தோத்திரத்தைப்பற்றிய தெளிவு ஏற்படும் என்பதில் ஐயமில்லை

**அ. சிம்மசந்திர ஜைன் சாஸ்திரியார்.**

வீதராகாய நம:

# ஆதிநாதர் புகழ் மாலை

## மங்களா சரணம்

பக்தாமர - ப்ரணத - மௌலி - மணி - ப்ரபாணா -
முத்யோதகம் தளித - பாப - தமோ - விதாநம் |
ஸம்யக் - ப்ரணம்ய ஜிநபாதயுகம் யுகாதா -
வாலம்பநம் பவஜலே பததாம் ஜநாநாம் ‖ (1)

ய: ஸம்ஸ்துத: ஸகல - வாங்மய தத்வ போதா -
துத்பூத - புத்தி - படுபி: ஸுரலோக - நாதை: |
ஸ்தோத்ரைர் - ஜகத்த்ரிதய - சித்தஹரை - ருதாரை:
ஸ்தோஷ்யே கிலாஹமபி தம் ப்ரதமம்
ஜிநேந்த்ரம் ‖ (2)

பதவுரை :

(பக்தாமர ப்ரணத மௌலி மணி ப்ரபாணாம்) பக்தர்களாகிய அமரர்கள் வணங்கியதால் அவர் தம் மகுட மணியின் ஒளியை, (உத்யோதகம்) அதிகம் பிரகாசிக்கச் செய்கிற, (தளித பாப தமோ விதானம்) பாபமாகிய இருளைப் போக்கக்கூடிய, (யுகாதை) நான்காம் காலத்தில் (பவ ஜலே) பிறவியாகிய கடலில், (பததாம்) விழுந்திருக்கின்ற (ஜனானாம்) மக்களுக்கு, (ஆலம்பனம்) (அவர்களை கரை ஏற்றுவதற்கு) ஆதாரமாக உள்ள, (ஜினபாதயுகம்) ஜின

பகவானது [ஆதி பகவானது] திருவடிகளை (சம்யக்) நன்றாக [பக்தியுடன்], (ப்ரணம்ய) வணங்கி, என்றவாறு.

(ய:) யாவனொருவன், (சகலவாங்மய தத்வ போதாத்) எல்லா ஆகம தத்துவ ஞானத்தினால் (உத்பூத புத்தி படுபி:) ஏற்பட்ட அறிவுத் திறனுடைய (ஸுரலோக நாதை:) தேவ லோகத்து தலைவர்களாகிய தேவேந்திரர்களால், (ஜகத் த்ரிதய சித்த ஹரை:) மூன்று லோகத்து மக்களைக் கவரும் வண்ணம், (சம்ஸ்துத:) நன்றாகத் துதி செய்யும், (தம்) அந்த, (ப்ரதமம்) முதல் ஜினபகவானாகிய விருஷப தீர்த்தங்கரரை, (அஹமபி) நானும், (ஸ்தோஷ்யே) தோத்திரம் செய் கிறேன், எ. று.

கருத்துரை :

நான்காம் காலத்தில் தோன்றிய முதல் தீர்த் தங்கரராகிய விருஷப சுவாமிகள் திருவடியை வணங்கிய தால் பக்தர்களாகிய தேவர்களின் மகுட மணியின் ஒளியா னது அதிகரித்துள்ளது. இந்த ஜின பகவான் பிறவிக் கடலில் முழுகி இருக்கும் மக்கள் கரை ஏறத் துணையாக உள்ளார். அவர்தம் திருவடியை வணங்குகிறேன். அதிக பக்தியுடைய தேவேந்திரர்களும் மூன்று உலகத்திலும் உள்ள மக்களின் மனதையும் கவரும் வண்ணம் கம்பீர மாகிய தோத்திரங்களால் பாராட்டித் துதிக்கின்றனர். அத் தகு பகவானாகிய விருஷப தீர்த்தங்கரரை நானும் துதிக் கிறேன்.

விளக்க உரை :

தான் விரும்பும் கடவுளைச் சிறந்த முறையில் பக்தி செய்பவன் பக்தன். விருப்பு வெறுப்பு அற்ற பகவான் வீதராகன். அவரே வணக்கத்திற்கு உரியவர். அவர் ஜின பகவான். அவரை வணங்கும் பக்தர்களாகிய அமரர்கள் மண்டியிட்டு தலை குனிந்து வணங்கும் போது அவர் களுடைய மகுடத்தில் பொதிந்துள்ள சந்திர ஒளிக்கு

ஒப்பான மணிகளின் ஒளியானது பகவானின் பாத கமலங்களின் ஒளியினால் பிரதிபலித்து அதிக ஒளியினைப் பெற்றதாம். அதாவது பகவானின் திருவடி நகங்களின் ஒளியானது சந்திர காந்த இரத்தினங்களைக் காட்டிலும் அதிக ஒளிமயமாக உள்ளது என்பதாம். பாபமென்னும் இருளைப் போக்கக் கூடியதும் பிறவிச் சுழல் என்னும் சம்சாரச் சூழலில் உழலும் பிராணிகளைத் துன்பங்களிலிருந்து விடுவிக்கத் துணையாக இருப்பதுமான ஜின பகவான் திருவடிகளே சரணம் எனக் கருதி, தேவர்க்கெல்லாம் தேவனாகிய இந்திரன் மூன்று உலகத்தையும் கவரக்கூடிய சிறந்த தோத்திரங்களால் துதி செய்து வணங்கினான். அத்தகு ஆதி பகவானை நாமும் வணங்குவோமாக.

இரும்புச் சங்கிலியால் உடல் முழுவதும் கட்டப்பட்ட மானதுங்காசாரியர் பாதாளத்திற்கு ஒப்பான இருட்டு அறையில் தள்ளப்பட்ட போது அவர் ஆதிநாத பகவானைத் துதி செய்ய ஆரம்பித்தார். அப்பொழுது நன்மையும் மங்களமும் உண்டாகும் வண்ணம் தூய சொல், செயல், சிந்தனை ஆகியவைகளை ஒருங்கே சேர்த்து கம்பீரமான கருத்து நிரம்பிய சொற்களை இணைத்து சுலோக வடிவத்தில் அமைத்துத் துதி செய்யத் தொடங்கினார்.

**"ஸ்தோஷ்யே கிலாஹமபி தம் ப்ரதமம் ஜிநேந்த்ரம்"** என்கிற வாக்கியங்களால் அவருடைய சங்கல்பமானது வெளிப்படுகிறது.

மங்களம் இரண்டு வகைப்படும்: 1. திரவிய மங்களம் 2. பாவ மங்களம் என. அஷ்ட திரவியம் அதாவது பூஜைப் பொருள்கள் திரவிய மங்களமாகும். ஜினபகவானை நினைப்பதும் துதிப்பதும் பாவ மங்களமாகும். நமது நோக்கம் கை கூடவும், வரும் இடையூறுகள் நீங்கவும் பாவ

மங்களம் அதாவது உள்ளத்தில் தோன்றும் பக்தி அவசிய மாகும். ஆதலால்தான் ஆசாரியர்கள் சித்தாந்த நூல்களை எழுதத் தொடங்குவதற்கு முன்பு மங்கள மயமான பஞ்ச பரமேஷ்டிகளைத் துதி செய்து அவர்களை நினைத்து மன வசன காயங்களால் வணங்குகின்றனர்.

இரண்டு கைகளையும் குவித்து நெற்றிக்கு நேராக வைத்து வணங்க வேண்டும். ஆனால், பகவான் மீது நம்பிக்கையும் பணிவும் அதிக ஆதரவும் ஈடுபாடும் பக்தி எண்ணமும் இல்லாது இருப்பின் அது நம்முடைய நோக் கங்களை தீர்த்து வைப்பதற்கும் இடையூறுகளை நீக்கு வதற்கும் காரணமாக அமையாது. ஆனால் இங்கு மான துங்காசாரியர் தூய மன, வசன, காய யோகங்களால் பக்தி பாவனையினால் ஆதிநாத பகவானை வணங்கித் துதி செய்யலானார்.

ஜைன ஆகமத்தில் அரகந்த பகவான் மங்களம், சிறந்த பதவியில் இருக்கும் சாதுக்களின் சங்கமும் மங்கள மயமானது, வாலறிவினால் கூறப்பட்ட அறமும் மங்கள மயமானது எனவும், இவற்றை நினைத்துச் செய்யும் பாவ நமஸ்காரமும் மகா மங்களகரமானது எனவும் கூறப் பட்டுள்ளது.

பக்தாமரத்தோத்திரத்தை இயற்றிய மானதுங்கா சாரியர் வணங்கிய ஆதிபகவானின் பாதத் தாமரை எத் தன்மையானது என்பதைச் சிறப்பு மிக்க உவமைகளைக் கொடுத்துக் கூறியுள்ளதைக் காணலாம்.

தேவர்கள் மண்டியிட்டுத் தலை வணங்கிப் பக்தி செலுத்தும் போது அவர்களுடைய மகுடங்களில் உள்ள இரத்தினங்களின் ஒளியானது அற்புதமான அலௌகீகத் தன்மையைப் பெற்று நான்கு திசைகளிலும் பரவியது எனக் கூறியுள்ளார். ஜினபகவானின் பாதங்களில் உள்ள நகங்களிலிருந்து சுடர்விடும் ஒளியானது தேவர்களின்

மகுடங்களில் இருந்த இரத்தின ஒளியினை அதிகப் படுத்தியது. இந்த ஒளியினுல் நல்ல சூழ்நிலே அமைந்தது. ஜினபகவானின் திருவடியில் கோடிக்கணக்கான தேவர் கள் தலை வணங்கி நிற்கின்றனர். அவர்களும் பக்தர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

ஜிநபகவானின் திருவடி பாபங்களைப் போக்க வல்லது. அவரை வணங்கும் பக்தர்களின் உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்கள் பறந்தோடுகின்றன. அவர்கள் மனத் தூய்மை பெற்று நற்பலனைப் பெறு கின்றனர். ஆதலால் மனத் தூய்மை பெறுவதற்கு ஜின பகவான் திருவடிச் சேவையே சிறந்தது. இதற்கு ஒப்பானது இவ்வுலகில் வேறு இல்லை.

பகவானின் வழிபாடு, பிறவிச் சுழல் என்னும் சம்சாரக் கடலில் மூழ்கும் உயிர்களைக் கரை சேர்ப்பதற்குக் காரணமாக அமைகிறது. இவருடைய திருவடியே சரணம் எனக் கருதும் பக்தர்களுக்குப் பிறவிச் சுழலில் ஏற்படும் பயம் உண்டாவதில்லை. இவருடைய பக்தியானது பிறவிக் கடலைக் கடப்பதற்கு உறுதியான ஓடம் போன்றது என்று கூறினால் மிகையாகாது. இவரை அடைக்கலம் அடைந்த பக்தர்கள் சம்சாரக் கடலே எளிதில் கடப்பர். அவர்கள் "யுகாதெள" என்கிற சொல் நான்காம் காலத் தொடக்கத்தைக் குறிக்கிறது.

சொல்ல முடியாத சக்தியினைப் பெற்ற தேவேந் திரரும் ஜினபகவான் மீது பக்திகொண்டு வணங்குகிறார் என்றால் நம்மைப் போன்றவர்களைப் பற்றி என்ன கூறுவது? பிறவிப் பிணியில் சிக்குண்ட நாம் பகவானை வணங்குவதிலும் துதிப்பதிலும் எப்பொழுதும் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும். நாம் ஆதிபகவானுடைய திருவடியினை வணங்குவது பக்தியுள்ள தேவர்கள் செய்த வணக்கத்தைப் பின்பற்றுவது போன்றாகும்.

பக்தன் சிறந்த பதவியினைப் பெறுவதற்கு விருப்பமுள்ளவனாவான். அதற்கு எவர் சிறந்த பதவியினைப் பெற்றுள்ளாரோ அத்தகு அரகந்த தேவரை வணங்க வேண்டும். அவர் பொருட்டு பக்தி செலுத்த வேண்டும். இங்கு மானதுங்காசாரியர் முதல் தீர்த்தங்கரராகிய ஆதிநாத பகவானை வணங்குகிறார். இவர் யுகத்திற்கு ஆதியில் தோன்றியவர். ஆதலால் இவருக்கு ஆதி பகவான் எனப் பெயர் வழங்கலாயிற்று. தேவர்கள் இவரை வணங்கினர், துதி செய்தனர். இவர்கள் 'சகல வாங்மயம்' அதாவது எல்லா சாஸ்திரங்களையும் பாராயணம் செய்து புண்ணியத்தைப் பெற்றனர். அதனால் ஏற்பட்ட ஞானத்தின் வழி ஆதிபகவானைப் போற்றிப் பாராட்டி வணங்கினர். இவரைப் பின்பற்றிய மானதுங்காசாரியர் ஆதிபகவானைத் துதி செய்து அவருடைய குணப் பெருமையை எடுத்துரைக்க இந்த பக்தாமர ஸ்தோத்திரத்தைச் செய்தார்.

தீர்த்தங்கரர் அனைவரும் ஒரே விதமான குணங்களைப் பெற்றவரே. ஒரு தீர்த்தங்கரருக்கு இருக்கும் குணங்கள் மற்ற தீர்த்தங்கரரிடம் குறைந்தோ அதிகரித்தோ இருக்கின்றன என்பதல்ல. ஆதலால் இந்த தோத்திரத்தில் கூறப்படும் அனைத்து குணங்களும் அனைத்துத் தீர்த்தங்கரர்களுக்கும் பொருந்தும்.

தீர்த்தங்கரர் முப்பத்து நான்கு அதிசயங்களையுடையவராவர். அந்த முப்பத்து நான்கும் நான்குப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை: 1. ஞானாதிசயம் 2. வசநாதிசயம் 3. பூஜாதிசயம் 4. அபாயாபகம அதிசயம் என. இதில் சர்வக்ஞத் தன்மை ஞானாதிசயம் 'திவ்யத்வனி' வசநாதிசயம்; தேவர்களால் பூஜிக்கப்படுவது பூஜாதிசயம்; சுற்றுப்புற சூழல் எவ்வித இடையூறுகளுமின்றி வளம் நிறைந்த நிலையில் அமைவது அபாயாபகம அதிசயமாகும்.

"பக்தாமர ப்ரணத மௌலி மணி ப்ரபாணாம் உத்யோதகம்" என்கிற வாக்கியத்தில் பூஜாதிசயம் அடங்கியுள்ளது. "தளித பாப தமோ விதானம்" என்பதில் அபாயாபகம அதிசயம் காணப்படுகிறது. அபாயம் என்பதற்கு தீங்கு எனப் பொருள். பாபத்தின் விளைவு தீங்கு. இஃது இல்லாமையே வளம் நிறைந்த சூழ்நிலையாகும். 'ஆலம் பனம் பவஜலே பத்தாம் ஜனானாம்" என்பதில் ஞானாதிசயமும் வசனாதிசயமும் புலப்படுகின்றன.

ஜினபகவான் திருவடி வணக்கம் சம்சாரம் என்கிற பிறவிச் சுழலில் உழலும் உயிர்களை கரை ஏற்றத் துணையாக-சாதனமாக உள்ளது என்று முன்பு கூறப்பட்டது. ஆனால் இங்கு ஞானாதிசயம் வசநாதிசயம் பிறவி உயிர்களைத் துன்பத்திலிருந்து கரை ஏற்ற சாதனம் என்று கூறுவது முன்பின் முரண்பாடாக உள்ளதே என்கிற ஐயம்கொள்ள வேண்டாம். யதாக்யாத சாரித்திரத்தையடைந்த ஜினபகவான்தான் சர்வக்ஞன், வீதராகி ஆகிறார். அவருடைய சிறந்த அதிசயம் நிரம்பிய அறவுரைதான் மக்களுக்கு நன்மை தருவதாகும். இதுவே சம்சாரமென்னும் சாகரத்திலிருந்து கரை ஏறுவதற்குத் துணைபுரிகிறது. ஆதலால் இங்கு எவ்வித ஐயமும் கொள்ள வேண்டியது அவசியம் இல்லை.

பொன்னாரும் திருவடியில்
புத்தேளிர் தாழ
பொலிவார்ந்த முடிகட்கு
ஒளியாரம் சூழ
மண்ணாரும் உயிர்தம்மின்
பாவங்கள் மாய
மனுவாகி உலகோர்க்கு
முதலாகும் நாதா! (1)

தம் ஆதி நாதம் சரணம் வ்ரஜாமி
தம் ஆதி நாதம் சரணம் வ்ரஜாமி

அறிவார்ந்த பொருள் தம்மை
விரிவாக ஓர்ந்தே
அறமோதும் வ்ரஷபேஸ!
அணிதேவர் பாட
செறிவார்ந்த தத்வங்கள்
சிறிதேனும் அறியா
சிறியேனும் உனைப்பாட
சிந்தித்து நின்றேன். (2)

(தம் ஆதி)

## அவை அடக்கம்

**புத்யா விநாபி விபுதார்சித பாதபீட**
**ஸ்தோதும் சமுத்யத மதிர் விகதத்ர போஹம்,**
**பாலம் விஹாய ஜலசம் ஸ்திதமிந்து பிம்பம்**
**அந்ய: க இச்சதி ஜந: சஹஸா க்ரஹீதும் (3)**

**பதவுரை :**

(விபுதார்சித பாத பீட) பவணர் முதலிய நால் வகை தேவர்களால் பூஜிக்கப்பட்ட, தாமரை மலரைப் போன்ற திருவடியையுடைய விருஷப சுவாமியே, (புத்யா விநாவபி) புத்தி இல்லாமல் இருந்தும், (ஸ்தோதும்) தங்களைத் துதி செய்வதற்கு, (ஸமுத்யத மதி:) முயற்சி செய்யும் மனம் உள்ளவனாக உள்ளேன்; (அஹம்) நான், (விகத த்ரப:) நாணம் அற்றவனாகவும் உள்ளேன்; (எப்படி எனில்), (ஜல ஸம்ஸ்திதம்) நீரில் உள்ள, (இந்து பிம்பம்) சந்திர பிம்பத்தை, (சஹஸா) விரைவில், (க்ரஹீதும்) பிடிப்பதற்கு, (பாலம் விஹாய) அறிவற்ற குழந்தையைத் தவிர, (அந்ய: க: ஜந:) வேறு எவன், (இச்சதி) விரும்புவான்? எ. று.

கருத்துரை:

இந்த ஸ்லோகத்தில் மானதுங்காசாரியர் பரமௌ தாரிக சரீரத்தின் அங்கமான திருவடிகளைத் துதிக்கிறார். தேவர்களால் பூஜிக்கப்பட்ட திருவடிகளையுடைய ஸ்வாமியே! புத்தியில்லாத நான் உன்னைத் துதித்து உன்னுடைய குணங்களைப் பாடுவதற்கு வெட்கப் படுகிறேன். இருந்தபோதிலும் நீரில் காணப்படும் நிலா பிம்பத்தைப் பிடிப்பதற்கு இளம் குழந்தை முயல்வது போன்று வேறு யார்தான் முயல்வர்? நீரில் காணப்படும் நிலா பிம்பத்தைக் கண்டு ஆசையுற்ற குழந்தை அதைப் பற்றுவதற்கு முற்படுவது போன்று நானும் கூட உன்னு டைய குணங்களைப் பாட முற்படுகிறேன் என்று கூறு கிறார். அதாவது உங்களுடைய குணங்களை எடுத்துரைக்க வல்ல அறிவு என்னிடம் இல்லை. ஆனால் நான் உங்களைத் துதி செய்ய முற்பட்டு விட்டேன். இது என்னுடைய வெட்க மற்றத் தன்மையையும் அறிவற்ற செயலையுமே காட்டும் என்பதாம்.

விளக்கவுரை:

தோத்திரம் செய்ய வேண்டும் என்கிற முடிவிற்கு வந்த பிறகு மானதுங்க முனிவர் கூறுவதாவது, ஜின பகவான்! நீங்கள் தேவர்க்கெல்லாம் சிறந்த தேவன் ஆவீர். அதனால்தானே தேவர்கள் உங்களுடைய பவித் திரமான திருவடி பட்ட பீடத்தையும் கூட பூஜிக்கின்றனர். அவர்களிடம் உள்ள அவதி ஞானத்தைப் போன்ற ஞானம் என்னிடம் இல்லை. யாரிடம் எந்த அளவிற்கு அறிவு உள்ளதோ அந்த அளவிற்குதான் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்பது உலக வழக்கு. சக்திக்கு மீறிய காரியத்தைச் செய்யத் தொடங்கினால் அது இடையிலேயே விடுபட்டு விடும். அது கேலிக்கும் இடமாகும். ஆனால் உங்களைத் துதி செய்ய வேண்டும் என்கிற ஆர்வம்

என்னிடம் அளவு கடந்து உள்ளது. அதனால் தான் நான் என்னுடைய யுக்தியையும் கடந்து இத்தகு பெரிய காரியத்தைச் செய்ய முற்பட்டு விட்டேன்.

நீரில் காணப்படும் சந்திர பிம்பம் அழகாக இருப்பதால் எல்லோருடைய மனத்தையும் அது கவருகிறது. ஆனால் அதைக் கைப்பற்றுவதற்கு எந்த புத்திசாலிதான் முயலுவான்? அதைக்கைப்பற்ற முடியாது என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அறிவற்ற, கள்ளம் கபடமற்ற இளம் குழந்தை அதைக் கைப்பற்றுவதற்கு முயலுகிறது. அதுபோல உங்களைத் துதி செய்வதற்கு ஆயத்தமான நான் அந்த இளம் குழந்தைப் போல உள்ளேன். என்னுடைய இந்த முயற்சி குழந்தை விளையாட்டு போன்றதாகும்.

இந்த ஸ்லோகத்தில் மானதுங்காசாரியர் தன்னுடைய பெருமையைக் காட்டிக் கொள்ளாது தன்னுடைய அடக்கத்தைக் காட்டிக் கொள்ளுகிறார். அவர் திறமைசாலியும் புத்தி கூர்மையும் ஒழுக்க நெறியாளரும் கவிஞரும் ஆவார். அப்படி இருந்த போதிலும் தன்னை அறிவில் குழந்தை எனக் காட்டிக் கொள்ளுகிறார். இதுவல்லவோ அறிஞர்களின் அரிய அடக்க குணமாகும். சிறந்த அறிவாளி தன்னைப்பற்றி பெருமையாகப் பேசிக் கொள்ள மாட்டார்.

தண்ணீரில் தெரிகின்ற
தண்ணார்ந்த மதியைத்
தாவிப் பிடிக்கவரு
சிறுவனாய் ஆனேன்
விண்ணோர்கள் போற்றவரு
விமலனே! உன்னை
வெட்கமொரு சிறிதின்றி
வாழ்த்திடவே வந்தேன்!

(தம் ஆதி) (3)

# பகவானின் பெருமை

வக்தும் குணாந் குணஸமுத்ர! ச'சா'ங்க கா'ந்தான்
கஸ்தே க்ஷம: ஸுரகுரு ப்ரதிமோபி புத்த்யா |
கல்பாந்தகால- பவநோத்தத- நக்ர- சக்ரம்
கோ வா தரீது மல மம்புநிதிம் புஜாப்யாம் ‖ (4)

**பதவுரை:**

(புத்யா) அறிவினால், (சுர குரு ப்ரதிமோபி) தேவகுருவான பிருகஸ்பதிக்குச் சமமாக இருந்தாலும் (குண சமுத்ர) குணக்கடலே! (தே) உண்ணுடைய (சசாங்க காந்தான்) நிலவொளி நிகர்த்த, (குணான்) குணங்களை, (வக்தும்) சொல்லுவதற்கு, (க:) யார், (க்ஷம:) சாமர்த்திய முள்ளவனாவான்? (கல் பாந்த கால) பிரளய காலத்து, (பவநாத்) காற்றினால், (உத்தத) கிளம்பிய, (நக்ரசக்ரம்) முதலைகள் நிறைந்த, (அம்புநிதிம்) கடலை, (புஜாப்யாம்) தோள்களினால், (தரீதும்) கடப்பதற்கு, (கோ வா அலம்) யார்தான் சாமார்த்தியமுள்ளவ னாவான்?

**கருத்துரை:**

எல்லாக் குணங்களும் நிறைந்த, கடல் போன்ற கம்பீரமான ஜிநேஸ்வரனே! குளிர்காலத்து நிர்மலமான சந்திர ஒளியினைப் போன்றும் பிறரைக் கவரக்கூடிய தன்மையும் உள்ள உங்களுடைய குணங்களை வருணிப் பது தேவகுருவாகிய பிரகஸ்பதியைப் போன்றவனாலும் கூட முடியாது. பிரளய காலத்தில் வீறிட்டு எழுகின்ற காற்றினால் வெளிப்பட்ட முதலையும் சுறா மீன்களும் நிறைந்த மாபெரும் கடலை ஒருவன் தன் கைகளால் நீந்துவது எவ்வாறு முடியாதோ அது போல எல்லையற்ற குணங்கள் நிரம்பிய உங்களை வருணிப்பது என்னால் முடியாது என்பதாம்.

**விளக்கவுரை:**

ஆதிபகவனே! நீங்கள் குணக்கடல், அனந்த குணங்களையுமுடையவர் மற்றும் ஒவ்வொரு குணமும்

சந்திரனைப் போன்று ஒளிமயமானது. அந்த குணங்களைப் பிரகஸ்பதி போன்ற நல்லறிவு படைத்த தேவனால் கூட விளக்கமுடியாது. அற்ப அறிவு படைத்த என்னால் எப்படி முடியும்?

உங்களுடைய உயர்ந்த குணங்களைப் பாராட்ட எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் என்னால் முடிய வில்லை. பிரளய காலத்துப் புயல் வீசும்போது சமுத்திர நீர் கொந்தளிக்கிறது. அதில் முதலை திமிங்கலம் சுறாமீன் போன்ற நீர்வாழ் உயிர்கள் தத்தளிக்கின்றன. அவ்வமயம் அந்த மாபெரும் கடலை எந்த மனிதன்தான் தன்னுடைய இரண்டு கைகளால் நீந்திக் கடக்க முடியும்? எவனாலும் முடியாது அல்லவா?

அதுபோல மனிதன் எவ்வளவுதான் புத்திசாலி யாகவும் வித்துவானாகவும் புகழ்பெற்றவனாகவும் இருந்த போதிலும் அவனால் உங்களுடைய குணங்களை முழுவதும் பாராட்டமுடியாது. குணமோ அனந்தம், சொற்களோ அளவுக்குட்பட்டவை. மற்றும் குணம் சைதன்யமயமானது. வார்த்தையோ ஜடம். ஆதலால் வார்த்தைகளால் ஜினபகவானின் தத்ரூப குணங்களைப் பற்றி வர்ணிப்பது இயலாது.

பொங்குவரு ஊழியின்
    கடல்தன்னை நீந்திப்
புகுந்தேற வல்லவர்கள்
    பூமிதனில் உண்டோ?
பங்கமில் தேவகுரு
    புகழமுடி யாதே
பரமாத்ம! நின்பண்பின்
    திறம்பாட வந்தேன்.

(தம் ஆதி) (4)

## பக்தியால் துதி செய்ய முயல்கிறேன்

**ஸோஹம் ததாபி தவ பக்தி- வசாந் முநீச!**
**கர்த்தும் ஸ்தவம் விகத-ச'க்திரபி ப்ரவ்ருத்த: |**
**ப்ரீத்யாத்ம வீர்ய-மவிசார்ய ம்ருகீ ம்ருகேந்தரம்**
**நாப்யேதி கிம் நிஜசி'சே'ா: பரிபாலநார்த்தம் ॥ (5)**

**பதவுரை:**

(ததாபி) அப்படி இருந்தபோதிலும், (முநீச) முனிகளுக்கெல்லாம் நாதரே, (ஸ: அஹம்)- அப்படிப்பட்ட நான், (அதாவது உங்களைத் துதி செய்ய முற்பட்ட மானதுங்காசாரியராகிய நான்) (விகத பக்தி வசாத்)- உம்மீதுள்ள பக்தியின் காரணமாக, (ஸ்தவம்)- தோத்திரத்தை, (கர்த்தும்) செய்வதற்கு (ப்ரவ்ருத்த:)- தொடங்கியுள்ளேன்; (ம்ருகீ)-பெண்மானானது, (ஆத்ம வீர்யம்) தன்னுடைய சக்தியை, (அவிசார்ய)- யோசிக்காமல், (ப்ரீத்யா)- அன்பின் காரணமாக (அதாவது தன்னுடைய குட்டியின் மீதுள்ள பாசத்தினால்), (நிஜசிசோ:)- தன்னுடைய குட்டியை, (பரிபாலநார்த்தம்)- காப்பதற்காக, (ம்ருகேந்திரம்)- சிங்கத்தை (நாப்யேதி கிம்)- எதிர்க்கவில்லையா என்ன? எ. று.

**கருத்துரை:**

சிங்கம் கைப்பற்றிய மான்குட்டியைக் காப்பாற்றுவதற்காகப் பெண் மானானது தன்னுடைய சக்தியைப் பற்றிச் சிந்திக்காமல் தன்னுடைய குட்டியின் மீதுள்ள பாசத்தினால் அதைக் காப்பாற்றுவதற்குச் சிங்கத்தையும் எதிர்க்கத் துணியவில்லையா என்ன? அதுபோல நான் உங்களைப் பற்றி துதி செய்ய ஆற்றல் இல்லாதவனாக இருந்த போதிலும் உங்கள் மீதுள்ள பக்தியினால் நான் உங்கள் குணங்களைத் துதி செய்ய துணிந்துள்ளேன்.

விளக்க உரை:

யுகாதிதேவ! உங்களிடத்தில் சந்திரனைப் போன்ற கவர்ச்சியான அமிர்த மயமான சீதள சாந்தமயமான காந்தியுள்ள அனந்த குணங்கள் உள்ளன. என்னுடைய அறிவோ மிகவும் குறைவு, மற்றும் நான் துதி செய்யத் துணிந்தது குழந்தைச் செயல் போன்றுள்ளது. என்னிடம் சக்தி இல்லாத போதிலும் உங்களுடைய குணம் என்னும் கடலைக் கடப்பதற்கு முயற்சி செய்கிறேன். அதற்கு உங்கள் மீதுள்ள பக்தியே மூல காரணமாக உள்ளது. தன்னுடைய இளம் குட்டியின் மீது பாய்ந்து வரும் கொடிய சிங்கத்தை எதிர்ப்பதற்குத் துணிந்த பெண் மானின் ஆற்றலுக்குத் தன்னுடைய குட்டியின் மீதுள்ள பாசமே காரணமாகும். அதுபோல உங்கள் மீது நான் கொண்ட பக்தியே காரணமாகும்.

தாய் மான் தன்னுடைய குட்டியின் மீதுள்ள பாசத்தினால் தன்னுடைய சக்தியையே மறந்து விடுகிறது. அது போல நான் பக்தியின் காரணமாக என்னுடைய சக்தியை மறந்து விடுகிறேன்.

பாசம், பக்தி, அன்பு, நட்பு இவை யாவும் ஒருவருடைய உள்ளத்தில் ஏற்பட்ட பற்றின் ஆழத்தைக் காட்டுகிறது. பற்றானது மனிதனிடம் மட்டும் அல்ல விலங்குகளிடமும் உண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக இந்தச் சுலோகம் உள்ளது. சிங்கத்தை எதிர்ப்பது மானின் சக்திக்கு அப்பாற்பட்டது. ஆனால் அன்பு, பாசம் ஆகியவைகளினால் பலம் பெற்ற எண்ணமானது சிங்கத்தையே எதிர்ப்பதற்குத் தூண்டுகிறது. இந்தச் செயலில் அதற்கு வெற்றி கிடைக்குமா கிடைக்காதா என்பது வேறு. ஆனால் அது தன்னுடைய கடமையை மறக்கவில்லை. இந்த எடுத்துக்காட்டின் வழி ஆசாரியர் மானதுங்கர் இதற்கு முன்புள்ள சுலோகங்களினால்

தன்னைச் சிறியவனாகவும், சக்தியற்றவனாகவும், குறைந்த அறிவுள்ளவனாகவும் எடுத்துரைத்து உயர்ந்த பக்தியின் பெருமையை நிரூபித்துக் காட்டியுள்ளார். அதாவது பக்தியின் வலிமையானது மேற்கூறிய சக்தியற்ற மூன்றின் குணங்கள் மீது வெற்றி கண்டுள்ளது. இது போன்று பக்திரசம் நிரம்பிய இந்தத் தோத்திர நூலுக்குப் 'பக்தாமரம்' என்றும் பெயர் கொடுத்தது சாலச் சிறந்தது.

மறிகாக்க அரியோடும்
மல்லாடும் மான்போல்
மனமென்னும் சுனையூற்றின்
மிகுபக்தி யூற
நறிதாய பாவென்னும்
நாள்மலரைச் சிந்தி
நலமாகும் வினைமுந்த
நவைசிந்த வந்தேன்.
(தம் ஆதி) (5)

## பக்தியே துதிக்கத் தூண்டுகிறது

அல்பச்'ருதம் ச்ருதவதாம் பரிஹாஸதா்ம
த்வத் - பக்திரேவ முகரீகுருதே பலாந்மாம்
யத் கோகில: கில மதௌ மதுரம் விரௌதி
தச்சாரு - சூத-கலிகா-நிகரைக-ஹேது: (6)

பதவுரை :

(அல்ப ச்ருதம்) - சிறிதளவே கற்றவனாயினும், (ச்ருதவதாம்) - கற்றுத் தேர்ந்தவர்களின், (பரிஹாஸ தாம) - ஏளனத்திற்கு இடமாயுள்ள, (மாம்) - என்னை, (த்வத் பக்தி: ஏவ) - உம்மிடத்தில் வைத்த பக்தியே, (பலாத்) - பலாத்காரமாக, (முகரீ குருதே) - துதிக்க வைக்கிறது, (கோகில) - குயிலானது, (மதௌ) - வசந்த காலத்தில், (மதுரம்) - இனிமையாக (விரௌதி) கூவுகிறது,

(இதியத்) - இது யாது காரணம் என்றால், (தத்) - அது. (சாரு) - அழகான, (சூத கலிகா) - மா மொட்டுகளின், (நிகர கை ஹேது கில) - கொத்துத்தான் காரணமாக உள்ளது, எ. று.

கருத்துரை :

மானாதுங்க ஆசாரியர் கூறுவதாவது: புகவன்! நான் குறைந்த அறிவு படைத்தவன், ஆகம அறிவு எனக்கு அதிகம் இல்லை. இருந்த போதிலும் நான் உங்களைத் துதி செய்யத் துணிந்து விட்டேன். என்னுடைய இந்தத் துணிவானது அதிக அறிவு படைத்தவர்களுக்கு ஏளனத்திற்கு இலக்காகும். குயில் தன்னம் தானாகவே கூவுகிற சக்தி படைத்த போதிலும் வசந்த காலத்தில் தான் அது இனிமையாகவே கூவுகிறது. இதற்குக் காரணம் அது தின்ற மாமொட்டுக்களே ஆகும். அதுபோல உங்கள் மீது நான் கொண்ட பக்தியானது என்னைத் தூண்டுகிறது.

விளக்கவுரை :

ஜைன பரிபாஷையில் ஆகமத்திற்கு 'ஸ்ருதம்' எனப் பொருள். இது அருகதேவன் அறம் பகரும் போது கணதரர்கள் அதைக்கேட்டு மற்றவருக்கு உரைத்தனர், அவர் வாயிலாக கேட்கப்பட்டது. ஆதலால் இதற்கு ஸ்ருதம் எனப் பெயர் வந்தது. அதிக ஞானம் படைத்தவர் வித்துவான் என அழைக்கப்படுகிறார். மதிஞானம், ஸ்ருத ஞானம் ஆகிய இவ்விரண்டின் மறைப்பு கேடு தணிவு நிலையில் இருக்கும் போது நாம் குறைவான அறிவோ அதிக அறிவோ கிடைக்கப் பெறுகிறோம். வினையின் க்ஷயோபசமத்திற்கு ஏற்றவாறு நமக்கு மிகுந்த அல்லது குறைவுள்ள ஞானம் கிடைக்கிறது. மானதுங்க ஆசாரியர் தன்னிடம் மதிஞானமும் சுருத ஞானத் தெளிவும் மிகக் குறைவாக இருந்த போதிலும் கூட தோத்திரம்

செய்வதற்கு ஆயத்தமான தன்னுடைய இந்த முயற்சியானது அதிக ஆகம அறிவு படைத்தவர் ஏளனத்திற்குக் காரணமாக உள்ளது என்கிறார்.

அவ்வளவு இருந்தபோதிலும் எனது பக்தியாகிய உள்ளுணர்வில் உறங்கிக் கிடக்கும் சக்தியானது திடீரென என்னைத்தூண்டிவிட்டது. ஆதலால் உங்களைத் துதி செய்யத் தொடங்கி விட்டேன். என்னுடைய கவிதைகளில் எவ்வளவு இனிமையும் ஆழ்ந்த கருத்தும் உள்ளனவோ அவை எல்லாம் ஜினபகவான் மேல் கொண்ட பக்தியின் சக்தியே ஆகும்.

வசந்த (சைத்ர வைசாக மாத) காலத்தில் குயில் இனிமையான குரல் கொடுத்துக் கூவுகிறது. இதற்குக் காரணம் மாமரங்களில் உள்ள மொட்டுக்களே ஆகும். அந்த மொட்டுக்களைத் தின்று மகிழ்ச்சியுற்று மனமகிழும் குரலில் அது கூவ ஆரம்பிக்கிறது அல்லது அம்மொட்டுக் களைக் கண்ட மாத்திரத்திலேயே அது இனிய குரலை எழுப்புகிறது. ஒருவர் தம் முன்னால் இருக்கும் இனிய கவர்ச்சி மிக்கப் பொருளைக் கண்ட உடனே அவர்கள் மகிழ்வது இயற்கை. அது போலவே பகவான் மீது ஏற்பட்ட பக்தியினால் என்னுடைய வார்த்தையானது தன்னம்தானகவே கவிதை அமைப்பதில் ஈடுபடுகிறது என்று மான துங்க முனிவர் கூறுகிறார்.

மாமொட்டு தளிரார்ந்து
மகிழ்வுடனே பாடும்
மதுரஇசைக் குயில்போல
மதியிலேன் நானும்
தேமதுர பக்தியெனும்
தேனமுதம் ஊற
தேவ! உனைப் பாடிடவே
தீங்கவியைத் தொட்டேன்.

(தம் ஆதி) (6)

## ஜினபகவான் துதியின் பயன்

த்வத் ஸம்ஸ்தவேந பவ-ஸந்ததி-ஸந்நிபத்தம்
பாபம் க்ஷணாத் க்ஷயமுபைதி சரீரபாஜாம் ।
ஆக்ராந்த-லோக-மளிநீல-மசேஷமாசு
ஸூர்யாம்சு-பிந்நமிவ சார்வர-மந்தகாரம் ॥ (7)

பதவுரை:

(ஆக்ராந்த லோக)-இவ்வுலகத்தைச் சூழ்ந்துள்ள, (அளி)-வண்டைப் போன்று, (நீலம்)-கருமையுள்ள, (அஸேஷம்)-முழுதும் நிரம்பி இருப்பதும் ஆன, (சார்வரம்)-இரவு நேரத்து, (அந்தகாரம்)-இருள், (சூர்யாம்சு)-சூரிய ஒளி பட்டவுடனே, (ஆசு)-வெகு விரைவில் (பின்னம் இவ)-மறைவது போன்று, (சரீர பாஜாம்)-மக்களுடைய, (பவஸந்ததி)-பல பிறவிகளில், (ஸந்நிபத்தம்)-சேமிக்கப்பட்ட, (பாபம்)-தீவினையானது, (த்வத் ஸ்ம்ஸ்தவேன)-உம்முடைய தோத்திரத்தினாலே, (க்ஷணாத்)-ஒரே கணத்தில், (க்ஷயம் உபைதி) விலகுகிறது, எ. று.

கருத்துரை:

வேத பிரபு! வண்டுகளின் நிறமொத்த கரிய இருள் ஆனது சூரிய ஒளிபட்டவுடனே முழுதளவும் விலகுவது போன்று உங்களைத் துதிப்பதாலும் உங்களுடைய நற்குணங்களைப் பற்றிச் சிந்திப்பதாலும் பல பிறவிகளில் சேகரிக்கப்பட்ட மக்களுடைய பாப வினையானது கண நேரத்தில் விலகுகிறது.

விளக்கவுரை:

பிறவிச் சுழலில் உழலும் இந்த உயிர் எப்பொழுதும் மித்யாத்துவம், அவிரதி, பிரமாதம், கஷாயம், யோகம் ஆகியவைகளின் வழி பாப வினைகளைக் கட்டிக் கொள்கிறது. இதன் பயனால் நான்கு பிறவிகளிலும் உழல்கிறது. பிறப்பு, மூப்பு, இறப்பு, நோய், துன்பம்

போன்ற பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகிறது. இவைகளிலிருந்து விடுபடுவதற்குப் பகவானைத்துதிப்பதே சாலச் சிறந்ததாகும்.

ஜினபகவானின் நற்குணங்களைச் சிந்திப்பதால் மனம் தூய்மையடைகிறது. அவ்வமயம் புண்ணிய வினை வரவினையும் கட்டும், 'ஸ்திதி அனுபாக பந்தமும்' ஏற்படுகின்றன. மற்றும் தீவினை வருகையும் கட்டும் 'ஸ்திதி அனுபாகமும்' குறைகின்றன. உயர்ந்த தூய மனக் கட்டினாலும் பக்தியினாலும் எல்லாத் தீவினைகளும் விலகுகின்றன.

சூரிய ஒளி பட்ட மாத்திரத்திலேயே இரவில் சூழ்ந்திருந்த காரிருள் கணநேரத்தில் விலகிவிடுவதுபோல பகவானுடைய துதியினால் பொய்மை விலகி நற்காட்சி என்னும் ஒளிவீச ஆரம்பிக்கிறது. மித்யாத்துவம் என்னும் இருள் நொடி நேரத்தில் விலகி விடுகிறது, பாப வினை நீங்குகிறது.

மனிதனுடைய மனதில் பகவானுடைய தூய குணங்களும் நல்ல எண்ணங்களும் தோன்றும் போது இருள் போன்றுள்ள கஷாயங்களும் தீய எண்ணங்களும் எப்படி இருக்க முடியும்? ஒரு உறையில் இரண்டு வாள் எப்படிப் பொருந்தியிருக்கும்? அதுபோல தூய மனதில் நல்வினை தீவினை இரண்டும் ஒரே நேரத்தில் நிலைத்திருக்காது.

ஜின பகவானின் தூய குணங்கள் எதுவரை ஒரு மனிதன் உள்ளத்தில் இடம் பெறவில்லையோ அதுவரை மித்யாத்துவம் என்னும் பொய்மை நிலைத்திருக்கும். மனிதனுடைய உள்ளத்தில் அருகதேவனின் தூய குணம் என்னும் ஒளி நிரம்பியபோது அனைத்துப் பாபவினைகளும் வெகு விரைவில் கழிந்துவிடுகின்றன. ஆதலால்

பக்தன் தன்னுடைய சொல் செயல் சிந்தனை யாவற்றையும் தூயதாகவும் வீதராக பகவானின் குணங்களை நினைப்பதாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

## உன் மகிமையால் துதி செய்கிறேன்

**மத்வேதி நாத தவ ஸம்ஸ்தவநம் மயேத-**
**மாரப்யதே தநுதியாபி தவ ப்ரஸாதாத் |**
**சேதோ ஹரிஷ்யதி ஸதாம் நளிநீ-தளேஷு**
**முக்தாபல-த்யுதி-முபைதி நநூத பிந்து: ॥** (8)

**பதவுரை :**

(நாத) - பகவன்! (இதி) - முற்கூறியவாறு, (மத்வா) –நினைத்து, (தனுதியா அபி) - அற்ப அறிவு படைத்தவனாக இருப்பினும், (மயா) – என்னால், (தவ) - உன்னுடைய, (இதம் ஸம்ஸ்தவனம்) - இந்தத் தோத்திரமானது, (ஆரப்யதே) ஆரம்பிக்கப்படுகிறது; (நளநீ தளேஷு) தாமரை இலை மீது, (உதபிந்து) - நீர்த்துளியானது, (முக்தா பலத்யுதிம்) - முத்தின் ஒளியை, (உபைதி) - அடைகிறது; [அதுபோல], (தவப்ரஸாதாத்) – உம்முடைய அருளால், (ஸதாம்) - நல்லோர்களுடைய, (சேத:) - உள்ளத்தை, (ஹரிஷ்யதி) கவரப்படுகிறது [என்பது] (நநு) - நிச்சயம், எ. று.

பூவுறையும் வண்டினிறம்
போலவரும் இருளைப்
போக்கவரும் கதிரொளிபோல்
பொன்னெயிலோய்! நின்னை
மூவுலகம் போற்றிடவே
முன்னிஉனைப் பாட,
முற்பிறவி வினைநீங்க
தப்பிடுவோம் நாமே!

(தம் ஆதி) (7)

கருத்துரை :

சுவாமியே! தாமரை இலை மீதுள்ள நீர்த்துளியானது முத்துமணி போன்று ஒளிவிட்டுக்கொண்டு பார்பவர் மனதைக் கவர்வது போன்று என்னைப் போன்ற அற்ப புத்தியுள்ளவனால் தொடங்கப்பட்ட இந்த தோத்திரமானது நல்லோர்களுடைய மனதைக்கவரும்; அவர்களை மகிழ வைக்கும்.

விளக்கவுரை :

மானதுங்காசாரியர் ஜினபகவானுடைய குணங்களைத் துதி செய்தால் எல்லாத் தீவினைகளும் விலகும் என்பதை எடுத்துக் கூறிய பிறகு பகவானுடைய அற்புதமான மிகத் தூய சிறப்பினை எடுத்துரைக்கிறார். நான் மந்த புத்தியுள்ளவன்; என்னால் இந்தத் துதிப்பாடல் ஏன் தொடங்கப்படுகிறது? மிகுதியும் கற்றவர்களுக்கு இது மிகவும் கேலிக்கு இடமாகும் அல்லவா? இந்த ஐயத்திற்கு ஆசாரியர் விளக்கம் கொடுக்கிறார். இந்தத் தோத்திரம் செய்வதற்கு அடிப்படையில் ஆன்மீய உணர்வு நிரம்பியுள்ளது. அதற்குக் காரணம் ஜினபகவானுடைய குணங்களின் சிறப்பும் பெருமையும் வலிமையுமே ஆகும். இவை அல்லவோ இந்தத் துதிக்கு மெருகு கொடுப்பது போன்றுள்ளன. அற்ப அறிவு படைத்த என்னால் செய்யப்படும் இந்தத் தோத்திரம் நல்லோர்களுடைய மனதைக் கவரும் என்பதில் ஐயம் இல்லை.

தாமரை இலை மீதுள்ள பனித்துளி அல்லது நீர்த்துளியானது முத்துமணி போன்று காணப்படுகிறது. அது மக்களுடைய மனதையும் கவருகிறது. அதற்கு அத்தகு ஒளியினைத் தருவது எது? தாமரை இலை அல்லவா? சாதாரண தாமரை இலையில் அத்தகு சிறந்த குணம் இருப்பதுபோன்று இந்தத் துதியில் உம்முடைய சிறப்பான குணங்கள் நிரம்பியுள்ளதால் இது எல்லோருடைய மனதைக் கவரும் என்பது நிச்சயம்.

தாமரையின் பாசடையில்
தங்குநீர்த் துளிகள்
தரளங்கள் போல அவை
தாம் தோன் றவிலையோ?
ஏமமுறும் நூல்களை நான்
ஏதுமறி யாதே
ஏத்திடினும் உன்னருளின்
ஏற்பர் உலகோரே!

(தம் ஆதி) (8)

## வாலறிவன் பெயரைச் சொன்னாலே இடையூறுகள் விலகும்

**ஆஸ்தாம் தவ ஸ்தவந - மஸ்த - ஸமஸ்த - தோஷம்**
**த்வத் - ஸங்கதாபி ஜகதாம் துரிதாநி ஹந்தி |**
**தூரே ஸஹஸ்ர - கிரண: குருதே ப்ரபைவ**
**பத்மாகரேஷு ஜலஜாநி விகாஸ - பாஞ்ஜி ||** (9)

பதவுரை:

(சஹஸ்ர கிரண:) - சூரியன், (தூரே) - வெகு தூரத்தில், (அஸ்தி) - இருக்கின்றான், (ப்ரபைவ) – ஒளி மட்டும், (பத்மாகரேஷு) - தாமரை தடாகங்களில் உள்ள (ஜலஜாநி) – தாமரை மலர்களை, (விகாச பாஞ்ஜி) - மலரும்படி, (குருதே) - செய்கிறது, [அதுபோல], (சமஸ்த தோஷம்) - எல்லாக் குற்றங்களும், (அஸ்த) - நீங்கிய, (தவ) - உம்முடைய (ஸ்தவனம்) - தோத்திரமானது, (ஆஸ்தாம்) - இருக்கட்டும், (த்வத்சங்கதாபி) - உம்மைப் பற்றிப் பேசுவதே, (ஜகதாம்) – உலகத்திலுள்ளோர் களுடைய (துரிதானி) – பாபங்களை, (ஹந்தி) – போக்கு கிறது, எ. று.

கருத்துரை:

சூரியன் வெகுதூரத்தில் இருந்தபோதிலும் அதன் கிரணங்கள் தாமரைக் குளங்களில் உள்ள தாமரை மலர்களை மலரச் செய்கின்றன. அதுபோல ஸ்வாமியே! குற்றமற்றவரான உம்மை பற்றிய தோத்திரம் ஒரு புறம் இருக்கட்டும். உம்முடைய பெயரைச் சொல்வது மாத்திரமே உலக மக்களுடைய பாபங்களைப் போக்க வல்லதாய் உள்ளது. உம்முடைய குண ஸ்தோத்திரத்தின் அற்புத சக்தியைப் பற்றி என்ன கூறுவது?

விளக்கவுரை:

ஆசாரியர் இதுவரை ஜினபகவானின் பெருமையைப் பற்றியும் சிறப்பினைப் பற்றியும் கூறியுள்ளார். இந்த ஸ்லோகத்தில் அவருடைய குணத்துதியைப் பற்றி கூறுவது என்ன? உங்களுடைய பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே உயிர்களுடைய தீவினைகள் விலகி விடுகின்றன என்று கூறி இதற்காக ஒரு எடுத்துக் காட்டை எடுத்துரைக்கிறார். பகலவன் பூமியிலிருந்து பல்லாயிரம் யோஜனை உயரத்தில் உள்ளான். அப்படி இருந்தபோதிலும் அவன் தாமரைக் குளங்களில் உள்ள தாமரை மலர்களை மலரச்செய்கிறான். அதுபோல பகவானுடைய மகிமையோ சூரிய கிரணங்களைப் போன்றுள்ளது.

"நீங்கள் இந்த கர்மபூமியில் வந்து பல கல்ப காலங்கள் கழிந்தன. ஆனால் உங்களுடைய புகழோ நிகழ்காலத்திலும் ஒளி தருகிறது. உங்களுடைய புகழ் ஒளி பக்தர்களுடைய உள்ளத் தாமரையை மலரச் செய்கிறது. பக்தன் எப்பொழுது தன்னுடைய உள்ளத்தில் உங்களை நினைக்கிறானோ அப்பொழுது கழிந்து போன பல்லாயிரம் ஆண்டுகளும் மனதிற்கு வாரா; நிகழ்காலத்தில் தான் நீங்கள் தோன்றியது போல் அவன் நினைக்கிறான்.

அதனால்தான் உங்களைத் துதிக்கிறான். இதனால் அவனுடைய பாபங்கள் எல்லாம் விலகி உங்களைப்போல் மாறிவிடுவான் என்பதில் ஐயம் இல்லை.

உங்களுடைய குண ஸ்தோத்திரத்தின் மகிமையினால் பக்தனுடைய மித்யாத்துவமும் அனந்தானுபந்தி கஷாயங்களும் விலகி விடுகின்றன. அப்ரத்யாக்யான பிரத்யாக்யான கஷாயங்கள் தம் வலிமையை இழந்து விடுகின்றன. இதனால் உள்ளத்தில் சம்யக்துவம் என்னும் சூரியன் உதயம் ஆகிறது. சைதன்யம் என்னும் தாமரை மலர்கிறது.

ககனத்தில் வருகின்ற
கதிரவன் ஒளியால்
கஞ்சமலர் நெஞ்சமரும்
காட்சியது போல
சுகுணமுள துதிகளொடு
சொற்களுமே ஈண்டு
சொல்லரிய உவகையினை
நெஞ்சினிலே சேர்க்கும்

(தம் ஆதி) (9)

## துதியின் பயன்

**நாதயத்புதம் புவந பூஷண! பூதநாத!**
**பூதைர் குணைர் புவி பவந்த மபிஷ்டுவந்த: |**
**துல்யா பவந்தி பவதோ நநு தேந கிம் வா?**
**பூத்யாச்'ரிதம் யஇஹ நாத்மஸமம் கரோதி ॥ (10)**

**பதவுரை :**

(ய:)-யார், (இஹ)-இவ்வுலகில், (ஆச்ரிதம்)–தன்னை அடைந்தவர்களை, (பூத்யா)–சம்பத்தினால், (ஆத்மஸமம்) தனக்குச் சமமாக (ந கரோதி)–செய்யாமல் இருக்கிறான்?

(தேன)-அப்படிப்பட்டவர்களால், (கிம்வா)-என்ன பிரயோஜனம்? (ஹே புவன பூஷண) மூவுலகிலும் அலங்காரமானவரே! (பூதநாத)-தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் சுவாமியே! (புவி)-பூமியில், (பூதை குணை)உண்மையான குணங்களால், (பவந்தம்)-உம்மை (அபிஷ்டு வந்த)-தோத்திரம் செய்பவர்கள், (பவத:)-உமக்கு, (துல்யா)-சமமானவர்களாக, (நநு)-நிச்சயமாக, (பவந்தி)-ஆகிறார்கள் என்பது, (ந அத்யத்புதம்)-மிகவும் ஆச்சரியமானதல்ல. (அதாவது உம்மைப்போல் அவசியம் ஆவர்), எ. று.

கருத்துரை:

மூவுலகிற்கும் அணிகலம் போன்றுள்ளவரே! எல்லா உயிரினங்களுக்கும் உரிய ஜினபகவானே! உம்மைக் குறித்து பக்தியுடன் துதி செய்பவர்கள் உம்மைப்போன்று ஆகின்றனர் என்பதில் வியப்பென்ன? செல்வந்தர்களை நாடிவந்தவரை அந்த செல்வந்தன் தன்னைப்போன்று அவனை ஆக்காவிடில் அவனுடைய செல்வத்தினால் யாது பயன்?

விளக்கவுரை:

ஆசாரியர் கூறுவதாவது: மூவுலகிற்கும் அலங்காரமாகவுள்ள ஜின பகவானே! உங்களிடத்தில் உள்ள அளவு கடந்த குணங்களைப் பாடும் பக்தன் உங்களைப் போன்று பகவானாகி விடுகிறான். அதாவது பகவானைத் தூய மன மெய் மொழிகளால் துதி செய்யும் பக்தன் தீர்த்தங்கர நாம வினைக்கட்டினைப் பெறுகிறான். இதன் பயனால் அவன் தீர்த்தங்கரர் ஆகிறான் என்பதில் ஆச்சரியம் இல்லை. ஏனெனில் இவ்வுலகில் உள்ள தனவந்தர்களும் செல்வந்தர்களும் தன்னை நாடி வந்த ஏழை எளியோரை ஆதரித்து செல்வம் அளித்து அவர்களைத் தம்மைப் போன்று ஆக்குவாரும் உண்டு.

அந்நிலையில் உங்களை நாடி வந்தவர் உங்களைப் போன்று ஏன் ஆக மாட்டார்கள்? உங்களைத் துதிப்பதில் அவ்வளவு சக்தி உண்டு என்பதை நான் உணர்ந்து கொண்டேன் என்று கூறுகிறார்.

ஜைன அறத்தில் சமத்துவம் - பொதுவுடமை ஆகியவை எவ்வளவு மேன்மையுற்றுள்ளனவோ அவ்வளவு வேறு எந்த அறத்திலும் காண முடியாது. ஜின பகவானைத் துதி செய்யும் பக்தன் ஜினபகவானைப் போன்று ஆகி விடுகிறான் என்றால் இங்குச் சமத்துவம் எவ்வளவு விடிவெள்ளி போன்றுள்ளது? இக்காலத்து மக்கள் இதை உணர்ந்து சமத்துவ மனப்பான்மையுடன் செயல்படுவார்களானால் உலகத்திலுள்ள எல்லா வேற்று மையும் மறைந்து விடும்.

இரும்பு பாரசமணி என்னும் சிறந்த பொருளுடன் சேர்ந்தவுடன் பொன்னாக மாறிவிடுகிறது. ஆனால் பாரசமணி பொன்னாவதில்லை. பாரசமணியில் இரும்பை பொன்னாக மாற்றும் சக்தியுள்ளது போன்று பகவா னுடைய குணத் துதியில் பக்தனைத் தம்மைப் போன்று ஆக்கும் சக்தியுண்டு. ஜின பகவானைத் துதிப்பது, ஜினாலய தரிசனம் ஆகியவை நற்காட்சி பெறுவதற்குக் காரணங்களாகும். ஸ்வாத்தியாயம், சம்யமம், தவம், விரதம், சீலம் ஆகியவை ஜினாலயத்தைத் தரிசிப்பதாலும் ஜினபகவானைத் துதிப்பதாலும் கிடைக்கப் பெறுகின்றன. நரக பிறவி தவிர்க்கப்படுகிறது. பிறவிச் சுழல் நீங்குகிறது. ஜினபகவானைத் தரிசிப்பது, அவர் குணங்களைப் பாடுவது ஆகியவைக்கு ஒப்பானது இவ்வுலகில் யாதும் இல்லை

உடல் வேறு, ஆன்மா வேறு. இது இவ்விரு திரவியங்களின் இயல்பு. உணர்வுத் தன்மையுள்ள ஆன்ம குணங்களை இவ்வுடலின் மூலம் வெளிப்படுத்த முடியாது.

ஆனால் ஜடமாகிய சொற்களின் மூலம் பகவானைப் பாராட்டித் துதி செய்தால் ஆன்மாவுடன் பிணைந்துள்ள வினையின் திரை விலகும். உண்மை தத்துவம் அறியப் படும். இதன் வழி மித்யாத்துவம், அனந்தானு பந்தி கஷாயம் ஆன்மாவிலிருந்து விலகி சைதன்ய குணமுள்ள ஆன்மாவில் சம்யக்துவ மென்னும் சூரிய ஒளி புலப்படும் என்பதில் ஐயம் கொள்ள வெண்டாம்.

சோற்றரிய சீலமெலாம்
சார்ந்துதிகழ் நின்னை
சாற்றி புகழ் ஏந்துபவர்
சரிநிகரே யாவார் ;
ஏற்றவருஞ் செல்வரிடம்
ஏழையர்கள் சென்றால்
ஏற்று அவர் வறுமையினை
ஏற்றுவதும் இலையோ? (10)

(தம் ஆதி)

## பகவானே தரிசனைக்குரியவர்

த்ருஷ்ட்வா பவந்த - ம நிமேஷ - விலோகநீயம்
நாந்யத்ர தோஷமுபயாதி ஜநஸ்ய சக்ஷு: |
பீத்வா பய: சசி கரத்யுதி துக்த ஸிந்தோ:
க்ஷாரம் ஜலம் ஜலநிதே - ரஸிதும் க
இச்சேத் ‖ (11)

பதவுரை:

[ஜனஸ்ய] - மக்களின், [சக்ஷு:] - கண்கள், [அநிமேஷ விலோக நீயம்] - இமை கொட்டாமல் பார்ப்பதற்கு தகுந்த, [பவந்தம்] - உம்மை, [த்ருஷ்ட்வா] - பார்த்து விட்டு, [அந்யத்ர தோஷம்] - வேறு இடத்தில் மகிழ்ச்சியை, [நோபயாதி] - அடைவதில்லை; [துக்த சிந்தோ:] - பாற் கடலின், [சசிகரத்யுதி] - சந்திர கிரணம் போன்ற ஒளி யுள்ள, [வெண்மை நிறமுள்ள], (பய:) - பாலை, [பீத்வா] -

குடித்தால், (ஜலநிதே) - சமுத்திரத்தின், (க்ஷாரம் ஜலம்) - உவர் நீரை, (ரசிதும்) - குடிப்பதற்கு, (க?) - யார், (இச்சேத்) - விரும்புவர்? எ. று.

**கருத்துரை:**

பகவானே உங்களைப் பார்க்கும் போது இமை கொட்டாமல் தொடர்ந்து உங்களையே பார்க்க வேண்டு மென்று ஆர்வம் ஏற்படுகிறது. உங்களைக் கண்ட பிறகு வேறு எங்கும் இத்தகு மகிழ்ச்சி கிடைப்பதில்லை. சந்திரன் ஒளி போன்று மிக வெண்மையாக உள்ள பாற் கடல் நீரைக் குடித்தவன் உவர் நீரைக் குடிக்க விரும்புவானா என்ன? உம்மைக் காணும் போது பெறப் படும் ஆனந்தம் வேறு யாரைக் கண்டாலும் பெற முடியாது.

**விளக்கவுரை:**

பூஜிக்கத் தக்க ஜின பகவானே! பக்தன் உங்களைக் கண்டு மிகவும் ஆனந்தமடைந்து இமை கொட்டாது உங்களுடைய உடல் அழகையே பார்ப்பதில் தன்மயமாகி யுள்ளான். உங்களை ஒரு முறை கண்ட பக்தன் வேறு இடத்தில் வேறு யாரையும் காண வேண்டுமென்கிற ஆர்வம் கொள்ளுவதில்லை. மிகவும் இனிப்பான தூய ஒளி பொருந்திய பாற்கடல் நீரைப் பருகியவனுக்குக் கடலின் உவர்ப்பு நீர் பிடிக்குமா என்ன? அதுபோல உங்களைத் தரிசித்தவருக்கு வேறு எங்கும் எதைக் கண்டாலும் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படாது அல்லவா?

ஆசாரியர் மானதுங்கர் கடந்த சுலோகங்கள் வரை ஜினபகவானைத் துதிப்பதாகிய செயலின் பெருமையை எடுத்துரைத்தார். இந்தச் சுலோகத்தில் பகவானைக் காண்பதால் ஏற்படும் பெருமையை எடுத்துரைக்கிறார்.

பகவானுடைய திருமேனியைக் கண்டவர்கள் வேறு தேவரையும் தேவதைகளையும் காண்பதற்கு விரும்புவதில்லை. வீதராக பகவானைக் காண்பதால் ஏற்படும் ஆனந்தமும் அமைதியும் வேறு தேவனைக் காண்பதால் ஏற்படுவதில்லை. மிகத் தூயதும் பவித்திரமானதும் நீர்வாழ் பிராணிகள் இல்லாததும் ஆகிய பாற்கடல் நீரை பருகியவன் உவர்ப்பு நீருள்ள சமுத்திரத்தின் தண்ணீரைப் பருகுவதற்கு விரும்புவானா என்ன? அப்படியும் ஒருவேளை உவர்ப்பு நீரைப் பருகினாலும் பாற்கடல் நீரைப் பருகிய போது கிடைத்த இன்பம் கிடைக்குமா? கிடைக்காது அல்லவா?

இந்தச் சுலோகத்தில் அரியதோர் உவமையை எடுத்துரைத்துள்ளார். வீதராக பகவானுக்கு உவமையாக பாற்கடலையும் பற்றுக்களோடு கூடிய தேவ தேவியருக்கு உவமையாக உவர் நீர் கடலையும் காட்டியுள்ளார்.

அமைதியான உருவமும், கனிவும் கண்யமும் நிரம்பிய முகமும், மூக்கு முனையில் உள்ள பார்வையும், தவ நிலையில் அமர்ந்த கோலமும், ஆசை, வெகுளி மயக்கங்களை விட்டமைந்த அருக பகவானைக் காணும்போது பக்தன் பெரும் மன அமைதியும், தூய சிந்தனையும் பவித்ர பாவனையும் பெறுகிறான். ஆனால் விருப்பு வெறுப்புடன் கூடிய தேவ தேவியரைக் காணும் போது இவைகளைப் பெறுவதில்லை.

வீதராக பகவானைக் காணும் போது பக்தன் அடையும் அளவு கடந்த பெருமையையும் பலனையும் கீழ்க் காணும் சுலோகம் எடுத்துரைக்கிறது.

"வீதராக முகம் திருஷ்ட்வா பத்மராக
சமப்ரபம் |
ஜன்ம ஜன்ம க்ருதம் பாபம் தர்சனேன
வினஸ்யதி ||"

"தாமரை மலர் போன்று பொலிவுள்ள வீதராக பகவானின் முகத்தைப் பார்ப்பதால் பல பிறவிகளிலும் செய்த பாபங்கள் விலகுகின்றன."

மூவுலகிலும் மிகச் சிறந்த, மேன்மை பொருந்திய, பார்ப்பதற்கு ஏற்ற, தத்துவப் பொருள் ஏதாவது இருக்கிறதா என்கிற வினாவிற்கு வீதராக பரம தேவர் தான் விடையாகக் காட்சி அளிக்கிறார்.

பகவான் பிறந்த போதே இயற்கையாகவே அழகு பொருந்திய திருமேனியுடையவராகவும் மதி, சுருதி, அவதி ஆகிய மூன்று ஞானத்தைப் பெற்றவராகவும் இருந்தார். ஒப்பற்ற உடற்கட்டும் உவமையற்ற பலமும் பொருந்திய வீதராக பகவானாக விளங்கவிருக்கும் புனித திருவுருவத்தைக் குழந்தைப் பருவத்தில் கண்ட இந்திரன் இவருடைய திருமேனியின் அழகையும் ஆன்ம குணத்தையும் முழுதளவும் காண்பதற்கு இரு கண்கள் போதா எனக் கருதி ஆயிரம் கண்களைப் படைத்துக்கொண்டான் என்கிற வரலாறு உண்டு. ஆதலால் தான் இந்திரன் "சஹஸ்ராக்ஷ" - 'ஆயிரம் கண்ணுடையான்' என அழைக்கப்படுகிறான். அத்தகு அகம் புறம் இரண்டிலும் தூய தன்மை பெற்ற திருவுருவத்தைக் கண்டவர் புறத்திலும் அகத்திலும் ராக துவேஷங்களையுடையவரைக் காண்பதற்கு எப்படி விரும்புவர்?

வீட்டில் பொன்னால் ஆக்கப்பட்ட பெட்டகத்தைக் கண்டவன் இரும்பால் ஆன பெட்டகத்தைப் பார்க்க விரும்புவானா? தீர்த்தங்கரர் சரீரமான பெட்டகம் மிகவும் கவர்ச்சி மிக்கது. இவருடைய சரீரத்தைக் கண்ட இந்திரனே மன நிறைவு கொள்ளவில்லை என்றால் நம்மைப் போன்றவருக்கு மன நிறைவு கிடைக்குமா என்ன?

பக்தன் உள்ளத்தில் ஆன்மத் தூய்மை பெற

ஆர்வம் ஏற்படுவதற்கு வீதராக பகவானையே அவன் பார்க்க வேண்டும். தன்னில் பொதிந்து கிடக்கும் உபாதான (மூல) சக்தியை வெளிப்படுத்த வீதராக பகவான் தரிசனம் நிமித்த காரணமாக அமைகிறது.

பாற்கடல் இரண்டரை தீபத்திற்கு வெளியே உள்ளது; அதில் பால்போன்ற நீர் நிரம்பியுள்ளது. அதில் மீன் முதலை போன்ற நீர் வாழ் பிராணிகள் இல்லை. அங்கு மனிதர்கள் செல்ல முடியாது. ஆதலால் அதில் குளிப்பவரும் இல்லை. தேவர்களும் இந்திரனும் தான் அங்கு செல்ல முடியும். இவர்கள் தாம் அந்த நீரைக் கொண்டு வந்து பகவானுக்கு ஜன்மாபிஷேகம் செய்கின்றனர். அத்தகு பாற்கடல் நீர் பருகுவதற்குக் கிடைக்குமேயாயின் உவர்ப்பு நீரைப் பருகுவதற்கு யார் விரும்புவர்? அது போன்று அகமும் புறமும் தூய தன்மை பெற்ற வீதராக பகவானைக் கண்டவர் வேறு தேவதைகளைக் காண்பதற்கு விரும்ப மாட்டார்கள். ஆனால் இவரைப் பார்ப்பவர் உள்ளத்தில் உண்மையான பக்தியும் இவர் குணத்தில் நம்பிக்கையும் இருத்தல் வேண்டும். நம்பிக்கை இல்லாதவன் நலம் பெற முடியாது என்பது உறுதி.

அணியேதும் அணியாத
அழகா! உன் னழகை
அமரேந்தரர் விழிநோக்கி
அடைகின்ற உவகை
பணிபூண்ட பரதெய்வம்
பார்வையில் உறுமோ?
பாற்கடலின் நீர்தள்ளி
பருகுவரோ உப்பை?

(தம் ஆதி) (11)

## பகவானின் திருமேனி அழகு

யை: ச்'ரந்த ராகருசிபி: பரமாணுபிஸ் த்வம்
நிர்மாபிதஸ் த்ரிபுவநைக - லலாமபூத! |
தாவந்த ஏவகலு தேப்யணவ: ப்ருதிவ்யாம்
யத்தே ஸமாந - மபரம் ந ஹி ரூபமஸ்தி || (12)

**பதவுரை :**

(த்ரிபுவநைக லலாம பூத) மூவுலகிற்கும் அலங்கார மானவரே!, (த்வம்) நீங்கள், (சாந்த ராக ருசிபி) ஆசையற்ற சாந்த ரசமுள்ள, (யை:) எந்த, (பரமாணுபி:) பரமாணுக்களால், (நிர்மாபித:) ஆக்கப்பட்டீரோ, (தேஅணவ) அந்தப் பரமாணுக்கள், (ப்ருதிவ்யாம்) பூமியில், (தாவந்த ஏவ) அத்தனையே உள்ளன; (யத்) ஏனெனில், (தே சமானம்) உங்களுக்குச் சமமான, (அபரரூபம்) வேறு உருவமானது (ஹி நாஸ்தி) - நிச்சயமாக இல்லை, எ. று.

**கருத்துரை :**

மூன்று உலகத்திலும் அலங்கார ஸ்வரூபமானவரே! உங்கள் பரம ஔதாரிக சரீரத்தில் சேர்ந்துள்ள பரமாணுக்கள் நிச்சயமாக உலகில் அவ்வளவு தான் உள்ளன. ஆதலால் இவ்வுலகில் உங்களைப் போன்ற அழகுள்ள உருவம் வேறு எங்கும் காணப்படவில்லை. அதாவது உங்களைப் போன்ற அழகுள்ள உருவம் இவ்வுலகில் வேறு இல்லை என்பதாம்.

**விளக்கவுரை :**

இதற்கு முன் சுலோகத்தில் ஆசாரியர் அரகந்த பகவானின் ஒப்பற்ற அழகைப் பற்றி விளக்கினார். இந்த சுலோகத்தில் அவருடைய திவ்விய உடலைப் பற்றிக் கூறுகிறார். அவருக்கு இத்தகு ஒப்பற்ற அழகு எப்படி வந்தது? இதற்குக் காரணம் என்ன? என்பது இந்தச்

சுலோகத்தில் விளங்குகிறது. மேலும் இந்த சுலோகத்தின் கருத்தினால் பற்றுள்ள ஆசை வெகுளி மயக்கங்களுடன் கூடிய தேவர்களின் அழகு அற்பமானதாகவே காணப்படுகிறது.

நாத! நீங்கள் மூவுலகிற்கும் அலங்காரமானவர்; உங்கள் திவ்விய உடலோ ஒப்பற்ற அழகு நிரம்யபிது; உங்கள் முகத்தில் அமைதியான ஒளி பிரதிபலிக்கிறது; நீங்கள் ஆசை, வெகுளி, மயக்கம் ஆகிய அழுக்கினைப் போக்கித் தூய ஆன்ம சொரூபத்தைப் பெற்றுவிட்டீர்; ஆதலால் புறத்திலும் கூட அழகு வெளிப்பாடு தெரிகிறது. உங்கள் உடல் ஒப்பற்ற சுத்த புற்கல பரமாணுக்களால் ஆனது. இந்தப் பரமாணுவிலும் கூட ஆசை, வெகுளி மயக்கங்கள் உண்டாகக் கூடிய சாயல் கூட இல்லை. எண்ணிக்கையிலும் கூட எவ்வளவு உங்கள் உடலில் உள்ளனவோ அவ்வளவு பரமாணுக்கள் தாம் உள்ளன. இத்தகு பரமாணுக்கள் மீதி இருந்தால் உங்களைப் போன்ற அமைதியும் அழகும் பொருந்திய திருவுருவம் வேறு எங்காவது காணப்பட வேண்டும். அப்படிக் காணப்படவில்லை. ஆதலால்தான் உங்களுடைய திருமேனி மிகச்சிறந்ததாகவும் அழகாகவும் இணையற்றதாகவும் அலாதியாகவும் விசித்திரமானதாகவும் உள்ளது என்றுரைக்கிறார்.

தீர்த்தங்கருடைய உடலில் பவித்திரமான பரமாணுக்கள் அனைத்தும் சேர்ந்துள்ளன. அத்தகு பரமாணுக்கள் வேறு எங்குமே எஞ்சியில்லை. அதனால் தீர்த்தங்கருக்கு ஒப்பான தேவர் வேறு யாரும் இல்லை. தீர்த்தங்கருடைய உடல்மைப்போ தெய்வீகமானது. அவரைக் காண்பவருக்குத் தன்னுடைய ஏழு பிறவிகளும் காணப்படுகின்றன. முற்பவங்களாகிய மூன்று பிறவிகள் தற்போதுள்ள் பிறவி ஒன்று மற்றும் எதிர்காலத்து

மூன்று பிறவிகள். எதிர்காலத்தின் மூன்றிற்கும் குறைந்த பிறவி இருப்பின் அதுவும் காணப்படும். தீர்த்தங்கர பகவான் பிறந்ததிலிருந்தே மதி, சுருதி, அவதி என்னும் மூன்று ஞானங்களைப் பெற்றவராவர். இருந்தபோதிலும் வாலறிவு பெறுவதற்கு முன்பு இவர் அறபோதனைச் செய்வதில்லை. லௌகீக விஷயங்களைப் பற்றிப் பேசுவதும் இல்லை.

பரத க்ஷேத்திரத்தில் பத்து கோடா கோடி கடற் காலத்தில் 24 தீர்த்தங்கரர்கள் தோன்றுவர். அவர்கள் பிறக்கும் போதே அவர்களுடைய திவ்விய உடல் புனிதமான சிறந்த சாந்தமான அழகுள்ள பரமாணுக் களால் ஆகிறது. ஆதலால் அவருடைய ஒளிமயமான உடலின் புனிதமான காட்சி எழில்பெற அமைந்துள்ளது.

இரண்டரை தீபத்தில் உள்ள மனுஷ்ய க்ஷேத்திரத் தில் 170 தீர்த்தங்கரர்கள் தோன்றுவர். இவர்கள் முற்பிறவியில் செய்த ஷோடச பாவனை என்னும் நல் தவத்தின் பயனால் தீர்த்தங்கரராகப் பிறப்பர். இவருடைய புண்ய பலனால் புனித ஞானமும் புனித உடலும் இவருக்கு கிடைக்கின்றன. இவர்களுக்கு ஒப்பான புனித ஆன்மா வேறு எங்குமே இல்லை. தீர்த்தங்கரர் வாலறிவு பெற்று பற்றற்ற நிலையில் உயிர்களுக்கு நல்லுபதேசம் செய்து முக்தி பெறுவர். அகம், புறம் இரண்டிலும் புனிதத்தன்மை பெற்றவர். நீர்நிலைக்கு அருகில் சென்றவர்கள் குளிர்ச் சியினை அனுபவிப்பது போன்று இவருடைய உடலைக் காண்பவர் அமைதி பெற்று இன்ப உணர்வினைப் பெறுவர்.

எழிலார்ந்த பரமாணு
எல்லாமும் கூடி
இசைகின்ற நின்வடிவம்
ஏற்றதால் அன்றே!
சுழல்கின்ற கதிதாண்டும்
சோதியே! நின்போல்
சுயரூபம் மற்றொன்று
தோற்றமுற விலையே!

(தம் ஆதி) (12)

## திருமுகத்தின் பொலிவு

வக்த்ரம் க்வ தே ஸுரநரோரக-நேத்ரஹாரி
நிச்'சேஷ-நிர்ஜிதஜகத்-த்ரிதயோபமாநம் ।
பிம்பம் கலங்க-மலிநம் க்வ நிசா'கரஸ்ய
யத்வாஸரே பவதி பாண்டு பலாச'-
கல்பம் ॥ (13)

பதவுரை:

(சுர நரோரக நேத்ர ஹாரி) தேவர், மனிதர், பவனவாசி, நாக குமார் இனத்தைச் சேர்ந்த தரணேந்திரன் முதலானோர் கண்களைக் கவர்கின்றதும், (நிச்சேஷ நிர்ஜித ஜகத் த்ரித யோபமாநம்) மீதமின்றி ஜயிக்கப்பட்ட மூவுலகிலுள்ள உவமைப் பொருட்களையுடையதுமான (தே வக்த்ரம் க்வ – உம்முடைய முகம் எங்கே? (களங்க மலிநம்)–களங்கத்திலான மாசுற்ற (நிசாகரஸ்ய) சந்திரனுடைய, (பிம்பம் க்வ) உருவம் எங்கே? (யத்) - எந்த உருவமானது, (வாஸரே) - பகலில், (பாண்டு பலாச கல்பம்) வெளுப்பான சருகு இலைக்கு ஒப்பானது (பவதி)–ஆகிறதோ, எ. று.

கருத்துரை:

பகவான் திருமுகத்தின் அழகு தேவர்களையும் மனிதர்களையும் பவனவாசி தேவ தேவந்திரர்களையும் கவர்ந்துள்ளது. அவருடைய முகத்தின் அழகிற்கு

ஒப்பானவை இவ்வுலகில் யாதும் இல்லை. அவருடைய ஒப்பற்ற முகஅழகிற்கு ஒப்பாக சந்திரனைக் கூறுவதானல் அதுகூட சரியாகாது. ஏனெனில் சந்திரனில் களங்கம் உள்ளது மற்றும் அது பகலில் உலர்ந்த இலை போன்று ஒளி இல்லாது மங்கலாகத் தோன்றுகிறது. ஆதலால் அவருடைய திருமுகத்தின் அழகுக்கு ஈடில்லை.

**விளக்கவுரை:**

ஆசாரிய மானதுங்கசூரி தேவாதி தேவ ஜின பகவானின் ஒப்பற்ற உடல் அழகைப் பற்றி விளக்கிய பிறகு அவருடைய முகத்தின் எழிலைப் பற்றிக் கூறுகிறார். திருமுகத்தின் பொலிவுக்கு ஒப்பாக சந்திரனைக் கூறுவது வழக்கம். ஆனால் மானதுங்க ஆசாரியர் சந்திரனையும் பகவான் திருமுகத்திற்கு ஒப்பாகக் கூறவும் மனமின்றி, சந்திரன் பகலில் உலர்ந்த சருகு இலை போன்று காந்தியற்றதாக உள்ளது. மேலும் அதில் கரும் புள்ளிகளும் உள்ளன. அதில் களங்கம் உண்டு. ஆதலால் பகவான் திருமுகம் சந்திரனுக்கு ஒப்பாகாது என்று சான்றுடன் விளக்குகிறார்.

பகவன்! சர்வக்ஞ பரமாத்மா! தேவாதி தேவ! மிகவும் அழகுள்ள உங்களுடைய முகப்பொலிவு அமரர் வித்யாதரர் தேவேந்திரர் அனைவரையும் தோற்கடித்து விட்டது. உங்கள் உடல் பரமாணு மிகவும் சாந்த மயமானது. உங்களுடைய திருவுருவ ஒளியானது உலகிலுள்ள உவமைக்கு ஏற்ற அனைத்துப் பொருள் களையும் வென்று விட்டது அனைத்து அழகுப் பொருள் களையும் தோற்கடித்துவிட்டது. நீங்கள் பெற்ற அதிசயமான புண்ணியம் அனைத்து உயிரினங்களுக்கும் உயர்வையும் பெருமையையும் தரக்கூடியது. கவிஞர்கள் முக அழகிற்குக் கமலத்தையும், சந்திரனையும் ஒப்பிட்டுக் கூறுவர். ஆனால் கமலமோ இரவில் தன்னுடைய

இதழ்களைக் குவித்துக் கொள்கிறது. சந்திரனோ பகலில் காணப்படுவதில்லை. சூரியன் பகலிலும் சந்திரன் இரவிலும் பிரகாசிக்கின்றன. ஆனால் உங்களுடைய முக ஒளியோ அல்லும் பகலும் எப்பொழுதும் ஒளி வீசுகிறது.

உங்களுக்கு இனிப்பிறவி கிடையாது. இந்தச் சரீரமே கடைசி. ஆதலால் நீங்கள் சரம சரீரி என அழைக்கப்படுகிறீர். நீங்கள் களங்கமற்றவர். உங்களுடைய ஆன்மாவும் உடலும் களங்மற்றவை.

மண்முழுதும் தண்ணொளியை
மகிழ்வுறவே சொரியும்
மதிதன்னை நின்வதனம்
ஒக்குமெனல் பொய்யே!
விண்முழுதும் வெங்கதிரோன்
வீசிவரு வெயில்முன்
விண்மதியும் ஒளிகுன்றி
வெள்ளிலையாய் தோன்றும்
(தம் ஆதி) (13)

## எங்கும் பரவிய குணம்

ஸம்பூர்ணமண்டல சசாங்க கலாகலாப-
சுப்ரா குணஸ் த்ரிபுவநம் தவ லங்கயந்தி |
யே ஸம்ச்ரிதாஸ் த்ரிஜகதீச்வர-நாதமேகம்
கஸ்தாந் நிவாரயதி ஸஞ்சரதோ
யதேஷ்டம் || (14)

பதவுரை:

(த்ரிஜகதீச்வர) மூவுலகிற்கும் சுவாமியே! (ஸம்பூர்ண மண்டல சசாங்க) முழுமதி போன்று, (கலா கலாப சுப்ரா) தெள்ளிய முழு கலைகளையுடைய, (தவ குணா:) உம்முடைய குணங்கள், (த்ரிபுவனம்) மூவுலகையும்

(லங்கயந்தி) கடந்து செல்லுகின்றன, (யே) எந்தக் குணங்கள், (ஏகம் நாதம்) ஒரே சுவாமியாகிய (உங்களையே) (ஸம்ச்ரிதா) சார்ந்தவைகளாய், (யதேஷ்டம்) தம் விருப் பப்படி, (ஸஞ்சரத:) சுற்றி வருகின்றனவோ, (தான்) [உங்களுடைய] அந்தக்குணங்களை, (க:)-யார்தான், (நிவாரயதி)-தடுக்கமுடியும்? [யாரும் தடுக்க முடியாது] எ. று.

கருத்துரை:

ஐப்பசி மாத சுக்லபக்ஷத்து முழுமதி ஒளி போன்று மிக தெள்ளியதாக இருக்கிறது உம்முடைய பொறுமை, சமத்துவம், விரக்தி ஆகிய அனந்த குணம் மூவுலகத்திலும் பரந்துள்ளன. மூவுலகிற்கும் ஒரே சுவாமியாகிய உம்மைச் சார்ந்த குணங்கள் எல்லா இடங்களிலும் பரவுவதை யார் தடுக்க முடியும்? பகவானே! உம் குணங்களைப் பாராட்டத் தகுதி படைத்தவர்கள், அமரேந்திரன் [நரேந்திரன்], மன்னுலக மாமன்னன், பவனலோக நாகேந்திரன் ஆகியோரே ஆவர். பாராட்டத்தக்க இத்தகு தூயோரை யார்தான் தடுக்கமுடியும்? அதாவது உம்முடைய அனந்த குணங்கள் மூவுலகிலும் பரவி உம்முடைய பெருமையை எடுத்துரைக்கின்றன.

விளக்கவுரை:

அரகந்த பகவானைத் துதிப்பவர்கள் அவருடைய உடலின் பெருமையைப் பற்றி அதிகம் துதிப்பதில்லை. அவருடைய குணத்தைப் பற்றியே துதி செய்வர். மானதுங்க ஆசாரியர் நம் அருகதேவராகிய ஆதிபகவானின் அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த வீரியம் அனந்த சுகம் ஆகிய அனந்த குணங்களையே வெளிப் படுத்துகின்றார். அவருடைய குணங்களைப் பாடுபவர் களை யாரும் தடுக்க முடியாது. அதற்கு ஒரு எடுத்துக் காட்டுக் கூறலாம்.

ஒரு மாமன்னனின் ஆள்கள் எங்கு வேண்டுமானாலும் உலாவி வரலாம். அவர்களை யாரும் தடுக்க முடியாது. அதற்குக் காரணம் அவர்கள் மாமன்னனைச் சார்ந்தவர்களாயிருப்பதேயாம். அவர்களைத் தடுக்க எவருக்கும் வலிமை கிடையாது. ஐப்பசி மாத பௌர்ணமி சந்திரன் கலை மன்னுலகு முழுவதும் பரவியுள்ளது போன்று ஆதிபகவானின் குணக்கலை, வீதராக குணம் பற்றற்ற நிலை, பவித்திரமான புகழ் யாவும் மூவுலகிலும் பரவியுள்ளதால் அவருடைய குணங்களைப் பாடுபவர்களை யார்தான் தடுக்கமுடியும்? அவருடைய குணம் மட்டுமென்ன அவர் உரைத்த தத்துவங்களும் மூவுலகிலும் பரவியுள்ளன. அவை அனைத்து உயிரினங்களுக்கும் நன்மை விளைவிப்பவை.

பகவான் பிறக்கும்போது மூவுலகிலும் அமைதி நிலவுகிறது; நரகத்திலுள்ள ஜீவனுக்குக்கூட சாந்தி கிடைக்கிறது; அசுரர்கள் அவர்களுக்கு அந்தர் முகூர்த்த காலம் வரை தொல்லை கொடுப்பதில்லை; பகவான் பிறக்கும்போதும் வாலறிவு பெறும் போதும் இந்திரன் ஆசனம் அசைகிறது; அவ்வமயம் அவன் அவதி ஞானத்தினால் பகவான் பிறந்த செய்தியையும் வாலறிவு பெற்ற பெருமையையும் உணர்ந்து எல்லாத் தேவர்களுக்கும் கட்டளை இட்டு பகவான் இருக்குமிடம் சென்று விழாக் கொண்டாட ஏவுகிறான்.

பகவான் பிறக்கும் போது கல்பவாசி தேவ உலகில் 'அநாஹத' எனும் மணியோசையும் ஜோதிஷ்க தேவ உலகில் சிம்ம நாதமும் ஏற்படுவதுடன் பவனவாசி தேவ உலகில் 'பரஹ' மும் வியந்தர தேவர்களின் 'தூர்யமும்' ஆகிய இசைக் கருவிகள் தாமாகவே ஒலி எழுப்புகின்றன. அவ்வமயம் அனைத்துத் தேவர்களும் தீர்த்தங்கரரின் ஜன்ம மற்றும் மோக்ஷ கல்யாணப் பெருவிழாவின் பெருமையை அவதி ஞானத்தின் வழியாகவும் இந்திரன்

கட்டளை மூலமும் அறிகின்றனர். எல்லோருக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்நேரம் எல்லோரும் பகவானின் பெருமையையும் குணங்களையும் பாட ஆரம்பிக்கின்றனர். அவர் புகழ் எங்கும் பரவுகிறது. மூன்று ஞானத்தை உடைய, ஒரு பிறவி எஞ்சியுள்ள, முப்பத்து மூன்று கடற்கால ஆயுள் உள்ள, சர்வார்த்த சித்தியிலுள்ள தேவர்களும் பகவான் குணங்களைப் பற்றிப் பாடுகின்றனர். அந்நிலையில் நம்மைப்போன்ற சாதாரண மனிதர்கள் ஏன் பாடக்கூடாது? ஜைன நெறியில் குண ஸ்துதிக்குத்தான் பெருமை உண்டே தவிர தனிமனிதத் துதிக்குப் பெருமை இல்லை. அதற்கு இடமும் இல்லை.

மூவுலகிலும் பரவியுள்ள பகவானின் குணங்களைப் பாடுபவர்களை யார்தான் தடுக்க முடியும்? அவருடைய புகழ் பரவுவதை யாராலும் தடுக்க முடியாததுபோல அவருடைய புகழையும் குணங்களின் சிறப்பையும் பாடுபவர்களை எவராலும் தடுக்க முடியாது. அவரைத் துதிப்பவருக்கு நன்மையும் நலமும் புண்ணியமும் கிடைப்பதுடன் நற்காட்சி பெற்று நல்லோராகி நன்ஞானத்தின் வழி நல்லொழுக்கத்தில் ஒழுகி முக்தி பெறக்கூடிய வாய்ப்பையும் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

பதினாறு கலைபெற்ற
பரிபூர்ண நிலவாய்
பாங்கான குணமெட்டும்
பாரெங்கும் சூழ
கதிநான்கின் துயரற்று
கருவற்ற முதலே!
கயிறிட்டு அவைதம்மைக்
கட்டுவார் உண்டோ?

(தம் ஆதி) (14)

## பகவானின் அசலன நிலை

சித்ரம் கிமத்ர யதி தே த்ரிதச'ாங்கநாபி;
நீதம் மநாகபி மநோ ந விகார மார்க்கம் |
கல்பாந்த-கால-மருதா சலிதாசலேந
கிம் மந்தராத்ரி-சிகரம் சலிதம் கதாசித் ‖ (15)

பதவுரை:

(த்ரிதசாங்கநாபி;) தேவ மாதர்களால், (தே) - உம்முடைய, (மந:) மனது, (மநாகபி) கொஞ்சமும் கூட, (விகார மார்கம்) உணர்ச்சி வசமாகும் வழியில், (ந நீதம் யதி) - கொண்டு செல்லப்படவில்லை என்றால், (அத்ர) இந்த விஷயத்தில், (கிம் சித்ரம்) வியப்படையக் கூடியது என்ன? (சலிதா சலேந) - மலைகளை அசைக்கின்ற, (கல்பாந்தகால மருதா) பிரளய காலத்துக் காற்றினால், (மந்த ராத்ரி சிகரம்) மந்தர மலையின் உச்சியானது, (கதாசித்) எப்பொழுதாகிலும், (சலிதம் கிம்) - அசைக்கப் பட்டதா என்ன? எ. று.

கருத்துரை:

அமர லோகத்து தேவியர் மனிதப் பெண்டிரைக் காட்டிலும் உருவத்திலும் அழகிலும் தோற்றத்திலும் மிகச் சிறந்தவர். பிறரை மயங்கச் செய்வதிலும் திறமை யானவர். அவர்கள் தங்கள் அங்க அபிநயம் களியாட்டம் சுகபோக தோற்றம் ஆகியவைகளால் ஜினபகவான் மனதைக் கொஞ்சம் கூட அசைக்க முடியவில்லை. ஜினேஸ்வரனே! அழகு வாய்ந்த இணையற்ற தேவ மாதர்களால் உங்கள் தியானத்தைக் கலைத்து உங்களுடைய சுபாவத்தை விபாவ மாறுகையில் கொண்டு வரமுடியவில்லை. உங்களுடைய மனதை அவர்களால் எள்ளளவும்கூட தம்பக்கம் மாற்றமுடியவில்லை என்பதில் வியப்பென்ன? பிரளய காலத்து பயங்கரமான காற்றினுல் சிறிய சிறிய மலைகளும்கூட அசைந்து விடுகின்றன.

ஆனால் அதிக உயரமான பொன்மயமான கம்பீரமாண மேருமலை அசைவதில்லை. அதுபோல நீங்கள் கம்பீர மானவர்; உறுதியான மனம் கொண்டவர். உங்களைத் தேவப் பெண்டிராலும் காமக் குறிப்புகளால் அசைக்க முடியாது. நீங்கள் மோக வினையை முறித்தவர்.

விளக்கவுரை:

மானதுங்க முனிவர் ஜினபகவானின் அதிசயமான உடல் அழகையும் அனந்த குணங்களையும் புகழ்ந்து விட்ட பிறகு அவருடைய 'யதாகியாத சாரித்திர' மென்னும் ஒழுக்கம் பற்றி விளக்குகிறார்.

பகவன்! நீங்கள் சம்யக்தர்சனம் சம்யக் ஞானத்தின் வழி, சம்யக் சாரித்திரத்தின் முழுமையைப் பெற்றுவிட்டீர். இதில் மோகம் கர்வம் ஆசை வெகுளி முதலிய கஷாயங்கள் முற்றிலும் இல்லை. நீங்கள் முழுமையான சுத்த சுபாவத்தைப் பெற்று விட்டீர். ஆதலால் பிற பொருள்களின் வஞ்சகமான செயல்கள் உங்களை அசைக்க முடியவில்லை. நீங்கள் அகத்திலும் புறத்திலும் வீதராக-களங்கமற்றத் தன்மையைப் பெற்று விட்டீர். நீங்கள் சிறந்த யோகி, சுக்கில தியானத்தில் மூழ்கியவர், உங்களை எவராலும் அசைக்கமுடியாது. புலனாசைக்குட்படாதவர் எவரும் இல்லை. மிகவும் வீரம் படைத்தவர்களும்கூட காமத்திற்குட்பட்டு அலைவதைக் காண்கிறோம். ஆனால், நீங்கள் ஒப்பற்ற இணையற்ற மகானும் வீரம் படைத்தவருமாவீர். நீங்கள் காமமென்னும் விரோதியை வென்று மூவுலகிலும் புகழ் பெற்ற மோக விஜயனாவீர். ஆதலால்தான் நீங்கள் மூவுலகத்திற்கும் சிறந்த பவ்விய ஆன்மா.

வீதராக தேவ! நீங்கள் புருஷார்த்தம் என்னும் நல்முயற்சியினாலும் நல்ல தவநெறியினாலும் தர்சன மோகனீயம் சாரித்திர மோகனீயமென்னும் வினை வீரனை

வீழ்த்தி விட்டீர். இது வீழ்ச்சியடைந்த உடனே காதி வினையின் நாற்பத்தேழு பிரக்ருதிகள் விலகுகின்றன.

பகவானின் சாரித்திர நெறியினை மேலும் எடுத்துரைக்கிறார். பதின் மூன்றுவகையான தேவப் பெண்டிர், கந்தர்வமாது, அப்சரா கன்னிகை தம்முடைய அழகினாலும் காமக்குறிப்புகளாலும் ஆடல் பாடல்களாலும் உங்களுடைய புனிதமான ஒழுக்க நெறியை கெடுக்க முடியவில்லை. நீங்கள் மேருமலை போன்று அசையா அறநெறியில் ஆழ்ந்து இருந்ததால் உங்களுக்குக் கிடைத்த பெருமையே மிகப்பெரியது. சாதாரண மலைகளைப் பிரளைய காலத்து காற்று அசைத்து விடலாம். ஆனால் மேருமலையை அசைக்கமுடியாது. அதுபோல மேருமலை போன்ற உங்களை தேவப்பெண்டிராலும் திசைதிருப்பமுடியவில்லை. இதற்கு காரணம் சாரித்திரமே ஆகும். உங்கள் தியானம் அசைவற்றது. நிரந்தரமானது விகாரமற்றது. உங்களிடம் அனந்த குணங்கள் உள்ளன. நீங்கள் மனதை முழுதளவும் வசப்படுத்தி விட்டீர். நன்னம்பிக்கை, நற்காட்சி, நல்ஞானம் நல்லொழுக்கத்தில் தோய்ந்துள்ள ஆன்மாவை வினை அசைக்கமுடியாது. இத்தன்மை வாய்ந்த மகான் நீங்கள்.

மலைதம்மை அசைவிக்கும்
மாவூழி வளியால்
மாமேரு முடிசாய்ந்து
மண்படல் உண்டோ?
கலைகாட்டும் அரமாதர்
கண்வலை பட்டே
கதிதாழும் வினையற்ற
கற்றோரின் கண்ணே!

(தம் ஆதி) (15)

நிர்த்தூம வர்த்தி-ரபவர்ஜித-தைலபூர:
க்ருத்ஸ்நம் ஜகத்-த்ரயமிதம் ப்ரகடீகரோஷி।
கம்யோ ந ஜாது மருதாம் சலிதாசலாநாம்
தீபோபரஸ் த்வமஸி நாத ஜகத்ப்ரகாச:॥ (16)

**பதவுரை:**

(நாத) சுவாமி! (த்வம்) நீங்கள், (நிர்தூம வர்த்தி:) புகையும் திரியும் இல்லாத, (அபவர்ஜித தைல பூர:) எண்ணெய்யும் நிரப்பப்படாத, (ஜகத்ப்ரகாச:) உலகத்தில் ஒளிதரக்கூடிய, (அபர) வேறுபட்ட (ஒப்புயர்வற்ற), (தீப) தீபமாக, (அசி) இருக்கிறீர்; (க்ருத்ஸ்நம்) எல்லா, (இதம் ஜகத்ரயம்) இந்த மூவுலகையும், (ப்ரக்டீகரோசி) ஒளிப்படுத்துகிறீர் [பிரகாசிக்கச்செய்கிறீர்], (சலிதா சலாணாம்) மலைகளையும் அசைக்கின்ற, (மருதாம்) காற்றுகளாலும், (ஜாது) ஒருகாலத்திலும், (ந கம்ய) அசைக்க முடியாது, எ. று.

**கருத்துரை:**

மூவுலகிற்கும் ஒளி போன்றுள்ள சுவாமியே! நீங்கள் ஓர் அற்புத விளக்கு போன்றுள்ளீர். சாதாரண விளக்கில் புகையும் கரியும் திரியும் உண்டு. நிரப்பிய எண்ணெய் உண்டு. அது தான் இருந்த இடத்தில் மட்டும் பிரகாசிக்கிறது. காற்றினால் அணைந்தும் விடுகிறது. ஆனால் நீங்கள் இத்தகு விளக்கு போன்று இல்லை. நீங்கள் இவ்வுலகிற்கே ஓர் அற்புத விளக்கு. உங்களிடம் திரியும் எண்ணெய்யும், புகையும் இல்லை. அதாவது புகை போன்ற 'துவேஷமும்' திரிபோன்ற ஆசையும் எண்ணெய் போன்ற பற்றும் உம்மிடமில்லை. ஆசை முதலிய தீயவைகளை வென்று விட்டீர். ஆதலால் உயிரும் உயிரற்றதும் முதலிய ஐந்து அத்திகாயங்கள் நிரம்பியுள்ள மூவுலகையே பிரகாசிக்கிறீர். நீங்கள் பெற்ற கேவல ஞானமென்கிற

ஒளியினை மலைகளையும் அசைக்கவல்ல காற்றும் கூட அணைக்க முடியாது. ஆதலால் நீங்கள் ஒப்பற்ற ஒளி விளக்கு ஆவீர்!

விளக்கவுரை:

கவிஞர்களும் எழுத்தாளர்களும் தாம் படைத்த காப்பியங்களில் உயர்வை வெளிப்படுத்த விளக்கு ஒளி, தாமரை மலர், கண்ணாடி, சூரியன், சந்திரன் ஆகிய உவமைகளைக் கொடுத்து காப்பியங்களை அழகுபடுத்துவார்கள். ஆனால் ஆசாரியர் மானதுங்கர் மேற்கூறிய உவமைகளையும் தம் படைப்பில் உயர்வாகக் கொள்ளவில்லை. தீபத்தை உவமையாகக் கூறலாம் என்றால் அது திரியும் எண்ணெய்யும் இல்லாது ஒளி தராது; எண்ணெய் இருக்கும் வரைதான் அதற்கு ஒளி உண்டு. மேலும் சாதாரண காற்றில் அது அணைந்து இருளைக் கொள்ளை கொள்கிறது. இருள் வந்த உடனே விளக்கின் பெருமை மறைந்துவிடுகிறது.

ஞானியே! நீங்கள் ஓர் ஒப்பற்ற விளக்கு! ‘நிரந்தரமான அகண்ட ஒளியினை அள்ளி வீசும் வாலறிவு பெற்ற மகான். உங்கள் அகண்ட ஜோதியில் மூவுலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் தம்தம் குணபர்யாயங்களுடன் காணப்படுகின்றன. நீங்கள் ஆசை, வெகுளி மயக்கங்களிலிருந்து விடுபட்டு வீதராக சைதன்ய மயமான அனந்த குணங்களைப் பெற்றவர். சுத்தத்தன்மையைத் தாமே பெற்றதினால் பிற பொருளையோ பிற பிராணிகளின் உதவியையோ நாடாத நல்ல ஆன்மவாதலால் எவ்வித மாறாட்டமும் ஏற்றத் தாழ்வும் பகைமையும் ஒழுங்கீனமும் உங்களிடம் இல்லை. ஆதலால் நீங்கள் உங்களையும் பிறவற்றையும் பிரகாசிக்கக் கூடிய அற்புத விளக்கு; இலௌகீக விளக்கிலிருந்து எப்பொழுதுமே வேறுபட்ட ஒரு அலௌகீக அழியா விளக்கு நீங்கள்.

உங்கள் ஞானத்தின் பெருமையே பெருமை. உங்கள் ஞானத்தை எவராலும் அழிக்கமுடியாது. காற்று விளக்கை அசைத்து அணைத்து விடுகிறது. ஆனால் அனந்த ஞானாநந்த தீபத்தை யார்தான் அணைக்க முடியும்? நீங்கள் பெற்ற கேவல ஞான ஒளி அனந்த காலம் வரை நிரந்தரமாக இருக்கக் கூடியது; பரமாத்தும நிலையில் எவ்வளவு அற்புதமும் ஆனந்தமயமும் உள்ளது. சூரிய ஒளி கூட உங்கள் ஞான ஒளிக்கு ஒப்பாகாது; சூரியனோ காலை உதயமாகிறது; மாலை மறைகிறது. ஆனால் கேவல ஞானமோ உதயமானாலும் மறைவதே இல்லை. ஒரு சிலர் சூரியனை வணங்கி சுகம்பெற விரும்புகின்றனர்; ஆனால் சூரியன் அவர்களுக்குச் சுகத்தைக் கொடுக்கிறதா என்ன? இல்லவே இல்லை. சைதன்ய மயமான கேவல ஞான சூரியனாகிய உம்மை வணங்கினால் பக்தன் தான் செய்த பக்தியின் பலத்தால் சுகத்தைப் பெற முடியும். அச்சுகத்தைப் பெறுவதற்கு மூல காரணம் அவனே தான். சைதன்ய மயமான அனந்த கிரணங்களைப் பெற்ற கேவல ஞானியாகிய நீங்கள் நிமித்த காரணமாக அமைகிறீர் என்கிறார் ஆசாரியர்.

கேவல ஞானத்தைப் பெற்ற அருக தேவனை வழிபடும் பக்தர்கள் லௌகீக சுகத்தைப் பெறுவதற்குக் கூட, சூரிய நமஸ்காரம் போன்ற செயல்களைச் செய்யாது வீதராக பரமதேவனை வணங்கி வழிபட்டுப் பக்தி செலுத்தித் தானும் பகவான் ஆவதற்கு முயல வேண்டும் என்பது கருத்து.

புகையின்றி திரியின்றி
பொழிநெய்யு மின்றி
புவிமூன்றும் ஒளிவீசும்
பொதுவான சோதி!

பகைமேரு படமோதும்
வளியாலும் அணையா
பவநாசம் அடைவிக்கும்
பரமான்ம பூதி
(தம் ஆதி) (16)

## பகலவனும் பகவானுக்கு எதிரில்லை

நாஸ்தம் கதாசி-துபயாஸி ந ராஹு-கம்ய:
ஸ்பஷ்டீ-கரோஷி ஸஹஸா யுகபஜ்ஜகந்தி |
நாம்போதரோதர நிருத்த-மஹாப்ரபாவ:
ஸூர்யாதிசாயி-மஹிமாஸி முநீந்த்ர
லோகே || (17)

பதவுரை:

(முநீந்த்ர) முனிவர் பெருமானே! (லோகே) உலகில், (த்வம்) நீங்கள், (கதாசித்) எப்பொழுதுமே, (அஸ்தம் ந உப யாஸி) மறைவதே இல்லை, (ராஹு கம்ய) ராகுவினால் பீடிக்கப்படுபவராக, (ந) இல்லை, (யுகபத்) ஒரே நேரத்தில், (ஜகத்) உலகம் அனைத்தையும் (ஸ்பஷ்டீ கரோஷி) விளங்கச் செய்கிறீர்; [மேலும் நீங்கள்] (அம்போதரோதர) மேகங்களுக்கிடையே, (நிருத்த) மறைக்கப்பட்ட, (மஹாப்ரபாவ) மாட்சிமையுள்ளவராக, (ந) இல்லை; [ஆகவே] (ஸூர்யா திசாயி மஹிமா) சூரியனைக் காட்டிலும் சிறந்த மகிமையுள்ளவராக, (அஸி) இருககிறீர், எ. று.

கருத்துரை:

கேவல ஞான சூரியனே! உங்களுடைய மகிமையை சூரியனுக்கு ஒப்பிட்டுக் கூற முடியாது. ஏனெனில் சூரியன் காலை உதயமாகி மாலை மறைகிறான்; ராகுவால் மறைக்கப்படுகிறான். மேலும் அவன் தன்னுடைய ஒளியை இருள் சூழ்ந்த குகைகளில் செலுத்துவதில்லை;

மேகக் கூட்டங்களாலும் மறைக்கப்படுகின்றான்; அஞ்ஞானத்தையுடைய மக்களால் வணங்கப்படும் சூரியனின் பெருமை எல்லைக்குட்பட்டது. நீங்களோ அலௌகீக ஆதித்தன். நீங்கள் பெற்ற க்ஷாயிக ஞான ஒளி எப்பொழுதுமே மறையாது; முக்காலத்திலும் ஒளி தரக்கூடியது; நல்வினை தீவினை போன்ற ராகுவின் நிழல்கூட உங்கள்மீது விழுவதில்லை. நீங்கள் மூவுலகத்திலுள்ள உயிர்ப்பொருள், உயிரற்ற பொருள்கள் அனைத்தையும் ஒரே நேரத்தில் பிரகாசிக்கக்கூடியவர். உங்கள் ஞான குணத்தை எவராலும் மறைக்க முடியாது. ஆதலால் உங்கள் மகிமை சூரியனைக் காட்டிலும் அதிக அதிசயமானது.

**விளக்கவுரை:**

வைதீக வேதமந்திரங்களில் அறிவாளிகள் பற்பல இடங்களில் சூரிய தேவனை வணங்கிய செய்திகள் காணப்படுகின்றன. ஆனால் சமண பாரம்பரியத்தில் தேவன் என்பதற்கு இலக்கணமே வேறுபட்டது. வீதராகி சர்வக்ஞன் ஹிதோபதேஸி ஆகிய நற்பண்புகளையுடைய தேவனே சமண அற நூல்களில் வழிபடும் தெய்வம் என கூறப்பட்டுள்ளது. ஆதலால் இங்கு தோத்திரக்காரர் ஜினபகவானுக்கு ஒப்பாக சூரியனைக் காட்ட மறுக்கிறார். இவர் கீழ்க்கண்ட தருக்கங்களின் மூலம் சூரிய தேவன் அருகதேவனுக்கு ஒப்பாக மாட்டான் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார். மேலும் ஜினபகவான் பெருமையும் மகிமையும் சிறந்தன என்பதையும் கூறியுள்ளார்.

சூரியன் உதயமாகி மறைகிறான்; ஆனால் அருகதேவன் ஞானஒளி நிரந்தரமாக மறையாமல் உள்ளது. கிரகணம் நிகழும் காலத்தில் சூரியனை ராகு மறைத்துத் தன்னுடைய கருமையை வெளிப்படுத்தி சூரிய ஒளியையும் கருமையாக்கிவிடுகிறது. ஆனால் அருகபகவான் மீது சம்சாரச் சூழலுக்குக் காரணமாக உள்ள ஆசை, வெகுளி,

மயக்கம் என்னும் கிரகணம் தம் வலிமையைக் காட்ட முடியவில்லை. இவர்முன் அவை தம் சக்திகளை இழந்து விடுகின்றன. இவரது ஒளிக்கதிர் நிரந்தரமானது. சூரியன் பகலில் ஒளி தருகிறான்,. இரவில் இல்லை; திறந்தவெளியில்தான் அவன் ஒளி படுகிறது; குகை போன்ற இருட்டறையில் அவன் ஒளி புகுவதில்லை. ஆனால் பகவானின் ஞானஒளி மூவுலகத்திலும் உள்ள அசையும் பொருள்கள் மற்றும் அசையாத பொருள்கள் மீது மூன்று காலங்களிலும் ஒரே நேரத்தில் ஒளிர்கிறது. அடர்ந்த மேகக் கூட்டம் சூரிய ஒளியை மறைத்து விடுகிறது. ஆனால் பகவானின் ஞானஒளியோ மதி, ஸ்ருதி, அவதி, மனப்பர்யய, கேவல ஞானாவரணீய கர்மங்களின் திரையினால் எப்பொழுதுமே மறைக்கப் படாமல் உள்ளது. ஆதலால் பகவான்! உங்களைப் போன்று கேவல ஞான ஒளியினைப் பெற உங்களையே நாடுகிறேன். உங்கள் தொடர்பால் சுப ராகம் ஏற்படுகிறது. இதனால் புண்ணிய வினைக்கட்டு ஏற்பட்டுத் தேவ பிறவிக்குக் கொண்டு செல்கிறது. மேலும் ஆசை, வெகுளி மயக்கங்கள் குறைந்து, கேவல ஞான ஒளியினைப்பெற வாய்ப்பும் கிடைக்கிறது என்று பக்தன் தன் உள்ளத்தில் நினைத்து பகவானை வழிபட வேண்டும்.

புவிசுற்றி வருகின்ற
வெய்யோற்கு முகிலால்
பொங்கரவு தன்னாலும்
பொய்மறைப் புண்டு
கவிசுற்றும் புகழாள!
கதிரோற்கு மேலா
கர்மஇருள் தனைவென்ற
காட்சியாம் சுடரே! (17)

(தம் ஆதி)

# நிலாவும் பகவானுக்கு நிகரில்லை

**நித்யோதயம் தளித-மோஹ-மஹாந்தகாரம்**
**கம்யம் ந ராஹு-வதநஸ்ய ந வாரிதாநாம் |**
**விப்ராஜதே தவ முகாப்ஜ-மநல்பகாந்தி**
**வித்யோதயஜ்-ஜகதபூர்வ-ச'ச'ாங்க பிம்பம் ॥ (18)**

**பதவுரை:**

(தவ முகாப்ஜம்) உங்களுடைய தாமரை போன்ற முகமானது, (நித்யோதயம்) எப்பொழுதும் மலர்ந்த வண்ணம் உள்ளது, (மோஹ மஹாந்த காரம்) மோக மென்னும் இருளை, (தளித) அழிக்கிறது, (ராஹு வதனஸ்ய) ராகுவின் வாய்க்கும், (வாரிதானாம்) மேகங் களுக்கும், (ந கம்யம்) அகப்படாமலும், (அநல்ப காந்தி) அதிக ஒளியுள்ளதாகவும், (விப்ராஜதே) விளங்குகிறது; (ஜகத்) உலகில், (அபூர்வ) அற்புதமான (சசாங்க பிம்பம்) சந்திரபிம்பமாக, (வித்யோதயத்) பிரகாசிக்கிறது, எ. று.

**கருத்துரை:**

பகவானே! உங்கள் திருமுகம் ஓர் அலாதியான சந்திரன், பதினாறு கலைகளுடன் கூடிய சந்திரனோ இரவில்தான் ஒளிர்கிறது. ஆனால் உங்கள் திருமுக மென்னும் சந்திரன் அல்லும் பகலும் ஒளிமயமாகவே உள்ளது. சந்திரன் சாதாரண இருளைப் போக்குகிறது. சந்திரனை இராகு கிரகமும் மேகக் கூட்டமும் மறைக் கின்றன. ஆனால் உங்களுடைய ஞானஒளியை மறைக்க வல்ல சக்தி ஏதும் இல்லை. சந்திரனின் ஒளி வளர் பிறையில் வளர்ந்தும் தேய்பிறையில் குறைந்தும் காணப் படுகிறது. ஆனால் உங்கள் முகச் சந்திர ஒளியோ எப்பொழுதும் இடைவிடாது சதா சர்வ காலமும் பிரகாசித் துக்கொண்டே இருக்கிறது. சந்திரன் இரண்டரை தீபத்திற்குள் வளர்வதும் தேய்வதுமாக இருந்து ஒளிதரு கிறது. ஆனால், உங்கள் முகச்சந்திரனோ உலக முழுவதும் பிரகாசிக்கிறது.

பக்தி வெள்ளத்தில் மூழ்கிய மானதுங்க முனிவர் தம் உவமையில் சூரியனையும் சந்திரனையும் கேவல ஞானி பகவானுக்கு உவமையாகக் கூற மறுத்துவிட்டார். இவ்வுலகில் மக்கள் சந்திரனையும் சூரியனையும் மிகச் சிறந்த பொருளாகக் கருதி சிற்சில நேரங்களில் இவை களையே சிலவற்றிற்கு உவமைப் பொருளாகவும் கூறு கின்றனர். ஆனால் மானதுங்க முனிவர் இவற்றையும் புறக்கணித்துவிட்டார்.

இவர் 13வது சுலோகத்தில் "பிம்பம் களங்கமலிநம் க்வ நிசாகரஸ்ய" என்று கூறி ஜினபகவான் முகக் கமலத்திற்கு ஒப்பாகக் குற்றம் குறைகளுடன் கூடிய சந்திரனைக்கூற முடியாது என்று விளக்கினார். அது போலவே இந்த சுலோகத்திலும்கூட லௌகீக சந்திரனின் குறைபாட்டைக் கூறி ஜினபகவான் முகச்சந்திரனை அலௌகீக ஒப்பில்லாத சந்திரனைப் போன்றுள்ளதாக எடுத்துரைக்கிறார்.

ஆசாரியர் கூறுகிறார், பகவானே! சந்திரன் உதய மாகிறான்; மறைகிறான். ஆனால் உங்கள் திருமுகச் சந்திரன் உதயமாவதும் மறைவதும் போன்ற செயல் களுக்குட்பட்டதன்று. நிரந்தரமாக ஒளி தரும் பிம்பம். அரகந்த தேவரே! உம் ஞானம் நித்யோதயம்; நிரந்தரமாக உதயமானது; இது மோகமென்னும் இருளைப் போக்கு கிறது. லௌகீக சந்திரன் சாதாரண இருளைப் போக்கு கிறது. ஆனால் உங்கள் முகச் சந்திரனோ, மித்யாத்துவ மென்னும் காரிருளைப் போக்குகிறது. சந்திரஒளி சுக்கில பக்ஷத்திற்குப் பிறகு முறையே குறைந்துகொண்டே வருகிறது. ஆனால் உங்கள் முகஒளி எப்போழுதும் குறையாத ஒளியுடையதாக உள்ளது. சந்திரனை ராகு மறைக்கிறது. உங்களை மறைக்கவல்ல சக்தி இவ்வுலகில்

ஏதுமில்லை. சந்திரனது ஒளி மேகக் கூட்டத்தில் மறைந்து விடுகிறது. உங்கள் குணமென்னும் காந்தியை மறைக்கக் கூடிய சக்தி ஏதுமில்லை. சந்திரனுடைய ஒளி குறிப் பிட்ட பகுதியில் மட்டும் படுகிறது. உங்களுடைய ஞான ஒளியோ மூவுலகிலும் பிரகாசிக்கிறது.

பகவானே! உங்கள் முக முத்திரையான முகஒளி ஒரே மாதிரியாக நிலைத்திருக்கிறது. நீங்கள் விஹாரம் செய்யும் போதுகூட அளவு கடந்த ஒளிமயமாகவே உள்ளீர். இவை எல்லாம் கேவலம் ஞானத்தின் மகிமையே மகிமை. அனாதி காலமாக வந்த மோக வினை விலகியதுமே அகத்தில் தோன்றிய அற்புத ஞான ஒளியின் சிறப்பு இது. "பரம பரஞ்ஜோதி கோடீ சந்திராதித்ய கிரணசுக்ஞான பிரகாசா" என்று ரத்னாகர கவி கூறியது போன்று உங்கள் உடற் காந்தியும் திருமுக ஒளியும் ஞானமும் கோடி சூரிய சந்திர ஒளிக்குக்கூட ஒப்பாகாது. உங்களுடைய சாதிசய புண்ணியத்தின் பெருமையே பெருமை.

அழிவிலா சோதிமுகம்
அந்தமில் நிலவே!
அம்புலிக் குள்ளகுறை
அதுதனக் குளதோ?
பழியிலா நின்ஞானப்
படரொளியின் முன்னே
பகருவரு உவமையென
பாரினில் உண்டோ?

(தம் ஆதி) (18)

## பகலவனும் பால்நிலவும் பகவன்முன் பயனில்லை

கிம் ச’ர்வரீஷு ச’சி’ நா ஹ்நி விவஸ்வதா வா
யுஷ்மந் முகேந்து-தளிதேஷு தமஸ்ஸுநாத |
நிஷ்பந்ந-சா’லிவந-சா’லிநி ஜீவலோகே
கார்யம் கியஜ்ஜலதரைர் ஜலபார நம்ரை: ‖ (19)

பதவுரை:

(நாத) சுவாமியே! (தமஸ்ஸு) இருள், (யுஷ்மந் முகேந்து தளிதேஷு) உங்கள் முகச் சந்திரனால் அழிக்கப் பட்ட பிறகு, (சர்வரீஷு) இரவுக்காலங்களில் (சசிநா கிம்) சந்திரனால் என்ன பயன்? [அல்லது] (அஹ்நி) பகலில் (விவஸ்வதா வா) சூரியனால், (கிம்) என்ன பயன்? (ஜீவலோகே) உலகில், (நிஷ்பந்நசாலி வநஸாலிநி) நெற்பயிர் நன்கு வளர்ந்து கதிர் முற்றிய பிறகு, (ஜலபார நம்ரை:) நீர் பாரத்தினால் வணங்குகின்றன (ஜலதரை:) மேகங்களால், (கியத் கார்யம்)-என்ன பயன்? எ.று

கருத்துரை:

நன்கு விளைந்து முற்றிய நெல் பயிருக்கு நீர் கொண்ட கருமேகங்களால் பயன் யாதுமில்லை. அது போலப் பகவான் திருமுகச் சந்திர ஒளியினால் அஞ்ஞான மென்னும் இருளும் பாபவினைகளும் பறந்தோடிப் போகின்றன. அந்நிலையில் விண்ணுலகில் பிரகாசிக் கின்ற சூரியஒளியாலும் சந்திர ஒளியாலும் யாது பயன்? சூரிய சந்திர ஒளியினைக் காட்டிலும் ஜின பகவான் மகிமை அளவு கடந்தது என்பதாம்.

விளக்கவுரை:

இந்தச் சுலோகத்தில் தோத்திரக்காரர் சூரியனையும் சந்திரனையும் வழிபடும் அன்பர்களை எச்சரிக்கும் வகையில் ஒரு நல்ல கருத்தினை எடுத்துரைக்கிறார். வருண தேவர்களை வழிபடுவது வீண் என்பதையும் நிரூபித்துள்ளார்.

பகவானே! உங்கள் திருமுகச் சந்திர ஒளியினால் உலகத்திலுள்ள உயிர்களின் அறிவின்மை என்னும் இருளும் போக வினையும் விலகுகின்றன. அந்நிலையில் பகலை உண்டாக்கும் பகலவனாலும் இரவில் ஒளி தரும்

சந்திரனாலும் யாது பயன்? சூரியன் பகல் வேளையிலும் சந்திரன் இரவு நேரத்திலும் எல்லைக்குட்பட்ட இடத்தில் மட்டும் உள்ள லௌகீக இருளை விரட்டுகின்றன. ஆனல் உங்களுடைய புகழும் காந்தியும் அல்லும் பகலும் பளபள வெனப் பிரகாசிக்கின்றன என்கிறார் கவி. சமவசரணத்தில் தீர்த்தங்கர திருவுருவ ஒளி அல்லும் பகலும் நிரந்தரமாக இருபத்து நான்கு மணி நேரமும் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது என்று ஆகமம் கூறுகிறது. அதனால் அங்குப் பகலில் சூரியனும் இரவில் சந்திரனும் தேவை இல்லை.

காரியம் முடிவு பெற்ற பிறகு காரணம் தேவை இல்லை. அதாவது உபாதான சக்தி பெற்ற பிறகு நிமித்த காரணங்களைப் பற்றி சிந்திக்கவேண்டியது அவசியமில்லை. அது போல ஒப்பற்ற கேவல ஞான ஒளி பெறப்படும்போது சாதாரண ஒளிதரும் சூரிய சந்திரனைப் பற்றிச் சிந்திப்பது அவசியமில்லை அல்லவா?

**ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது :-**

**"சந்திராதித்ய க்ரஹாணாம் ப்ரபா ப்ரகாசயதி பரிமிதம் க்ஷேத்ரம்**
**கைவலீகம் புனர் ஞானம் லோகாலோகம் ப்ரகாசயதி || (1)**

– ஆவஸ்யகநிர்யுக்தி

"சந்திர சூரிய ஒளியானது எல்லைக்குட்டபட்ட பகுதியில் மட்டும் பிரகாசிக்கிறது. ஆனால் கேவலி பகவான் ஞான ஒளியானது உலகம் அலோகம் முழுதும் பிரகாசிக்கிறது."

கேவல ஞான ஒளி பெறப்படும்போது சூரிய சந்திர ஒளிக்கு அவசியம் என்ன? வயலில் உள்ள நெல் பயிர் நன்கு முற்றி அறுவடை ஆகும் தறுவாயில் மேகங்களைக் கொண்டு வருணதேவன் சொரியும் கனத்த மழையினால் யாது பயன்? அந்நேரத்தில் பெய்யும் கனமழையினால் இழப்பே தவிர இலாபம் இல்லை. அந்நேரத்தில் கன

மழையினால் விவசாயியின் கண்களில் கண்ணீர் வருகிறது அல்லவா?

மோகமென்னும் பயில்வானை வென்ற வீதராக பரமதேவன் முன், மோகத்துடன் கூடிய தேவ தேவியரால் யாது பயன்?

ஒரு புராண வரலாறு இங்கு நினைவு கூரத் தகுந்தது. போக பூமியில் உள்ள கற்ப விருக்ஷங்களின் காந்தி மிகவும் சிறந்தது. அங்கு சூரிய சந்திரன் மக்களுக்கு காணப்படுவதில்லை. இவைகளால் அங்குள்ள மக்களுக்கு யாதும் பயனும் இல்லை. அதுபோல கேவலி பகவான் முன் சூரிய சந்திர பிரகாசம் காணப்படுவதில்லை. பரத க்ஷேத்திரத்தில் மனிதனுடைய புண்ணியம் குறைந்தபோது கற்பவிருக்ஷங்கள் பிரகாசம் குன்றின. மூன்றாம் காலமாகிய நல்தீக்காலத்தின் இறுதியில் கற்ப விருக்ஷங்கள் மறையலாயின. சூரிய அஸ்தம் சந்திரோதயம் ஆகியன கண்டு மக்கள் பயந்து விருஷபதேவரின் தந்தையாகிய நாபி மன்னனிடம் ஓடினர். அவ்வமயம் நாபிராஜா அவர்களுக்கு தைரியம் கூறி கால மாறுகையால் உங்களுடைய புண்ணியமும் மாறிவிட்டது. போக பூமி மாறி கற்பவிருக்ஷங்கள் மறையலாயின. சூரிய சந்திர ஒளி தென்படலாயிற்று. நீங்கள் அஞ்சவேண்டாம். இனி இந்த ஒளியில் தான் உங்கள் பணி நடைபெற வேண்டும் என்றார்.

சாஸ்வத போகபூமியில் உள்ள இரட்டையருக்கு சூரிய சந்திரன் பிரகாசம் தேவை இல்லை. அவர்களுக்கு இந்த பிரகாசத்தைக் காட்டிலும் அதிக பிரகாசம் கற்ப விருக்ஷத்திலிருந்து கிடைக்கிறது. சூரிய சந்திரனால் அவர்களுக்குப் பயன் இல்லை. அதுபோல பகவான் விருக்ஷபதேவர் முகமண்டல காந்தியின் முன் சூரிய சந்திரர்களின் காந்தி மங்கிவிடுகிறது.

கதிர்முற்றி தலைசாய்ந்த
கவினார்ந்த! சாலி
கருமுகில் மழைநோக்கும்
கட்டாய முண்டோ?
கதிரொடு மதியுமிழும்
கலையொளியும் வேண்டா,
காசினியில் நின்வதன
காந்தியே மிஞ்சும்

(தம் ஆதி (19)

## பகவானின் ஞானம் பிறரிடம் இல்லை

ஜ்ஞாநம் யதா த்வயி விபாதி க்ருதாவகாசம்
நைவம் ததா ஹரிஹராதிஷு நாயகேஷு |
தேஜோ மஹாமணிஷு யாதி யதா மஹத்வம்
நைவம் து காச-ச'கலே கிரணாகுலேபி || (20)

பதவுரை:

(க்ருதாவகாசம்) அனந்த குண பர்யாயங்களையுடைய திரவ்யங்களைப் பிரகாசிக்கின்ற, (ஞானம்) கேவல ஞானம், (யதா) எப்படி, (த்வயி) உம்மிடம் (விபாதி) பிரகாசிக்கிறதோ, (ததா) அப்படி, (ஹரிஹராதிஷு நாயகேஷு) அரி சிவன் முதலாகிய லௌகீக நாயகரிடம், (நஏவம்) அவ்வாறு இல்லை; (மணிஷு) சிறந்த மேன்மையான இரத்தினங்களில், (தேஜ) காந்தியானது, (யதா) எத்தன்மையாக (மஹத்வம்) பெருமையை, (யாதி) பெறுகிறதோ (யேவம்) அவ்வாறு, (கிரணா குலே) கிரணங்களை யுடைய, [காச சகலே அபி] கண்ணாடித் துண்டில் [நது) இல்லவே இல்லை, எ. று

கருத்துரை:

உலகம் அலோகங்ளைப் பிரகாசிக்கின்ற ஞானத்தைப் பெற்ற சுவாமியே! அநந்த பரிபாயங்களையுடைய

திரவியங்களைப் பிரகாசிக்கின்ற ஞானம் உம்மிடம் உள்ளது. இத்தகு ஞானம் அரி, அரர், நான்முகன், புத்தர் முதலானோரிடம் இல்லை. உங்களிடம் உள்ள ஞானம் ஸம்யக் ஞானமாகும். அவர்களிடம் உள்ள ஞானம் 'மித்யா' ஞானமாகும். அதுவே அஞ்ஞானம், முன்பின் முரண்பட்ட ஞானம் என்று கூறுகிறார். அவரை நம்பும் பக்தர்கள், 'மனிதன் செய்த வினைகளுக்குத் தகுந்த பலனை ஈஸ்வரன் அளிக்கிறான்' என்றும்[1] 'வெவ்வேறு பாத்திரங்களில் உள்ள நீரில் காணப்படும் சந்திர பிம்பம் ஒரே மாதிரி உள்ளது போல வெவ்வேறு பிராணிகளில் உள்ள ஆத்மா எல்லாம் ஒரே ஆத்மா' என்றும் கூறுவர்[2]. வெவ்வேறு உடலில் உயிர் இருந்தபோதிலும் அவையாவும் ஒரே ஜீவனாகும் என்பது அவர்கள் தத்துவமாகும். "அஜைர்யஷடைவ்யம்" என்னும் கருத்துள்ள சாதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இது கருணை குணத்தை புறக்கணிக்கும் ஒழுங்கீன சித்தாந்தமாகும். இந்த எல்லாக்காரணங்களால் நான்முகன், அரி முதலானோர் ஞானம் முழுமை பெற்ற ஞானம் அல்ல. இதற்கு எடுத்துக்காட்டாகவைரம் புஷ்பராகம் நீலக்கல் முதலிய இரத்தினங்களில் உள்ள காந்தி கண்ணாடித் துண்டுகளில் இருப்பதில்லை என்று கூறுகிறார்.

**விளக்கவுரை :**

வீதராக பகவானே! உங்களுடைய கேவல ஞானத்தின் பெருமையே பெருமை! உங்களிடம் உள்ள அனந்த ஞானம் எத்தன்மையானது? இராக துவேஷத்துடன் கூடிய தேவர்களிடம் உள்ள குறுகிய ஞானம் எத்தன்மையது? நீங்கள் அநேகாந்த நெறியின் வழி உலகப்

---

1 யத் யாவத் யாத்ருசம் யேந க்ருதம் கர்மம் சுபாசுபம்
தத்தாவத் தாத்ருசம் தஸ்ய ஃபலமீஸ: ப்ரயச்சதி ||

2 ஏக ஏவஹிப் பூதாத்மா பூதேபூதே வ்யவஸ் தித:
ஏகதா பகுதாஸ்சைவ த்ருஸ்யதே ஜலசந்த்ர வத் ||

பொருள்களின் குணங்களை எப்படிக் கண்டீரோ, அறிந்தீரோ. அப்படியே எடுத்துரைத்தீர். உங்களுடைய அறச்சொல் முன் பின் முரண்பாடு உடையதன்று; பொய்மையைக் கலைந்தெரிவதும் ஆகும்; உலக இயலில் உழலுகின்ற அறிவு குறைந்த தெய்வங்கள் அறிவில் உள்ள முன்பின் முரண்பாட்டைக் காட்டுவதாகும். நீங்கள் சுத்த ஆன்ம நிலையைப் பெற்றதுமல்லாமல் முழுதுணர் குணத்தையும் பெற்றவர். இத்தகு ஞானம் நான்முகன், அரி, அரன் முதலிய லௌகீக இறைவர்களிடம் இல்லை. இயற்கையான ஒளியினைப் பெற்ற வைடூரியம், மாணிக்கம் நீலக்கல் போன்ற இரத்தினங்களில் உள்ள சோபையும் ஒளியும் சூரிய கிரணங்களைப் பிரதிபலிக்கின்ற கண்ணாடித் துண்டில் இருப்பதில்லை.

இங்கு ஆசை, வெகுளி, மயக்கங்களையுடைய தேவர்களைக் கண்ணாடித் துண்டுகளுக்கு ஒப்பிட்டும் வீதராகியும் இதோபதேசியுமான ஜினபகவானை இரத்தினங்களுக்கு ஒப்பிட்டும் கூறப்படுகிறது. தன்னையும் பிற பொருளையும் பிரகாசிக்கின்ற கேவல ஞானத்திற்கு எதிரில் அஞ்ஞானம் வலிவற்றது என்பதை நிரூபித்துள்ளார்.

அகண்ட ஞானியின் வார்த்தை பொருள்களின் அனந்த குணபரியாயங்களை விளக்கிக் கூறும் இயல்புடையதாகவே இருக்கும். ஆக்கும் காக்கும் அழிக்கும் தன்மை உள்ளவன் கடவுள் என்று கருதும் கருத்து இங்கு மறுக்கப்படுகிறது. எந்தக் கடவுளும் ஆக்குவதும், காப்பதும், படைப்பதும் இல்லை. எல்லாம் இயற்கையாகவே நடைபெறுகின்றன. ஒவ்வொரு ஜீவனும் தம் வினைக்கு ஏற்ற பலனை அனுபவிக்கிறது. இன்பமும் துன்பமும் பிறர் தராதவை. அவரவர்படும் இன்ப துன்பங்களுக்கு அவரவரே காரணம்.

அரதனத் திண்மணிகள்
அழகொளிர வீசும்
அரிதான பேரொளிதாம்
அறுவளைக் குளவோ?
பெரிதான கேவலப்
பேர்ஞான சோதி
பேசவரு அரியரர்கள்
பெற்றநிலை உண்டோ?

(தம் ஆதி) (20)

## அனந்த சுகம் அருகனால் அமைகிறது

மந்யே வரம் ஹரிஹராதய ஏவ த்ருஷ்டா
த்ருஷ்டேஷு யேஷு ஹ்ருதயம் த்வயி
தோஷமேதி |
கிம் வீக்ஷிதேந பவதா புவி யேந நாந்ய:
கச்'சிந் மநோ ஹரதி நாத! பவாந்தரேபி ॥ (21)

**பதவுரை :**

(நாத) சுவாமியே! (ஹரிஹரா தய:) – விஷ்ணு சிவன் முதலிய லௌகீக தேவர்கள், (த்ருஷ்டா : ஏவ) பார்க்கப்பட்டவர்கள், [என்பது] (வரம் மந்யே) சிறந்த தாகக் கருதுகிறேன், (யத) ஏனெனில், (யேஷு த்ருஷ் டேஷு) எவரைப் பார்ப்பதால், (ஹ்ருதயம்) - இருதயமானது (த்வயி) - உம்மிடத்தில் (தோஷம்) சந்தோஷத்தை (ஏதி) அடைகிறதோ, (வீக்ஷி தேந பவதா) உங்களைப் பார்ப் பதால், (கிம்) என்ன பயன் எனில்? (யேந) அதனால் (புவி) – மண்ணுலகில் (அந்ய : கச்சித்) வேறு எவரும், (பவாந்தரேபி) மறு பிறவியிலும், (மந : நஹரதி) - மன தைக் கவருவதில்லை, எ. று.

**கருத்துரை:**

பகவானே! ராக துவேஷங்களுடன் கூடிய தேவர் களைப் பார்த்துவிட்டு உங்களைப் பார்த்த பிறகுதான்

மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஏனெனில் ஆசை, வெகுளி, மயக்கங்களுடன் கூடிய தேவர்களைப் பார்ப்பதால் மனம் மகிழ்வதில்லை, அமைதியும் கிடைப்பதில்லை. உங்களைப் பார்ப்பதால் மனம் இயல்பாகவே மகிழ்ச்சியடைகிறது. ஏனெனில் நீங்கள் வீதராகி, முழுணர் ஞானி, ஹிதோபதேசி, சாந்த ரூபி. உங்களைக்கண்ட நினைவானது அடுத்து வரும் பிறவிகளிலும் கூட என்னை விட்டு விலகாது.

**விளக்கவுரை:**

இயற்கைப் பொருளுக்குச் சமமான செயற்கைப் பொருளை வைத்துதான் இயற்கை பொருளின் பெருமையையும் மதிப்பையும் காட்ட முடியும். இரத்தினங்களின் மதிப்பை அறியாதவர் கண்ணாடியையே சிறந்ததாகக் கருதுவர். ஆனால் இரத்தினங்களைக் கண்டவர்கட்கு கண்ணாடிச் சிறந்ததாகத் தோன்றாது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு பொருள்களைக் கண்ட பிறகுதான் இயற்கையாகவே அழகு வாய்ந்த பொருளின் குணமும் மதிப்பும் தெரியும்.

ஆசாரியர் 20 மற்றும் 21 ஆவது சுலோகங்களில் சராகி, வீதராகி தேவர்களை ஒப்பிட்டுக் காட்டி எவர் சிறந்தவர் என்பதை எடுத்து வைக்கிறார்.

சுவாமியே! நான் சிறிது காலம் மதிகெட்டு ராக துவேஷமுடைய லௌகீக தேவர்களைக் கண்டது நல்லதாயிற்று. ஏனெனில், அவர்களைப் பார்க்காது இருந்தால் அவர்களைப்பற்றிய பொய்மை எனக்கு எப்படி தெரிந்திருக்க முடியும்? அவர்களைக் கண்டதால் என்னுடைய மனம் அமைதி அடையவில்லை. உங்களுடைய இயற்கை உடலழகையும் அமைதியான உருவத்தையும் கண்ட பின்னரே என் கண்கள் உண்மைப் பயனைப் பெற்றன என உணர்கிறேன்.

இராக துவேஷமுடைய தேவரை கண்ட பிறகு பகவான் அருகதேவனைக் கண்டால் ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. முன்னவர் உருவம் ஆசை, வெகுளி மயக்கங்களை உண்டாக்குகின்றது. அவர்கள் கைகளில் உள்ள படைக் கருவிகள் அச்சத்தை உண்டாக்குகின்றன. ஜினபகவான் உருவமோ சாந்த ரூபமாக உள்ளது[1]. செருக்கு, மகிழ்ச்சி, சினம், ஆசை, பரீஷகம், கஷாயம் பொறாமை முதலிய தீய எண்ணங்களைக் களைந்த வராகிய ஜினபகவானைத் தரிசிக்கும்போது மனதில் ஏற்படும் ஆனந்தம் மற்றவரைப் பார்க்கும்போது ஏற்படு வதில்லை. கண் மூக்கின் முனையில் நிலைத்து சாந்த முத்திரையை அறிவிக்கிறது. அவருடைய தியானம் அடுத்த பிறவியிலும் சுகத்தையும் ஆனந்தத்தையும் புகழையும் கொடுக்கக்கூடியது. ஆதலால் ஜினபகவானே சிறந்தவர்.

இதற்கு எடுத்துக்காட்டாக பகவான் விருஷப தேவருக்கு முதன் முதலில் ஆகாரதானம் வழங்கிய ஸ்ரேயாம்ச மன்னன் வரலாறு சிறந்த சான்றாகும். அஸ்தினாபுரத்தில் குரு வம்சத்து மன்னனான சோமப் பிரபன் என்பவனுக்கு ஸ்ரேயாங்குமாரன் என்னும் தம்பி இருந்தான். விருஷப மகாமுனிவர் ஆகாரம் ஏற்க அஸ்தினாபுரம் வருவதற்குமுன்பு ஒரு நாள் இரவு கடைசி யாமத்தில் ஸ்ரேயாங்குமாரர் மேருமலை, சிங்கம், எருது, சூரியன், சந்திரன், சமுத்திரம் மற்றும் அஷ்ட மங்களப் பொருட்களை ஏந்திய வியந்திர தேவர் சிலை ஆகியவை களை தம் கனவில் கண்டார்.

---

1 ஜித மத ஹர்ஷ த்வேஷா ஜிதமோஹ பரிஷஹ ஜிதகஷாயா:
ஜித ஜன்ம மரண ரோகாஸ்ச, ஜிதமாத்சர்ய ஜயந்து ஜிநா:
வபுஸ்ச பர்யங்க சயம் ஸ்லதம்ச த்ருஸௌச நாசாநியதேஸ்திரீச
நசிக்ஷிதேயம் பரதீர்த்த நாத்யை : ஜிநேந்தர முத்ராபி தவாந் யதா ஸ்தாம் !!
ஆயோக வ்யவச்சேதத்வாத்ரிம் சிகா. 20

மறுநாள் சிரேயாங்குமாரர் வித்தகரிடம் கனவின் பலனைப்பற்றி கேட்க அதற்கு அவர்கள் மகாமேரு மலையைக் கண்டதால் மேருமலைபோன்ற உயர்ந்த மேனியுள்ள விருஷப மகாமுனிவர் உங்கள் அரண்மனைக்கு வருவார் என்பதையும் இதனால் உங்களுக்கு அதிக புண்ணியமும் உலகில் உயர்ந்த புகழும் கிடைக்கும் என்பதையும் கூறினர்.

இதைக்கேட்ட சோமப்பிரப மன்னனும் சிரேயாங் குமாரரும் மகிழ்ச்சியுற்றிருந்தனர். சில நாள்களுக்குப் பிறகு விருஷப மகாமுனிவர் அந்நகருக்கு வந்தார். அவர் விரக்தியில் உறுதியும், மற்ற உயிரினங்கள்பால் அன்பும் கருணையும், விபரீதபோக்குள்ளவர்பால் நடுநிலையும் உள்ளவராக இருந்தார்[2]. இவர் ஆகாரம் ஏற்க வந்த போது எதிரில் நான்கு முழம் தூரம் பார்வையுள்ள வராகவும் எச்சரிக்கையுள்ளவராகவும் நடந்த சென்று துறவிகளுக்கு ஆகாரம் கொடுக்கும் விதிமுறைப்படி ஆகாரம் கொடுக்க யாராவது தயாராக உள்ளனரா? என்று பார்த்துக் கொண்டே சென்றார். ஆனால் துறவி களுக்கு ஆகாரம் கொடுக்கும் விதிமுறைப்படி இவருக்கு ஆகாரம் கிடைக்கவில்லை. ஆதலால் தான் தங்கியிருந்த காட்டிற்கே திரும்பிச் சென்று விட்டார்.

ஆறுமாத காலம் கழித்து மறுபடியும் முனிவர் ஆகாரத்திற்கு வந்தார். அவ்வமயம் ஸ்ரேயாங்குமாரர் இம்முனிவரைக் கண்டவுடனே நான்கு பிறவிகளுக்குமுன்பு இவர் வஜ்ரஜங்க மன்னனாக இருந்த போது அவருக்கு ஸ்ரீமதி என்னும் மனைவியாக இருந்தார். அவ்வமயம் இருவரும், சாரண முனிகளுக்கு ஆகாரம் கொடுத்த

---

2 சத் வேஷுமைத்ரீ குணி ஷு ப்ரமோதம்
கனிஷ்டே ஷு ஜீவேஷு க்ரு பாரத்வம்
மாத்யஸ்த ப்பாவம் விபரீத வ்ருத் தெள
சதா மமாத்ம வித்தாது தேவ ||

நினைவு வந்தது. உடனே இவர் நவணி புண்ய விதி முறைப்படி விருஷப மாமுனிவருக்கு ஆகாரம் அளித்தார். அந்நாளே 'அக்ஷய திருதியை' என வழங்கலாயிற்று.

சிரேயாம்சர் முற் பிறவியில் முனிகளைக் கண்ட நினைவானது இப்பிறவியில் அவரை மேன்மையாக்கி விட்டது. அதுபோல ஜினபகவானைத் தரிசிப்பது துதிப்பது ஆகியவை அடுத்து வரும் பிறவிகளிலும் நற்பலனைத் தரக்கூடியதாக அமைகின்றன.

## பகவானைப் பெற்ற அன்னையின் பெருமை

ஸ்த்ரீணாம் ச'தாநி ச' தசோ' ஜநயந்தி புத்ராந்
நாந்யா ஸுதம் த்வதுபமம் ஜநநீ ப்ரஸூதா |
ஸர்வா திசோ' தததி பாநி ஸஹஸ்ரரச்' மிம்
ப்ராச்யேவ திக்ஜநயதி ஸ்ப்புர-தம்சு'ஜாலம் ॥ (22)

**பதவுரை :**

(ஸ்த்ரீணாம் சதாநீ) (உலகில்) நூற்றுக்கணக்கான மங்கையர், (சத புத்ரான்) - நூற்றுக்கணக்கன புத்திரர்களை (ஜநயந்தி) - பெறுகின்றனர், (அந்யா ஜனனீ) [உம்முடைய தாயைத் தவிர] வேறு தாயர் எவரும் (த்வத் உபமம்) - உங்களுக்கு ஒப்பாக, (சுதம்) - மகனை (நப்ர ஸூதா) பெறவில்லை, (சர்வா திசா:) – எல்லாத்திசைகளும், (பாநி) - நக்ஷத்திரங்களைத் (தததி) - தாங்குகின்றன, (ஆனால்) (ப்ராசீதிக் ஏவ கிழக்கு திக்கு மட்டும், (ஸ்புர தம் சு ஜாலம்) – பிரகாசிக்ககூடிய (சகஸ்ர ரச்மிம்) சூரியனை, (ஜனயதி) - உதிக்கச்செய்கிறது, எ. று.

**கருத்துரை :**

பகவானே! உலகில் நூற்றுக்கணக்கான தாய் மார்கள் நூற்றுக்கணக்கான பிள்ளைகளைப் பெறுகின்றனர். ஆனால் எந்தத் தாயும் உம்மைப் போன்ற தாயினைப் பெற வில்லை. எல்லாத் திசைகளிலும்

எண்ணிலடங்கா நக்ஷத்திரங்கள் உதித்துப் பிரகாசிக்கின்றன. ஆனால் உலகிற்கே ஒளி தருகின்ற சூரியன் கிழக்கு திசையில்தான் உதயமாகிறான். கிழக்கு திசை மட்டும் சூரியனை உதிக்கச் செய்வது போன்று ஜினபாலகனாகிய உம்மைப் பெற்றெடுக்கும் பாக்கியம் மருதேவி அம்மையாருக்கு மட்டுமே வாய்த்தது. மருதேவிக்கு விருஷபதேவர் பிறந்தார் என்னும் வரலாற்றைப் பாகவதம் என்னும் நூல்கூட கூறுகிறது.[3]

**விளக்கவுரை :**

இங்கு ஆசாரியர் உலகத்திலுள்ள அனைத்து உயிர்களை ஒரு பக்கமும் அனந்த சதுஷ்டயமும் முப்பத்து நான்கு அதிசயங்களையுமுடைய விலக்ஷணபரம புருஷ தீர்த்தங்கரரை மற்றொரு பக்கமும் வைத்து தீர்த்தங்கரர் சிறப்பினை எடுத்துரைக்கிறார். மகான்கள் எண்ணிக்கையில் குறைந்தஅளவே இருப்பர்.

எடுத்துக்காட்டாக:-

சைலே சைலே ந மாணிக்கம்
மௌக்திகம் ந கஜே காஜ
சாதவே நஹி சர்வத்ர
சந்தனம் ந வநே வநே.

'எல்லா மலைகளிலும் மாணிக்கக்கல் கிடைப்பதில்லை. எல்லா யானையின் தலைகளிலும் முத்து பிறப்பதில்லை; சாதுக்கள் எல்லா இடங்களிலும் இருப்பதில்லை; எல்லாக் காடுகளிலும் சந்தனமரம் வளர்வதில்லை!'

இதுபோன்று புண்ணிய புருடர் எண்ணிக்கையில் குறைந்த அளவே உள்ளனர் என்பதை ஜைன

---

3 அஷ்டமே மருதேவ்யாம்து நாபேஜாத உருக்ரம:
தர்சயன் வர்த்ம தீராணாம் சர்வாஸ்ரம நமஸ்க்ருத: -பாகவதம்

புராணங்கள் எடுத்துரைக்கின்றன. ஒவ்வொரு கல்ப காலத்திலும் தர்மத்தைப் பரப்பும் தீர்த்தங்கரர்கள் இருபத்து நால்வர் மட்டுமே தோன்றுவர். ஆனால் சாதாரண மக்களின் பிறப்புத் தொகை எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டது. மகான்களின் பிறப்பின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் அவர்கள் மூலம் உலகத்து உயிரினங்கள் பெறும் நன்மையோ அளவிடற்கரியது. இதை, அழகான எடுத்துக்காட்டு ஒன்றின்மூலம் விளக்கக் காணலாம்.

ஆகாயத்தில் எண்ணிலடங்கா நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கின்றன. ஆனால் இவைகளின் ஒளி உலகத்திலுள்ள இருளை எள்ளவும் போக்குவதில்லை. எண்ணிக்கையில் அதிகமிருந்தாலும் அவைகளின் ஒளியினால் பயனேதுமில்லை. சூரியனோ எண்ணிக்கையில் ஒன்றே ஒன்றுதான். அதன் இளம் சிவப்பு ஒளியினாலேயே உலக இருள் விலகுகிறது. அதன் ஒளியில் பூவுலகமே ஒளிமயமாகத் திகழ்கிறது.

ஆதிநாத பகவானைப் பெற்றெடுத்த தாய் உலகிலேயே மிகச் சிறந்தவள். மூவுலக நாயகனைப் பெற்றெடுத்த அன்னையின் பெருமையே பெருமை. இவரைப் பெற்றெடுத்த தாய்மட்டும் திருப்தி அடையவில்லை. மூவுலக மக்களும் கூட பேரானந்தத்தைப் பெற்றனர். தீர்த்தங்கரரைப் பெற்றதால் குறைந்த பவத்தைப் பெற்றவள் என்று ஆகமம் கூறுகிறது.

"உலகில் கோடிக்கணக்கான தாய்மார்கள் கோடிக் கணக்கான பிள்ளைகளைப் பெற்றெடுக்கின்றனர். ஆனால் இவ்வளவு அதிகமான எண்ணிக்கை இருந்த போதிலும் அவர்களுடைய பலம் உங்கள் பலத்திற்கு ஒப்பாகாது. உங்களைப்போன்ற புதல்வன் இந்த மண்ணுலகில் இல்லவே இல்லை. மேலும் உம்மைப்

பெற்றெடுத்த தாய் போன்ற மாது கூட இவ்வுலகில் இல்லை" என்று புகழ்கிறார் ஆசாரியர்.

இந்தச்சுலோகத்தில் ஆசாரியர் ஆதேயம் என்னும் தொடர்பினைக் காட்டித் தீர்த்தங்கரர் ஆதிநாத பகவானையும் வந்தனைக்குரிய அன்னையையும் பாராட்டியுள்ளார். இவருடைய சிறப்பே அலாதியானது. இவர் பிறக்கும் போதே பெற்ற பத்து அதிசயங்களின் தனிச் சிறப்பினைப்பற்றி இந்தச் சுலோகம் எடுத்துரைக்கின்றது.

'அன்னையே' நீங்கள் பெரிய பாக்கியசாலி; மூவுலக நாயகனுக்கு அன்னை; நீங்கள் பெற்ற நாயகன் மூவுலகிலும் சிறந்தவன்; அவன் தூயதையே காட்டுபவன், பற்றற்றவன்' என்றும், 'நாயகனே' உங்களை இந்திரன் வணங்கட்டும். கணதரர் வணங்கட்டும்; அதனால் உங்களுக்கு யாதும் பயன் இல்லை. நீங்களோ பரமாத்தும பதவியைப் பெற்று நிர்கந்த பரமேஷ்டி பதவியை வெளிப் படுத்தி பரபாத்துமாவாக உள்ளீர். ஆகாயத்தில் வெவ் வேறு திசைகளில் வெவ்வேறு நக்ஷத்திரங்கள் உதிக் கின்றன. ஆனால் ஆயிரக்கணக்கான ஒளிக்கதிர்களை யுடைய சூரியனோ கிழக்கு திசையில் மட்டும் தோன்று கிறான். அதுபோன்று நான்கு பிறவிகளிலும் உழலுகின்ற உயிரினங்களைப் பெற்றெடுக்கும் அன்னையர் அநேகர். ஆனால் உங்களைப்போன்ற புதல்வனைப் பெற்றெடுக் கும் அன்னையோ மிகவும் சொற்பம். உங்களைப்பெற்ற உங்கள் அன்னையும் பிதாவும் சிறந்தவர்களே. அவர்கள் இன்னும் ஒரு சில பிறவிகளில் முக்தி பெறக்கூடியவர். தந்தையோ இப்பிறவியிலோ அடுத்த பிறவியிலோ முக்தி பெறுவார். அன்னையோ இன்னும் இரண்டு பிறவி எடுக்க வேண்டும். நீங்கள் அத்தகு பாக்கியசாலி; அன்னையின் அற்புதப் புதல்வர். நீங்கள் எல்லோரைக் காட்டிலும் சிறந்தவர்; உங்களைத் துதிப்பதால் எனது

உள்ளம் தூயமை அடைகிறது' என்றும் ஆசாரியர் ஆதி பகவானையும் அவர் தாயையும் பாராட்டுகிறார்.

மண்ணுலகில் வந்துலவு
    மடமாதர் தம்மில்
மணியொளியே! நினையீன்ற
    மருதேவி ஒப்பார்
விண்ணினிலும் யாருமிலை
    விண்சுடர் பரிதி
வேண்டியெழு கீழ்திசையே
    வாழ்த்துபெறு மன்றோ?

(தம் ஆதி) (22)

## அருகதேவரின் அரும் குணங்கள்

த்வா-மாமநந்தி முநய: பரமம் பவித்ர-
    மாதித்ய-வர்ண-மமலம் தமஸ: பரஸ்தாத் |
த்வாமேவ ஸம்யகுபலப்ய ஜயந்தி ம்ருத்யும்
    நாந்ய: சி'வ:சி' வபதஸ்ய முநீந்த்ர! பந்தா: ॥ (23)

பதவுரை:

(முநீந்த்ர) கணதராதி முனிகளுக்கு நாதரே (முநய:) முனிவர்கள், (த்வாம்) உம்மை (பரமம் பவித்ரம்) மிகவும் புனிதமானவர் என்றும், (ஆதித்யவர்ணம்) - சூரியன் நிறம் கொண்டவர் என்றும், (அமலம்) நிர்மல மானவர் என்றும், (தமஸ: பரஸ் தாத்) இருளைக் கடந்தவர் என்றும், (ஆமநந்தி) கூறுகின்றனர்; (த்வாம் ஏவ) உம்மையே, (சம்யக்) நன்றாக, (உபலப்ய) அறிந்து, (ம்ருத்யும்) மரணத்தை, (ஜயந்தி) வெல்லுகின்றனர், (சிவபதஸ்ய) முக்தி பதவியை அடைவதற்கு (அந்ய:) வேறு ஏதும், (சிவ:) மங்களகரமான (பந்தா:) மார்கம், (ந) இல்லை, எ. று.

கருத்துரை:

பகவானே! நீங்கள் ஆசை, வெகுளி மயக்க முதலாகிய மலங்களிலிருந்து விடுபட்டதனால் உங்களை நிர்மலன் என்றும், மித்யாத்வம் மற்றும் மோக வினைகளை வென்றதனால் சூரியனைப் போன்ற ஒளிமயமானவர் என்றும், அஞ்ஞானம் என்னும் இருளிலிருந்து விடு பட்டதனால் பரம புருஷர் என்றும் உங்களைக் கருது கின்றனர். உங்களை அடைந்து மரணத்தையும் வெல்லு கின்றனர். உங்களைத் தவிர தூய முக்திப்பாதை வேறு ஏதும் இல்லை ஆதலால் நீங்களே எங்களுக்கு முக்திப் பாதையாக உள்ளீர்.

விளக்கவுரை:

பரமாத்துமனே! உங்களைப் பெரிய பெரிய ஞானி களும் முனிகளும் ஆசாரியர்களும் பரமபுருஷர் என்று கருதுகின்றனர். (புருஷர் என்பதற்கு ஆத்துமா எனப் பொருள். பரம பதவியைப் பெற்ற ஆன்மா சிறந்ததாகக் கருதப்படுகிறது). நீங்கள் அகத்தும் புறத்தும் உள்ள அனைத்து மாசுகளையும் வென்றவர்; திரவிய கர்மம், பாவ கர்மங்களைப் போக்கிய பரம புருடர், சித்தத் தன்மை பெற்றவர்.

நீங்கள் ஆதித்ய வர்ணத்தை அதாவது சூரியனைப் போன்ற காந்தியை உடையவர். ஆதலால் உங்களை ஆசாரியர் "சூரியகோடி சமப்ரப:" என்று அழைத்துள்ளார். உங்களை சூரியனுக்கு ஒப்பிட்டுக் கூறுவது ஆகாயத் திற்கும் பாதாளத்திற்கும் உள்ள வேற்றுமை ஆகும். இருந்த போதிலும் மித்யாத்துவமென்னும் இருளைப் போக்கியதால் உங்களைச் சூரியனுக்கு ஒப்பாக உபசாரத் தினால் கூறப்படுகிறது. சூரியனோ லௌகீக இருளைப் போக்குகிறான். நீங்களோ அஞ்ஞானம் மித்யாத்துவம் ஆகிய காரிருளைப் போக்கிய அலௌகீக ஆதித்யனுவீர்.

ஜினபகவானே! நீங்களோ மாசற்றவர். ஆன்மாவை மாசுபடுத்தும் ஆசை, வெகுளி, மயக்கம் ஆகிய கர்ம மலங்களைப் போக்கி இயற்கைத் தூய்மையைப் பெற்றுவிட்டீர்; ஆதலால் நீங்கள் நிர்மலம், அமலம், விமலம் என அழைக்கப்படுகிறீர் எனப் பாராட்டுகிறார்.

வைதீக நெறியாளர் பரமாத்துமாவை "ம்ருத்யும் ஜய" என அழைக்கின்றனர். அதன் உண்மை கருத்தினை விளக்குகின்ற மானதுங்க ஆசாரியர், 'பகவன் நீங்கள் பிறப்பு, மூப்பு, இறப்பு ஆகியவைகளை அடியோடு களைந்தெறிந்து முத்தி உலகை அடைந்துள்ளீர். 'ம்ருத்யு' என்றால் மரணம் எனப்பொருள். மரணத்தை வென்றவர்தான் 'ம்ருத்யும் ஜய' என அழைக்கப்படுவார். பகவானே! நீங்கள் உண்மையிலேயே 'ம்ருத்யும் ஜயன்' ஆவீர். சுத்த ஸ்வரூபத்தைப் பெற்றவர். உங்களை வழிபடும் பக்தர்கள் 'மிருத்யுவை' வெல்லும் தன்மை பெறுவர்; பிறவிச்சுழலை அடியோடு அழிப்பர்' என்கிறார்.

உலக மக்கள் உங்களைச் சிவன் சங்கரன் கைலாசபதி என்றும் அழைக்கின்றனர். இந்தச் சொற்களுக்கு ஏற்ற குணங்கள் உங்களிடம் அவசியம் உள்ளன. சிவம் என்பதற்கு முக்தி என்று பொருள். பந்தா' என்றால் மார்கம் எனப்பொருள். எவர் புகழத்தக்க சிறந்த, முத்தி அளிக்கக்கூடிய மார்கத்தைக் காட்டினாரோ அவர் சிவபதன் என அழைக்கப்படுகிறார். இந்த மார்கத்தின் மூலம் முத்தி பதவி பெறப்படுகிறது. ஆதலால் இது சிவபதம் என அழைக்கப்படுகிறது. ஆசையற்ற, களங்கமற்ற சுகமான இடம் மோக்ஷ உலகம். இவ்வுலகத்தை எய்தியவர் சிவன் என அழைக்கப்படுவார். நீங்கள் மோக்ஷ உலகில் உள்ளீர்; ஆதலால் நீங்கள் சிவன் ஆவீர். உங்களால் போதிக்கப்பட்ட மார்கத்தில் செல்லுபவர் சிவகதி (மோக்ஷ கதி) அவசியம் பெறுவர். உங்களைத்

தவிர வேறு யாரும் சிவன் இல்லை என்று ஆசாரியர் அறுதியிட்டுரைக்கிறார்.

கணதரத் தூயோர்க்கு
கனகமுடி அனையாய்!
கருவளரும் இருவினையைக்
கடிதினில் காய்வாய்;
மனதார உனையெண்ணும்
மாந்தர்க்கு மேலாம்
மரணமில் வாழ்வுபெற
மனமருளே ! மெய்யா!

(தம் ஆதி) (23)

## பல குணங்களையுடைய பகவான்

**த்வா-மவ்யயம் விபு-மசிந்த்ய-மஸங்க்ய-மாத்யம்**
**ப்ரஹ்மாண-மீச்’வர-மநந்த-மநங்க-கேதும் |**
**யோகீச்’ வரம் விதித-யோக-மநேக-மேகம்**
**ஜ்ஞாந-ஸ்வரூப-மமலம் ப்ரவதந்தி ஸந்த: ||** **(24)**

**பதவுரை :**

(ஸந்த:) நல்லோர், (த்வாம்) உங்களை, (அவ்யயம்) அழிவில்லாத கடையிலா ஞானம், கடையிலா காட்சி, கடையிலா சுகம், கடையிலா வீரியம் ஆகியவைகளைப் பெற்றவரென்றும், (விபும்) அனந்த சுகமாகிய செல்வங்களைப் படைத்தவரென்றும், (அசிந்த்யம்) மனிதனுடைய சிந்தனைக்கும் மேலான அதிசயங்களைப் பெற்றவரென்றும் (அஸங்க்யம்)-எண்ணிக்கைக்கு அப்பாற்பட்ட குணங்களையுடையவரென்றும் (ஆத்யம்) முதல்வரென்றும், (ப்ரஹ்மாணம்) இரத்தின திரயங்களையுடைய பிரம்மாஎன்றும் (ஈச்வரம்) ஈஸ்வரரென்றும், (அனந்தம்) கடையிலா குணங்களையுடையவரென்றும், (அனங்க கேதும்) உருவமற்ற பரமாத்துமன் அ) மன்மதனை ஜெயித்தவரென்றும்,

(யோகீச்வரம்) யோகிகளுக்கு நாதன் என்றும், (விதித யோகம்) யோகத்தை அறிந்தவரென்றும், (அநேகம்) அநேக பெயர்களையுடையவரென்றும், [அ] ஒப்பற்றவரென்றும், (ஜ்ஞான ஸ்வரூபம்) – தூய ஞான ஸ்வரூபமுள்ளவரென்றும் [பலவாறாக] (ப்ரவதந்தி) கூறுகின்றனர், எ. று.

**கருத்துரை :**

ஆதிபகவான் அழியாத ஞானத்தைப் பெற்றவர், நிரந்தரமானவர், பரம குணமென்ற செல்வங்களையுடையவர், வார்த்தைகளால் விளக்கமுடியாத தன்மையுடையவர், குணக்குன்று, இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களில் முதல் தீர்த்தங்கரர், பிரம்மா, ஈஸ்வரன், அநந்தன், அனங்ககேது, யோகீஸ்வரன், யோகத்தை அறிந்தவன், ஞானஸ்வரூபீ, களங்கமற்றவன் என வெவ்வேறு பெயர்களையுடையவர் என்று கூறி சாதுக்கள் இவரைத் துதிக்கின்றனர்.

**விளக்க உரை:**

இங்கு மானதுங்க ஆசாரியர் பக்திக் கடலில் மூழ்கி தத்துவ ஞான வெள்ளத்தை அள்ளி வீசுகிறார். தர்கம், ஊகம், சான்று ஆகியவைகளின் வழி வெவ்வேறு கருத்துக்களை அளித்து ஏகாந்தம் என்னும் பொய்மையைக் கண்டித்து அநேகாந்த நெறியினை விளக்கி பகவானை அநேக திரு நாமங்களால் துதி செய்கிறார்.

இந்தச் சுலோகத்தில் இவர் பதினைந்து திருப்பெயர்களை விளக்கி பகவானின் உண்மை குணங்களை எடுத்துரைக்கிறார். பரம ஆத்தும தத்துவத்தை இரத்தினச் சுருக்கமாகக் கூறுவதுடன் பகவானின் ஆயிரத்தெட்டு திருநாமங்களின் சிறப்பினையும் அறிய வேண்டுமென்ற ஆர்வத்தையூட்டுகிறார். இந்தத் திரு நாமங்களின் மகிமைகளைப் பற்றி நியாய சாஸ்திரம்,

சித்தாந்த விளக்கம், பிரசித்தி பெற்ற லௌகீக நெறி ஆகியவற்றின் அடிப்படையில் அநேக அபிப்பிராயங்களை அள்ளித் தருகிறார்.

அழியாப் பதவி பெற்ற ஜினபகவானே! நீங்கள் உங்களுடைய ஆன்ம நெறியிலிருந்து ஒருபோதும் நழுவியதில்லை. உங்களிடம் ஏற்றத் தாழ்வுடன் கூடிய செயலில் இல்லை. ஆன்ம நலம் பெறத் தொடங்கிய சாதனைகள் எப்பொழுதுமே நிரந்தரமாக உள்ளன என்றுரைக்கும் ஆசாரியர் திரவியார்த்திக நயம் அதாவது பொருளின் உண்மை குணங்களை விளக்கும் வழிகள் மூலம் உயிரின் நிலை நிரந்தரம், நித்தியம், அழியாதது குறையாதது என்று கூறி பகவான் இத்தகு குணங்களைப் படைத்தவராகையால் இவருக்கு **அவ்யயம்** எனச் சிறப்புப் பெயர் வழங்குகிறது என்றுரைக்கிறார்.

பரம வைபவங்களையுடைய பரமாத்துமாவே! நீங்கள் சமவசரணத்தில் எட்டு பிராத்திஹார்யங்களான புறச்செல்வங்களைப் பெற்றவர்; அனந்த சதுஷ்டயம் அதாவது கடையிலா ஞானம் முதலிய அகச்செல்வங்களை யுடையவர் ("விபாதி பரமைஸ்வர்யேன ஸோபத இதி விபு:"); பரம ஐஸ்வர்யங்களுடன் கூடிய செல்வச் சீமான், மற்றும் எல்லா வினைகளையும் அடியோடு போக்கி அனந்த குணங்களைப் பெற்றதினால் விபு என அழைக்கப் படுகிறீர். ('விபவதி கர்மோந் மூலேந சமர்த்தோ பவதீதி விபு:' வினையின் வேரைக் களைவதில் சாமர்த்யசாலி ஆதலால் விபு: எனப்பெயர் வழங்குகிறது.)

விகல்பங்களுக்கு அப்பாற்பட்டவரே! நீங்கள் மக்கள் அறிவிற்கு எட்டாத குணங்களைப் படைத்தவர். மனிதனிடம் மனக் குழப்பம் இருக்கும்வரை பரமாத்தும நிலை பெற முடியாது. ஆனால் விகல்பமற்ற வீதராக சமாதியின் மூலம் ஆன்ம குணம் பெறப்படுகிறது. ஆன்ம குணம் சிந்தனைக்கு அப்பாற்பட்டது. நீங்கள் அத்தகு

ஆன்ம குணங்களைப் பெற்றதினால் அசிந்தியன் என அழைக்கப்படுகிறீர்.

அனந்த குணங்களையுடையவரே! உங்கள் குணம் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டது. மற்றும் எண்ணிலடங்கா மக்கள் உங்களைத் தம் மனதில் வைக்கின்றனர். நீங்கள் ஆயிரத்தெட்டு திருநாமங்களைப் பெற்றவர். ஆதலால் நீங்கள் அசங்க்யன் - எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டவன் என அழைக்கப்படுகிறீர்.

ஆதிஸ்வரதேவ! நீங்கள் முதல் தீர்த்தங்கரர், ஐம்பெரும் குரவர்களில் நீங்கள் முதல் இடத்தைப் பெற்றவர். முத்தி நெறியை முதன்முதலில் காட்டியவர்; உலக மக்களுக்கு வாள், வரைவு, வாணிபம், உழவு, கல்வி, சிற்பம் ஆகிய அறுவகை அரிய கலைகளை முதன்முதலில் கற்பித்த வித்தகர். அறநெறியை அறிவித்த அறவோர் களில் முதலிடம் பெற்றவர். நீங்கள் ஆதி தீர்த்தங்கரர். ஆதலால் முனிபுங்கவர்கள் உங்களை ஆத்யன் (முதல்வன்) என அழைக்கின்றனர்.

பரம பிரம்ம பரமேஸ்வர! நீங்கள் பிறமத பிரம் மாவைப் போன்று காப்பதும் அழிப்பதும் இல்லை. ஆனால் கர்மபூமியில் முதன்முதலில் மக்களுக்கு வாழ்க்கைக்கு வழி காட்டிய வித்தகராகையால் உங்களைப் பிரம்மா என்று அழைக்கின்றனர். நீங்கள் ஆன்ம நெறியில் ஆழ்ந் திருப்பதால் நீங்களே உண்மையான பிரம்மா ஆவீர்.[1]

ஜகதீஸ்வர! நீங்கள் செய்வனவற்றையெல்லாம் செய்து முடித்த மகான். நீங்களே சித்தி அடைந்த பகவான், மூவுலக மக்களால் பூஜிக்கப்பட்டவர். ஞானம் முதலிய அனந்த செல்வங்களையுடைய நாயகன். ஆதலால் ஈஸ்வரன் என அழைக்கப்படுகிறீர்.

---

1 பிருஹதி அனந்தநாநந்தேன வர்தத இதி பிரம்மா,

அனந்த குணமய! நீங்கள் அனந்த சதுஷ்டயங் களைப் பெற்றவர். உங்களிடம் உள்ள குணங்களுக்கு எல்லேயே இல்லே. எல்லா நதிகளின் நீரும் சமுத்திரத்தில் கலப்பது போன்று உங்களுடைய அனந்த குணங்கள் ஆன்மாவில் சேர்ந்துள்ளன. மேலும் நீங்கள் அந்த மில்லாதவர். மரணத்தை வென்றவர். அனந்த பலம் பெற்ற ஆன்மாவாதலால் உங்களை **அநந்தம்** என அழைக்கின்றனர்.

மன்மதனே வென்றவரே! நீங்கள் காமனேவென்று ஜினவறக் கொடியை நிலை நாட்டியவர். மன்மதனை வெல்லுவதில் தூமகேதுவைப் போன்றவர். ஆதலால் நீங்கள் **அனங்ககேது** என அழைக்கப்படுகிறீர். [ஔதாரிகம், வைக்ரீகம், ஆஹாரகம், தைஜசம், கார்மணம் என்னும் ஐந்து சரீரங்களை விட்டதினால் 'அனங்கன்' எனவும் கூறுவர். (அங்கம்-சரீரம், அநங்கம்-சரீரமற்றது)]

துறவிகளுக்கு நாயகனே! நீங்கள் சயோக கேவலி நிலையில் இருந்துகொண்டு அரகந்த பதவி பெற்றவர். யோகிகளும் துறவிகளும் உங்களை முக்காலத்திலும் வணங்குகின்றனர்; உங்களைத் துதிக்கின்றனர். நீங்கள் புண்ணியம் பாபம் ஆகியவைகளைப் போக்கி நிர்மல ஞான சுபாவத்தில் மூழ்கி இருக்கும் யோகியாவீர்! மற்றும் யோகத்தைத் தாங்கிய துறவிகளுக்கு நாயகன்! ஆதலால் நீங்கள் **யோகீஸ்வரன்** எனப்பெயர் பெற்றீர்.

விதித யோக நாயகனே! உங்கள் ஆன்மா பரமாத்தும நிலையை அடைந்து விட்டது. நீங்கள் நற்காட்சி, நலஞானம், நல்லொழுக்கம் ஆகிய மூன்று யோகங்களைச் சாதித்தவர், அஷ்டாங்க யோகங்களை நன்கு அறிந்தவர். மேலும் தண்டஸ்தம், பதஸ்தம், ரூபாதீதம் முதலிய ஞானயோகங்களின் இலக்கணங்களே நன்கு அறிந்து அவைகளின் வழி வினைகளேப் போக்கிய **உத்தம யோகி** யாவீர்.

அநேகாந்தமூர்த்தி! ஆன்மா ஒன்றே ஒன்றுதான்! ஆனால் அது அனந்த குண பர்யாயங்களுடன் கூடியதால் அநேகம் எனக்கூறுவர். அநேக பவ்விய உயிர்கள் உங்கள் அறவுரையைக் கேட்டு முக்திப் பாதையில் சென்று முக்தியுலகையடைந்தன. நீங்கள் அநேகாந்த நெறியின் வழி பொருள்களின் இயல் குணங்களை அறிந்தவர்; அதை உள்ளவாரே உரைத்தவர். குண பர்யாயங்கள் அநேகம், இதைக்கொண்டு நீங்கள் அநேகமூர்த்தி என அழைக்கப்படுகிறீர். ஆயிரத்தெட்டு திருப்பெயர்களை யுடையவரானபடியால் நீங்கள் அநேகம் ஆவீர்.

ஏகமேவ பரமாத்துமாவே! பரமாத்துமா ஒன்றே ஒன்றுதான். மற்ற பொருட்கள் பரமாத்துமாவுடன் தொடர்பு கொண்டவை அல்ல. அனந்த குணங்களின் கூட்டு ஒரே ஆன்மாவில் உள்ளது. அத்தகு ஆன்மா நீங்கள் ஒருவரே ஒருவர். ஆதலால் நீங்கள் ஏகம் என அழைக்கப்படுகிறீர்.

சர்வக்ஞதேவ! நீங்கள் வாலறிவு பெற்ற ஞான சேதன குணமுள்ளவர். அனந்த ஞானத்தையுடையவர். ஆதலால் நீங்கள் ஞானஸ்வரூபி ஆவீர். நிச்சய நய நோக்குப்படி நீங்கள் உங்களுடைய ஆன்ம ஸ்வரூபத் தையே அறிகிறீர். ஆனால் பிற பொருட்கள் உங்கள் ஞானக் கண்ணாடியில் காணப்படுவதால் விவகார நோக்குப்படி பிறபொருட்களை அளிப்பவர் எனக் கருதப் படுகிறீர். உங்களிடம் சுத்த ஞானமிருப்பதால் நீங்கள் ஒருவரே ஞான ஸ்வரூபி ஆவீர்.

விமல மூர்த்தி! நீங்கள் திரவிய கர்மம் பாவ கர்மம் நோகர்மம் ஆகிய கர்ம களங்கங்களிலிருந்து விடுபட்டவர். பிறபொருள்களின் தொடர்பு முற்றிலும் விடுபட்டபடியால் நீங்கள் தூயவர். களங்கமற்றவர் ஆதலால் நீங்கள் '**அமலன்**' என அழைக்கப்படுகிறீர்.

இதுபோன்று எத்தனைப் பெயர்களைச் சூட்டி உங்களை அழைத்தபோதிலும் எல்லாவற்றிலும் நீங்கள் ஒரே பரமாத்மா! தியானத்திற்கு ஏற்றவர். உங்களை தியானம் செய்யும் பக்தன் உங்களைப்போன்ற நிலையை அடைவான்.

குறிப்பு:

ஏகம் அநேகம் என்பதன் வேறு விளக்கம்:

ஜந்தய ஏகோ சிந்நோ தத்த அணந்தாப்பவக்கய விரூக்கா |
அந்நுந்ந மணாவாஹர், சிட்டந்தி ஸயா ஸுஹி ஸித்தா ||
யந்த்ர சைக: ஸித்தஸ்த த்ராநந்தா ப்பவக்ஷய விருக்தா: |
அந்யோந்ய ஸநா பாதம் திஷ்டந்தி ஸதா ஸுகிந: சித்தா: ||

பிறவிச் சுழலிலிருந்து விடுபட்ட அனந்த சித்த பரமேஷ்டிகள் சித்த க்ஷேத்திரத்தில் ஒருவருக்கொருவர் எவ்வித இடையூறுமின்றி நித்திய சுகிகளாக இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் தனித்தனி ஆன்மாவே. ஆதலால் ஏகம் எனக் கூறுவர்.

"நாம ஜிணா ஜிணநாமா ட்டவணஜிணா ஹுரந்திதேவ
படிமாவோ |
தவ்வஜிணா ஜிணஜீவா, ப்பாவஜிணா ஸமவஸரணத்தா ||

'விருஷப தேவர் முதலாகிய இருபத்து நான்கு தீர்த்தங்கரர் பெயர்களால் கூறப்படுவது "நாம ஜினர்" என்றும், தேவ பிரதிமையை "ஸ்தாபனா ஜினர்" என்றும், ஜினபகவான் உயிர் "த்ரவ்ய ஜினர்" என்றும், சமவசரண சபையில் இருப்பவர் "பாவ ஜினர்" என்றும் அழைக்கப் படுவர். இந்த கண்ணோட்டத்தில் ஜினபகவானை அநேக எனக்கூறுவர். எல்லா வினைகளையும் போக்கி ஆத்தும ஸ்வபாவத்தைப் பெற்றதினால் ஞானஸ்வரூபி என்றும், பதினெட்டுக் குற்றங்களிலிருந்து விடுபட்டதினால் அமலன் என்றும் கூறுவர்.

ஐவகை சரீரங்களின் விளக்கம்:

**ஔதாரிக சரீரம்:-**

உதாரம் என்பதற்கு ஸ்தூலம் பருமன் என்பதாம். "உதாரேபவம் உதாரம் ப்ரயோஜன மந்யேதி வா ஔதாரிகம்" ஸ்தூலம்-பருமன், பருமனான சரீரம் ஔதாரிக சரீரமாகும். இச்சரீரத்தைச் சுடலாம், கத்தரிக்கலாம், பிளக்கலாம். இது மனித லோகத்தில் உள்ள ஜீவன்களுக்கு உண்டு

**வைக்ரீயிக சரீரம்:-**

"ஏகாநேகாணீ மஹாத்வாதி ரூபேண ஸரீரஸ்ய விவிதகரணம் விக்ரியா" அதாவது சிறிய பெரிய மெல்லிய பருமனாக ஒரே சரீரமாக இருப்பதும் அல்லது அநேக சரீரமாக இருப்பதும் வெவ்வேறு உருவத்தைப் பெறக் கூடிய இயல்புள்ளதும் ஆகிய சரீரம் வைக்ரீயிகசரீரம் ஆகும். இது தேவர்களுக்கும் நரக ஜீவன்களுக்கும் மட்டுமே உண்டு.

**ஆஹாரக சரீரம்:**

'சம்சய விஷய சுக்ஷ்ம பதார்த்த
நிஸ்சய ஸம்ஸயம் பரிஹ ரார்த்தம்
வா ப்ரமத்த சம்யதேநா ஹ்ரீயதே
நிர்வர்த்யதேயத் தத் ஆஹா ரகம்'

ஆறாவது குணஸ்தானத்தில் உள்ள முனிகளுக்கு ஆன்ம விஷயத்தில் ஐயம் ஏற்படின் அல்லது விரதத்தைக்காக்க இவர்களுடைய தலையிலிருந்து ஒரு முழம் உயரமுள்ள வெள்ளை நிறமுள்ள சரீரம் புறப்பட்டு கேவலிகளிடம் சென்று ஏற்பட்ட ஐயங்களைப் போக்கிக்கொண்டு முன்பிருந்து கிளம்பிய சரீரத்தில் வந்தடையும். இது ஆஹாரக சரீரம் எனப்படும்.

தைஜஸ சரீரம்:-

"யத் தேஜோ நிமித்தம் தேஜசீ பஸம் வா தத்தைஜசம்". ஔதாரிகம், வைக்ரீயகம் ஆகாரகம் ஆகிய சரீரங்கள ஒளி பொருந்தியிருக்கும் சரீரம் தைஜச சரீரமாகும்.

கார்மண சரீரம்:-

"கர்மைவ கார்மணம் கர்மணாம் சமூஹோவா கார்மணம்". ஞானாவரணீயம் முதலிய எட்டு கர்மங்களின் கூட்டுக்கு கார்மண சரீரம் எனப்பெயர்.

அந்தமில் விந்தைபுகழ்
அறிவோர்க்கும் அறிவோய்!
ஐந்தாண பொறிவென்ற
அதிஞான உரவோய்!
செந்தாமரை தாங்கும்
ஸ்ரீபாத முடையோய்
சிவனாகி மாலாகி
செபித்தோர்க்கும் அருள்வோய்!
(தம் ஆதி) (24)

## பகவானின் பெயர்கள் பொருத்தம்

புத்தஸ்-த்வமேவ விபுதார்ச்சித-புத்திபோதாத்
த்வம் ச'ங்கரோஸி புவநத்ரய-சங்கரத்வாத் |
தாதாஸி தீர! சி' வமார்க-விதேர் விதாநாத்
வ்யக்தம் த்வமேவ பகவந்!
புருஷோத்தமோஸி || (25)

பதவுரை:

(விபு தார்ச்சித) தேவர்களாலும் கணதரர்களாம் வித்வான்களாலும் பூஜிக்கப்பட்ட பகவானே! (த்வம்) நீர், (புத்திபோதாத்) கேவல ஞானத்தினால் அறிவதால்,

(புத்த: அசி) புத்தனாக ஆகின்றீர், (புவனத்ரய)-மூன்று லோகத்திலுள்ள பிராணிகளுக்கு (சங்கரத்வாத்) ஆன்ம சுகத்தைக் கொடுப்பதினால், (சங்கர:) சங்கரன் ஆவீர், (சிவமார்க) மோக்ஷ மார்கத்தினுடைய (விதே) நெறியை, (விதாதாத்) உண்டாக்கியதால் (தாதா அசி) பிரம்மாவாகவும் ஆகின்றீர், (பகவான்) பகவானாகிய (த்வமேவ) நீயே, (புருஷோத்தம:) - புருஷோத்தமனாக [அ] விஷ்ணுவாக (அசி) உள்ளாய் [என்று] (வ்யக்தம்) - தெளிவாகிறது, எ. று.

கருத்துரை:

பகவானே! நீங்கள் வாலறிவு பெற்ற மகான், உங்களைத் தேவர்களும் கணதரர்களும் மனிதர்களும் பூஜிக்கின்றனர். ஆதலால் 'புத்தன்' என்று உங்களை அழைக்கின்றனர். புத்தன் என்றால் ஞானி என்பதாம். புருஷர்களில் சிறந்தவர் நீயே! ஆதலால் புருஷோத்தமன் ஆவீர் (விஷ்ணு என்கிற மறுபெயரும் உண்டு). இரத்தினத் திரயமாகிய உத்தம மோக்ஷ மார்கத்தைக் காட்டியதால் உங்களைப் பிரம்மா என்றும் அழைக்கின்றனர். மூவுலகத்திலுள்ள அனைத்துப் பிராணிகளுக்கும் நல்லுரை வழங்கி அவர்களுக்கு ஆன்ம சுகம் பெறும் வழியை வகுத்த உத்தமரானீர். ஆதலால் நீங்கள் சங்கரன் ஆவீர். (சம் என்றால் சுகம், கரம் என்றால் கொடுப்பது; சங்கரன் சுகத்தைத் தருபவன் எனப்பொருள்.)

விளக்கவுரை:

இந்தச் சுலோகத்தில் ஆசாரியர் சமத்துவ மனம் கொண்டு அனேகாந்த சித்தாந்தத்தின் வழி மேற்கூறிய திருப்பெயர்களுக்கு ஏற்ற குணங்களை ஜினபகவானிடம் காட்டுகிறார்.

பரமாத்தும நிலை அடைந்தவரே கடவுள். இதற்கு எதிர்மறையாக உள்ளவர் பரமாத்தும நிலை அடையாதவர் - கடவுள் ஆக முடியாது. பகவானே! நீங்கள் கேவல ஞானத்தைப் பெற்றதினால் நீங்கள் புத்தன் - ஞானி ஆவீர். (வீதராகத் தன்மை பெற்றவர் தான் சர்வக்ஞன் ஆவார். முழுதுணர் ஞானமும் விருப்பு, வெறுப்பு அற்ற தன்மையும் பெறாதவர் ஞானி - புத்தன் ஆகமாட்டார்.) நீங்கள் முழுதுணர் ஞானத்தைப் பெற்று பொருள்களின் இயல் குணங்களின் இலக்கணத்தை நன்கு அறிந்தவர் ஆதலால் நீங்களே புத்தன் ஆவீர். நீங்களே ஞானி.

பகவானே! நீங்கள் உலக உயிரினங்களுக்கு நல்லுபதேசம் செய்து அவர்கள் ஆன்ம சுகம் பெறக் கூடிய வழியைக் காட்டி அவர்களைச் சுகம் பெறச் செய்தீர். ஆதலால் நீங்கள் சங்கரன். உலகத்தை அழிப்பவர் சங்கரன் ஆகமாட்டார். நீங்களோ புண்ணியம் பாபம் மித்யாத்துவம் போன்ற தீயவைகளைத் தவத்தின் வழி அழித்து ஆன்மத்தூய்மை பெற்றவர். ஆன்மாவிற்குத் துன்பத்தைத் தரும் ஆசை, வெகுளி, மயக்கம் போன்ற தீயவைகளை அழித்ததினால் நீங்களே சங்கரன் ஆவீர்.

சுவாமியே! நீங்கள் மோக்ஷ மார்க்கத்திற்கு ஏற்ற நெறிகளை வகுத்துத் தந்தீர். கர்ம பூமியின் தொடக்க காலத்தில் நீங்கள் அப்பொழுது இருந்த மக்களுக்கு வாழ்வதற்கு வாள், வரைவு முதலிய ஆறு வகை தொழில் களைக் கற்பித்துக் கொடுத்தீர். ஆதலால் நீங்கள் ஆதி பிரம்மா என அழைக்கப்படுகிறீர். பிரம்மா உலகத்தைப் படைத்தவன் என்று நம்புகின்றனர் சிலர். உலகம் இயல் பாகவே அனாதி காலமாக இருந்து வருகிறது. இது எவராலும் படைக்கப்பட்டது அன்று. யாரும் எப்பொருளை யும் ஆக்குவதும் இல்லை, அழிப்பதும் இல்லை. ஆறு திரவியங்களும் இயல்பாக உள்ளன. ஆனால் இவற்றின்

பரியாயம் மாறிக்கொண்டே இருக்கும். ஆதல் அழிதல் நிலைத்திருத்தல் இம்மூன்றுமே பொருளின் இயல்பு. பொருள்களின் இயல் குணத்தை நீங்கள் எப்படிக் கண்டீரோ, அறிந்தீரோ அம்முறையிலேயே எடுத்துரைத்துள்வீர். ஆதலால் நீங்களே உண்மையான பிரம்மா ஆவீர்.

பகவானே! சம்யக்த்வ ரூபமாகிய முக்தி மார்கத்தைப் பரப்பிய உத்தம புருஷர் நீங்களே தவிர வேறு யாரும் இல்லை. ஆதலால் நீங்களே விஷ்ணு, நாராயணன், கிருஷ்ணன் என்னும் பெயரால் அழைப்பதற்குத் தகுதி படைத்தவர் ஆவீர்.

சுவாமியே! நீங்கள் உண்மையில் புருஷோத்தமன் ஆவீர். சம்சாரத்தில் உழலும் பிராணிகள் மோகத்திற்கு வசப்பட்டு மனிதப்பிறவி, தேவப்பிறவி, விலங்குப்பிறவி நரகப்பிறவி ஆகியவைகளில் உழலுகின்றன. இவை இத்தகு துன்பப் பிறவிகளிலிருந்து விடுபடும் உபாயங்களைக் காட்டியதால் நீங்களே புருஷோத்தமன். நீங்கள் நற்காட்சி முதலிய வழிகளை கடைபிடித்துத் தவம், தியானம் ஆகியவைகளின் வழி பரமானந்த பதவியைப் பெற்றீர். மற்றும் இந்த நெறிகளை மற்றவருக்கும் காட்டினீர். ஆதலால் நீங்களே புருஷோத்தமன்.

பிரபுவே! நீங்களே கேவலஞானத்தால் பவ்விய உயிர்களுக்குச் சகல தத்துவங்களையும் போதித்தருளியதால் நீங்களே புத்தன் என அழைக்கத் தகுதியுடையவர். மூவுலகிற்கும் நன்மை செய்யக்கூடிய சர்வ ஜீவ தயாபரனாகிய நீங்களே சங்கரன் எனக் கூறத்தகுதியுடையவர். மோக்ஷமார்கத்தைக் காட்டிய நீரே உண்மையில் மோக்ஷ மார்க்க ஸ்ருஷ்டி கர்த்தா - பிரம்மா ஆவீர். அனந்த ஞானத்தைப்பெற்ற வீதராகி, நிர்மல புருஷனாகிய நீரே புருஷோத்தமன் ஆவீர். ஆக புத்தன், சங்கரன், பிரம்மா

விஷ்ணு என்கிற எல்லாப் பெயர்களும் உமக்கே பொருந்தும் என்பதில் ஐயம் இல்லை.

அரிதான தத்துவங்கள்
　　அறையும் நீ புத்தன்
ஆருயிர்கட் கன்பான
　　அரவணியும் ஈசன்
பெரிதான முக்திநெறி
　　பேணியநல் பிரம்மன்
பிழையற்ற குணமுற்ற
　　பீடுற்ற மாயன்.

(தம் ஆதி) (25)

## பகவானைப் பணிதலின் காரணம்

**துப்யம் நமஸ் த்ரிபுவநார்த்தி-ஹராய நாத!**
**துப்யம் நம: க்ஷிதி-தலாமல-பூஷணாய |**
**துப்யம் நமஸ் த்ரிஜகத: பரமேச்’வராய**
**துப்யம் நமோ ஜிந! பவோததி-சோ’ஷணாய ‖ (26)**

**பதவுரை:**

(நாத) சுவாமியே! (த்ரிபுவனார்த்தி ஹராய) மூவுலகத்து துன்பங்களைத் துடைப்பவரான, (துப்யம்) உமக்கு, (நம:) நமஸ்காரம், (க்ஷிதிதலாமல பூஷணாய) பூவுலகின் தூய அணியானவரே (துப்யம்) உமக்கு, (நம:) நமஸ்காரம், (த்ரி ஜகத:) - மூவுலகிற்கும் (பரமேச்வராய) பரம பதவியைப்பெற்ற அரகந்த பகவனே, (துப்யம்) உமக்கு (நம:) நமஸ்காரம், (ஹே ஜின) - ஜினபகவானே! (பவ உததி) சம்சாரமென்னும் கடலை (சோஷணாய) வற்றச் செய்தவராகிய, (துப்யம்) உமக்கு (நம:) நமஸ்காரம், எ. று.

கருத்துரை:

தேவர்களுக்கெல்லாம் தேவனாக விளங்கும் சிறந்த பகவானே! நீங்கள் மூன்று உலகத்திலுமுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் நல்லுபதேசம் செய்து அவர்களுடைய துன்பங்களைப் போக்கவல்லவர் ஆதலால் உமக்குவணக்கம். நீங்கள் பூமண்டலத்திற்குத் தூய அணிகலன் போன்று விளங்குகிறீர். உமக்கு வணக்கம். விண்ணுலகம் மண்ணுலகம் கீழுலகமாகிய மூவுலகிற்கும் பரமதேவனாக விளங்குகின்ற உமக்கு வணக்கம். சம்சாரமென்னும் மாபெரும் கடலைத் தவ வலிமையால் வற்றச் செய்தவரே உமக்கு வணக்கம்.

விளக்கவுரை:

ஆசாரியர் மானதுங்கர் பக்தி வெள்ளத்தில் மூழ்கி சொல் செயல் சிந்தனையால் பகவானைத் துதி செய்ய ஆர்வம் கொண்டுள்ளார். அவரிடமுள்ள நம்பிக்கை, ஞானம், சாரித்திரம் ஆகிய மூன்று நதிகளின் இணைப்பினால் துதி என்னும் நீர்வீழ்ச்சிப் பெருகி வழிகிறது. இங்கு முக்கியமாக நான்கு சிறந்த குணங்களின் வழி அரகந்த பகவானின் அரிய அற்புதமான ஒப்பற்ற குணங்களைப் புகழ்ந்துரைத்துள்ளார்.

துன்பங்களைப் போக்கியவர் என்றால் துன்பங்கள் யாவை? ஆதி, வியாதி, உபாதி என்பவையே மூன்று துன்பங்கள். ஆதி - மனக்கஷ்டம், வியாதி - உடற்பிணி உபாதி - வினையின் விளைவால் ஏற்படும் துன்பம், மற்றும் பிறப்பு இறப்பு ஆசை வெகுளி மயக்கம் ஆகிய விபாவ பரிணதியும் கூட பிறவிச் சுழலின் (சம்சார) துன்பங்களே. இவை மூவுலகங்களிலும் நிகழும் துன்பங்களாகும். இத்தகு துன்பங்களை ஆதிபகவான் போக்கியவர். மற்றும் மூவுலகத்தில் வாழும் உயிரினங்களுக்கும் தம்தம் துன்பங்களைப் போக்க நல்லுரை

வழங்கிய பகவான். அதனால்தான் அவர் 'திரிபுவனார்த் திஹர' என்று அழைக்கப்படுகிறார்.

ஆதிநாத பகவான் வீதராகீ. அவரிடம் துளி அளவுகூட ஆசை வெகுளி மயக்கம் இல்லை. அவர் எவருக்கும் யாதும் கொடுப்பதும் இல்லை; யாரையும் கெடுப்பதும் கிடையாது. அவர் கர்த்தாவும் இல்லை! அதனால் அவர் மூவுலக துன்பங்களைப் போக்கக் கூடியவராக எப்படி ஆகமுடியும்?

வீதராக பகவான் முன்னிலையில் பக்தன் நின்று கொண்டு தான் தூய ஆன்மா என்கிற தூய எண்ணம் கொண்டு தானே சித்த பகவான் என்கிற அனுபவத்தைக் கொள்ளும் போது அவனுக்குப் பரமாத்துமாவிற்கும் தன்னுடைய ஆத்துமாவிற்கும் வித்தியாசம் ஏற்படுவ தில்லை. அந்த அபேத நிலையில் அவனால் இயல்பான ஆன்ம சக்தி ஏற்படுகிறது. அவ்வமயம் மூவுலக சம்சாரத் துன்பம், பாபம், கஷ்டம், வேதனை ஆகியவை பெயரள விற்குக்கூட இருப்பதில்லை. பகவான் பக்தி அல்லவோ அதற்குக் காரணம். ஆதலால் 'திரிபுவனார்த்திஹர' என்று பகவனை அழைக்கிறார்.

"க்ஷிதிதலாமல பூஷண" என்று கூறி ஜின பகவானை வணங்குகிறார் ஆசாரியர். பகவான் மூவுல கிலும் உள்ள பிராணிகளுக்குச் சிரோமணி போன்றவர். அவனி மண்டலத்திற்கு அலங்காரமாகத் திகழும் உத்தமர். இரத்ன திரய மென்னும் மணமுள்ள மாலையுடையவர்; அனந்த சதுஷ்டய மென்னும் மணிகளால் அலங்கரிக்கப் பட்ட மகுடத்தையுடையவர். நவகேவல லப்தி என்னும் ஆபரணங்களைப் பூண்டவர். ஆகையால் அவனி மண்டலத்திற்கு அணிகலமாக உள்ளார் பகவான்.

பகவான் மூவுலகிற்கும் சிறந்தவர். சமவசரண மென்னும் ஒப்பற்ற வைபவங்களைப் படைத்த பரமேஸ் வரன். ஆகையால்தான் பக்தி வசப்பட்டு பகவானை வணங்குகிறேன் என்கிறார் மானதுங்கர்.

பகவானே! நீங்கள் மோகம், ஆசை, வெகுளி, மயக்கங்களை வென்றவர். ஆதலால் நீங்களே வணக் கத்திற்குரியவர். 'பவோததி ஸோஷணாய' என்பதற்கு ஆசாரியர் தரும் விளக்கம்: அகஸ்திய ரிஷி சமுத்திர நீரைக் குடித்துச் சமுத்திரத்தை நீரற்றதாக ஆக்கிவிட்டார் என்கிற செவி வழிச் செய்தி உண்டு. ஆனால் ஆசாரியர் இந்தச் செவி வழிச் செய்தியைப் புறக்கணித்து பகவானு டைய ஆன்ம பலத்தால் செய்யப்பட்ட உண்மை நிலையை எடுத்துரைக்கவே இந்தச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். பகவானே! நீங்கள் சம்சாரமென்னும் சமுத்திரத்தை பலமுள்ள ஆன்ம ஞானக் கதிரவன்மூலம் உலர்த்திவிட்டீர். இனி உங்களுக்குப் பிறவிச் சுழல் இல்லை. உங்களைத் துதிக்கும் பக்தனும்கூட சம்சாரமென்னும் பிறவிச் சுழலைக் கடக்கமுடியும் (ஆதலால்தான் "சம்சாரவாரி திரயம் க்ஷுல்லுக ப்ரமாணம்" என்று ஆகமம் கூறுவது போன்று சம்சார சமுத்திரம் கையளவு நீர் கொண்டதாக உள்ளது) அதாவது உம்மை வணங்கும் பக்தனுக்கு இனி பிறவிச் சுழல் குறைந்த அளவே உள்ளது என்று பொருள். இதற்குக் காரணமாக அமைந்த அனைத்து குணங்களை யுடைய பகவானுக்கு வணக்கம் என்று கூறியுள்ளார்.

பகவானே! உங்கள் ஆன்மாவில் இருந்த முழு பலத்தை நீங்கள் உங்களுடைய ஆன்மாவின் மூலமே வெளிப்படுத்தியுள்ளீர். ஆதலால் நீங்கள் எங்களுக்கு இறைவன் ஆவீர். நீங்கள் புறக்காரணங்களால் இறைவன் ஆகவில்லை. உங்களிடம் அகக்காரணமாக இழைந்த முழுஞான சுபர்வ சக்தியினால் தியானத்தின் மூலம்

வினைகளைப் போக்கி பரமாத்தும நிலையைப் பெற்றீர். எந்தப் பக்தன் உள்ளத்தில் சாத்ய சாதகம் என்னும் ஞானம் ஏற்படுகிறதோ அவன் பக்தியுடனும் பணிவுடனும் பகவானிடம் கூறுவதாவது: என் உள்ளத்தில் தோன்றிய தூய பரிணாமத்திற்கு நீங்களே காரணம். நீங்களே நிமித்தம். உபாதான சக்தி என்னிடம் இருந்தபோதிலும் அச்சக்தியைத் தூண்ட நிமித்தம் தேவை. அது நீங்களே ஆவீர் என் ஆன்மா தூய தன்மை அடையவும் அமைதி பெறவும் நீங்களே நிமித்த மாவீர். இதனால் நீங்களே எனக்கு நன்மை விளைவித்த இறைவன். ஆதலால் நான் உங்களைப் பணிவுடன் பலமுறை வணங்குகிறேன்.

கரையற்ற பேரிடர்
கடலேற்றும் புணையே
காசினிகள் முழுமைக்கும்
விலையற்ற அணியே!
வரையற்ற பவமென்னும்
வருபுணரி வற்ற
வலமுற்ற கதிரென்று
வாழ்த்துவன் உனையே!

(தம் ஆதி) (26)

## பகவான் குற்றமற்ற குணக்கடல்

**கோ விஸ்மயோத்ர யதி நாம குணை-ரசே'ஷை:**
**த்வம் ஸம்ச்'ரிதோ நிரவகாச' தயா முநீச' |**
**தோஷை'ருபாத்த-விபுதாச்'ரய-ஜாதகர்வை:**
**ஸ்வப்நாந்தரேபி ந கதாசி-தபிக்ஷிதோஸி ‖ (27)**

**பதவுரை :**

(முநீச) முனிவர்களுக்கு நாதரே! (யதிநாம) ஒருக்கால், (நிரவகாச தயா) இடைவெளி இல்லாமல்,

(த்வம்) நீர், (அசேஷை:) எல்லா (குணை:) நல்ல குணங்களால் (சம்ச்ரித:) அடையப்பட்டீர், (உபாத்த விபுதாச்ரய ஜாத கர்வை:) பல இடங்களில் ஆதரவு பெற்றதினால் கர்வத்தையடைந்த (தோஷை:) தோஷங்களினால் [அவகுணங்களால்], (கதாசிதபி) ஒருபொழுதும், (ஸ்வப்நாந்தரே அபி) கனவிலும் கூட, (ந ஈக்ஷித:) பார்க்கப் படாதவராக உள்ளீர் என்றால் (அத்ர) இதில் (விஸ்மய:க:) ஆச்சரியம் என்ன? எ. று.

கருத்துரை:

மண்ணுலகில் உள்ள அனைத்துச் குணங்களும் அதிக அளவில் நல்ல முறையில் உங்களிடமே அடைக்கலம் புகுந்துள்ளன என்பது தெரிகிறது. அவற்றிற்கு வேறு எங்கும் புகலிடம் கிடைக்கவில்லை போலும். உங்களிடம் நற்குணங்களே நிறைந்துள்ளன. தீய குணமும் குற்றம் குறைகளும் உங்களிடம் இல்லவே இல்லை என்பதில் வியப்பென்ன?

அவகுணங்களுக்குப் புகலிடம் வெவ்வேறு தேவர்களிடம் கிடைக்ககூடும். அத்தகு அவகுணங்கள் உங்களை நாடி மறந்தும்கூட வராது. அவை கனவிலும் உங்களிடம் வரவே வராது, வருவதற்கும் விரும்பாது. உங்களிடம் அனைத்து நற்குணங்களும் அடைக்கலம் அடைந்துள்ளன.

விளக்கவுரை:

குணக்குன்றே! உம்மிடம் ஞானம், தர்சனம், சாரித்ரம், சுகம், வீர்யம் முதலிய அனந்த குணங்கள் உள்ளன. மோகம், ஆசை, வெகுளி, மயக்கம் முதலிய வைபாவிக குணங்கள் (அவகுணங்கள்) முற்றிலும் இல்லை. மூவுலகிலும் எத்தனை நற்குணங்கள்

உள்ளனவோ அவையாவும் உங்களிடமே வந்து அடைந்துள்ளன. அவ குணங்கள் உங்களிடம் வருவதற்குக் கனவிலும்கூட நினைக்கவில்லை. நற்குணங்கள் உங்களுடைய ஆன்ம பிரதேசத்தில் அபேத ரூபமாக ஒரே தன்மை வாய்ந்ததாக உள்ளன. எதிரான அவகுணங்கள் மூவுலகிலும் நிரம்பியுள்ளன. அவை ஆசை, வெகுளி, மயக்கம் மோகம் நிரம்பிய தேவர்களிடம் புகுந்துள்ளன. அவை வீதராக பகவானாகிய உம்மிடம் வரக்கூட தைரியம் கொள்ளவில்லை என்பதில் வியப்பென்ன உள்ளது?

அனைத்து நற்குணங்களும் உங்களிடம் சரணாகதி அடைந்துள்ளன. அனைத்து அவகுணங்களும் அநேக இடங்களில் சென்று வெவ்வேறு குற்றம் குறைகள் நிரம்பிய வெவ்வேறு பெயர்களையுடைய தேவர்களிடம் அடைக்கலம் அடைந்து விட்டன என்பது இதன் கருத்து.

அரகந்த பகவானிடம் பசி, தாகம, பயம், வியர்வை முதலிய பதினெட்டு தோஷங்கள் இல்லை. மற்ற தேவர்களிடம் இத்தகு தோஷங்களைக் காணலாம். அஞ்ஞானத்தால் ஏற்படுகின்ற ஆசை, வெகுளி மயக்கம் போன்ற விகார குணங்கள் சம்சாரி ஆன்மாவில் காணலாம். ஆனால் வீதராகத் தன்மை பெற்ற அரகந்த பகவானிடம் அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த வீரியம், அனந்த சுகம் ஆகிய நற்குணங்கள் உள்ளன. ஆன்மாவிற்குத் துன்பத்தைக் கொடுக்கக்கூடிய ஆசை, மோகம் முதலிய தீவினைகளைத் தியானம் தவம் ஆகியவைகளின் வழி அரகந்த பகவான் போக்கடித்து விட்டார். அதனால்தான் அவரிடம் நற்குணங்கள் வந்தடைந்துள்ளன.

குணமுற்றும் உன்னையே
கோயிலாக் கொண்டே
கூடிவாழ் வுற்றதால்
கோமானும் நீயே!

இணக்கமறு தோஷங்கள்
எழுவதால் அன்றே
ஈசற்கும் மற்றோர்க்கும்
ஏய்ந்தபழி அன்றோ?

(தம் ஆதி) (27)

## அசோக மர நிழலில் அமர்ந்த பகவான்

உச்சை-ரசோ'கதரு-ஸம்ச்'ரித-முந்மயூக-
மாபாதி ரூப-மமலம் பவதோ நிதாந்தம் |
ஸ்பஷ்டோல்லஸத்-கிரண-மஸ்த-தமோ-விதாநம்
பிம்பம் ரவேரிவ பயோதர-பார்ச்'வவர்த்தி ॥ (28)

பதவுரை :

(உச்சை:) - உயரமான (அசோக தரு) - அசோக மரத்தை, (ஸம்ச்ரிதம்) சார்ந்திருப்பதும், (உந்ம யூகம்) மேலே பரவுகின்ற அதிக கிரணங்களையுமுடையதும், (அமலம்) பாபத்தைப் போக்கடிக்கின்ற தூயதான (பவதரூபம்) உம்முடைய உருவமானது (பயோதர) மேகத்தின் (பார்ச்வ வர்த்தி) பக்கத்திலுள்ளதாயும், (ஸ்பஸ்டோல்லசத் கிரணம்) தெளிவாக விளங்குகின்ற கிரணத்தையுடையதாகவும், (அஸ்த கமோ விகாநம்) போக்கடிக்கப்பட்ட இருட்டு சமூகத்தையுடையதுமான, (ரவே:பிம்பம் இவ) சூரிய பிம்பத்தைப் போன்று, (நிதாந்தம்)—மிகவும் நன்கு (ஆபாதி) விளங்குகிறது, எ- று.

கருத்துரை :

சூரியன் தன்னுடைய கிரணங்களை வெளிப்படையாக வெளியே வீசிக்கொண்டு கருமேகங்களுக்கு நடுவில் விளங்குவதுபோன்று பகவானுடைய பவித்திரமான சரீரமும் கூட தன்னுடைய ஒளிமயமான கிரணங்களை அள்ளி வீசிக்கொண்டு அசோக மரத்தின் கீழ் அழகாகக் காட்சி அளிக்கிறது.

இந்தச் சுலோகத்தில் அசோக மரத்தின் கீழ் அமர்ந்துள்ள தீர்த்தங்கர பகவானின் முதல் ப்ராதி ஹார்யத்தின் விளக்கம் கொடுக்கப்படுகிறது.

விளக்கவுரை :

பக்தியில் தன்மயமான முனிபுங்கவராகிய மான துங்க ஆசாரியர் ஜினபகவானின் ஆன்மீக இயற்கை குணங்களைப் பற்றி இதற்கு முந்திய சுலோகங்களில் நிச்சய நயத்தின் மூலம் விளக்கிய பிறகு அவருடைய புறத் தோற்றங்களையும் எழில்மிக்க சமவசரண கலை அமைப்பையும் அலங்கார மொழி நடையில் விளக்குகிறார். இந்தச் சுலோகம் முதற்கொண்டு எட்டு சுலோகங்கள் வரை தீர்த்தங்கரருடைய எட்டு பிராதி ஹார்யங்களைப் பற்றி விளக்கம் தரப்படுகிறது. பிராதிஹார்யம் என்றால் என்ன? இந்திரன் பிரதிஹாரன் என அழைக்கப்படுவான். இவனால் அமைக்கப்பட்ட அணிக்கும் சிறப்புமிக்க மகிமையைக் காட்டக்கூடிய சின்னங்களுக்கும் பிராதி ஹார்யம் என்று கூறுவர். சமவசரணத்தில் சிறப்பும் வனப்பும் பொருந்திய பகவானின் பெருமையை அறி விக்கக்கூடிய எட்டு அற்புதச் சின்னங்கள் உள்ளன. அவைகளில் அசோக மரமும் ஒன்று. சமவசரணம் என்னும் அறவுரை மண்டபத்தைத் தேவர்கள் இந்திரன் கட்டளைக்கிணங்க அமைக்கின்றனர். இதில் குபேர தேவன் முதன்மை இடத்தைப் பெறுகிறான். எட்டு விதமான அழகுமிக்க பொருட்களில் இரத்தத்தினால் செய்யப்பட்ட உயரமான அழகு பொருந்திய இளம் பச்சையும் மஞ்சள் நிறமும் கலந்த தெய்வீகமான அசோக விருக்ஷம் அமைக்கப்படுகிறது. இதன் கீழேயுள்ள மரகத மணியால் செய்யப்பட்ட சிம்ம பீடத்தின் மீது ஆயிரத்தெட்டுத் தளங்களுடைய தாமரை மலர்மீது (நான்கு விரல் அளவிற்கு இடைவெளியிட்டு) அரகந்த பகவான் அந்தரத்தில் அமர்ந்துள்ளார்.

இந்த மரம் வனஸ்பதி இனத்தைச் சார்ந்தது அல்ல. இஃது இரத்தினத்தினால் அசோக மரத்தைப் போன்று அமைக்கப்பட்ட பொருள். ஆதலால் இதற்கு அசோக மரம் எனப் பெயர் வழங்கலாயிற்று. இதன் அருகில் வந்து அமர்ந்தவுடனே சோகம் (துன்பம்) விலகு கிறது. சோகத்தைப் போக்கும் மரம் அசோக மரம் எனப் பொருள். சோகத்தையும் துன்பத்தையும் போக்கக்கூடிய வல்லமை மணிமயமான மரத்திற்கு எப்படி ஏற்படும்? எனில் மூவுல நாயகனாகிய அரகந்த பகவான் அமர்ந் துள்ள மரத்தின் அருகில் வந்த மக்களுடைய சோகமும் துன்பமும் பகவானின் சிறப்பினாலும் பெருமையினாலும் மகிமை யினாலும் விலகுகின்றன.

தவ முனிவர்கள் வருகையினால் வனத்திலுள்ள உலர்ந்த மரம் செடி கொடிகள் பச்சை பசேலென்று ஆகி பருவமில்லா காலத்திலும்கூட பருவங்களில் உண்டாகும் பழங்கள் நிரம்பியதாக உள்ளன என்று ஆகமங்களில் படிக்கின்றோம். அந்நிலையில் மூவுலக நாயகனாகிய தீர்த்தங்கரர் அரகந்த பகவான் அருகில் உள்ள மரம் அங்குள்ள மக்களுடைய சோகங்களையும் துன்பங் களையும் போக்கவல்லது என்பதில் வியப்பென்ன?

சமவசரணத்தில் உள்ள அசோக மரம் தீர்த்தங் கரர் உடல் உயரைத்தைக் காட்டிலும் பன்னிரண்டு மடங்கு உயரம் இருக்கும். ஆதலால்தான் ஆசாரியர் இந்த சுலோ கத்தில் உச்சை எனும் சொல்லை பயன்படுத்தியுள்ளார்.

சமவசரணத்தில் அசோக மரத்தின் கீழ் அமைந் துள்ள பொன்மயமான ஒளியினைப் பொருந்திய பகவான் உடல் ஆகாயத்தில் கருமேகக்கூட்டத்திற்கு இடையில் பிரகாசிக்கின்ற கதிரவனைப் போன்று பிரகாசிக்கிறது.

பகவானின் உடல் கேவல ஞான ஒளியினை அள்ளி வீசுவது போல் அசோகமரத்தின் அடியில் காட்சி அளிக்கிறது.

இங்கு ஆசாரியர் மேகமண்டலத்தை அசோக விருக்ஷத்துடனும் அரகந்த பகவான் உடலை ஒளி மயமான சூரியனுக்கும் ஒப்பிட்டு கூறுகிறார்.

அசோக மரத்தின் கீழ் அதிக கிரணங்களோடு கூடிய பாபத்தைப் போக்கும்படியான பகவானுடைய சரீரமானது மேக மண்டலத்தில் கிரணங்களுடன் கூடிய இருளைப்போக்கும் சக்தி வாய்ந்த சூரிய பிம்பத்தைப் போன்றுவிளங்குகிறது என்பது கருத்தாகும். இது முதல் பிராதி ஹார்யமாகிய அசோக மரத்தின் வர்ணனை.

வான்படரும் முகிலினிடை
வருபரிதி போல
வளர்கின்ற பிண்டிக்கீழ்
வானுருவம் தோன்ற
தேனலரும் தொடைதாழும்
திருவடியைக் கண்டேன்
தீர்த்தனே! வினைவென்று
தீர்க்கும்வழி கண்டேன்

(தம் ஆதி) (29)

## சிம்மாசனத்தின்மேல் வீற்றிருக்கும் பகவான்

ஸிம்ஹாஸநே மணிமயூக சி²கா-விசித்ரே
விப்⁴ராஜதே தவ வபு: கநகாவதாதம்
பி³ம்பம் வியத் விலஸ தம்சு-லதாவிதாநம்
துங்கோதயாத்ரி-சி²ரஸீவ ஸஹஸ்ர-ரச்மே:

॥ (29)

பதவுரை:

(மணி மயூக சிகா விசித்ரே) இரத்தினக் கிரணங்களின் நுனிகளால் வெவ்வேறு வண்ணங்கள் உள்ள விசித்திரமான (ஸிம்மாசநே) சிம்மாசனத்தில் (கனாவக தாதம்) தங்கம் போன்று அழகான (தவவபு:) உங்களுடைய தூய்மையான (துங்கோதயாத்ரி சிரஸி) உதயாசலமென்கிற உயரமான மலை உச்சியில் (வியத் விலஸ தம்சு லதா விதானம்) கிராணங்களின் ஒளிக்கதிரால் ஆகாயத்தில் அழகைத் தருகின்ற, (ஸஹஸ்ர ரஸ்மே) சூரியனுடைய (பிம்பம் இவ) பிம்பத்தைப் போன்று, (விப் ராஜதே) பிரகாசிக்கிறது, எ. று.

கருத்துரை:

இந்தச் சுலோகத்தில் இரண்டாவது பிராதிஹார்யமாகிய சிம்மாசன வர்ணனை உள்ளது. ஆகாயத்தைத் தொடுமளவு உயரமான உதயாசலம் என்கிற மலை உச்சியின் நுனியில் ஒளிர்கிற சூரியன் தன்னுடைய ஆயிரக் கணக்கான ஒளிக்கதிர்களில் விரித்த விதானம் போன்றுள்ள இரத்தினங்கள் பொருத்தப்பட்ட சிம்மாசனத்தின் மீது பொன்மயமான உங்களுடைய தூய திரு உடல் பிராகாசிக்கிறது. மேலும் இரத்தின கற்கள் பொருத்தப்பட்ட அந்தச் சிம்மாசனம் வெவ்வேறு வண்ணங்களில் கதிர்களை வெளிப்படுத்துகிறது.

உதயாசல பர்வத்தின் உச்சியில் உள்ள சூரிய பிம்பம் அழகைத் தருவது போன்று மணிகள் பொருத்தப்பட்ட ஒளிமயமான சிம்மாசனத்தின் மீதுள்ள உம்முடைய திரு உடல் எழில் மிக்கதாகவும் அழகிய காட்சியைத் தருவதாகவும் உள்ளது.

விளக்கவுரை:

சமவசரணத்தில் ரத்தின மயமான சிம்மாசனத்தின் மீது ஆயிரத்தெட்டு இதழ்களுடைய இரத்தினத்தால்

ஆன தாமரை மலர் உண்டு. அதன்மீது தீர்த்தங்கர பகவான் நான்கு அங்குலம் இடைவெளிவிட்டு அந்த ரத்தில் அமர்ந்திருப்பார். தீர்த்தங்கர நாம புண்ணிய வினையின் பயனால் சிம்மாசனம் முதலிய எட்டு பிராதி ஹார்யங்கள் பகவானை அலங்கரிக்கின்றன. பண்பட்ட முற்றிய விதையினால் முளைத்த செடியின் தண்டுவடமும் கூட சிறந்தாக இருப்பது போன்று புண்ணிய பலனால் ஆன்மா தூய தன்மை பெற்றபோது அதற்கு சம்பந்தப் பட்ட உடல் சிம்மாசனம் ஆகியவையும் சிறந்ததாகவே உள்ளன. துருபிடித்த இரும்பைப் பாரசமணி என்னும் இரசாயனப் பொருளைக்கொண்டு பொன்னாக மாற்ற முடியாது. ஆனால் துருபிடிக்காத சுத்த இரும்பை பாரசமணியின் தொடர்பால் பொன்னாக மாற்றலாம் என்கிற நியதி உண்டு. அதுபோல புண்ணிய பலனால் தூயதன்மையைப் பெற்ற தீர்த்தங்கர பகவானைத் துதிப்பவர் தானும் தூய்மை பெறுவர்.

சமவ சரண மாமண்டபத்தில் அமர்ந்த பகவான் மீது அறுபத்து நான்கு தேவர்கள் சாமரை வீசுகின்றனர். இதுவும் கூட புண்ணியத்தின் பலனே ஆகும். ஆனால் இவைகளைப் பகவான் தனதாக் கருதவில்லை. அவர் புலனுக்கு அப்பாற்பட்ட ஆன்ம ஆனந்தத்தில் தோய்ந்துள்ளார்.

இங்கு மானதுங்க முனிவர் நான்காம் காலத்து சமவசரண காட்சியை எடுத்துரைக்கிறார். பக்திப் பரவசப் பட்டு அரகந்த தேவனுடைய அலௌகீக குணங் களைப் பாராட்டுகிறார். அவருடைய ஒப்பற்ற உருவ அழகை வெவ்வேறு லௌகீக உவமையின் வழி அலௌகீக அற்புத அதிசயங்களை விளக்குகிறார்.

பகவான் உங்களுடைய பொன்மயமான உடல் அந்த திவ்ய சிமாசனத்தின் மீது பிரகாசிக்கின்ற

மணிகளைப் போன்று காட்சி அளிக்கின்றது, ஆகாயத்தைத் தொடக்கூடிய உதயசால பர்வத்தின்மீது ஆயிரக்கணக்கான ஒளிக்கதிர்களையுடைய தினகரன் பிரகாசிக்கப்பது போன்று உங்களுடைய உடல் ஒளி உள்ளது. இங்கு சிம்மாசனம் உதயாசல பர்வதமாகவும் பகவானது திருமேனி அதிக ஒளிமயமான ஆதித்தியன் போலவும் உள்ளது என்று எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

சிம்மாசனம் என்பதற்கு உயர்ந்த சிறந்த இருக்கை எனப்பொருள். அரகந்த பகவான் அறவுரை மண்டபத்தில் உள்ள கந்தகுடி என்னும் பகுதியில் உயர்ந்த புனித ஆசனத்தின் மீது அமர்ந்திருப்பது போன்று காட்சி அளித்த போதிலும் அவர் திருமேனி நான்கு விரல் அளவு இடைவெளிவிட்டு அந்தரத்தில் இருக்கும். இதுவும் புண்ணிய பலனே. நிச்சயநய நோக்குப்படி இவர் சிறந்த பதவியில் இருந்துகொண்டு ஆன்மானுபவத்தில் மூழ்கியுள்ளார். ஆதலால்தான் இவர் அரகந்தர் என அழைக்கப்படுகிறார். ஆனால் விவகார நய நோக்கில் இவருடைய சிறந்த பதவியும் மேன்மையும் புறச் செல்வங்களாகிய எட்டு பிராதிஹார்யங்களும் ஆகும். வெவ்வேறு இரத்தினங்கள் பொறிக்கப்பட்ட வண்ண ஒளிகளை அள்ளி வீசுகின்ற சிம்மாசனத்தின் மீது அமர்ந்ததாலேயே இவர் எழில் மிக்கவராகக் காணப் படுகிறார் என்பதல்ல. பிரகாசிக்கின்ற சிம்மாசனம் இவருடைய பொன்மயமான திருமேனியின் ஒளியினால் மேன்மை பெற்றது. பகவன் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்ததினாலேயே நீங்கள் ஒளிமயமானவராக ஆனீர் என்பதால்ல. உங்களை ஏந்திய சிம்மாசனம் கூட சிறப்புத் தன்மையைப் பெற்றது எனப்பொருள். பரம பதவியில் அமர்ந்ததினால் நீங்கள் பரமேஷ்டி என அழைக்கப்படுகிறீர்.

நவமணிகள் ஒளிகால
நன்குற்ற அணைமேல்
நாயகன் நீயென்ன
நடுவமரும் காட்சி
பவமற்ற பரமனே !
பனிமலையின் மேலே
பரிதிமுளை விட்டதென
பாரோர்க்கும் தோன்றும்.

(தம் ஆதி) (29)

## சாமரைகளுக்கு இடையே பகவான்

**குந்தாவதாத சலசாமர–சாருசோபம்
விப்ராஜதே தவ வபு: கலதௌத-காந்தம் |
உத்யச்சசாங்க-ருசி - நிர்ஜர-வாரிதார-
முச்சைஸ்தடம் ஸுரகிரேரிவ
சாதகௌம்பம் || 30)**

**பதவுரை:**

(குந்தாவ தாத சல சாமர சாரு சோபம்) மல்லிகை மலர் போன்று வெண்மையானதும் வீசுகின்ற சாமரைகளால் அழகு பொருந்தியதுமான (கலதௌத காந்தம்) பத்தரை மாற்றுத் தங்கத்தைப் போன்று ஒளிர்கின்ற (தவவபு:) உம்முடைய திருமேனியானது, (உத்யத் சசாங்க ருசி) உதய சந்திரனைப் போன்று வெண்மைபாகவும், (நிர்ஜர வாரிதாரம்) மலையருவி நீர்த்தாரையைப் போன்றும், (ஸுரகிரே) மேருமலையினுடைய, (சாதகௌம்பம்) பொன்மயமான (உச்சை ஸ்தடம் இவ) உயர்ந்த கொடுமுடி போன்றும், (விப்ராஜதே)-பிரகாசிக்கிறது, எ.று.

**கருத்துரை:**

சமவசரணத்தில் தேவர்களால் 64 சாமரைகள் பகவானின் இருபுறமும் விசிறியைப் போன்று வீசப்படு கின்றன. அப்பொழுது பகவானுடைய திருமேனி

மேன்மை பொருந்தியதாகவும் அழகு மிக்கதாகவும் விளங்கு கிறது. மேலும் கீழும் வீசப்படுகின்ற சாமைரைகளின் நடுவில் பொன்மயமான பகவான் உடல் மல்லிகை மலர் போன்று வெண்மையாகவும் சுமேருமலை மீதிருந்து விழுகின்ற வெண்மையான அருவி நீர் போன்றும் இந்த நீரில் பிரதிபலிக்கிற சந்திர ஒளி போன்றும் உள்ளது. மேருமலை போன்ற பொன்மயமான தீர்த்தங்கரர் திருமேனி மீது வீசப்படுகிற சாமரை மேருமலை மீதிருந்து விழுகின்ற அருவிக்கு ஒப்பாக உள்ளது.

விளக்கவுரை:

தீர்த்தங்கரருக்கு ஒப்பற்ற பலமும் அழகும் பிறவியிலிருந்தே இயல்பாகவே அமைகின்றன. பிறகு அவர் செய்யும் தவம் உயர்ந்த தியானம் ஆகியவைகளால் அவருடைய பொன்மயமான திருமேனி காய்ச்சிய தங்கத்தைப் போன்று அதிக ஒளி மயமாக அமைகிறது. தவச்செல்வத்தையுடைய பகவான் கேவல ஞானத்தைப் பெற்ற பிறகு சமவசரண மென்னும் அற மண்டபத்தில் மென்மேலும் அழகு பொருந்தியவராகக் காட்சி அளிக்கிறார். அசோக மரத்தின் கீழே சிம்மாசனத்தின் மீது அமர்ந்த ஜின பகவான் மீது இரு புறங்களிலும் மன்னனுக்கு சாதாரண மக்கள் பணிவுடன் சாமரை வீசுவது போன்று அமரர்கள் ஏவலாளரைப் போன்று நின்றுகொண்டு அறுபத்து நான்கு சாமரை வீசுகின்றனர். அந்தச் சாமரைகள் மலர்ந்த மல்லிகை போன்று வெண்மையாக உள்ளன.

மானதுங்க முனிவர் உள்ளத்தில் சமவசரணத்தில் அற்புத அலௌகீக அழகு பொருந்திய காட்சி காணப் படுகிறது. ஒப்பற்ற அக்காட்சியை இயற்கை எழிலுடன் ஒப்பிட்டுக்காட்டுகிறார்.

மிக உயரமான மலைமீதிருந்து விழும் பால் போன்றுள்ள வெண்மையான அருவி தீர்த்தாரை சந்திர கிரணம் போன்று அழகாக காணப்படுகிறது. அதனுடைய

இயற்கை எழில் கல்மனமுள்ள கயவரையும்கூட கவர்ந்து விடுகிறது. எனில், பொன்மயமான சுமேரு பர்வதத்தின் மீதிருந்து விழும் அருவி உண்மையிலேயே எவ்வளவு அழகாகவும் கண்கொள்ளா காட்சியாகவும் இருக்கும்?

இயற்கை எழில் மக்கள் மனதை இவ்வளவு சிறப்புடன் கவரும்போது ஆன்மீக குணத்தில் மூழ்கிய பொன்மயமான சுமேரு மலைக்கு ஒப்பான அதிக காந்தி யுடைய நீர்வீழ்ச்சியைப் போன்றுள்ள மேலும் கீழும் வீசப்படும் அறுபத்து நான்கு சாமரைகளையுடைய பகவானின் பரம ஔதாரிக சரீரம் பார்ப்பவர் கண் களைக் கவரும் வண்ணம் இருக்குமல்லவா?

கந்தகுடியில் அமர்ந்துள்ள பகவானை அலங்கரிக் கக்கூடிய மேலும் கீழும் அசைகின்ற சாமரை மக்களை "வாருங்கள் வாருங்கள், பகவானை தரிசியுங்கள், நீங்களும் பகவான் ஆக முயலுங்கள்" என்று அழைப்பது போன் றுள்ளது. எவர் சமவசரணத்தில் பகவானைத் தரிசிப் பார்களோ அவர்கள் அவசியம் மேன்மையடைவர்.

சுடர்வீசும் மலைவிட்டு
சோர்ந்திழியும் அருவி
சொல்லிய விடரகம்
சோருவது போல
அடர்கின்ற வினைவென்ற
அமுதே! உன் பக்கல்
அணிதிகழும் சாமரம்
அலைபோல் இரட்டும்.

(தம் ஆதி) (30)

# முக்குடையின்கீழ் மூவுலக நாயகன்

ச₃த்ர-த்ரயம் தவ விபா₄தி ச₂சா₂ங்க-காந்த-
 முச்சை: ஸ்தி₂தம் ஸ்த₂கி₃த-பா₄நுகர-ப்ரதாபம் |
முக்தாப₂ல ப்ரகர்ஜால-விவ்ருத்த₄ சோ₂ப₄ம்
 ப்ரக்₂யாபயத் த்ரிஜக₃த:பரமேச்₂வரத்வம் || 31 ||

பதவுரை:

(ச₂சா₂ங்க காந்தம்) சந்திரனைப்போன்று வெண்மையான, (உச்சை: ஸ்திதம்) மேலே இருக்கின்ற, (ஸ்தகித பானுகர ப்ரதாபம்) சூரிய கிரணத்தின் தாபத்தையும் மிஞ்சுகின்ற ஒளியினையும், (முக்தாபல ப்ரகர ஜால விவ்ருத்த சோபம்)-நல்ல முத்துக்குவியல்களால் ஏற்பட்ட அழகையுமுடைய, (தவ) உம்முடைய, (சத்ர த்ரயம்) முக்குடையானது, (த்ரி ஜகத்) மூவுலகங்களுக்கும், (பரமேச்வரத்வம்) நாயனாக, (ப்ரக்யாபயத் இவ) பிரசித்திப்படுத்துவது போன்று, (விபாதி) பிராகிக்கிறது. எ. று.

கருத்துரை:

பகவான் உங்கள் திருமுடிமீது ஒன்றுக்குமேல் ஒன்றாக வைக்கப்பட்ட முக்குடையானது சந்திர ஒளி போன்று அழகாகவுள்ளது. அதில் சுற்றி தொங்குகின்ற முத்துச்சரங்கள் முக்குடையின் அழகை மேன்மைபடுத்துகின்றன. அதிலிருந்து வீசும் ஒளியானது சூரியனுடைய தாபத்தையும் தடுத்து நிறுத்துகிறது. இவை எல்லாம் நீங்களே மூவுலகிற்கும் நாயகன் என்பதை அறிவிக்கின்றன.

விளக்கவுரை:

உலகில் சாதாரண மன்னனின் மேன்மையைக் காட்டுவதற்காக அவன் குடை பிடிக்கப்படுகிறது. வெயிலையும் மழையையும் தடுப்பதற்காக அவர் தலை மீது குடை பிடிப்பதில்லை. ஆனால் அவர் சம்ராட் அல்லது நாட்டு மன்னன் என்பதைக் காட்டுவதற்காகவே பிடிக்கப்படுகிறது.

பிராதிஹார்யம் தீர்த்தங்கர பரம தேவனுக்கு தேவர்கள் செய்யும் அதிசயங்களாகும். இவை எண்ணிக்கையில் எட்டு. முக்குடை நான்காவது அதிசயமாகும். சமவசரணமென்னும் அறவுரை மண்டபத்தில் அமர்ந்துள்ள அருகதேவனின் திருமுடிமீது மூன்று குடைகள் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கி வைத்தாற்போல் அமைகின்றன. அதற்கு முக்குடை எனப் பெயர். அது சந்திர ஒளியையும் வெல்லக்கூடிய காந்தியுள்ளது. அதில் முத்து மணிகளால் ஆன சரங்கள் தொங்குகின்றன. அவை சூரிய ஒளியைக்காட்டிலும் அதிக ஒளிமயமாக உள்ளன.

சுவாமி! உங்கள் தலைமுடிமீதுள்ள முக்குடையானது மண்ணுலகம் விண்ணுலகம் கீழுலகமாகிய மூன்று உலகிற்கும் நீங்களே நாயகன், தலைவன் என்பதை எடுத்துரைக்கிறது. லௌகீகச் செல்வங்களுடைய சாதாரண சக்கரவர்த்தி இந்திரன் ஆகியோரின் குடையைக்காட்டிலும் அதிகச் சிறப்பு வாய்ந்தது. அது பகவானின் புறச் சின்னமாகும். நவ கேவல லப்தியுடன் கூடிய அவருடைய வைபவம் அகத்தில் பொதிந்துக் கிடக்கும், இரத்னதிரய விபூதியைக் காட்டுவதற்காக அமைந்துள்ளது. முக்குடையாவன – சந்திராதித்யம், சகல பாசனம் நித்யவிநோதம் என்பனவாம்.

மூன்றுகும் முழுமதிகள்
ஒன்றின்மேல் ஒன்றாய்
மொய்த்துவ தோற்றமென
முக்குடை நிழற்ற
மூன்றுகும் புவனத்தின்
முதலாகும் நாதன்
முனைவனே இவனென்று
மூவுலகம் போற்றும்.

(தம் ஆதி) (31)

முத்தம்வாய்ச் செறிந்தன நிறைந்த மும்மதி
யொத்துமூ வுலகினுக் கிறமை யோதுவ
பத்தியிற் குயின்றது நிலாவி ரிந்து மேற்
சித்திமா வேந்தைமுக் கவிகை சேர்ந்தவே.

- மேரு மந்தர புராணம், 1182

"திங்கள் மூன்றடுக்கிய திருமுக்குடைக் கீழ்"

- சிலப்பதிகாரம்

## துந்துபி சோபித ஜினபகவான்

கம்பிர-தாரரவ-பூரித-திக்விபாகஸ்-
த்ரைலோக்ய-லோக-சுப-ஸங்கம பூதிதக்ஷ: |
ஸத்நர்மராஜ ஜயகோஷண கோஷக: ஸந்
கே துந்துபிர் த்வநதி தே யச ப்ரவாதீ ॥ (32)

பதவுரை:

(கம்பீர தார ரவ பூரித திக்விபாக) கம்பீரமான ஒலியினை எழுப்பக்கூடிய திவ்யத்வனி திசைகளின் பகுதிகளில் பரவியுள்ளது, அஃது (த்ரை லோக்ய]-மூவுலகிலுமுள்ள (லோக) மக்களுக்கு (சுப) நன்மையான (சங்கம பூதி தக்ஷ) ஐஸ்வர்யத்தை அளிக்க வல்லது, (ஜய கோஷண கோஷக :ஸன்) ஜயகோஷத்துடன் கூடியது, (கே) ஆகாயத்தில், (தே யஸஸ) உம்முடைய புகழை, (ப்ரவாதீ) அறிவிக்கின்ற, (துந்துபி)- துந்துபி என்னும் வாத்யமானது (த்வநதி)-ஒலிக்கிறது, எ. று.

கருத்துரை:

எல்லா திசைகளிலும் பரவிய ஓசையான மூவுலக பவ்விய பிராணிகளை அறத்தில் ஆர்வமுள்ளதாக ஆக்குகிறது. நல்லோர்கள் கூட்டத்தை கவரக்கூடிய துந்துபி ஒலியானது சிறந்த ஜைன அறத்தின் மேன்மையையும் தீர்த்தங்கர பகவானின் சிறப்பையும் புகழையும்

உண்மை தத்துவத்தையும் எடுத்துரைத்து மக்களை வருக வருக என்று வரவேற்பது போல் உள்ளது. ஆகாயத்தில் ஒலிக்கின்ற தேவ வாத்தியம் மூவுலக மக்களுக்கும் நன்மை விளைவிப்பதாகவும் ஜின தர்மத்திற்கு நாயகனாகிய அருகதேவரின் கீர்த்தியை முழக்கமிடுவதும் போன்றுள்ளது.

விளக்கவுரை :

துந்துபி என்னும் பிராதிஹார்ய விளக்கத்தைக் கூறும் மானதுங்க முனிவர், சமவ சரண மாமண்டபத்தில் அமர்ந்துள்ள பகவானின் அற்புதச் சிறப்பினால் தேவர்கள் வாசிக்கின்ற வாத்தியக் கருவியாகிய இனிமை ஓசையுடன் ஒலிக்கிற பேரியின் முழக்கமானது சம்சாரி பிராணிகளே: உங்களுக்குத் துன்பமில்லாத உண்மையான இன்பத்தையும் ஆன்மாவின் மேன்மையையும் உணர வேண்டுமென்கிற ஆர்வமிருந்தால் நிரந்தரமாக விளங்கக் கூடிய ஜைன அறத்தையே அடைக்கலமாக கொள்ளுங்கள். ஜைன அறத்திற்கு நாயகனாக விளங்கும் அருகபகவானின் குணங்களைப் பாடுங்கள். அவரைப் போற்றுங்கள். அவருடைய திருவடியை நாடுங்கள் என்று கூறுவது போல் உள்ளது என்கிறார். அந்த பேரியின் ஓசையைக் கேட்டு எந்த பவ்விய பிராணிதான் தீர்த்தங்கரர் சமவ சரண மண்டபத்தில் செல்லாது?

அந்த பேரி ஓசை உயர்ந்ததாகவும் கம்பீரமான கோஷத்தையுடையதாகவும் உள்ளது. உறங்கும் பிராணிகளை விழிக்கச் செய்வதில் சிறந்தது. புலனாசையில் மூழ்கி தன்னுடைய நினைவு இழந்து மித்யாத்துவம் என்னும் காரிருளில் மோக நித்திரையில் உறங்கிக் கிடக்கும் உயிர்களைத் தட்டி எழுப்பி ஆன்ம நலனை அறிவிக்கும் அந்த இசைக்கருவி அவர்களுடைய செவியில் இடைவிடாது ஒலிப்பது போன்றுள்ளது. அதனால் அவர்கள்

ஆன்ம உணர்வினைப்பெற்று, ஆன்ம இயல்பை அறிந்து, ஆன்ம நலம் நாடி நல்லறப் பாதையில் நடந்து, ஜைன தர்மத்திற்கும் தீர்த்தங்கர பகவானுக்கும் ஜயகோஷம் செய்து கொண்டு புகழைப்பாடவும் துணிவர் என்பதில் ஐயமில்லை.

சான்றுகும் நின் நாமம்
சகமூன்றும் அதிர
சாற்றரிய துந்துபிகள்
சாமிஎன சாற்றும்
கான்றுமொளி மும்மணியின்
காட்சியென நின்றே
காதிவினை கருமத்தின்
கையறவு காட்டும்.
(தம் ஆதி) (32)

## மலர் மாரி விளங்கும் பகவான்

மந்தார-ஸுந்தர நமேரு-ஸுபாரிஜாத-
ஸந்தாநகாதி குஸுமோத்கர-வ்ருஷ்டி-ருத்தா |
கந்தோத-பிந்து-சு'ப-மந்த மருத்-ப்ரபாதா
திவ்யா திவ: பததி தே வசஸாம் ததிர் வா || (33)

பதவுரை:

(பகவான்) (கந்தோத பிந்து சுப மந்த மருத் ப்ரபாதா) - மணமுள்ள சந்தன துளியுடன் கூடிய மற்றும் சுகத்தை அளிக்க வல்ல மெல்ல மெல்ல வீசுகின்ற காற்றுடன் கூடிய (உத்தா) மேல்புறம் முகத்தையுடைய, (திவ்யா)சிறந்ததும் அழகானதும் மனதைக் கவரக்கூடியதுமாகிய, (மந்தார சுந்தரநமேரு சுபாரி ஜாத) அழகான மந்தார மலர், தேவதாரு மலர், பாரிஜாத மலர், (சந்தான கா்தி) கல்ப விருக்ஷமலர், (குஸுமோத்கர

வ்ருஷ்டி) பூமாரி பொழிவது போன்று (திவ:) ஆகாயத்தி லிருந்து (பததி) விழுகிறது, (வ) அல்லது, (தே)- உம் முடைய (வசசாம்) - திருமொழிகளின் (ததி:) - வரிசை (பததி) - விழுகிறது, எ. று.

கருத்துரை:

நறுமணமுள்ள நீரினால் கழுவப்பட்ட குளிர்ந்த காற்றுடன் கூடிய சுவர்கத்திலிருந்து விழுகிற மலர்மாரி உங்களுடைய வார்த்தைகளின் வரிசைபோன்று நிலத்தில் விழுகிறது. அந்த மலர்கள் சிறந்தவை, முகத்தை மேல் புறமுடையவை. அவை சமவசரணமெனும் அறவுரை மண்டபத்தில் விளங்கும் அழகான மந்தார மலர் பாரிஜாத மலர் கல்ப விருக்ஷ மலர்களாகும். அவை இடைவிடாது சொரிந்து கொண்டே இருக்கின்றன. இது மலர்மாரி என்னும் பிராதிஹார்யத்தின் விளக்கம்.

விளக்கவுரை:

கடையிலா ஞானம் காட்சி வீரியம் சுகம் ஆகிய அதிசயங்களுடன் கூடிய தேவஞானி ஆகிய அரகந்த பகவான் தாமரைமீது நான்கு விரல் அளவு இடைவெளி விட்டு அமர்ந்துள்ளவார். சமவசரண அற மண்டபத்தில் இவருடைய எழுத்து அற்ற தெய்வீக ஒலி ஒலிக்கிறது. இது நல்ல சூழ்நிலையுடனும் பற்றற்றத் தன்மையுடனும் பரம ஆனந்தத்துடனும் கூடியது. மூவுலகத்து நாயக னாகிய தீர்த்தங்கர பகவான் அறமொழி எல்லா வழிகளி லும் அகிம்சை அறத்தை அடிப்படையாகக் கொண்டது. பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகியவைகளே அதில் அடங்கியுள்ளன. நான்கு திசைகளிலும் நூறு நூறு யோஜனை தூரம் நற்காலமே திகழ்கிறது. தேவர்களால் தூய்மைபடுத்தப்பட்ட எல்லா இடமும் வெவ்வேறு மண முள்ள மலர்களாலும் கனிகளாலும் நிரம்பியுள்ளன.

இந்த எழில் மிக்க காட்சி எல்லாப் பருவ காலங்களையும் உடையதாக உள்ளது. நிலப்பகுதியும் ஆகாயமும் மாசற்ற கண்ணாடி போன்றுள்ளன. கேவல ஞானம் பெற்ற பகவானின் அகச் செல்வமாகிய கடையிலா காட்சி முத லியனவும் புறச் செல்வமாகிய சமவசரண வைபவங்களும் மூவுலகத்து பவ்விய உயிர்களைக் கவர்வதற்கு ஒப் பற்ற கேந்திரம் போன்றுள்ளன.

உள்ளத்தில் தோன்றிய பக்தி வெள்ளத்தில் மூழ் கிய தோத்திரக்காரர் மங்களகரமான புனித எழில் மிக்க காட்சியில் மலர்மாரி பிராதிஹார்யத்தைப் பற்றிக்கூறி நான் முக நாயகனாகிய ஆதிபகவானின் அற்புதச் சிறப்பினை எடுத்துரைக்க முற்பட்டபோது சந்தன நீரினால் கழுவப் பட்ட குளிர்ந்த மென்மையோடு வீசக்கூடிய நறுமண முள்ள காற்று மந்தாரமலர் கல்ப விருக்ஷமலர் பாரிஜாத மலர் ஆகிய நறுமணமுள்ள மலர்களைத் தூவிய காட்சி களைச் சித்தரித்துக் காட்டுகிறார். திவ்யத்வனி, மலர்மாரி ஆகிய இரண்டையும் பிணைத்துக் கூறிய ஆசாரியர் ஒன்றைக்காட்டிலும் ஒன்றைச் சிறப்பித்து விளக்குவதற் காகவே திவ்ய த்வனியை மேன்மைபடுத்தி விளக்குகிறார். உலக வழக்கிலும் உங்கள் மொழி மலர்சொரிவது போன் றுள்ளது என்று கூறுவதும் உண்டு அல்லவா? அதுபோல மலர்மாரியைக் காட்டிலும் திருமொழி மாரி சிறந்ததாக உள்ளது என்பதை உணர்த்துகிறார்.

இந்தச் சுலோகத்தில் "உத்தா" என்கிற சொல் மேல்நோக்கி என்கிற பொருளை உணர்த்துகிறது. அதா வது அறவுரை மண்டபத்தில் பொழிகின்ற மலர்மாரியில் உள்ள மலர்களின் காம்பு கீழ்ப்புறமும் மலர்ந்த பகுதி மேற்புறமும் உள்ளதாக இருக்கிறது என்பதை இந்தச் சொல் உணர்த்துகிறது. மேலும் இந்த மலர்கள் சமவ சரணத்தில் வந்த எளிய மக்களும் கூட மேல் உலகத்தை

நோக்கிச் செல்லும் நன்மையைப் பெற்றுவிடுவர் என்பதையும் எடுத்துரைக்கிறது. ஆசாரியர் புஷ்கலப் பொறியாகிய செவிப் புகும் திவ்யத்வனி (திருமொழி) யை மலர் மாரி வழி இலக்கிய நயத்துடன் இனிது விவரித்து கண்களுக்குத் தெரியும் வண்ணம் விளக்கி, அருக பகவானைக் காண்பவர் அவருடைய திருமொழியைக் கேட்பவர் ஆகியோருடைய கண் காது மனம் உணர்வு ஆகியவை அனைத்தும் ஆனந்தம் படும்படி செய்துவிட்டார்.

அருளுற்ற மெய்ஞ்ஞான
　　அரசே! நின்கோயில்
அருமுன்றில் மந்தார
　　அலர்மாரி பொழியும்
பொருளுற்ற நின்மொழிகள்
　　பொழிகின்ற காட்சி
பொருவரிய உவமையென
　　பொற்புறவே தோன்றும்.
(தம் ஆதி)　　(33)

## பாமண்டல சோபித பகவான்

சு'ம்பத்-ப்ரபா-வலய-பூரி-விபா விபோஸ் தே
　　லோகத்ரயே த்யுதிமதாம் த்யுதி-மாக்ஷிபந்தீ |
ப்ரோத்யத்-திவாகர-நிரந்தர-பூரிஸங்க்யா-
　　தீப்த்யா ஜயத்யபி நிச'ாமபி ஸோம
ஸௌம்யாம் ||　(34)

பதவுரை :

(விபோ:) - சுவாமியே! (தே) - உம்முடைய (சும்பத் ப்ரபா வலய பூரிவிபா) உலகில் பரவிய பிரபா வலயத்தின் அதிகமான காந்தியானது, (லோக த்ரயே) மூவுலகிலும், (த்யுதிமதாம்) காந்தியுள்ள பொருள்களின், (த்யுதிம்) காந்தியை, (ஆக்ஷிபந்தீ) மங்கச் செய்கிறது,

(தீப்த்யா) பிரகாசிக்கின்ற, (ப்ரோத்யத் திவரகர நிரந்தா பூரிசங்க்யா) எப்பொழுதும் ஒளியுள்ள பல சூரியஒளியையும், (நிசாம்அபி) இரவிலும், (சோம ஸௌம்யாம்) சந்திர னுடைய அழகிய ஒளியையும், (ஜயதி) வெற்றிக் கொள்ளுகிறது, எ. று.

கருத்துரை :

இந்தச் சுலோகத்தில் பிரபா மண்டல பிராதிஹார்ய வர்ணனை உள்ளது. அறவுரை மண்டபத்தில் பகவான் பின்புறமுள்ள பிரபா மண்டலம் அநேக உதய சூரிய ஒளியினைப் போன்று ஒளிர்கிறது. ஆனால் அது வெப்பத்தைத் தருவதில்லை. சந்திர ஒளியைப் போன்று குளிர்ச்சியைத் தருகிறது. ஆனால் அந்த ஒளிக் கிரணமானது சந்திர ஒளியையும் வென்று விடுகிறது. உலகில் இதற்கு ஒப்பான ஒளி யாதொன்று மில்லை.

விளக்கவுரை:

பகவான் திருமேனியிலிருந்து வெளிவரும் திவ்ய ஒளியானது வட்ட வடிவ அமைப்பைப் பெற்ற போது பிரபா மண்டலம் என்னும் பெயரைப் பெறுகிறது. அனந்த குணங்களைப் பெற்றவர் பகவான். ஆனால் உபசாரத்தினால் நாற்பத்து ஆறு குணாதிசயங்களைப் பெற்றவரும் சமவ சரண மண்டபத்தில் அமர்ந்த வரும் ஆகிய தீர்த்தங்கர பகவானது பிரபா மண்டல பிராதி ஹார்ய பெருமையை எடுத்துரைக்கும் திகம்பரத் துறவி மானதுங்க முனிவர் கூறுவதாவது: ஒளிக்கூட்டத்தை யுடைய உத்தம பகவன்! உங்களுடைய பிரபா மண்டல காந்தியானது கோடி சூரிய ஒளிக்கு ஒப்பானதாக இருந்தபோதிலும் அது அதிவேக வெப்ப வெய்யிலை உடையதாக இல்லை. உலகத்தில் பிரகாசிக்கின்ற சூரியனின் வெய்யிலையும் அதனால் ஏற்படும் வெப்பத் தையும் உலக மக்கள் பொறுத்துக் கொள்வதில்லை.

எண்ணிலடங்கா சூரிய காந்தியினைப் போன்று அதிக காந்தியுள்ள பிரபா மண்டலத்து ஒளியில் நிர்மலமான குளுமையுள்ள இன்பத்தை அளிக்கிற குணம உள்ளது. அந்த ஒளியானது சூரியனையும் வென்று விட்டது. சந்திரனைப் போன்று இரவில் மட்டும் பிரகாசிப்பதில்லை. அல்லும் பகலும் பிரகாசித்துக் கொண்டே இருப்பதால் சூரியனையும் சந்திரனையும் வென்றுவிட்டது. அத்துடன் மித்யாத்துவமென்னும் இருட்டினையும் போக்கி விட்டது.

நமது ஆலயங்களில் ஜினபகவான் படிமைக்குப் பின்புறம் எழுவகை அல்லது பஞ்சலோக தாதுப்பொருட்களால் ஆக்கப்பட்ட பிரபா மண்டலம் அமைப்பதைக் காண்கிறோம். ஆனால் இது போன்ற பிரபாமண்டலம் சமவசரணத்தில் கேவலி பகவான் பின்புறம் இருப்பதில்லை. உண்மையில் அவருடைய பரமௌதாரிக திவ்விய திருமேனியிலிருந்து வெளியாகும் கேவல ஞான ஒளியின் மண்டலம் ஒப்பற்ற பிரகாசக் குவியலாக உள்ளது. அதன் முன் கோடிக்கணக்கான சூரிய ஒளியும் கூட மறைந்து விடுகிறது. பகவானின் மிக நுட்பமான ஒளி அணுக்களின் வடிவத்தைப் புறக்கண்களுக்கு விளக்குவதற்கே தாதுப் பொருட்களால் ஆக்கப்பட்ட பிரபா மண்டலத்தை அமைக்கின்றனர்.

சமவசரணத்தில் இருக்கும் ஒளியில் குளிர்ச்சியும் அமைதியும் அனுபவத்திற்கு வருகின்றன. வாலறிவு ஒளி மண்டலத்தில் ஆன்மீக ஒளி பிரதிபலிக்கிறது. இதுவே இதன் அற்புத மகிமையாகும். ஜினபகவானது பிரபா மண்டலத்தூய ஒளியில் அங்குள்ள பவ்ய உயிர்களின் கடந்த மூன்று பிறவியில் நிகழ்ந்ததும் தற்போது நிகழும் செயலும் எதிர்காலத்து மூன்று பிறவியில் நிகழ இருப்பதும் கண்ணாடியில் காண்பது போன்று அவர்களுக்குத் தெரிகிறது என்று ஆகமம் கூறுகிறது. பகவானுடைய ஒளிமயமான பரமௌதாரிக புற்கல சரீரத்தில் இவ்வளவு அற்புத காந்தி உள்ளபோது

அந்த உடலிலிருந்து வெளிப்படும் ஒளி மண்டலத்தைப் பற்றிக் கூறவா வேண்டும்? அவருடைய பிரபாமண்டல கிரணங்கள் நம்முடைய மதி ஞானம் சுருத ஞானத்தைத் தூண்டி நம்முடைய ஏழு பிறவிகளின் காட்சியினை விளக்குகிறது என்பதில் உண்மையிலேயே வியப்பான விஷயம் அல்ல.

சூரியன் எதிரில் நாம் முகம் பார்க்கும் கண்ணுடியை வைத்தால் அந்தக் கண்ணாடி சூரிய கிரணத்தைக் கவர்ந்து அந்த ஒளியினை எதிர்புறத்தில் தள்ளுவதைக் காண்கிறோம். பல்லாண்டு காலமாக இருள் சூழ்ந்த குகையிலும்கூட இதுபோன்ற கண்ணாடியின் உதவியால் சூரிய ஒளியைச் செலுத்தி இருட்டைப் போக்கலாம். இவ்வளவு வல்லமை முகம்பார்க்கும் கண்ணாடியில் உள்ளபோது பகவான் கேவல ஞானம் பெற்ற பிறகு அவருடைய பரமௌதாரிக திவ்விய உடலில் அற்புத ஒளி பரவுகிறது. அந்த ஒளி அற்பமான மதிஞான சுருத ஞான ஒளியினைப் பிளந்து ஊடுருவிச் செல்லும் என்பதில் ஐயம் என்ன இருக்கிறது? வாலறிவின் அற்புதமே அற்புதம்.

எண்ணற்ற சுடர்கூடி
எழு மண்டிலம்போல்
எழிலார்ந்த வதனத்தின்
இருபாலும் ஒளிரும்
விண்ணுற்ற மதிபோல
விந்தையொளி வீசி
விள்ளரிய தண்ணொளியை
வேண்டிடவே கூட்டும்.

(தம் ஆதி) (34)

## திருமொழியின் பெருமை

ஸ்வர்கா - பவர்க கம மார்க - விமார்கணேஷ்ட:
ஸத்தர்ம - தத்வ - கதநைக-படுஸ்-த்ரிலோக்யா : |
திவ்ய - த்வநிர் பவதி தே விச தார்த்த ஸர்வ-
பாஷா-ஸ்வபாவ-பரிணும-குண-ப்ரயோஜ்ய: ‖ (35)

பதவுரை:

(த்ரி லோக்யா:) மூவுலகிலும், (ஸ்வர்காபவர்க விமார்கணேஷ்ட:) - சுவர்கம் மோக்ஷம் ஆகியவைகளின் வழிவகைகளை ஆராய்வதற்கு விருப்பம் கொண்ட மக்க களுக்கு (ஸத்தர்ம தத்வ கதனைகபடு:) நல்லறத்தில் உண் மைத் தத்துவங்களைக் கூறுவதில் திறமையுள்ளதான (தே) - உம்முடைய (திவ்ய த்வநி) - திவ்ய த்வனி [திரு மொழி] யானது (விசதார்த்த) – விளக்கமான பொருள் கொண்டது, (மற்றும்) (ஸர்வ பாஷா ஸ்வபாவ பரிணாம குண ப்ரயோஜ்ய) எல்லா மொழிகளிலும் விளக்க வல்ல குணத்தை உடையதாக, (பவதி) உள்ளது, எ. று.

கருத்துரை:

சமவசரணத்தில் அமர்ந்துள்ள பகவான் திரு முகத்திலிருந்து வெளியாகும் திவ்ய த்வனி சுவர்கம் மோக்ஷ மார்கத்தை அறிவிக்கிறது, உண்மை அறமாகிய நல்லறப்பாதையைக்காட்டுகிறது, எல்லா மொழிகளிலும் பொருள் விளங்குமாறு திகழ்கிறது. அதாவது ஜின பக வான் திவ்ய த்வனியைக் கேட்கும் எல்லா உயிரினங் களும் தம்தம் மொழிகளில் புரிந்து கொள்ளுகின்றன. இது ஒரு சிறப்புமிக்க அம்சமாகும்.

விளக்கவுரை :

எண்வகை வினைகளில் நான்கு காதி வினை, நான்கு அகாதி வினைகளாகும். ஆன்மாவின் அனு ஜீவி குணம் (தொடர்புள்ள இயல் குணம்) ஞானம் தரி சனம் வீரியம் ஆகும். இவைகளை வெளிப்படாவண்ணம்

தடுக்கும் வினை காதிவினை எனப்படும். அவை ஞானாவரணீயம் தரிசனாவரணீயம் மோகனீயம் அந்தராயம். இவ்வினைகளைத் தவம் மற்றும் தியானத்தின் வழி வென்ற பிறகு தீர்த்தங்கர நாமவினை உதயத்திற்கு வந்தபோது தீர்த்தங்கரர் ஆவார். அவருக்கு கேவல ஞானம் என்னும் வாலறிவு ஏற்படுகிறது. அப்பொழுது தான் அவர் அரகந்தர் அல்லது அருகன் என அழைக்கப்படுகிறார்.

தீர்த்தங்கரருக்குத் தேவர்களால் அறவுரை மண்டபம் (சமவசரணம்) அமைக்கப்படுகிறது. அந்த மண்டபத்தில் அவர் அமர்ந்து அங்கு வருகை தந்த பவ்விய உயிர்களுக்கு அறவுரை ஆற்றுகிறார். அதற்கு திவ்ய த்வனி எனப்பெயர். அது அஷ்டமகாபிராதி ஹார்ய மென்னும் எண்வகை சிறப்புப் பொருள்களில் ஒன்றாகும். அந்தத் திவ்ய த்வனி பல சிறப்பு மிக்க குணங்களுடன் கூடியது. எல்லா உயிரினங்களுக்கும் நல்லறப் பாதையை அறிவிக்கிறது. அது குரல் ஓசையும் தாடை அசைவும் இல்லாதது; சொற்கள் அற்றது, சுவாச அசைவும் இல்லாதது; விளக்கமாக ஒலிக்கக் கூடிய ஐயமில்லாத பொருள் நிரம்பியது. அவரவர் விரும்பிய விஷயத்தை அவரவர் மொழியில் விளக்கவல்லது. அருகில் அமர்ந்தவர் தூரத்தில் அமர்ந்தவர் அனைவருக்கும் ஒரே மாதிரியாகக் கேட்கக் கூடியது. ஆசை வெகுளி, மயக்கங்கள்களைந்தெறிந்து எல்லா குற்றங்களையும் போக்கவல்லது. அதற்கு ஒப்பான ஒலி உலகில் யாதும் இல்லை.

அது தீர்த்தங்கரர் புண்ணிய பலத்தினால் ஏற்படக்கூடியது. அது அநேக துன்பங்களுக்குட்பட்டு சம்சாரமென்னும் பயங்கரமான காட்டில் சுற்றிவரும் பிராணிகளைப் பயத்திலிருந்து தேற்றி நன்மை பயப்பிக்கவல்லது மிகச் சிறந்தது, ஏற்றமும் மேன்மையும் உள்ளது, பாராட்டத்தக்கதும் ஆகும்.

பகவான் திவ்ய த்வனி யானது அவரவர் மொழிக ளிலே பொருள் விளங்கும்படி ஒலிக்கிறது என்பது எப்படி எனில் அது சிந்தனைக்கு அப்பாற்பட்டது. ஆகாயத்தி லிருந்து பொழியும் மழை நீர் நிலத்தில் விழுந்த பிறகு அந்த அந்த மண்ணுக்கு ஏற்றவாறு சுவையுள்ளதாக மாறுகிறது. இயல்பாக ஒரே சுவையுள்ள இந்த நீர் வெவ் வேறு நிலத்தின் சுவைக்கு ஏற்றவாறு அதனுடைய சுவை மாறுவது போன்று அந்த திவ்ய த்வனி உள்ளது.

சரத் ருது காலத்து (ஐப்பசி கார்த்திகை மாத) சுவாதி நக்ஷத்ரத்தின் போது பெய்யும் மழை நீர்த் துளி யானது ஆகாயத்திலிருந்து நிலத்தில் விழும்போது ஒரே மாதிரியாக இருந்த போதிலும் முத்துச் சிப்பியில் விழுந்த துளி முத்தாகவும் சப்தச்சதம் என்னும் சிறந்த செடிமீது விழுந்த நீர்த்துளி கர்பூரமாகவும் (சப்தச்சதம் என் பது ஏழு இலைகளையுடைய தனித்தன்மை பெற்ற ஒரு தாவரம்), பாம்பின் வாயில் விழுந்த துளி நஞ்சாகவும் மாற்றமடைகிறது. மேலும், நீர்நிலைகளின் கரைமீது வளரும் மரம் செடி கொடிகளின் வேர் அடிபாகம் ஆகிய வைகளுக்கு ஏற்றவாறு அந்த நீர் சுவையுள்ளதாக மாறு கிறது. அது போலவே பகவான் திவ்ய த்வனியும் சமுத்திர கோஷம் போன்று ஒரே மாதிரியான ஓசையாக இருந்தபோதிலும் கேட்பவர் காதுகளில் விழுந்தவுடனே அவரவர் மொழிகளில் விளக்கம் தரவல்லது. அது திவ்ய த்வனியின் அற்புத சக்தியாகும். இது சம்பந்தமாக பத்ம நந்தி ஆசாரியார் கூறுவது :

ஸமுத்ர கோஷா க்ருதி ர்ஹதி ப்ரபௌ
யதாத்வ முத்கர்ஷா முபாகதாப்ரசம்
அசேஷ பாஷாத்ம் தயா த்வயா ததா
க்ருதம் நகேஷாம் ஹ்ருதி மாத ரத்புதம் ||

அருக பகவான் திவ்ய த்வனி சமுத்திரத்திலிருந்து வெளியாகும் கோஷத்தைப் போன்று ஓசையுள்ளது, ஆகாயத்தில் அற்புதமான ஒலியினைப் பரப்பி எல்லா மொழிகளிலும் விளக்கமான அர்த்தத்தை விளக்கவல்லது. பகவத் ஜினசேனாசாரியார் மகாபுரணத்தில் கூறுவதாவது:

தேவா தைவீம் நரா நாரீம் பைரவஸ்சாபி பைரவிம்
திர்யஞ்சோபி சதைரஸ்சீம் மேதினி பகவத் கிரம் ||

" திவ்ய த்வனி தேவர்களுக்கு தேவ பாஷையிலும் மனிதர்களுக்கு மனிதபாஷையிலும் வேடர்களுக்கு அவர் பாஷையிலும் விலங்குகளுக்கு விலங்கு பாஷையிலும் பொருள் விளங்கும் வண்ணம் முழங்குகிறது. இது திவ்ய த்வனியின் அற்புத மகிமையாகும்''

கம்பீரம் மதுரம் மனோ ஹரதரம் தோஷவ்ய பேதம்ஹிதம்
கண்டோஷ்டாதி வசோ நிமித்த ரஹிதம்
நோவாதரோதோ த்கதம் ||
ஸ்பஷ்டம் தததபீஷ்ட வஸ்து கதகம் நிஸ்ஸேஷ
பாஷாத்மகம்
தூராசந்ந ஸமம் ஸமம் நிருபம் ஜைநவசம்: பாதுந: ||

கேவல ஞானம் ஏற்பட்டபிறகு அரகந்த பகவான் திருமேனி முழுதிலிமிருந்து விசித்திரமான கர்ஜனைப் போன்று ஓம் என்கிற ஓசை முழங்குகிறது. அதற்குத் தான் திவ்ய த்வனி எனப்பெயர். பகவான் விரும்பாத போதிலும் பவ்விய உயிர்களின் புண்ணியத்தினால் இயல்பாகவே முழங்குகிறது. ஆனால் கணதரர் இல்லாத போது முழங்குவதில்லை. இது இருவகைப்படும்: 1) திவ்ய த்வனி 2) சர்வ மாகதிபாஷை. திவ்ய த்வனி பிராதிஹார்யத்திலும் சர்வமகாதி பாஷை தேவர்களால் ஏற்படுத்திய அதிசயச் செயலிலும் சேர்க்கப் பட்டுள்ளன. பகவானின் இந்தத் திருமொழி பகவன் விருப்பமில்லாமிலேயே இயல்பாகவே முழங்குகிறது. அது

காலை மதியம் மாலை ஆகிய மூன்று வேளையிலும் ஆறு நாழிகை வரை ஒருயோஜனை தூரம் முழங்குகிறது. அது தவிர கணதரர் தேவர் இந்திரன் அல்லது சக்கரவர்த்தி ஆகியோர் வினா எழுப்பும்போது அவர்களுடைய ஐயத்தைப் போக்க மற்ற வேளையிலும் முழங்கும். நான்கு திசைகளிலும் காணப்படும் நான்கு திருமேனியின் முகத்திலிருந்தும் முழங்கும். அது நான்கு புருஷார்த்தத்தை அறிவிக்கும் அற்புத சக்தி வாய்ந்தது என்பது உண்மையே.

பகவான் திருமுகத்திலிருந்து மேக கர்ஜனைப் போல முழங்கும் த்வனி பவ்விய உயிர்களின் மனதில் உள்ள மோகமென்னும் இருளைப் போக்கும் சூரியனைப் போன்று உள்ளது: இது மலைக் குகைகளின் வாயிற்பகுதி யிலிருந்து எதிரொலி கிளம்புவதுபோன்றுள்ளது. எழுத் துள்ள மொழி எழுத்தற்ற மொழியிலும் விளக்கங்களை அளிக்கிறது. எழுத்தற்ற சொற்கள் ஈரறிவு முதல் நான்கு அறிவுள்ள பிராணிகளுக்கும் எழுத்துள்ள சொற்கள் ஐந்தறிவுள்ள உயிர்களின் மொழியிலும் அறியப்படுகிறது. ஒரு யோஜனை பரப்பளவுள்ள பகுதியில் பகவானுக்கு அருகாமையிலும் தூரத்திலும் அமர்ந்துள்ள பவ்விய உயிர்களுக்கு பதினெட்டு முக்கிய பாஷைகளிலும் முழங்குவதுடன் விலங்கு மனிதன் தேவன் ஆகியோர் மொழிகளில் விளக்கம் தரவல்லதாகவும் உள்ளது. பகவானுக்கு அருகிலும் தூரத்திலும் அமர்ந்த அனைவ ருக்கும் ஒரே மாதிரியாக ஒலிக்கிறது.

ஒரு திருமொழியுமே பதினெண் பாடையாய்
மருவியது ஓசனை மிகுதி மண்டலத்து
அருகு இடை முடிவு அத னகத்த வர்க்கெலாம்
ஒருவகை யாலினி தாய்ஒ லித்ததே' மே. பு. 1212.

அருள்கூர்ந்து பொழிகின்ற
ஐயா! நின் மொழிகள்
அவரவர் மொழிகளிலே
அரியபொருள் காட்டும்
மருளுற்ற உயிர்கட்கு
மயலற்ற நெறியை
மாசற்ற மொழிகாட்டும்
மாண்புதான் என்னே!

(தம் ஆதி) (35)

## பகவான் திருவடி தாங்கும் தாமரை

உந்நித்ர-ஹேம-நவ-பங்கஜ-புஞ்ஜ-காந்தி
பர்யுல்லஸந் - நகமயூக - சிகாபிராமௌ ।
பாதௌ பதாநி தவ யத்ர ஜிநேந்த்ர! தத்ர:
பத்மாநி தத்ர விபுதா: பரிகல்பயந்தி ॥ (36)

பதவுரை :

(ஜிநேத்த்ர) - ஜின பகவானே! (உந்நித்ர) மலர்ந்த (ஹேம நவ பங்கஜ) பொற்றாமரையின் (புஞ்ஜ காந்தி) ஒளிக்கதிர் போல (பர்யுல்லஸமந்) பிரகாசிக்கும், [நகமயூக] நகங்களின் ஒளியோடு கூடிய (பிராமௌ) ஒளிமயமான (தவ) உம்முடைய (பாதௌ) திருவடி (பதானி) அடிகளை (யத்ர) எங்கு (தத்த:) வைக்குன்றனவோ (தத்ர) அங்கு (விபுதா:) - தேவர்கள் (பத்மானி) தாமரை மலர்களை (பரிகல்பயந்தி) அமைக்கின்றனர், எ. று.

விளக்க உரை:

பகவானின் திருவடி மலர்ந்த பொற்றாமரைப் போன்று ஒளிமிக்கதாக உள்ளது. அவருடைய நகத்தி லிருந்து நான்கு திசைகளிலும் ஒளிக்கதிர்கள் வீசு கின்றன. அவர் அறவுரை ஆற்றச் செல்லும்போதெல் லாம் தேவர்கள் அவருடைய திருவடியின்கீழ் தெய்வீகத்

தாமரை மலர்கள் பரப்புகின்றனர். தீர்த்தங்கர நாம வினை உதயத்தின் பயனால் நிகழும் அதிசயங்களில் இதுவும் ஒன்று.

கடையிலா ஞானம் தரிசனம் வீரியம் சுகம் என்னும் நான்கும் ஆன்மாவின் இயல்குணங்கள். இவற்றை அரகந்த பகவான் பெற்றுவிட்டார். இத்துடன் பதினெட்டுக் குற்றங்களும் அவரிடம் இல்லை. முப்பத்து நான்கு அதிசயங்களையும் பெற்றார். அவர் நல்லறத்தைப் பரப்ப கர்ம பூமியில் நான்காம் காலத்தில் ஆர்ய கண்டத்தில் நிலத்திலிருந்து சிறிது இடைவெளி விட்டு ஆகாயத்தில் செல்லுகிறார். அவ்வமயம் தேவர்கள் அவருடைய திருவடியின்கீழ் தாமரை மலர்கள் அமைக்கின்றனர்.

வாலறிவு முதலிய அகச் செல்வங்களைப் பெற்ற சர்வக்ஞ பகவானின் இலௌகீகச் செல்வங்களைப் பற்றி எடுத்துரைக்கும் மானதுங்க முனிவர் பக்தி வசப் பட்டுத் தன்னுடைய பற்றற்ற பரிணமத்தை வெளிப்படுத்தி ஆன்மீக இயல் குணங்களையும் பெறுவதற்குப் பகவானின் அதிசய குணங்களைப் பாராட்டுகிறார். அவருடைய திருவடியின்கீழ் தாமரை மலர் மட்டுமல்ல வெள்ளைத் தாமரையாளும் உள்ளாள். அதாவது புறச்செல்வங்களுக்கு நாயகியாகிய இலட்சுமியும் உள்ளாள். நற்காட்சி நல் ஞானம் நல்லொழுக்கமென்னும் அற மும்மணி உள்ள இடத்தில் அற்புத புண்ணியமும்கூட இயல்பாகவே வந்து சேருகிறது. மனதைக் கவரக்கூடிய ஒளி பொருந்திய ஆதிபகவானின் திருவடியின் சிறப்பையும் மேன்மையையும் எடுத்துரைக்கும் ஆசிரியர், 'பகவானின் திருவடியின்கீழ் பொற்றாமரை பொருந்தியுள்ளது. மற்றும் அவருடைய பாத நகங்களிலிருந்து வெளிப்படும் ஒளிக் கிரணங்களால் பொற்றாமரை மேலும் பொலிவினைப் பெற்று விட்டது' என எடுத்துரைக்கிறார். தேவேந்திரர்கள் மூலம் பத்துத்

திசைகளிலும் 225 பொற்றாமரைகள் அமைக்கப்படுகின்றன. ஆனால் ஜின பகவான் இந்த தாமரை மலர்களிலிருந்து நான்கு விரல் இடைவெளி விட்டு ஆகாயத்திலேயே செல்லுகிறார். இதனால் பகவான் அகப்பொருள் புறப் பொருள்களிலிருந்து பற்றற்ற நிலையைப் பெற்றவர் என்பது விளங்குகிறது. இலட்சுமியும்கூட அவருடைய திருவடி தாசு போன்றுள்ளது.

எழில் கூட்டும் நளினத்தின்
ஏற்றமிகு அடிகள்
இயல்கண்டு களிகொண்ட
இமையோர்கள் நாளும்
பழியற்ற பாதங்கள்
பாரினிலே ஊன்றும்
பதமெங்கும் முளரிமலர்
பட இட்டுத் தொழுவார்.

(தம் ஆதி) (36)

## அறவுரை அருளும் சிறப்பு

இத்தம் யதா தவ விபூதி-ரபூஜ்-ஜிநேந்த்ர
தர்மோபதேச'ந-விதௌ ந ததா பரஸ்ய |
யாத்ருக் ப்ரபா திநக்ருத: ப்ரஹதாந்தகாரா
தாத்ருக் குதோ க்ரஹகணஸ்ய விகாஸி
நோபி ‖ (37)

பதவுரை:

(ஜிநேந்த்ர!) பகவானே! (இத்தம்) இவ்வாறு, (தவ) உம்முடைய (விபூதி:) - ஐஸ்வர்யம் [அ] மகிமை, (யதா அபூத்) எவ்வாறு ஆயிற்றோ, (ததா) அவ்வாறு, (பரஸ்ய) மற்ற யாருக்கும், (தர்மோப தேசன விதௌ) - அறபோதனை செய்வதில், (ந) இல்லை; (தினக்ருத) - சூரியனுடைய, (ப்ரஹதாந்தகாரா) பேரிருளைப் போக்க வல்ல, (ப்ரபா) காந்தி, (யாத்ருக்) - எத்தகையதாக,

(விகாசிநோபி) - பிரகாசித்த போதிலும், (க்ரஹகணஸ்ய) மற்ற கிரகங்களின் கூட்டத்திற்கு, (தாத்ருக்) அத்தகை யதாக காந்தி (குத:) - எங்கிருந்து வரும்? எ. று.

கருத்துரை:

நீங்கள் சமவ சரணத்தில் அமர்ந்து உபதேசம் செய்யும்போது உங்களுடைய பெருமையைப் பற்றி ஏற்கெனவே கூறப்பட்டன. அத்தகு பெருமை லௌகீக தேவர்களிடம் இல்லை. இருளைப் போக்க வல்ல ஒளி சூரியனிடம் இருப்பது போன்று நக்ஷத்திரங் களில் இல்லை அல்லவா?

விளக்கவுரை:

எட்டு பிராதி ஹார்யங்கள், தெய்வீக அதிசயங்கள் ஆகிய அற்புத சிறப்புகளுடன் கூடிய வீதராக பகவா னின் அலௌகீக அழகும் அனந்த குணங்களின் பெருமையும் பாராட்டப்பட்டன. இதற்குமுன் கூறிய சுலோகங்களில் சர்வக்ஞ பகவானின் அறவுரை மண்டபச் சிறப்புக் கூறப்பட்டது. இப்பொழுது மேற்கொண்டு நிகழும் அற்புத நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறப்படுகிறது.

சுவாமியே! உங்களுக்குக் கிடைத்த அற்புதச் செல்வச் சிறப்பின் பெருமையே பெருமை. சமவசரணத் தில் அமர்ந்து அறவுரை ஆற்றும் சிறப்பு வேறு யாருக்கும் கிடைக்கவில்லை. ஆகாயத்தில் எண்ணிலடங்கா நக்ஷத் திரங்கள் பிரகாசித்த போதிலும் அவை இருளைப் போக்கவல்ல ஒரு சூரியனுக்குச் சமமாகாது. க்ஷாயிக ஞானமான கேவல ஞானத்தின்முன் அற்ப ஞானமாகிய மதி ஸ்ருதி ஆகியவை பயன் தரா.

அறம் உரைப்பதற்காக நீங்கள் செல்லுமிட மெல்லாம் அமரர்களால் அமைக்கப்படும் அறமண்டபம் சமவசரணம் என அழைக்கப்படுகிறது. அறவுரைக்கு

ஒப்பாக உள்ள செயல் இவ்வுலகில் யாதொன்றும் இல்லை. அறவுரையில் தத்துவப் பொருள்களின் இயல் குணங்களை அறியும் வாய்ப்பு உண்டு. ஞானம் தர்சனம் சுகம் வீரியம் ஆகிய ஆன்மாவின் இயல் குணங்களைப் பெற்று உலக உயிரினங்களுக்கு நல்லறப் பாதையைக் காட்டுவதற் காகவும், உயிரினங்களுக்குத் துன்பத்திலிருந்தும், வினைக் கட்டிலிருந்தும் விடுபடவும் அஞ்ஞான இருளைப் போக்கவும் அறவுரை ஒரு கலங்கரை விளக்கு போன்றாகும். சமவசரணம் நட்பு, அகிம்சை, ஆனந்தம் ஆகிய அற்புதச் சூழ்நிலையின் இருப்பிடம். அந்த தெய்வீக அறவுரை மண்டபத்தில் நுழைந்தவுடனே எல்லா உயிரினங்களும் தங்களுக்குள் உள்ள பிறவி விரோதத்தை மறந்து ஒன்றுக் கொன்று நட்பு கொள்ளுகின்றன. இது அருகதேவனின் ஆற்றல் மிக்க அறவுரையின் பலனாகும்.

பகவான் தன்னுடைய ஆன்மாவின் இயல் குணங் களாகிய ஞானம், தரிசனம், சுகம், வீரியம், சுத்தி, சக்தி, சாந்தி ஆகியவைகளை முழுதளவும் பெற்றவர். உலக உயிரினங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்கிற ஒப்பற்ற எண்ணம் பல பிறவிகளுக்கு முன்பு அந்த ஆன்மாவில் ஏற்பட்டது. அந்த உணர்வு இப்பொழுது நடை முறைக்கு வந்தது. அதைத் தடை செய்யக்கூடிய வினைத்திரள்கள் இப்பொழுது அந்த ஆன்மாவிலிருந்து விலகி விட்டன. ஆதலால் தான் இந்த நற்குணங்கள் தாமே இப்பொழுது வெளிப்பட்டன. இந்த நற்குணங்கள் யாவும் தீர்த்தங்கர பரம தேவனின் ஆன்மீக அகச் செல்வங்கள்.

இப்பொழுது புறச் செல்வங்கள் நிரம்பிய சமவ சரண அமைப்பினைக் காண்போம். இது மனம் கவரும் காட்சியுடையது. இதன் அமைப்பு தாமரை மலர் போன்று வட்ட வடிவமாக உள்ளது. இதன் நடுவில் அமைந் திருக்கும் கந்தகுடி என்னும் மேடை கர்ணிகைப் போன்றதாகும். புறத்தோற்றங்கள் தாமரை மலரின்

இதழ்களைப் போன்றது. இந்தச் சமவசரண பூமியின் நிறம் நீல மணி போன்றதாகும். இதனை 'மா நாங்கணம்' என்றும் கூறுவர். இங்கு இந்திரர்கள் தூரத்திலிருந்து வணங்கும் காட்சி காணப்படும். மா நாங்கணத்தின் நான்கு திசைகளிலும் நான்கு வீதிகள் உண்டு. இதன் நடுவில் மானஸ்தம்பங்கள் (மனத் தூய்மைத் தூண்கள்) உள்ளன. இவற்றின் மீது பகவான் படிமைகள் இருக்கும். இந்த இடத்திற்கு "ஆஸ்தாநாங் கணம்'' எனப் பெயர். மானஸ்தம்பத்திற்கு அடுத்து நான்கு திசைகளிலும் நீர் நிரம்பிய குளங்கள் உள்ளன. இதன் பிறகு வெள்ளியைப் போன்று வெண்மை நிறமுள்ள மதில் சுவர் உண்டு. இதற்கு நான்கு புறங்களிலும் நீர் நிரம்பிய அகழிகள் உள்ளன. இதன் நான்கு புறங்களிலும் வனபூமியும் மதில்சுவர்களில் நான்கு திசைகளிலும் முறையே நான்கு மாபெரும் நுழைவாயிலும் இதன் இருபுறங்களிலும் வியந்தர தேவர் இனத்தைச் சார்ந்த வாயில் காப்பாளர்களும் உள்ளனர். நுழை வாயிலில் நுழைந்த பிறகு கொடிகளின் எண்ணிக்கை நான்கு கோடியே அறுபத்து எட்டு இலட்சத்து முப்பத்தாறாயிரத்தைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமாகும். பிறகு பொன்மயமான இரண்டாவது மதில் சுவர் உண்டு. இதன் நுழைவாயிலில் பவனவாசி தேவர்கள் தம் கைகளில் பிரம்புத்தடி ஏந்திக்கொண்டு நிற்பர். இதன் பிறகு கற்பக விருக்ஷ வனம் உண்டு. இங்கு முனிகளும் தேவர்களும் அமருவதற்கு ஏற்ற அரங்கமும் உண்டு. இதன் பிறகு மூன்றாவது மதில் சுவர் ஸ்படிக மணி மயமானது. இதன் நுழைவாயில் பகுதியில் கற்பவாசி தேவர்கள் வாயில் காப்பாளர்களாக நிற்பர். இதற்குப் பிறகு பசுமைக் கொடிகள் சூழ்ந்த மலர் மண்டபம் உண்டு. பல மேடைகள் அமைந்துள்ளன. இதன் உட்பகுதியின் நடுவில் மூன்று பீடம் உள்ள ஸ்ரீமண்டபம் அமைந்துள்ளது. இதன் நடுவில் கந்தகுடி என்னும் பகவான் அமரும் மேடை உண்டு. இதைச் சுற்றிப் பன்னிரண்டு அரங்கம்

சூழ்ந்துள்ளன. இதில் முறையே 1) முனிவர்கள் 2) கலபவாசி தேவியர்கள், 3) ஆர்யிகைகள், 4) ஜ்யோதிஷி தேவியர்கள், 5) வியந்தர தேவியர்கள், 6) பவன வாசி தேவியர்கள், 7) பவன வாசி தேவர்கள், 8) வியந்தர தேவர்கள், 9) ஜ்யோதிஷி தேவர்கள், 10) கல்பவாசி தேவர்கள், 11) மனிதர்கள், 12) விலங்குகள் அமர்ந்து அறவுரை கேட்பர். கந்தகுடி என்னும் மேடை மீது ஆயிரத்தெட்டு இதழ்களையுடைய தாமரை மலரின் கர்ணிகை மீது நான்கு விரல் அளவு இடைவெளி விட்டு பகவான் அமர்ந்து அறவுரை ஆற்றுவார். இதுவே சமவ சரணம் என்னும் அறவுரை மண்டபத்தின் அமைப்பு ஆகும்.

"மாந ஸ்தம்பாஸ் ஸராம்சி ப்ரவிமல
ஜலசத் காதிகா புஷ்ப வாடீ
ப்ரா காரோ நாட் யசாலா த்விதய முபவ நம்
வேதி காந்தர் த்வஜா த்வா
ஸாலக் கல்ப்ப த்ருமானாம் ஸபரி வ்ருதிவ நம்
ஸ்தூப ஹர் ம்யாவளீச
ப்ராகாரஸ் ஸ்பாடி கோந்தர்
ந்ருஸுர முநிஸபா பீடிகாக்ரே ஸ்வயம்பூ:"

இரண்டாயிரம் படிகளையுடைய சமவசரண மென்னும் அறவுரை அரங்கத்தின் மேல் ஏறுவதற்கு முதற்படியில் கால் வைத்தவுடனே கடைசி படியில் கொண்டு போய் சேர்க்கும் தெய்வீகத் தன்மையுடன் கூடிய அமைப்பையுடையது. முதல் மதில் சுவர் தூளி சாலம் என்பதாம். இதன் உள்ளே சென்றதும் மானஸ் தம்பம் குளம் முதலியன உள்ள முதலாவது பிரசாத சைத்ய பூமியும், அதன் உட்புறத்தே தெளிந்த தண்ணீருடைய இரண்டாவது அகழ் பூமியும், அதனுள் மலர் நிறைந்த மூன்றாவது பூங்கொடி பூமியும், அதன் உட்புறத்தே உதயதரமென்னும் மதிலும், அம்மதிலின் நாற்புறமும்

மூன்று நிலைகளையுடைய உதயதர கோபுரமும் அதனுள் வீதியின் இரு பக்கமும் விளங்கும் நடன மாளிகைகளும், மூலைகளில் எழிலம்பாலை செம்பகம் தேமா அசோகம் முதலிய மரங்களுள்ள நான்காவது வன பூமியும் அதனுள் பிரிதிதரமென்னும் மதிலும், அதன் நாற்புறமும் ஐந்து நிலையுடைய பிரீதிதரமென்னும் கோபுரமும், அதனுள் வீதிகளில் இருபக்கமுள்ள நடன மாளிகைகளும், மூலை களில் சுற்றுமதில் முதலியனவுடைய ஐந்தாவது கொடி பூமியும், அதனுள் புறத்தே கல்யாணதரமென்னும் மதிலும், அதன் நாற்புறமும் எழுநிலையினையுடைய கல்யாணதர கோபுரமும், அதன் உள் வீதிகளிலுள்ள நடன மாளிகை களும், மூலைகளில் கற்ப விருக்ஷமும் முதலான பல்வேறு வகை அதிசயங்களும் நிறைந்த ஆறாவது கற்பக விருக்ஷ பூமியும், அதனுள் ஸ்தூபிகளும், அதற்குப் பிறகு ஏழாவது கிரஹாங்கண பூமியும் அதனுள் ஸ்ரீநிலயமென்னும் பளிங்குக் கற்களால் ஆன மதிலும், அம்மதிலின் உட் புறத்தே மனிதர் தேவர் முதலியோருடைய பன்னிரு வகை யான சபையும், அதன் மையத்தில் மூன்று படிகளையுடைய பீடமும், அதன் மேலுள்ள கந்தகுடி மண்டப மையத்தில் நன்கு அமைந்த சிம்மாசனமும், அதன்மேல் தாமரை மலரின் மிசை நான்கு விரல் அளவு இடைவெளி விட்டு இயல்பான ஸ்வரூபத்தையுடைய பகவான் எழுந்தருளி விளங்குகிறார்''.

('கிரியா, நந்தீஸ்வர பக்தி')

குணமுற்ற கோள்பலவும்
குறைவற்று மீனும்
கொல்லரிய காரிருளைக்
கொன்றுவிடும் கதிர்போல்

மணம்பெற்ற நின்ஞான
மாச்சுடரின் முன்னே
மமதையெனும் அஞ்ஞான
மையிருளும் நீங்கும்.

(தம் ஆதி) (37)

## யானைக்கும் அஞ்சாத பக்தன்

ச்’ச்யோதந்-மதாவில-விலோல-கபோலமூல-
மத்தப்ரமத்-ப்ரமரநாத-விவ்ருத்த கோபம் |
ஐராவதாப-மிப-முத்தத-மாபதந்தம்
த்ருஷ்ட்வா பயம் பவதி நோ பவதாச்’ரிதாநாம் ||

பதவுரை :

(ச்ச்யோதன்மதாவில விலோல கபோலமூல) - மத ஜலப்பெருக்கு கன்னங்களிலிருந்து சொரிவதால் கலக்கமும், (மத்த ப்ரமத்) மதம் கொண்டு சுழல்கின்ற, (ப்ரமரநாத) வண்டுகளின் ஓசையினால், (விவ்ருத்த கோபம்) வளர்ந்த கோபமுடைய, (உத்ததம்) - முரட்டுத் தனமுள்ள (ஆபதந்தம்) பாய்ந்து வரும், (ஐராவதாபம்) - தேவேந்திரனுடைய ஐராவதம் போன்ற, (இபம்) - யானையை, (த்ருஷ்ட்வா) பார்த்து, (பவத்) உம்மை, (ஆச்ரிதாநாம்) சார்ந்தவர்களுக்கு (பயம்) பயமானது (அச்சம்), (ந பவதி) உண்டாவதில்லை, எ. று.

கருத்துரை:

அச்சத்தைப் போக்கவல்ல சுவாமியே! கன்னங்களிலிருந்து சொரிகின்ற மத ஜலத்தை நுகர்வதற்காக ஓசையை எழுப்பிக் கொண்டு உழன்று வரும் வண்டுக் கூட்டங்களையுடைய மதம் பிடித்த பயங்கரமான ஐராவதம் போன்ற யானை எதிரில் வந்த போதும் கூட உங்களுடைய தியானத்தைச் செய்கின்ற மக்களுக்குப் பயம் ஏற்படுவதில்லை. மதம் பிடித்ததினால் கோபம் கொண்டு பாய்ந்து

வரும் யானை கூட ஜினபகவானைத் துதி செய்த போது அமைதியைப் பெறுகிறது என்கிற கருத்து விளங்குகிறது.

**விளக்கவுரை :**

பக்த சிரோமணியாகிய மானதுங்க முனிவர் இது வரை அருகதேவனாகிய ஆதிநாத பகவானைத் துதி செய்து தன்னுடைய எண்ணத்தில் ஏற்பட்ட பக்தியை வெளிப்படுத்தினார். இப்பொழுது இந்த சுலோகம் முதற் கொண்டு கடைசி சுலோகம் வரை பகவானைத் துதி செய்வதாலும் பூஜிப்பதாலும் கிடைக்கப் பெறும் பலனைப் பற்றி விளக்குகிறார். ஜினபகவானை அடைக்கலமாக அடைந்தவருக்கு எவ்வித பயமும் ஏற்படுவதில்லை. இவர்கள் லௌகீக சுகத்தையும் ஆன்மீக சுகத்தையும் கிடைக்கப் பெறுவர்.

பகவானுடைய பக்தியின் சக்தியினால் மதம் பிடித்து கோபம் கொண்டு தறிகெட்டு ஓடும் யானையும் கூட அமைதியை அடைகிறது. இவரைத் துதிக்கும் பக்தனை இத்தகு யானையும் கூட ஒன்றும் செய்யாது.

யானையோ பெருத்த உடலை உடையது. எவருக்கும் அடங்காத பிராணி. அதை வசப்படுத்துவது மிகவும் கடினம். அதிலும் மதம் பிடித்த யானையாக இருந்தால் அது செய்யும் அட்டகாசமோ விளக்க முடியாது. பயங்கரமான சூழ் நிலையை உண்டாக்கிவிடும். அத்தகு யானையும் கூட ஆதிநாத பகவானைத் துதித்துப் பக்தி செய்யும் பக்தனை ஏதும் செய்யாது. பகவான் மகாவீர சுவாமி இளைஞராக இருந்த போது அவரைக் கண்ட பயங்கரமான யானை அமைதி பெற்றதாக வரலாறு உண்டு. பரத சக்ரவர்த்தியும் அங்குசத்திற்கு அடங்காத 'திரிலோக மண்டல்' என்னும் யானையை அடக்கியதாக அவர்தம் வரலாறு கூறுகிறது. மகாவீரரும் பரத சக்ரவர்த்தியும் வரலாற்றுப் புருடர்கள். அவர்களுடைய ஆன்ம பலமோ அற்புதமானது. உலகமே அவர்களுடைய திருவடியில் வந்து விழுகிறது.

சாதாரண பக்தன் துதி செய்யும் போது எல்லா அச்சங்களையும் ஆபத்துக்களையும் தவிர்க்கிறான். சம்யக் திருஷ்டிக்கு எழுவகை அச்சங்கள் உண்டாவதில்லை என்பது நிச்சயம். ஏனெனில் அவனுடைய உள்ளத்தில் அனந்த சக்தி படைத்த பரமான்மாவின் பக்தி இடம் கொண்டு விட்டது. ஆதலால் அவனே அற்புத சக்தி சாலியாகக் கருதப்படுகிறான். சாந்தியும் தூய்மையுமே பக்தனின் சக்தியாகும். சாந்தியே சினத்தை வெல்லும். பகவானின்மீது கொண்ட பக்தியோ அற்புத சக்தியைத் தரவல்லது.

மலைபோல எதிர்தோன்றி
மண்பேர்த்து கையால்
மருள்சார விழிநோக்கி
மதயானை வரினும்
நிலையான அறமென்னும்
நிதிபெற்ற அடியார்
நின்னுமம் பலகூறி
நேரிதின் உய்வார்.

(தம் ஆதி (38)

## சிங்கத்திற்கும் அஞ்சாத பக்தன்

**பிந்நேப-கும்ப-களதுஜ்ஜ்வல-சோ'ணிதாக்த-**
**முக்தாபல-ப்ரகர-பூஷித-பூமிபாக: |**
**பத்தக்ரம : க்ரமகதம் ஹரிணாதிபோபி**
**நாக்ராமதி க்ரம-யுகாசல ஸம்ச்'ரிதம் தே | (39)**

**பதவுரை:**

(பிந்நேப கும்ப) பிளக்கப்பட்ட யானையின் தலையிலிருந்து, (கலத்) பெருகுகின்ற, (உஜ்வல) பிரகாசமான, (ஸோணிதாக்த) உதிரத்துடன் கூடிய, (முக்தா பல ப்ரகர) முத்துக்களால், (பூஷித) அலங்கரிக்கப்பட்ட, [பூமிபாக:]

நிலப் பகுதியில், [பத்த க்ரம] புதைந்த பாதங்களையுடைய, (ஹரினாதி போபி) சிங்கமும், [தே] உம்முடைய, [க்ரமயுகா சல ஸம்ச்ரிதம்] இரு திருவடிகளாகிய மலையை அடைந்த வர்களைத் [ந ஆக்ராமதி] தாக்காது, எ. று.

கருத்துரை:

யானையைக் கண்டவுடனே சிங்கம் அதன் தலை மீது பாய்ந்து அதன் தலை பாகத்தைப் பிளந்து விடும் மற்றும் அதன் தலைப்பகுதியிலிருந்து விழுகின்ற குருதி கலந்த முத்துக்களைச் சிதறச் செய்யும் அந்தக் காட்சி மிகவும் பயங்கரமாக இருக்கும. அத்தகு பயங்கரமான விலங்குகளுக்கெல்லாம் அரசனாகிய சிங்கமும் மலை போன்றுள்ள பகவான் திருவடியை அடைந்தவரை யாதும் செய்யாது. அதாவது பயங்கரமான கொடிய சுபாவமுள்ள காட்டு அரசனாகிய சிங்கமும் பகவான் திருவடியை அடைந்த பக்தனைத் தாக்காது. பகவான் மீது கொண்ட பக்தியின் பலனல் குரூர சுபாவமுள்ள சிங்கமும் சாந்த சுபாவ முள்ளதாக மாறி விடும். சிங்கத்தின் இயல்பான குரூர சுபாவத்தையும் மாற்றக் கூடிய சக்தி பகவத் பக்தியில் உண்டு.

விளக்கவுரை:

இந்தச் சுலோகத்தில் பகவான் திருவடியை அடைக்கலமாக அடைந்த பக்தன் பயத்திலிருந்து விடு பட்டு ஆன்ம பலத்தைப் பெறும் ஆற்றலை அடைகிறான் என்பதை விளக்குகிறார். மதம் பிடித்த யானை மட்டும் பக்தனுக்கு அடிமையாக வில்லை. பயங்கரமான கொடிய சுபாவமுள்ள சிங்கமும் பக்தனைக் கண்டவுடனே அமைதி பெறுகிறது. அத்தகு விலங்குகளை முறியடிக்கும் தன்மை பகவான் பக்தியில் உண்டு என்பதை எடுத்துக்காட்டுகிருர் ஆசாரியர்.

இங்கு ஆசாரியர் இலக்கியத்திற்கே உரித்தாகிய ஒன்பது சுவைகளை எடுத்துக் காட்டுகிறார். வெகுளி, அச்சம், வீரம், உவகை, கருணை, இழிபு, சாந்தம், அற்புதம் நகைச்சுவை ஆகிய ஒன்பதும் நவரசங்கள் எனப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ] | மதம் பிடித்த பருத்த உடல் படைத்த யானை | அச்சம் |
| 2 ] | பாய்வதற்கு ஓடிவரும் வலிமையுள்ள சிங்கம் | வீரம் |
| 3 ] | கூர்மையான தன்மையுடைய நகங்களால் உயரமான யானையின் தலையைப் பிளக்கும் சிங்கம் | வெகுளி |
| 4 ] | மரணத்தைப் பெற்ற யானை | கருணை |
| 5 ] | குருதி படிந்த யானை முத்துக்கள் | இழிபு |
| 6 [ | ஒளிமயமான வெண்மை முத்தும் சிவப்பு முத்தும் சிதறிய நிலத்தின் அதிசய அழகு | அற்புதம் |
| 7 ] | அமைதியையும் கம்பீரமான தோற்றத்தையும் கொண்ட உயர்ந்த மலைக்கு ஒப்பான பகவான் திருவடி | சாந்தம் |
| 8 ] | பக்தனிடம் காணப்படும் பகவத் பக்தி | உவகை |
| 9 ] | அச்சமற்ற ஆனந்தத்தைப் பெறுதல் | நகைச்சுவை |

இந்த எடுத்துக்காட்டுகளை ஆசாரியர் அருளிய அற்புதச் சுலோகங்களில் காணலாம்.

யாதொரு பக்தனானவன் பகவான் திருவடியை அடைகிறானோ—நிச்சய விவகாரமென்கிற திருவடியைப்

---

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப — தொ. கா. மெய்ப்பாட்டியல், 3

பற்றுகிறானோ-அவனைக் கண்டு சினம் கொண்டு ஓடோடி வரும் சிங்கம் கூட அமைதி பெற்றுவிடும். ஆன்ம பலம் பெற்ற பகவானை வழிபடும் பக்தனைக் கண்ட மாத்திரத்தி லேயே கொடூர குணம் படைத்த விலங்குகளும கூட தம் சக்தியை இழந்து விடுகின்றன என்பதை எடுத்துரைக் கிறார் ஆசாரியர்.

மலையிலுறை மதகிரியின்
மணிமுடியைக் கீண்டு
மண்ணிழியும் குருதியினை
மாந்துகிற அரியும்
நிலையிலுறை அடியவரை
நேர்காணின் தாழ்ந்து
நிலம்நோக்கி குலைவுற்று
நீள்வழியை நோக்கும்.

(தம்ஆதி) (39)

## கடுந் தீக்கும் அஞ்சாத பக்தன்.

**கல்பாந்தகால-பவநோத்தத-வஹ்நி கல்பம்**
**தாவாநலம் ஜ்வலித-முஜ்வல-முத்ஸ்ப்புலிங்கம் |**
**விச்’வம் ஜிகத்ஸுமிவ ஸம்முக மாபதந்தம்**
**த்வந்நாம கீர்த்தந-ஜலம் ச’மயத்யசே’ஷம் | (40)**

பதவுரை :

(கல்பாந்தகால) பிரளய காலத்து, (பவன) காற்றி னால், (உத்தத) - எழும்பி, (வஹ்நி கல்பம்) – தீயைப் போன்றுள்ளதும், (ஜ்வலிதம்) ஒளியுடையதும், (உஜ்ஜ்வலம்)மேலேழுவதும், (உத்ஸ்ப்புலிங்கம்)-எழுகின்ற பொறிகளையுடையதும் (விச்வம்) - உலகத்தை (ஜிகத்ஸு மிவ) விழுங்குவது போன்றுள்ளதுமாக, ஸம்முகம் (ஆபதந்தம்) எதிரில் பாய்ந்து வருகிற, (தாவாநலம்) காட்டுத்தீயை, (த்வந்நாம) உன் பெயரையுடைய,

(கீர்த்தன ஜலம்) - தோத்திர மென்கிற நீரானது (அசேஷம்) – சிறிதளவும் எஞ்சாதவாறு (சமயதி) - அணைத்துவிடுகிறது, எ று.

**கருத்துரை:**

காட்டில் ஏற்படும் காட்டுத்தீ பிரளய காலத்துப் பயங்கரமான புயல் போன்று மேலே எழும்பியும், பளபளப் புடைய நெருப்புப்பொறிகளை அள்ளி வீசிக் கொண்டும் உலகத்தையே விழுங்குவது போன்று பயங்கரமான தோற்றத்தையுடையதாக இருந்த போதிலும் அது உன்னுடைய துதி என்னும் நீரினால் முழுதளவும் அணைக்கப்பட்டு விடுகிறது. அதாவது உன்னுடைய தோத்திரத்தில் காட்டுத்தீயையும் அணைக்கும் சக்தியுண்டு.

**விளக்கவுரை:**

இங்கு தோத்திரக்காரர் பகவானைத் துதிப்பதாலும் அவருடைய திருநாமத்தைச் சொல்லுவதாலும் கிடைக்கப் பெறும் அற்புதச் சக்தியை எடுத்துரைக்கிறார்.

சாதாரண நெருப்பே உலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களையும் சாம்பலாக்கி விடுகிறது. பயங்கரமான காட்டுத் தீயிடம் உள்ள பலத்தைப் பற்றி கூறவா வேண்டும்? பிரளய காலத்துப் பயங்கரமான காற்று போன்றும் உலகத்தையே சாம்பலாக்க வல்ல தீப்பொறி யைப் போன்றும் எழும்பி வரும் காட்டுத்தீ அணைக்க கடல் நீரே போதாது. அந்நிலையில் எதன் மூலம் அதை அணைக்க முடியும் என்றால் பகவானின் தூய குணங் களையும் ஆன்மீக சக்தியையும் எடுத்துரைக்கும் துதிப் பாடலாகிய நீரினால்தான் அணைக்கமுடியும். நெருப்புக்கு எதிரானது நீர். அதுகூட சிற்சில நேரங்களில் பெரும் நெருப்பை அணைக்கும் தன்மையை இழந்து விடுகிறது. ஆதலால் இங்கு ஆசாரியர் லௌகீக நீரின் பயனற்றத்தன் -மையையும் பயனுள்ள அலௌகீக நீரின் பெருமையையும்

எடுத்துரைக்கிறார். அலௌகீக நீர் பகவானின் துதிப் பாடல் ஆகும். பகவான் குணங்களையும் பெருமையையும் எடுத்துரைக்கும் துதிப்பாடல் காட்டுத்தீயையே அணைக்கும் சக்தி படைத்தது. பக்தன் தன்னுடைய சொல் செயல் சிந்தனை ஆகிய மூன்றையும் ஐக்கியப்படுத்தி பகவான் திருநாமத்தை ஜபிப்பானானால் பயங்கரமான காட்டுத் தீயே அணைந்துவிடும். அத்தகு சக்தி பகவான் திரு நாமத்தை ஜபிப்பதில் உண்டு.

இந்தச் சுலோகத்தில் அலௌகீக தத்துவம் நிரம்பி யுள்ளது. அதாவது மக்கள் சம்சாரமென்னும் பயங்கா மான காட்டுத் தீயில் சிக்கித் துன்புற்று வருகின்றனர். பிறவிச் சுழல் காட்டுத்தீ போன்றது. நான்கு கதியிலும் நிகழும் துன்பம் நான்கு திசைகளில் பரவிய காட்டுத்தீ போன்றதாகும். இதை அணைப்பதற்குச் செய்யும் எல்லா இலௌகீக முயற்சிகளும் வீணாகின்றன. அந்நிலையில் பிறவிச்சுழல் என்னும் காட்டுத்தீயிலிருந்து தப்பிப்பதற்கு வீதராக பகவான் துதியும் சரள பரிணாமமுமே அலௌ கீக முயற்சியாகும். ஆதலால் காட்டுத்தீ போன்றுள்ள பிறவிச் சுழலை தவிர்ப்பதற்கு பகவான்மீது பக்தி கொள்ளுதலும் அவர்தம் குணத்துதியும் ஆன்ம சிந்தனை யுமே இன்றியமையாதவை.

உடல்பதற உயிர்பதற
ஓங்குஅடவித் தீயும்
ஔிநாவை வெளி நீட்டி
உயிருண்ண வரினும்
கடல்பிறவி நீங்கியநின்
நாமமது சொல்லின்
கடுகளவும் நின்னன்பர்
காண்பரோ ? இடரே !

(தம் ஆதி) (40)

## நாகத்திற்கும் நடுங்காத பக்தன்

ரக்தேக்ஷணம் ஸமத கோகில கண்ட-நீலம்
க்ரோதோத்ததம் பணிந-முத்பண-மாபதந்தம் |
ஆக்ராமதி க்ரமயுகேந நிரஸ்த-சங்கஸ்
த்வந்நாம-நாக-தமநீ ஹ்ருதி யஸ்ய பும்ஸ: || (41)

பதவுரை:

சுவாமி! (யஸ்ய பும்ஸ:) யாதொரு மனிதன், (ஹ்ருதி) - மனத்தில், (த்வந் நாம) உன்னுடைய பெயராகிய, (நாக தமநீ) நாகத்தின் நஞ்சைப்போக்க வல்ல மந்திரம், (அஸ்தி) உள்ளதோ, (ஸ) அந்த மனிதன், (ரக்தேக்ஷணம்) சிவந்த கண்களையுடையதும், (ஸமத கோகில கண்ட நீலம்) மதத்துடன் கூடிய குயிலின் கழுத்து போன்ற கருமையானதும், (க்ரோதோத்ததம்) சினத்தினால் சீறுவதும், (உத்பணம்) மேலே தூக்கிய படத்தையுடையதும், (ஆப தந்தம்) சீறிக்கொண்டுவருவதுமான, (பணிநம்) நாகத்தை, (நிரஸ்த சங்க) பயத்தைப் போக்கும் வண்ணம், (க்ரமயுகேந) - தனது இரண்டு அடிகளாலே, (ஆக்ரமதி) தாண்டிச்செல்லுகிறான், எ. று.

கருத்துரை:

குயிலின் கழுத்துப்போன்ற கருமை நிறமுள்ள கருநாகம் கோபம் கொண்டு தன்னுடைய சிவந்த கண்களுடன் படத்தை மேலே தூக்கிக்கொண்டு தீண்ட வந்த போது நாக தமனி போன்று பகவானின் திருநாம மந்திரத்தை உச்சரித்துத் தியானம் செய்யும் மனிதன் அந்த பயங்கரமான கருநாகத்தையும் தன்னுடைய கால்களால் உதைத்துத் தள்ளி விடுகிறான். அவனுக்கு படநாகத்தைக் கண்டபோதும்கூட அச்சம் இல்லை. அவனிடமுள்ள பகவத் பக்தியே அவனுக்கு அத்தகு ஆற்றலைத் தருகிறது.

விளக்கவுரை:

ஆயுர்வேத நூல்களில் மூலிகையின் மேன்மை விளக்கப்படுவதைக் காண்கிறோம். நாகத்தின் விஷத்தைப் போக்க நாகதமனி என்னும் மூலிகை பயன்படுத்தப் படுகிறது. அந்த மூலிகையில் படநாகத்தின் நஞ்சைப் போக்கவல்ல சக்தியுண்டு. அதுபோன்று பகவான் திரு நாம மந்திரத்தில் சம்சாரமென்னும் விஷத்தைப் போக்கும் சக்தியுண்டு. கருநாகத்தைக் கண்டவர்கள் கதிகலங்கி பயந்து ஓடுவர். கருநாகமோ யமராஜனைப் போன்றதாகும். அது எந்தப் பிராணியைத் தீண்டினாலும் அந்தப் பிராணி உயிர் பிழைக்காது. தன்னையும் மறந்து யாராவது அதை மிதித்துவிட்டால் அதற்கு ஏற்படும் சினத்திற்கு எல்லையே இல்லை. கோபத்தால் கண்கள் சிவந்து விடும். படத்தைத் தூக்கிக் கொண்டு சீறிக்கொண்டு கடிப்பதற்குப் பாய்ந்து வரும். அந்தச் சூழ்நிலை ஏற்பட்ட போதும் எவன் பகவானின் பவித்ரமான திருநாமத்தை ஜபிப்பானோ அவனை நாகம் தீண்டாது. அவன் அதை கால்களால் தள்ளிக்கொண்டு செல்லும் சக்தியைப் பெற்றுவிடுகிறான். நாகத்தால் ஏற்படும் அச்சம் அவனுக்கு இருக்காது. பகவான் திருநாமத்தை நாகதமனி என்னும் மூலிகைக்கு ஒப்பாக விளக்குகிறார் ஆசாரியர். அந்த மூலிகையோ புறப்பொருளாகும். ஆனால் உண்மையான அகப்பொருள் பகவான் திருநாம மந்திரத்தின் சிந்தனையே ஆகும். எவன் பொருளின் இயல் குணமாகிய திரவ்யம் குணம் பர்யாயம் ஆகியவைகளை எண்ணிச் சொல் செயல் சிந்தனையை பகவானின் குணத்தில் செலுத்தி தன்னுடைய ஆன்ம சொரூபத்தைச் சிந்திக்கிறானோ அவன் பிறவிச் சுழல் என்னும் நஞ்சையே போக்குகிறான். இதற்கு முதற்காரணம் பகவானின் குண ஸ்துதியும் ஜபமும் ஆகும்.

'வீக்நௌகா: ப்ரளயம் யாந்தி, சாகிநீ
பூத பண்ணகா: |
விஷம்நிர்விஷதாம் யாந்தி, ஸ்தூயமானே
ஜிநேஸ்வரே ||

'பகவானைத் துதிப்பதால் இடையூறுகளும் பிரளயமும் சாகிநீ பூதம் நாகம் விஷம் ஆகியவைகளின் தொல்லையும் விலகி விடுகின்றன' என்று பூஜ்யபாதர் கூறியுள்ளார்.

சுவல்மிசையில் பொறிகொண்ட
சுடுபார்வை நாகம்
சொல்லரிய வேகமொடு
வருகின்ற போதும்
கவலற்ற நெஞ்சினராய்
கையறவே இன்றி
களிபெறக் காண்பரே
கழறின்நின் நாமம்.

(நம் ஆதி) (41)

## போருக்கும் அஞ்சாத பக்தன்

**வல்கத்-துரங்க-கஜ கர்ஜித-பீம-நாத-**
**மாஜௌ பலம் பலவதாமபி பூபதீநாம் |**
**உத்யத்-திவாகர-மயூக-சிகாபவித்தம்**
**த்வத்கீர்த்தநாத் தம இவாசு பிதாமுபைதி || 42 ||**

**பதவுரை:**

(த்வத் கீர்த்தநாத்) உம்மைத் துதிப்பதால், (பல வதாம்) பலமுள்ள, (அபி பூபதீ நாம்) விரோதி மன்னர்களின், (ஆஜௌ) போரில், (வல்கத் துரங்க) கனைக்கின்ற குதிரை, (கஜ கர்ஜித) பிளிறுகின்ற யானை (பீம நாதம்) பயங்கரமான ஓசையுடன் கூடிய, (பலம்) சேனை

உத்யத்) உதயமாகின்ற, (திவாகர) சூரியனின், (மயூக சிக) கிரணங்களின் நுனிகளால், [அபவித்தம்,] சிதறடிக் கப்பட்ட, [தம இவ] இருளைப்போன்று, [ஆசு] விரை வில் [பிதாம் உபைதி] சிதறப்போகிறது, எ. று.

**கருத்துரை:**

பலமுள்ள விரோதி மன்னனின் சேனையில் கனைக்கின்ற குதிரை பிளிறுகின்ற யானைகளும் உள்ளன. இந்தச் சேனையால் போர்க்களம் பயங்கரமான காட்சியுடையதாக உள்ளது. இதைக் கண்டு பயம் கொண்ட மனிதன் பகவானுடைய குணங்களைப்பாடி மந்திரத்தை ஜபித்தால் சூரிய கிரணங்கள் பட்டவுடனே இருள் மறைவது போன்று அவனுடைய பயம் நீங்கி விடும்.

**விளக்கவுரை:**

பகவான்மீது பக்தி கொண்டுள்ள மனிதன் விரோதிகள் படைகளுக்கு இடையில் சிக்கிக்கொண்டா லும் அவன்மீது பிறர் படை எடுத்தாலும், விரோதிகளு டைய குதிரைப்படை அவன்மீது பாய்ந்தாலும், பிளிறும் யானைகள் அவனைத் தாக்கினாலும் நான்கு திசைகளிலும் பயத்தை உண்டாக்கக்கூடிய சூழ்நிலை அமைந்த போ திலும், பக்தன் அவைகளை வெல்ல விரும்பினால், விரோதிகளை விரட்டி அடிக்க விரும்பினால், வீரனைப் போன்று செயல்பட ஆயத்தமானால், பகவான்மீது பக்தி அவனுக்கு இருக்குமேயானால், பகவானை நினைத்தால், பகவான் திருநாம மந்திரத்தை ஜபித்தால், அவன் எல்லாவற்றையும் எல்லா இன்னல்களையும் வெல்லலாம். சூரியன் உதயமானதுமே காரிருள்கூட நொடி நேரத்தில் மறைவது போன்று எல்லா இன்னல்களும் மறைந்துவிடும்.

பிறவிச் சுழல் பயங்கரமான ஒரு போர்க்களம். இந்தச் சுழலுக்கு உட்பட்டவன் மனித, விலங்கு, நரக, தேவப்

பிறவிகளில் உழன்று சொல்லொணா துன்பங்களை அனுபவிக்கிறான். மோகனீய வினை பிளிறிய யானை போன்று இவனைத் துன்புறுத்துகிறது. தீவினை என்னும் குதிரை அவனை விரட்டித் துன்பக்கடலில் தள்ளுகிறது.

அவற்றிற்குப் பயந்து தன்னுடைய ஆன்ம சக்தியை மறந்து இன்னல்படும் அவன் தன்னுடைய ஆன்ம பலத்தை நினைத்து அதிக சக்தி வாய்ந்த தூய பரமாத்துமாவை தியானம் செய்வானானால் அவன் துன்பக் கடலிலிருந்து நீங்குவான் என்பதை இந்தச் சுலோகம் எடுத்துரைக்கிறது.

போரில் வெல்லலாம், பிறர் இராஜ்யத்தைக் கைப்பற்றலாம், விரோதிகளை முறியடிக்கலாம் என்கிற எண்ணம் கொள்ளும் மன்னர்களைக் குறித்து இந்தச் சுலோகம் கூறப்படவில்லை. ஆற்றலையும் உறங்கிக் கிடக்கும் ஆன்ம பலத்தையும் வெளிப்படுத்துகிறது இது.

கதிரவன் முன்னரியும்
கனவிருளைப் போல
கர்த்தனே! உனைஎண்ணிக்
கைகூப்பும் அடியார்
அதிர்கின்ற படைதோன்றி
ஆர்த்துவரும் போதும்
அணுவளவும் இடரின்றி
ஆருயிர் உய்வார்.

(தம் ஆதி) (42)

## போரில் வெல்லும் பக்தன்

**குந்தாக்ர-பிந்ந-கஜ-சோ’ ணித-வாரிவாஹ**
**வேகாவதார-தரணாதுர-யோத-பீமே |**
**யுத்தே ஜயம் விஜித-துர்ஜய-ஜேய-பக்ஷாஸ்**
**த்வத்பாத-பங்கஜ-வநாச்’ ரயிணோ**
**லபந்தே || 43 ||**

பதவுரை:

(த்வத் பாத பங்கஜ வநாச்ரயின:) உன்னுடைய திருவடித்தாமரை வனத்தை அடைந்த தூய பரிணாம முள்ளவன், (குந்தாக்ர பிந்ந) கூர்மையான ஈட்டியின் நுனியால் தாக்கப்பட்ட, (கஜ ஸோணித வாரி வாஹ) யானையின் குருதி வெள்ளத்திலிருந்து, (வேகாவதார) வேகமாக, (தரண) தப்பிப்பதற்கு, (ஆதுர) ஆர்வம் கொண்ட, (யோத) போர்வீரன், (பீமே யுத்தே) பயங் கரமான போரில் (விஜித துர்ஜய) மிகக்கடினமாக வெல்லுவதற்கரிய, (ஜேயபக்ஷா:) விரோதிகளை, (ஜயம் லபந்தே) வென்று விடுவான், எ. று.

கருத்துரை:

சுவாமி! உம்முடைய தூயத்திருவடித் தாமரை யைத் தழுவிய பக்தன், கூர்மையான ஈட்டியால் அடிபட்ட யானையின் குருதி வெள்ளம் பெருகி ஓடும் போர்க்களத் தில் சிக்கிக்கொண்டபோதிலும் மிகக் கடினமாக வெல்லக் கூடிய விரோதிகள் எதிரே நின்றபோதிலும் அவர்களை மிக எளிதில் வெல்லுவான். உம்முடைய திருவடியை நாடிய அவன் எல்லா இன்னல்களையும் வெல்லும் ஆற்றலைப் பெறுகிறான்.

விளக்கவுரை:

பக்த சிரோமணி ஆசாரிய மானதுங்க முனிவர் ஜினபகவானின் பக்தி வெள்ளத்தில் மூழ்கி இலக்கி யத்தின் இனிய சுவையினை எடுத்துரைக்கிறார்.

இந்தச் சுலோகத்தில் போர்களத்தைப்பற்றி விளக்கிய ஆசிரியர் வெகுளி, அச்சம், வீரம், இழிபு முதலிய சுவைகளை எடுத்துரைக்கிறார். ஆனால் பக வானின் திருவடித்தாமரையாகிய குளிர்ந்த சந்தனத்தின் முன்னே எல்லா தீயச்சுவைகளும் வலிவிழுந்து

விடுகின்றன. போர்க்களத்திலே நிகழும் அருவருப்பான காட்சியைப்பாருங்கள்! யானைகளின் குருதி வெள்ளம் பெருகுகிறது. போர் வீரர்கள் அதில் நீந்திக்கொண்டு போர் செய்ய முற்படுகின்றனர். இது அருவருப்பை அறிவிக்கும் சொற்றொடர் ஆகும். பயங்கரமான போர்க்களத்தைப் பார்ப்பவர் உள்ளம் நடுநடுங்கி பயத்தால் பதறச் செய்யும். அக்காட்சி பயத்துடன் கூடிய கருணையை உணர்த்துகிறது. இருந்த போதிலும் சாந்த ரசம் இதை வெற்றி கொள்ளுகிறது. ஏனெனில் பகவானின் குளிர்ந்த சாந்தமான திருவடித் தாமரையை அடைந்த பக்தன் குரோதம் முதலிய விபாவ குணங்களை விட்டு இயல்பான குணமாகிய சாந்த ரசத்தைப் பருகுகிறான்.

பகவான் மீது உண்மையான பக்தி கொண்டவனுக்கு போர்க்களத்திலும்கூட அச்சம் இல்லை. அவன் உள்ளத்தில் தோன்றிய பக்தியானது புண்ணியத்தின் பலனைக் கொடுத்து வெற்றிபெறச் செய்கிறது. பகவானின் பக்தியினால் புண்ணிய வினை கட்டு ஏற்படுகிறது. சூரியனைக் கண்டமாத்திரத்திலேயே இருள் மறைவது போன்று புண்ணியத்தின் பலனால் போர்க்களத்தில் ஏற்படும் பயம் மறைந்துவிடுகிறது. துன்பத்தைத் தரும் பாபம் பறந்தோடுகிறது. வீதராக பகவானைத் துதிப்பவர் தர்மாத்துமா புண்ணிய ஆத்துமா ஆவார்.

இந்தச் சுலோகத்தில் இலக்கியச் சுவை, பக்தியின் சிறப்பு, புண்ணியத்தின்பலன், புருஷார்த்தத்தால் ஏற்படும் பலன் ஆகியவை கூறப்படுகின்றன.

படைகொண்ட வயவீரர்
பலரொன்று கூடி
பகைதீர போர்வெண்ணி
பாங்குற்ற போதும்

தடையற்ற வாள்வீசி
தருவெற்றி பெறுவார்
தவமுற்ற நிலையெண்ணி
தான்சாரும் அன்பர்.

(தம் ஆதி 43)

## பிறவிக் கடலை கடக்கும் பக்தன்

அம்போநிதௌ க்ஷுபித-பீஷண-நக்ரசக்ர-
பாடீந-பீட-பயதோல்பண-வாடவாக்நௌ |
ரங்கத்-தரங்க-சிகரஸ்த்தித-யாந பாத்ராஸ்
த்ராஸம் விஹாய பவத: ஸ்மரணாத் வ்ரஜந்தி ||(14)

பதவுரை:

(க்ஷுபித பீஷண நக்ர சக்ரம்) - குழப்பத்துடன் கூடிய பயங்கரமான முதலைகளும், (பாடீநம்) மீன்களும், (பீட) கரைப்பகுதியில், (பயத) பயத்தைக்கொடுக்கக்கூடிய, (உல்பண) அதிகமான, (வடவாக்நௌ) வடவாக்னியுள்ள, (அம்போநிதௌ) சமுத்திரத்தில், (ரங்கத் தரங்க சிகரஸ்த்தித) மேலே கிளம்பும் அலைகளில் அசைகின்ற, (யாநபாத்ரா:) ஓடத்தில் உள்ள மக்கள், (பவத:) உங்களை, (ஸ்மரணாத்) நினைப்பதால், (த்ராசம்) - பயத்தை, (விஹாய) விட்டு, (வ்ரஜந்தி) செல்லுகின்றனர், எ. று.

கருத்துரை:

பெரிய பெரிய அலைகள் மேலே எழும்பும் சமுத்திரத்தில் பயங்கரமான எண்ணிலடங்கா முதலைகளும் திமிங்கலங்களும் உள்ளன. கடலின் அடிப்பகுதியில் பயங்கரமான வடவாக்னி உள்ளது. அலையில் ஓடம் மேலும் கீழுமாக குதித்தெழும்புகிறது. அத்தகைய இன்னல்களையுடைய சமுத்திரத்தில் படகில் செல்லும் மக்கள் உங்கள் திருநாம மந்திரத்தை நினைத்து எவ்வித

இன்னல்களுக்கும் ஆளாகாமல் சுகமாக கரை ஏறுகின்றனர்.

**விளக்கவுரை:**

இங்கு ஆசாரியர் பெருங்கடலேயும் பிறவிச் சுழற் கடலையும் இணையாக வைத்து பக்தியின் சிறப்பினை எடுத்துரைக்கிறார். நாம் வாழும் பரதக்ஷேத்திரம் ஜம்பூத் வீபத்தில் உள்ளது. நிலப்பகுதியைக் காட்டிலும் நீர்ப் பகுதி அதிகமான பரப்பளவுயுள்ளது. நிலப்பகுதியில் வாழும் உயிரினங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் நீர்ப்பகுதியில் வாழும் உயிரினங்கள் எண்ணிக்கை அதிகம் பெருங்கடலில் பருத்த பயங்கரமான வஜ்ஜரத்தைப் போன்ற உறுதியுள்ள உடலையுடைய நீர்வாழ் பிராணிகள் உள்ளன. பெரிய பெரிய கப்பல்களும்கூட இவை மீது மோதி துண்டு துண்டாகின்றன. பாடீனம் என்னும் மிகப் பருத்த உடலையுடைய திமிங்கலமென்னும் மீன் மீது கப்பல் மோதுவதால் நெருப்பும் கூட ஏற்படுகிறது. நீரிலா நெருப்பு உள்ளது என்று ஒருசிலர் வியப்புடன் கேட்கலாம். நீரினால் ஆன மேகக்கூட்டம் ஒன்றோ டொன்று மோதுவதால் அதிக சக்தி வாய்ந்த தீத்தன்மை யுள்ள மின்னல் உண்டாகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இக்காலத்தில் நீர்மின் சக்தி கொண்டு நெருப்பு உண்டாக்குவதைக் காண்கிறோம். இதுபோல சமுத்திர நீரிலும்கூட வடவாக்னீ என்னும் தீ உண்டா கிறது.

மகாசாகரம் மிகவும் ஆழமானது. அதன் கரையோ காணமுடியாதது. பயங்கரமான அலேகளே தன்னகத்தே கொண்டது. நீந்திச் செல்லுவதோ முடியாத செயல். நான்காவது சுலோகத்தில், கூறினார்:

'கல்பாந்தகால பவநோத்தத நக்ர சக்ரம்
கோவா தரீது மலமம்புநிதிம் புஜாப்யாம்'

பயங்கரமான சமுத்திரத்தில் ஓடத்தில் செல்லும் வணிகர் பகவானின் திருநாமத்தை நினைத்து பயமின்றி கரை ஏறுகின்றனர். பகவானைத் துதிப்பதால் பூஜிப்பதால் தொழுவதால் புண்ய வினைக்கட்டு ஏற்படுகின்றது. அதன் பலனால் எத்தகைய துன்பம் வந்தாலும் அது தவிர்க்கப்படுகிறது என்னும் கருத்தை இந்த சுலோகம் எடுத்துரைக்கின்றது.

பிறவிக்கடல்கூட இத்தகு பயங்கரமான சூழ் நிலையை உண்டாக்குகிறது. துன்பத்தைத் தரக்கூடிய தீவினைகள் எண்பத்துநான்கு இலட்சப் பிறப்பிடங்களில் பிறவி எடுக்கச் செய்கிறது; சொல்லொணாத் துன்பங்களைக் கொடுக்கிறது. இத்தகு சுழலுக்குத்தான் சம்சாரம் என்று பெயர். சம்சாரமோ ஒரு சமுத்திரம். அது துன்பச் சமுத்திரம். அதில் ஒழுங்கீனம் பேராசை என்னும் முதலைகளும் திமிங்கலமும் உள்ளன. மனச்சஞ்சலம் பெரிய அலைபோன்றது. திடீர் திடீரென ஏற்படும் துன்பம் கடற் தீ போன்றதாகும். வெவ்வேறு விதமான வினைகள் நீர்வாழ் பிராணிகளைப் போன்று துன்பத்தையே தருகின்றன. சுபம், அசுபம் என்னும் பற்றுள்ளம் சமுத்திரத்தில் ஏற்படும் நெருப்புப் போலாகும். மனிதப் பிறவியில் பிறந்த இம்மனிதன் இத்தகு சமுத்திரத்தில் முழுகி அல்லல்படுகிறான். அவனை நல்ல முறையில் கரை சேர்ப்பதற்கு ஜினபகவானை தூய பரிணாமத்துடன் நினைப்பதும் அவருடைய திருநாம சிந்தனையுமே ஒப்பற்ற உதவி ஆகும்.

அலைவந்து கரைமோதி
ஆர்க்கின்ற கடலுள்
அழிகின்ற கலமூரும்
அடியார்கள் தாமும்

வலைபட்ட உயிர்தப்ப
வாய்விட்ட நின்னை
வாழ்த்தினால் கரைசேர்ந்து
வாழ்வுபெறு வாரே!

(தம் ஆதி) (44)

## கொடும்பிணிக்கு அஞ்சாத பக்தன்

உத்பூத-பீஷண-ஜலோதர-பார-புக்நா:
சோ'ச்யாம் தசா'-முபகதாச்'-ச்யுத-ஜீவிதாசா': |
த்வத்பாத-பங்கஜ ரஜோம்ருத-திக்த-தேஹா:
மர்த்யா பவந்தி மகரத்வஜ-துல்யரூபா: || (45)

**பதவுரை:**

(உத்பூத பீஷண) பயங்கரமாக ஏற்பட்ட, (ஜலோதர பார புக்நா:) 'ஜலோதர' மென்னும் நோயினால் பீடிக்கப்பட்டவரும், (சோச்யாம்தசாம்) வருந்தத்தக்க நிலையை, (உபகதாம்) அடைந்தவரும், (ச்யுத ஜீவிதாசா:) பிழைப்போம் என்கிற ஆசையை விட்டவருமான, (மர்த்யா:) மனிதர்கள், (த்வத் பாத பங்கஜ ரஜ) உங்களுடைய தாமரை திருவடி பட்ட தூசுகளை, (திக்த தேஹா) பூசப்பட்ட உடலையுடைய, (மகரத்வஜ துல்ய ரூபா) மன்மதனுக்கு இணையராகி அழகிய மேனியுடையவர்களாக, (பவந்தி) ஆகிறார்கள், எ. று.

**கருத்துரை:**

பயங்கரமான 'ஜலோதார' மென்னும் பிணியினால் பீடிக்கப்பட்டு இடுப்பு பாகம் வளைந்த நிலையையடைந்தவர் இனிப் பிழைப்போம் என்கிற ஆசையை விட்டவர், பகவானுடைய தாமரை திருவடி பட்ட தூசினை அமிருதமாகக் கருதி உடலில் பூசிக்கொண்டால் அவர்கள் காமதேவனுக்கு ஒப்பான உடலைப்பெறுவர். இங்குத் தாமரை

திருவடி தூசு என்பதற்குத் திருவடியில் பக்தி கொண்டு வழிபடுதல் எனப்பொருள். எவர் பகவான் திருவடியை நாடி நம்பிக்கையுடன் பக்தி செலுத்துவாரோ அவருக்கு எந்தப் பிணியும் வாரா.

**விளக்கவுரை:**

இதுவரை ஆசாரியர் பயங்கரமான தேவர்களாலும் இயற்கையாலும் விலங்குகளாலும் ஏற்படும் துன்பம் விலகும் வழியினை விளக்கி வந்தவர் இப்பொழுது உடற் சம்பந்தப்பட்ட பிணி விலகுவதற்கு ஏற்ற வழிகளை எடுத்துரைக்கின்றார். பகவானுடைய திருவடியில் விழுந்து பக்தி கொண்டு அவரை வழிபடுபவர் பிறப்பு, மூப்பு, இறப்பு என்னும் வியாதியிலிருந்து அவசியம் விடுபடுவர் என்று ஆகமம் கூறுகிறது. அந்நிலையில் பகவானுடைய தாமரைத் திருவடி பட்ட தூசினை அமிர்தமாகக் கருதி தன்னுடைய உடலில் பூசிக்கொள்ளுவார் பிணியிலிருந்து விடுபட்டு அழகான உடலைப் பெறுவர் என்பதில் வியப்பென்ன உள்ளது? தாமரைத் திருவடிப்பட்ட தூசு என்பது பகவானின் திருவடியில் பக்தி கொள்ளுதல் என்பதாம்.

ரித்தி பெற்ற முனிவரின் உடலில் பட்ட காற்று பிறர் உடலில் பட்டால் பல நோய்கள் விலகுகின்றன என்றால் தீர்த்தங்கரர் திருவடிப்பட்ட தூசு பட்டால் பிணி ஏன் நீங்காது? பயங்கரமான குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டவர் உடலில் பகவானுக்கு அபிஷேகம் செய்த கந்தோதகத்தினால் குஷ்டரோகம் நீங்கி அழகான உடலைப் பெற்றனர் என்று ஸ்ரீபால ஸ்ரேஷ்டியின் வரலாறு கூறுகிறது.

சர்பம் தீண்டிய பாலகன் உடலில் ஏறிய விஷம் பகவானின் ஸ்தோத்திரத்தால் விஷம் நீங்கிய வரலாறு ஏகீபாவ ஸ்தோத்திரத்தை இயற்றிய வாதிராஜ முனிவரால் எடுத்துக் கூறப்படுகிறது. பகவான் திருவடி

பட்ட தூசு என்பது புண்ணியத்தின் விபூதி எனப் பொருள். ரத்ன த்ரய மென்னும் அறமே புண்ணிய விபூதி ஆகும். அது அமிர்தத்திற்கு ஒப்பானது. எவர் நான்கு காதி வினைகளை வென்று தீர்த்தங்கராகிறாரோ அவருடைய சரண கமல பட்ட தூசை அமிர்தமாகக் கருதி தன்னுடைய சரீரத்தில் பூசிக்கொள்ளுவார்களோ அவர்கள் காமதேவனுக்கு ஒப்பான அழகிய உடலைப் பெறுவர்.

'ஜலோதரம்' என்பது ஒருவகை நோய். அந்த நோய் கண்டவர் வயிற்றில் நீர் நிரம்பிவிடும். வயிறு பெரிதாகிவிடும். மற்றும் உடலின் மற்ற அவயவங்களும் பலம் குன்றிவிடும். அந்த வியாதிக்குதான் 'ஜலோதர ரோகம்' என ஆயுர்தேவ சாஸ்திரம் கூறுகிறது. அத்தகைய ரோகம் பிடித்தவர்கூட பகவானிடம் பக்தி கொண்டால் பிணி நீங்கி ஆரோக்கியம் பெறுவதுடன் அழகிய உடலையும் பெறுவர்.

பகவானின் சிறப்பை உணர்ந்து அவரை வணங்கி அவரையே நம்பி தியானம் செய்யும் பக்தன் தன்னுடைய ஆன்ம பலத்தைப் பெற்று முக்தியடையும் தன்மையைப் பெறுகிறான்.

அளவின்றி நீர்போக
அகடுதி நலிவார்
ஆயிரம் நோயாலே
ஆரிடர் படுவார்
தளர்வின்றி தரணிக்கு
தருமமொழி தந்தோய்!
தாள்தூசு பட்டாலும்
தாமுய்ந்து மீள்வார்.

(தம் ஆதி) (45)

## விலங்கிட்டாலும் அஞ்சாத பக்தன்

ஆபாத-கண்ட-முருச்’ ருங்கல வேஷ்டி தாங்கா
காடம் ப்ருஹந்நிகள-கோடி-நிக்ருஷ்ட- ஜங்கா: |
த்வந்நாம-மந்த்ர மநிச’ம் மநுஜா: ஸ்மரந்த:
ஸத்ய: ஸ்வயம் விகத-பந்த-பயா பவந்தி || (46)

பதவுரை :

(ஆபாத கண்டம்) பாத முதல் கழுத்து வரை, (உருச்ருங்கல வேஷ்டி தாங்கா:) பெரிய சங்கிலியால் கட்டப்பட்ட உடல் அவயவங்களையுடையவராயும், (காடம்] கெட்டியாக, [ப்ரஹந்நிகள கோடி நிக்ருஷ்ட ஜங்கா:] பெரிய விலங்குகளின் நுனியால் உராயப்பட்ட முழங்கால் களையுடையவராயுமுள்ள, [மனுஜா:] மனிதர்கள், [த்வந் நாம மந்த்ரம்] உமது திருநாம மந்திரத்தை, [அநிசம்] எப்பொழுதும், [ஸ்மரந்த] நினைக்கின்றவர், [ஸத்ய:] உடனே, [ஸ்வயம்] தானாகவே, [விகத பந்தபயா:] கட்டுண்ட பயம் விலகியவராக, [பவந்தி] ஆகின்றனர், எ. று.

கருத்துரை:

கால் முதல் கழுத்து வரை பெரிய சங்கிலியால் உறுதியாகக் கட்டப்பட்டவரும் சங்கிலியின் நுனிகள் உராய்ந்து உடலவயவங்களில் கொப்புளம் ஏற்பட்டு அவதிப்படும் சிறைக் கைதிகளும் உங்களுடைய திருநாம மந்திரத்தை இடைவிடாது உச்சரித்து வருவார்களானால் உடனே அத்தகைய கட்டுகளிலிருந்து விடுபவர்.

விளக்கவுரை :

பந்தம் மோக்ஷம் இவ்விரண்டும் எதிரான சொற்கள். பந்தம் என்பது அடிமை, மோக்ஷம் என்பது சுதந்திரம்- கட்டிலிருந்து விடுபட்ட நிலை. உலகில் ஆறு பொருள்கள் உள்ளன. அவை ஜீவன், புற்கலம், தன்மம், அதன்மம்,

ஆகாயம், காலம் என. இவ்வாறு பொருள்களும் தனித்து நிற்பவை, தனித்தன்மை வாய்ந்தவை. ஆனால் ஜீவன் புற்கலம் இவ்விரண்டின் நாடகம் தான் பாரில் நடைபெறு கிறது. வினைத் திரள்களும் நுண்புற்கலமாகும். அநாதி காலம் தொட்டு சுரங்கத்தங்கத்தைப்போன்று இந்த ஜீவன் வினைக் கட்டுண்டு இருந்த போதிலும் இவ்விரண்டும் தனித்தனிப் பொருள்களே.

ஒவ்வொரு ஜீவனும் வினையிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமான இடமாகிய முக்தி உலகை அடைய விரும்பு கிறது. சில ஜீவன்கள் கட்டுண்ட நிலையே சுதந்திர நிலை என அறிகிறது. அது பரசமயம் என ஆகமம் கூறுகிறது. யாதொரு ஜீவன் மோக்ஷ தத்துவத்தின் உண்மைநிலையை அறிந்து உடல் வேறு உயிர் வேறு என்றுணர்ந்து வினையிலிருந்து விடுபட முயல்கிறதோ அதற்கு ஸ்வசமயம் எனப்பெயர்.

வினைக்கட்டிலிருந்து விடுபட வழி வகைகளை அறிந்தும், வினைக்குக் காரணமானவற்றை விடுவதும், முக்திக்கு ஏற்றதை ஏற்பதும் ஒவ்வொரு ஜீவனின் முதற் கடமை ஆகும். தன்னுடையதல்லாதவற்றைத் தனது என நம்புவது, உயிரும் உடலும் ஒன்றே எனக்காண்பது அறிவது, நம்புவது ஆகும். அப்படி ஒழுகுவது பராதீனம் அல்லது அடிமை எனப்படும். இது ஆகமத்தில் மித்யாத் துவம் எனக் கூறப்படுகிறது. மித்யாத்துவம்தான் கட்டு பந்தத்திற்குக் காரணம். சம்யக்த்துவம் [அ] ஸ்வசம யம்தான் சுதந்திரம் [அ] மோக்ஷத்திற்குக் காரணம்.

இங்கு ஆசாரியர் உலகியல் கட்டிலிருந்து விடுபட வழியினைக் கூறுகிறார். எவன் பகவானின் திருப்பெயரை நினைக்கிறானோ ஜபிக்கிறானோ எப்பொழுதும் அவரையே மனதில் கொள்ளுகிறானோ அவன் விரைவில் வினைக்கட்டிலிருந்து விலகுவான். சம்சாரி ஜீவன்

வினைக்கட்டு என்னும் பலமுள்ள சங்கிலியால் இறுகிக் கட்டுண்டுள்ளான். பாபமென்னும் இரும்பு விலங்காலும் புண்ணியமென்னும் பொன் விலங்காலும் எப்பொழுதுமே கட்டப்பட்டு எண்பத்து நான்கு இலட்சப் பிறப்பிடங்களில் பிறந்து உழன்று வருகிறான். பிறவிச் சுழலினால் ஆன்மா துன்புறுகிறது. ஆனால் எவன் தன்னுடைய இயல் குணமாகிய ஞான தரிசன சுபாவத்தை உணர்ந்து, அவற்றைப் பெற முற்படுகிறானோ அவன் வெகு விரைவில் வினைக் கட்டிலிருந்து விடுபட்டு முறையே திருஷ்டி முக்தனாகவும், பாவ முக்தனாகவும், ஜீவன் முக்தனாகவும் கர்ம முக்தனாகவும் முக்தியுலகை அடைகிறான்

இந்தச் சுலோகத்தில் கூறும் கருத்தினை உணர்ந்து இதன் நேரிடையான அற்புத பலனைக் காட்ட மானதுங்க முனிவரே எடுத்துக்காட்டாக காட்சி அளிக்கிறார். ஆசாரியர் போஜ மன்னனின் கோபத்திற்குப் பாத்திரமாகி சிறையில் அடைபட்டு விடுகிறார். நாற்பத்தெட்டு விலங்குகள் பூட்டப்பட்டு வாயில் காப்பாளர்களால் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அவருக்கு உதவியாக இருந்தது ஆதிபகவானின் பக்தியே. அவர் பக்தியில் மூழ்கித் தோத்திரம் செய்யத் துவங்கியதுமே நாற்பத்தெட்டு விலங்குகளும் தூள்தூளாக சிதறிவிட்டன. தியானத்தில் மூழ்கிய நிர்கிருந்த முனிபுங்கவர் விலங்குக் கட்டிலிருந்து விடுபட்டவராக மன்னன் முன்பும் மக்கள் முன்பும் காட்சி அளித்தார். இதைக் கண்ட மன்னன் ஜைன நெறியை மேற்கொண்டார். அப்பொழுது அமரர்கள் ஆகாயத்திலிருந்து மலர்மாரி பொழிந்தனர். எல்லாம் பகவான்மீது கொண்ட பக்தியல்லவோ காரணம்?

பாதமுதல் கண்டம்வரை
பகைபிணிப் புற்றே
பாரமுள நிகளமுற
பரிதவிப் பாரும்

ஆதிமறை சொன்னநின்
அடிமலரைப் பூண்டால்
அந்திகளம் தூளாகி
அரியவீ டுறுவார்.

(தம்ஆதி) 46

## எண்வகை அச்சத்தைப்போக்கும் பகவத் பக்தி

மத்த-த்விபேந்த்ர-ம்ருகராஜ-தவாநலாஹி
ஸங்க்ராம-வாரிதி-மஹோதர பந்தநோத்தம்
தஸ்யாசு நாச'முபயாதி பயம் பியேவ
யஸ்தாவகம் ஸ்தவ மிமம் மதிமாநதீதே | (47)

பதவுரை :

(ய:) யாதொரு, (மதிமாந்) புத்திசாலியானவன், (தாவகம்) உம்முடைய, (இதம் ஸ்தவம்) இந்த ஸ்தோத்திரத்தை, (அதீதே) அத்யயனம் செய்கிறானோ, (தஸ்ய) அவனுக்கு, (மத்த த்விபேந்திர) மதம் பிடித்த யானை, (ம்ருகராஜ) சிங்கம், (தவாநல) காட்டுத்த, (அஹி) சர்பம், (ஸங்க்ராம) போர், (வாரிதி) கடல், (மஹோதர) மஹோதர மென்னு நோய், (பந்தந) சிறைவாசம் ஆகியவைகளால், (உத்தம்) ஏற்பட்ட, (பயம்) அச்சமானது, (பியா இவ) பயந்தபைப் போல (ஆசு) விரைவில், (நாசம்) அழிவை, (உபைதி) அடைகிறது, எ. று.

கருத்துரை :

புத்திசாலியானவர் உம்முடைய திருநாமத்தை பக்தியுடனும் நம்பிக்கையுடனும் நினைத்து ஜபம் செய்வார்களானால் அவர்களுக்கு யானை, சிங்கம், காட்டுத்தீ, அரவம், போர், சமுத்திரம், மஹோதரம் என்னும் பிணி, சிறைவாசம் முதலியவைகளால் ஏற்படும் அச்சங்கள் விரைவில் விலகும். வீதராக பரமதேவனை வணங்கு

வதால் முக்தியைப்பெறலாம் என்றால் மற்றவை பற்றி சிந்திக்கவா வேண்டும்?

**விளக்கவுரை :**

ஒவ்வொரு தோத்திரத்தின் கடைசியில் அதன் பலனைப் பற்றிக் கூறுவது வழக்கம். அதன்படி பக்தாமர ஸ்தோத்திரத்தில்முப்பத்தெட்டாம்சுலோகம்முதற்கொண்டு நாற்பத்தாறு சுலோகம் முடிய எட்டுவிதமான பயங்களைப் பற்றி முறையே ஆசாரியர் எடுத்துரைத்தார். அத்துடன் இத்தகைய பயங்களிலிருந்து தப்பிப்பதற்குத் தூய மனம் மொழி மெய்களால் பகவானைத் துதிப்பதே சிறந்த வழி என்றும் விளக்கிக் கூறினார்.

நாற்பத்தேழாவது சுலோகத்தில் முடிவுரையாக மறுபடியும் நினைவூட்டும் முறையில் தோத்திரத்தால் ஏற்படும் விளைவினை விளக்கிக் கூறியுள்ளார். எட்டு பயங்களாவன :

1 ] [38வது சுலோகத்தில்] மதம்பிடித்தயானை போன்ற பிராணிகளின் பயம்,

2 ] [39வது சுலோகத்தில்] சிம்மம் போன்ற குரூர சுபாவமுள்ள பிராணி பயம்,

3 ] [40வது சுலோகத்தில்] காட்டுத் தீ போன்ற திடீரென ஏற்படும் பலவகையான பயம்,

4 ] [41வது சுலோகத்தில்] சர்பம் முதலிய விஷமுள்ள ஜந்துக்களால் ஏற்படும் பயம்,

5 ] [42வது சுலோகத்தில்] பயங்கரமான போர் பயம்,

6 ] [44வது சுலோகத்தில்] படவாக்னீ போன்ற சமுத்திரத்தினால் ஏற்படும் பயம்,

7 ] [45வது சுலோகத்தில்] ஜலோதர ரோகம் போன்ற பிணி பயம்,

8] [46வது சுலோகத்தில்] அடிமை விலங்கினாலும் பிறருக்கு அடிமை ஆவதினாலும் ஏற்படும் பயம்.

இவை எண்வகை பயங்களாகும். சம்யக் திருஷ்டி எட்டு பயங்களும் இவற்றில் அடங்கியுள்ளன. பெரிய பக்தர்களுக்கு இந்த எண் வகை பயங்கள் திடீரென ஏற்படின் அவர்களும் கூட சிற்சில நேரங்களில் ஆன்ம நம்பிக்கையிலிருந்து நழுவி விடுகின்றனர். அவரை உறுதிப்படுத்துவதற்காவே இந்த ஒன்பது சுலோகங்களே ஆசாரியர் இயற்றியுள்ளார். பயமோ விபாவ பரிணாமத்தால் ஏற்படுகிறது. ஆனால் சுபாவ பரிணாமத்தில் உள்ளவர்களுக்குப் பயம் இல்லவே இல்லை.

யாதொரு மனிதன் பகவான்மீது உண்மையான பக்தி கொண்டு இந்த பக்தாமர ஸ்தோத்ரத்தைப் படிப்பானோ அவனுக்கு எழுவகை அல்ல எண் வகை பயங்கள் ஏற்படாது. யாதொருவன் தன்னுடைய ஆன்ம சுபாவத்தில் தோய்ந்துள்ளானோ அவனுக்குப் பிறவிச் சுழல் விடுபடும். எவ்வித பயமும் அவனை யாதொன்றும் செய்யாது. இவ் அரிய கருத்தினை ஆதிபகவான் மீது பக்தி கொண்ட மானதுங்க முனிவர் எடுத்துரைக்கும் முடிவுரையாகும்.

பதறவரும் மதகரியும்
　　பாம்பரியும் பிணியும்
பகைஅடவித் தீநிகளம்
　　பவ்வமோ டெட்டும்
உதரமெனும் கடல்நீத்த
　　உத்தமனை நினையின்
உற்றிடவு மஞ்சிபிற
　　மிட்டுடனே அகலும்.

(தம் ஆதி) (47)

## துதியின் அரும் பயன்

ஸ்தோத்ர ஸ்ரஜம் தவ ஜிநேந்த்ர! குணைர் நிபத்தாம்
பக்த்யா மயா ருசிரவர்ண-விசித்ர-புஷ்பாம் |
தத்தே ஜநோ ய இஹ கண்டகதா-மஜஸ்ரம்
தம் மாநதுங்க-மவசா ஸமுபைதி லக்ஷ்மீ: ‖ (48)

பதவுரை:

(ஜிநேந்திர) ஜினபகவானே! (இஹ) இவ்வுலகில், (ய:ஜன) யாதொருவன், (பக்த்யா) பக்தியால் (மயா) என்னால், (தவ) உம்முடைய, (குணை:) இனிய ஒளிமயமான புகழத் தக்க குணங்களைக் கொண்டு, (நிபத்தாம்) புனையப்பட்ட (ருசிர வர்ணவிசித்ர புஷ்பாம்) அழகான எழுத்துக்கள் உள்ள அழகான வெவ்வேறு வண்ணங்கள் உள்ள மலர்களைக்கொண்ட, (ஸ்தோத்ர ஸ்ரஜம்) தோத்திர மாலையை, (அஜஸ்ரம்) எப்பொழுதும், (கண்ட கதாம்) மனப்பாடம் செய்யப்பட்டதாக (அ) கழுத்திலிருப்பதாக (தத்தே) தரிக்கிறானோ, (தம்) அந்த, (மான துங்கம்) சன் மானத்தால் உயர்ந்தவனை (அ) இந்த தோத்திரத்தை இயற்றிய மானதுங்க ஆசாரியரை (அவசா) – சுதந்திரமாக (அ) யாருக்கும் கட்டுப்படாத, (லஷமீ:) மகா லக்ஷ்மியானவள் அல்லது மோக்ஷ லட்சுமியானவள் (ஸமுபைதி) அன்புடன் வந்தடைவாள்!

கருத்துரை:

சுவாமி கண்களைக் கவரக்கூடிய அழகான வண்ண வண்ண மலர்களால் தொடுத்த மாலையைக் கழுத்தில் அணிந்தவன் அழகைப் பெறுகிறான். அது போல உங்களுடைய சிறந்த குணங்களைக் கொண்டு இந்த தோத்திர மாலையை இயற்றினேன். இதை எவர் தினந்தோறும் மனப்பாடம் செய்வாரோ அவரை செல்வம் சுவர்கம் போன்ற வைபவங்கள் வந்தடையும் மற்றும்

மோக்ஷ லட்சுமியும் வந்தடைவாள். அவன் ஆன்மத் தூய்மை பெறுவான்.

**விளக்கவுரை:**

புகழ்மிக்க பாராட்டக்கூடிய அற்புதமான பக்தாமர ஸ்தோத்திரத்தின்-கடைசி சுலோகம் இது. இதில் ஆசி வழங்கும் சாயல் பிரதிபலிக்கிறது.

ஜைன பூஜா விதியில் ஆஹ்வானம், ஸ்தாபனம், சந்நிதிகரணம் என்னும் மூன்று விதிமுறை கொண்டு பூஜை செய்யும் வழக்கம் பரம்பரையாக வந்துள்ளது. அதன் வழிதான் அர்ச்சனை உபாசனை முதலிய கிரியைகள் நடைபெறுகின்றன. கடைசியில் ஜயமாலை படிக்கப் படுகிறது. அதில் பூஜை அல்லது உபாசனையின் பலன் களைப் பற்றிக் கூறப்படுகிறது. அதன்பிறகு விசர்ஜனை செய்யப்படுகிறது. பக்தி இலக்கியங்களில் முதன் முதலில் இறை வணக்கம், இடையில் தோத்திரம், கடைசியில் முடிவுரை கூறும் விதிமுறைகள் தொன்று தொட்டு வந்துள்ளன.

இந்த பக்தாமர ஸ்தோத்திரத்தை நல்ல பரிணாமத்துடன் படித்தால் எவ்வித இலௌகீக அலௌகீக செல்வங்கள் கிடைக்கப்பெறுகின்றன என்பதை ஆசாரியர் விளக்கியுள்ளார்.

நிர்கிருந்த முனிவராகிய இவர் முடிவுரையாக வியவகாரநோக்கில் பிறரைக் குறித்தும் நிச்சய நோக்கில் தனக்காகவும் ஆசிர்வாத முறையில் கூறுவதாவது: தூய பரிணாமத்துடன் இந்த தோத்திர மாலையைக் கழுத்தில் அணிபவன் (அ) மனப்பாடம் செய்பவன், செல்வம் கொழிக்கும் சிறப்பினைப்பெற்று சுவர்கம் முதலிய செல்வங் களை (சுகங்களை) அனுபவித்து நாளடைவில் முக்தி சுகத்தையும் பெறுவான்.

இந்தத் தோத்திரத்தை மலர்மாலைக்கு ஒப்பாக வைத்துக் கூறுகிறார், ஆசாரியர். இந்த மாலை வெவ் வேறு வண்ண வண்ண மலர்களால் ஆக்கப்பட்டது. இந்தத் தோத்திரம் வெவ்வேறு சொற்களையும் வரிகளையும் சேர்த்துச் சுலோகமாக அமைக்கப்பட்டது. சூத்திரம் மந்திரம் ரித்தி ஆகிய நாரினால் ஆக்கப்பட்டது. ஜின பகவானின் அனந்த குணங்கள் இதன்மூல தத்துவங் களாகும். பாமாலை ஒரு பொருள்; வெவ்வேறு வண்ண மலர்கள் அடிக்கடி மாறுகையடையும் பர்யாயங்கள்; மலர் என்னும் பர்யாயத்தில் நிரந்தரமாக உள்ள குணங்கள் நார்; யாதொரு பக்தன் சுதந்திரமான குணம் பர்யாயங்களினை அறிந்து பேத விஞ்ஞானத்தை உணர்ந்து அபேத குணத் தில் தோய்ந்துள்ளானோ அவன் இலௌகீக சுகங்களைத் தானே பெறுவான். பிறகு தன்னுடைய முயற்சியின் மூலம் அற்புதமான அழிவில்லாத மோக்ஷ லட்சுமியையும் பெறுவான். ஆனால் மலர்மாலையின் அழகிலும் உருவத்திலும் வண்ணத்திலும் மயங்கி விகல்பங்களுக்குட் பட்டவனுக்கு இத்தகு ஆனந்தம் கிடைக்காது. குணம் பர்யாயங்களில் விகல்பங்களில் மூழ்கி இருப்பவன் ஆன்ம ஆனந்தத்தைப் பெறமுடியாது. திரவிய நோக்குப்படி அபேத குணங்களை ஏற்பவன்தான் அற்புத ஆனந்தத் தைப் பெறமுடியும்.

பக்தாமரத்தின் கடைசி சுலோகமாகிய இதில் மங்களகரமான விஷயம் உள்ளது. யாதொருவன் இந்த தோத்திரத்தின் உட்கருத்தைப் புரிந்து கொள்வானோ அவனுடைய ஆன்மா தூய்மை பெறும். அதன் வழி அவனுக்கு ஆன்ம வைபவமென்னும் இட்சுமி வாய்ப்பாள். பரிணாமத்தில் சிறிதளவு பற்று இருக்குமேயாயின் சுவர்க லட்சுமி சேர்வாள் என்பதில் வியப்பில்லை. ஆனல் பகவானைத் துதிப்பவர் மனம் மொழி மெய்களின் ஒருமித்த

தூய பக்தி கொள்ளுபவர் இராஜ்ய லட்சுமியை அனுப வித்தபின் கேவல ஞான லட்சுமியைத் தவறாது பெறுவர். இதுவே இந்தக் கடைசி சுலோகத்தின் கருத்தாகும்.

இமையவரும் பாடறிய
 இயல்மான துங்கன்
ஏத்திபுகழ் பாடுகிற
 இசைமாலை இதனை
அமையவரு பக்தியொடு
 அனுதினமும் பாட
அழிவற்ற செல்வங்கள்
 அடையவரும் தாமே!

(தம் ஆதி) (48)

மங்களம்

卐

ஆதிநாதர் புகழ் மாலையின்

# பக்திக் கதைகள்

தொகுத்து எழுதியவர் :-

**புலவர். தோ. ஜம்புகுமாரன், M. A. B. Ed.**

## 1 ஹேம தத்த சிரேஷ்டியின் கதை

மாளவம் என்னும் நாட்டை ஆட்சி புரிந்து வந்த போஜராஜன், ஒருநாள், சபையில் அமைச்சர், முதலான வர்களோடு கூடியிருந்த போது, பிராமணர் சிலர் வந்து அரசனை வணங்கி, ஸ்ரீமான துங்க முனிவரால் இயற்றப் பட்ட 'பக்தாமரம்' என்னும் நூலின் பெருமைகளைப் பற்றி பேசினர் அப்போது அரசன், "இந்நகரத்தில் பக்தா மரஸ்தோத்திரத்தின் மகிமை களை அறிந்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா?" என்று வினவினான் அப்போது அவையில் இருந்த ஓர் அமைச்சன் எழுந்து, "இந்நகரத்தில், ஒழுக்கமும், விரத அனுஷ்டானங் களும் உடைய, "ஹேமதத்தன் என்னும் ஒரு வாணிகன் இருக் கிறான். அவன் பக்தாமரஸ்தோத்திரத்தின் பெருமை களை நன்கு அறிந்தவன்" என்று கூறினான்.

அது கேட்ட அரசன், அவ்வணிகனை அழைத்து வரச் சொல்லி, "வணிகனே! "நீ, பக்தாமரஸ்தோத்தி ரத்தை அறிந்து, உள்ளன் போடு ஓதி, அதனால் நல்ல பலனைப் பெற்றிருக்கிறாயா?'' என்று கேட்க, அவ்வணி கன், அரசனை நோக்கி. அரசே, ஸ்ரீமானதுங்க ஆசாரிய ரால் இயற்றப் பட்டதாகிய இந்நூல், அளவு கடந்த பெருமையினை உடையது. அதைப் பற்றி நான் ஓரளவே அறிந்துள்ளேன். நீ, அதன் பெருமைகளை முழுவதும் அறிந்து கொள்ள விரும்பினால், மூன்று நாட்கள் அவகாசம் கொடு, நான்காம் நாள் நானே நேரில் வந்து அந்நூலின் பெருமைகளை நிருபித்துக் காட்டுகிறேன், என்று கேட்டுக் கொண்டு, அரசன் ஆணையைப் பெற்று வீடு திரும்பினான்.

வீடு திரும்பிய ஹேமதத்தன், அந்த மூன்று நாட் களும், இரவு, பகல் எப்போதும் பக்தாமரஸ்தோத்திரத் தின் முதலிரண்டு சுலோகங்களையும், துதித்தபடியே ஸ்ரீ ஆதி பகவானைத் தியானம் செய்த படியே இருந்தான்.

மூன்று தினங்களும் கழிந்தன. நான்காம் நாள், அரசபை ஆணையின்படி, ஏவலர்கள் வந்து ஹேமதத்தனை, அரசவைக்குக் கொண்டு சென்று, அரசன் முன் நிறுத்தினர். அரசன், அவனை நோக்கி, "வணிகனே! பக்தாமரத்தின் பெருமைகளை உள்ளபடி அறிந்து கொண்டாயா?'' என்று கேட்க, அவனும், தான் அறிந்து கொண்டதாகக் கூறி, தன்னைச் சோதித்துப் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டான். அரசன், யாரும் எதிர்பாராத ஒரு காரியத்தை அப்போது செய்யத் துணிந்தான். தன் ஏவலாளர்களைக் கொண்டு, ஹேமதத்தனை, உறுதியான கயிற்றால் பிணித்து, நீர் நிறைந்த ஆழ் கிணறு ஒன்றில் இறக்கி, வணிகன் தப்பித்துச் செல்லாதபடி கிணற்றைக் காவல் புரியச் செய்தான்.

இத்தகைய துன்பங்கள் எல்லாம், வினைப்பயனால் வருவனவே என்னும் சமத்து பாவத்தில் இருக்கக் கூடியவனாகிய, அந்த வாணிகன், இந் நிலைமைக்குச் சிறிதும் வருந்தாதவனாய், பக்தாமரத்தின் முதலிரண்டு சுலோகங்களையும், ஓதியபடியே, வினையின் நீங்கி விளங்கும் அறிவனைத் தியானம் செய்யத் தொடங்கினான்.

அந்த தியானத்தின் மகிமையினால், ஸ்ரீ விருஷப ஸ்வாமியின் சாசன தேவதையாக விளங்கும் சக்ரேஸ்வரி யட்சி திடுமென, வணிகன் முன் தோன்றி, அவனது பிணிப்புக் கயிறுகள் அகலவும், கிணற்றின் நீர், மட்டம் குறைந்து அவனது கணுக்கால் அளவிற்கு வரவும் அருள் செய்து, அவனை நோக்கி "சிரேஷ்டியே! ஜிந பகவானுடைய திருநாமத்தை, நினைவிற்குக் கொண்டு வரும் அளவிலேயே, உலகிலுள்ள எல்லா ஜீவன்களின், துன்பமயமாகிய பந்தங்கள் எல்லாம் ஒரு கண நேரத்தில் மறைந்து போய் விடும்; நீ அத்தகு, திருநாமத்தை, ஓதியதால் பிழைத்தனை'' என்று கூறி, மேலும், "பவ்யனே!

உன்னை இவ்வாறு சோதிக்கத் துணிந்த அந்த அரசனுக்குத் தகுந்த தண்டனையைக் கொடுத்துவிட்டுச் செல்கிறேன். அவனுக்கு ஏற்படும் துன்பம் உன்னாலே நீங்கக் கூடியதாக!" எனச் சொல்லி மறைந்து போய், அமைச்சனுக்கு அசரீரியாகத் தோன்றி, "அரசனுக்குக் கடுமையான விஷக் காய்ச்சல் ஏற்பட்டு அல்லலுறுவான்; ஹேமதத்தன் மந்திரித்துத் தெளிக்கும் ஜலத்தினால், அவன் பிழைப்பான்; இதை நீ அறிவாயாக!'' என்று கூறிவிட்டு மறைந்தது.

சிறிது போதிலேயே, அரசனுக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு, கொடுமையான அவதிக்குள்ளானான். அரண்மனை மருத்துவர்கள் பலரும் வந்து சிகிச்சை செய்யவும், நோய் முற்றியதேயன்றி, குறையாமற் போக, சக்ரேஸ்வரி யட்சியால் அறிவுறுத்தப் பெற்ற அமைச்சன், அங்கு வந்து, அரசனுக்கு, நடந்தவற்றை விளக்கிக் கூறி, ஹேமதத்தனை அழைப்பித்து, நீரை மந்திரித்து அரசன் மீது தெளிக்கும்படி வேண்டிக் கொண்டான்.

'துன்பம் செய்தோர்க்கும் இன்பமே செய்தல்' என்பது ஜிநவறத்தை கைகொண்டொழுகும் சான்ேறாரது கொள்கை ஆதலின். ஹேமதத்தன் அமைச்சனது வேண்டுகோளுக் கிணங்கி, நீரை மந்திரித்து, அரசன் மீது தெளிக்க, கடுங்காய்ச்சல் உடனே விலக, அரசனும் நலம் பெற்றான். அப்போது சக்ரேஸ்வரி தேவி, யாவரும் அறியும்படி தோன்ற, மன்னன் விரைந்தெழுந்து வந்து சரண கமலங்களைப் பற்றிக் கொண்டு தாயே! நான் அறியாமையால் செய்த பிழையை மன்னித்தருள வேண்டும். நான் செய்த சோதனை மூலம், பெரும்பழிக் காரனாயினேன். பொறுத்தருள்க! எனவேண்டி, ஹேமதத்தனையும் அவ்வாறே வேண்டினன். தேவியும், அவனை அருள் பாலித்து, ஜைநதர்மங்களின் மகிமைகளை விரிவாக எடுத்துக் கூறி, அனைவரையும் வாழ்த்தி விடைகொண்டது.

பின்னும் அரசன், வணிகனுக்கு அளவற்ற பரிசுகளை நல்கி, வணங்கி விடையளித்து அனுப்பினன். தானும் ஜைந தர்மத்தை மேற்கொண்டு, பக்தாமரஸ்தோத்திரத்தை, பக்தியுடன் நாள் தோறும் துதித்து, நற்பயன் பெற்றான். அவனது பரிஜனங்களும், அந்நாள் முதல் அரசனது அறவழியைப் பின்பற்றி ஒழுகிவரலாயினர்.

ஹேமதத்தனுக்கு, ஏற்ற மளிக்க உதவிய, அவ்விரு சுலோகங்களும் இதோ உள்ளன. ஓதி உணர்வு பெறுவீராக!.

**பக்தாமர ப்ரணத மௌலி மணிப்ரபாணா**
**முத்யோதகம் தளித பாப தமோவிதாணம்**
**சம்யக் ப்ரணம்யஜினபாத யுகம் யுகாதா**
**வாலம் பநம் பவஜலே பததாம் ஜநாநாம்.** (1)

**யஸ்ஸம் ஸ்துத சகலவாங்மய தத்பபோதா**
**துத்பூத புத்தி படுபி: சுரலோக நாதை:**
**ஸ்தோத்ரைர் ஜகத்த்ரிதய சித்தஹரை ருதாரை:**
**ஸ்தோஷ்யே கிலாஹ மபிதம் ப்ரதமம் ஜிநேந்த்ரம்** (2)

## 2 சுமதியின் கதை

இப்பரத கண்டத்தில், அவந்தி என்னும் ஒரு நாடு முற் காலத்தில், நிலவளமும், நீர்வளமும் அதனால் உயர்ந்த குடிவளமும் பெற்றுச் செல்வச் செழிப்புடன் விளங்கியது. நிலமகளுக்கு முகம் என்று சொல்லத் தகும் சீரும், சிறப்பும் பொருந்திய அந்நாட்டில், முற்பிறவியின் தீவினையினால், வறுமையே உருவெடுத்து வந்தாற் போன்று, 'சுமதி' என்னும் பெயருடைய ஒருவன் வாழ்ந்து வந்தான். நெருப்பின் நடுவில் சிறுதுநேரம் கண்ணுறங்கவும் கூடும்; ஆனால், வறுமையின் நடுவே அவ்வாறு உறங்க முடியாதல்லவா? சுமதி தனது, இந்த கொடிய வறுமைக்கு மிகவும் மனம் வருந்தி, தன் முன் வினைக்கு

மனம் நொந்து, வாழ்ந்து கொண்டிருக்த நாளில், அந் நாட்டின் உஜ்ஜயினி நகரத்தின் புறங்காட்டில், பிஹிதாஸ்ரவ முனிவர் என்பவர் தம் சீடர்களுடன் வந்திருந்து அறவுரை ஆற்றிவருகிறார் எனக் கேள்விப் பட்ட, சுமதி. 'தன் வறுமைத் துன்பத்திற்கான காரணத் தையும், அதை நீக்கும் உபாயத்தையும் அடிகளாரிடம் அறிந்து வருவோம்' என நிச்சயித்து. அம்மாமுனிவரிடம் சென்று, வணங்கி, மற்றவர்களுடன் அமர்ந்து மிகவும் பரிவுடன் அவரது அறவுரைகளைக் கேட்கத் தொடங்கி, முடிவில், தான் மனதில் நினைத்து வந்த வினாக்களைப் பணிவுடன் அவரிடம் விண்ணப்பித்தான்.

அம் முனிவர், அவனை நோக்கி, மகனே! இவ் வறுமைத் துன்பத்திற்கு, நீ முற்பிறவியில் செய்த தீவினையே காரணமாகும்; இதன் பொருட்டு நீ மனம் கலங்க வேண்டா; ஸ்ரீ மான துங்க முனிவரால் யாக்கப் பெற்ற பக்தாமரம்' என்னும் தோத்திர நூலிலுள்ள இரண்டு சுலோகங்களை நான் உனக்குக் கற்பிக்கிறேன். அவற்றை நாள் தோறும் தவறாமல். நம்பிக்கைவைந்து' பக்தியுடன் ஜபம் செய்து வருவாயேயானால் உன் தரித் திரம் அகலும்: செல்வம் பெருகும்; மறுபிறவியிலும் நற் பயன் விளைவிக்கும்" என்று கூறி, அச்சுலோகங்களைக் கற்பித்ததோடன்றி, அவற்றை ஜபம் செய்யும் முறை யையும் விளக்கமாகச் சொல்லி அருளினார்.

சுமதி. முனிவர் கூறியவற்றை மனதில் ஏந்திய வாறு, தன் இல்லம் அடைந்து, பக்தாமரத்தின், ரித்தி, சித்தி, மந்திரங்களை தவறாமல் ஜபித்துவந்தான். சில நாள் கழித்து, அவ்வூரின் செல்வர்களுடைய புதலவர்கள் சிலர், கடல் வாணிகம் செய்வதற்காக அயல் நாடுகளுக்குக் கப்பலேறினர். சினேக பாவத்தால், சுமதியும் அவர் களுடன் புறப்பட்டுச் சென்றனன். சில நாள்கள்

கழிந்தன. ஒருநாள் நடுக்கடலில் கப்பல் சென்று கொண்டிருந்தபோது கடுமையான புயற் காற்று தோன்றி, கப்பலை அலைகழித்து, முடிவாக அதைக் கவிழ்த்தும் விட்டது. அக்கப்பலில் பயணம் செய்த அனைவரும் கடலுக்கு இரையாக, சுமதி மட்டும், சிறிதும் மனங்கலங் காமல். பிஹிதாஸ்ரவ முனிவரால் தனக்குக் கற்பிக்கப்பட்ட மந்திரங்களைத் தியானம் செய்தவாறே நீந்திக் கரை யேறினான். பிறவிப் பெருங்கடலை நீக்கிய பெரியவனை நினைப்பவர்களுக்கு, மிக மிகச் சாதாரணமான இந்த கடலைக் கடப்பதா கஷ்டமாயிருக்கும்?

அவனது மன உறுதியையும் நம்பிக்கையையும் அறிந்த, சக்ரேஸ்வர யட்சி, அவன் முன் தோன்றி, அவனது சம்யத்வத்தைப் பாராட்டிப் பேசி. விலைமதிப் பிடுதற்கரிதாகிய இரத்தினமாலை ஒன்றை அவனுக்குப் பரிசாக அளித்து வாழ்த்திச் சென்றது

சுமதியும், நலமாக வீடு சேர்த்து, யட்சியால் அளிக் கப்பட்ட இரத்தின மாலையை விற்று, அவற்றையே முதலாகக் கொண்டு நன் முறையில் வாணிபம் செய்து, விரைவில் பெரும் பொருளீட்டிச் செல்வனாகினான்! நல் வினை கைகூடப் பெற்ற பிறகு, வறுமைத் துன்பம் எதிர் நிற்குமோ? சுமதி தான் ஈட்டிய பெருஞ் செல்வத்தையும், தானே அனுபவிக்கவேண்டும் என்று எண்ணாமல், நல் லொழுக்கமும், நற்சிந்தனையுமுடைய ஏழையர்களுக்கு உதவி செய்து, மேன்மேலும் சிறந்து விளங்கினான். ஜினதர்மத்தில் தீவிர பற்று கொண்டு, வாழ்வாங்கு வாழ்ந்து மறுமையில் நற்கதி புகுந்தான்.

பிஹிதாஸ்ரவ முனிவர், சுமதிக்குக் கூறிய அந்த இரண்டு சுலோகங்களும் ஈண்டு தரப்படுகின்றன. படித்துப் பயன் பெறுவீராக!

"புத்யா விநாபி விபுதார்ச்சித பாத பீட
ஸ்தோதும் ஸமுத்யதமதிர் விகதத்ரபோஹம்
பாலம் விஹாய ஜலஸம்ஸ்தித மிந்து பிம்ப
மந்ய : க இச்சதி ஜநஸஹஸா க்ரஹீதும்" (3)

"வக்தும் குணான் குணசமுத்ர சசாங்க காந்தான்
கஸ்தேக்ஷமஸ்ஸுரகுரு பிரதிமோபி புத்யா
கல்பாந்த கால பவநோத்தத நக்ர சக்ரம்
கோவா தரீது மலமம்பு நிதிம் புஜாப்யாம்" (4)

## 3 சுதன், பீமசிரேஷ்களின் கதை

ஒரு காலத்தில் பாட்னா என வழங்கப்படும் பாடலி புத்திர நகரத்தில் சுதன், பீமன் என்னும் பெயர்களை யுடைய அரச வணிகர்கள் இருவர் வாழ்ந்து வந்தனர். இயற்கையாகவே அவர்கள் ஜிநதர்மத்தில் பற்று கொண்டு, பெரியதோர் ஜிநாலயம் ஒன்றை எழுப்பி, ஜிந பிம்பங்களை நிறுவி, பஞ்ச கல்யாண பூஜைகளைச் செய்வித்து பரம பவித்ரர்களாய், பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பெருஞ் சிறப்புடன் விளங்கினர்.

இக் காலத்தில் ஒரு நாள் அந்நகரத்திற்கு பேய், பிசாசுகள் முதலான துர்த்தேவதைகளை ஏவல் கொள் பவனும் மந்திர சித்திகளில் வல்லவனும், மித்யா தபசியு மாகிய 'காளிதாசன்' என்பவன் த்ன் சிஷ்யர்களின் கூட்டத்தோடு வருகை தந்து, நகர மக்களைத் தன் மந்திர வல்லமையினால் பிரமிக்கச் செய்து அவர்கள் யாவரும் தன்னை வணங்கும் படி செய்வித்து வந்தனன். அவனிருக்குமிடம் எப்போதும் ஜனக் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது : மக்கள் அவனிடம் தம் குறைகளைத் தெரி விப்பதும், ஆசி பெறுவதுமாக இருந்தனர். நாளுக்கு நாள் அவனது புகழ் பெருகி வரலாயிற்று.

இவ்வாறு மக்களிடையே தனது செல்வாக்கு மிகுந்து வருவதைக் கண்ட அந்த 'மாயாவி' செருக்குற்று, ஒரு நாள் தன் சிஷ்யர்களைநோக்கி "இந் நகரிலுள்ள யாவரும் என்னை வந்து வணங்கி, ஆசி பெற்று விட்டார் களா? வராதோர் யாரேனும் உள்ளார்களா?" என்று வினவி, அந் நகரில் பெருங் கீர்த்தியோடு வாழ்ந்து கொண்டிருக்கும் 'ஜிநாவுலம்பி' களான சுதன், பீமன் என்னும் இருவர் மட்டும் தம்மைக் காண வரவில்லை என் பதை அறிந்து மிகுந்த சினங் கொண்டு, அவ்விருவருக்கும் 'தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும்' என்று தன் நெஞ்சில் கருவிக் கொண்டு, வியந்தர தேவதைகளைக் கொண்டு அவ் விருவரும் வாழும் பவனங்களின் மேல், கல் மாரி பொழியச் செய்தான்.

நள்ளிரவிலே நகரமே உறங்கும் அந்நேரத்தில், தம் மில்லங்களின் மீது பொழிந்த கல் மாரியால் சுதன், பீமன் ஆகிய இருவரும் திடுக் குற்றனர் : வீடுகளை விட்டு வெளியே வரவியலாத படி குவிந்துள்ள கற்களைக் கண்டு பிரமித்தனர் : சம்யக் திருஷ்டிகளான தமக்கு ஏற்பட்டுள்ள இந்த இடையூறுக்கு யாது காரணம்? எனச் சிந்தித்து, பின்னர் ஒருவாறு மனந் தெளிந்து, ஸ்ரீ ஆதிநாத சுவாமி யை நினைத்து ஸ்ரீ மானாதுங்க முனிவரால் புனையப் பெற்ற பக்தாமர ஸ்தோததிரத்திலுள்ள மூன்று சுலோகங் களை மட்டும் துதித்து, திட மனத்துடன் ஜபம செய்யத் தொடங்கினர்.

இவர்களது உறுதியான பக்தி நிலையையும், திட சித்தத்தையும் கண்டு சாசன தேவதையாகிய சக்ரேஸ்வரி இவர்கள் முன் தோன்றி, "நல்லோர்களே! நீங்கள் எதற் கும் அஞ்ச வேண்டாம் : தருமத்தின் பெருமையினால், எல்லா வகைத் துன்பங்களும் விரைவில் நாசமடையும் :" என்று கூறி அவர்களது பவனங்களின் மீது பொழியப் பட்டிருந்த, கற்குவியல்களையும் மண் குவியல்களையும்,

தனது வித்யா சக்தியினால் ஒரு கணப் போதில் மறையச் செய்த பின், அவர்களை நோக்கி இந் நகரத்தில் வந்துள்ள காளிதாசன் என்னும் மித்யா திருஷ்டியின் ஏவலினாலேயே துர்த்தேவதைகள் உங்களுக்கு இந்த துன்பத்தினை ஏற் படுத்தின. ஜிநேஸ்வரனின் பாத கமலங்கள் மீது நீங்கள் கொண்டுள்ள பக்தியும், நற்காட்சியின் பால் நீங் கள் வைத்துள்ள அளவற்ற பற்றுமே உங்கட்குக் கவசங் களாக நின்று இத் துன்பத்திலிருந்து காப்பாற்றின" என அனுகிரகித்துக் கூறிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத் தில் துர்த்தேவதைகளினால் ஏற்பட்ட பெருந்துன்பத்தி லிருந்து சுதனும், பீமனும் காப்பாற்றப்பட்டார்கள்' என்பதை அறிந்து கொண்டு, கர்வமடங்கியவனாகிய காளிதாசன் அவ்விடம் வந்து, தேவியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி, "தாயே! அறியாமையினால் நான் இச் சம்யக் த்ருஷ்டிகளுக்குச் செய்த பிழையை மன்னிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டு அப்பொழுதே ஜைன தர்மத்தை ஏற்றுக் கொண்டான். ஜிந பகவா னுடைய தோத்திரத்தினால் உண்டாகும் அழிவில்லாத பெருமையினை அப் பொழுதே உணர்ந்து கொண்டான். நகர மக்களும் இச் செய்தி அறிந்து, மிகவும் வியப்புற்று, அனைவரும் ஜைன தர்மத்திற்கு பவ்யர்களாயினர்.

சுதனையும், பீமனையும் பேரழிவிலிருந்து காப்பாற்ற உதவிய அந்த மூன்று சுலோகங்களையும் பாருங்கள்.

> "ஸோஹம் ததாபி தவபக்தி வசான் முநீஸ
> கர்தும் ஸ்ரவம் விகத சக்தி ரபி பிரவ்ருத்த
> ப்ரீத்யாத்ம வீர்ய மவிசார்ய ம்ருகீ ம்ருகேந்த்ரம்
> நாப்யேதிகிம் நிஜஸிஸோ பரிபால நார்த்தம்" (5)

> "அல்பஸ்ருதம் ஸ்ருதவதாம் பரிஹாஸ தாம
> த்வத்ப்க்தி ரேவ முகரீ குருதே பலாந்மாம்
> யத் கோகில கிலமதௌ மதுரம் விரௌதி
> தச்சாரு சூத கலிகா நிகரைக ஹேது" (6)

"த்வத் ஸம்ஸ்தவேந பவஸந்ததி சந்தி பத்தம்
பாபம் க்ஷணாத் க்ஷய முபைதி ஸரீர பாஜாம்
ஆக்ராந்த லோக மளிநீல மஸேஸ மாஸு
ஸூர்யாம்ஸு பிந்நமிவ ஸார்வர மந்த காரம் (7)

## 4 கேசவ தத்தன் கதை

வசந்தபுரம் என்னும் நகரத்தில் கேசவதத்தன் என்பவன் ஒருவன் வாழ்ந்துவந்தான். இயல்பாகவே, மித்யா தர்மத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அவனை, தரித்திர தேவதையின் பூரண கடாட்சம் சேர்ந்திருந்ததால், சொல்ல முடியாத பெருந்துன்பத்தால் வருந்திக் கொண்டிருந்தான். அக்காலத்தில் அந்நகரத்திற்கு வருகை தந்திருந்த ஜைன முனிவர் ஒருவரை, தன் நல் வினைப் பயனால், சென்றடைந்து, வணங்கி, தூய சிராவக தர்மத்தைக் கைகொண்டு அந்நாள் முதல், ஜினாலயத்திற்குச் செல்வது, தீர்த்தங்கர பரமேஷ்டிகளை வந்திப்பது, சாதுக்களோடு பக்தி சிரத்தையுடன், உறவு கொள்பது என்றிவ்வாறு தன் நித்திய கடமையை நன் முறையில் ஆற்றிவந்தான்

இங்ஙனம் கழியும் நாளில், பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பதை நன்கு உணர்ந்த கேசவதத்தன் பொருள் தேடிவருவதற்காக, அயல் நாடு களுக்குப் புறப் பட்டுச்சென்றான். இடையே பயங்கர விலங்குகள் வாழும் காட்டுவழியில் செல்ல நேர்ந்தது. அப்போது, சிங்கம் ஒன்று இவனைக்கண்டு, கொல்வதற்கு முற்பட்டபோது! கேசவதத்தன், முன்னர், தான் முனிபுங் கவரிடமிருந்து, ஜிந தர்மத்தை கை கொண்ட காலத்தில் அவரால் தமக்குக் கற்பிக் கப்பட்ட பக்தாமர சுலோகங்கள் இரண்டினை நினைவு கூர்ந்து, பக்தி சிரத்தையுடன்

ஓதத் தொடங்கினான். அக்கணமே அவனைத் துரத்தி வந்த சிங்கமானது, தனது குட்டிகள் பின் தொடர்ந்துவர கர்ச்சனை செய்து கொண்டே ஓடி மறைந்தது.

பின்பு அவன் அக்காட்டுவழியில் மேற்கொண்டு சென்று கொண்டிருந்தபோது, 'மாயாவிபூதம்' ஒன்று மனித உருவம் தாங்கி அவன் முன் தோன்றி, அவனை வணங்கி, "ஐயா! தாங்கள் எங்கு செல்கிறீர்கள்? என்று வினவியது. அவன் தான் பொருள்தேடிப் புறப்பட்ட கதையை அதனிடம் கூற, அப்பூதம், அதற்கு, ஐயா! இக் காட்டில் ஒரு 'ரஸ வாபி' (இரசாயனக்கலவை நிறைந்த கிணறு) உள்ளது. அக் கிணற்றின் நீரினை ஒரு குடம் முகந்து வந்தால், நீ விரும்பியதைப் பெறலாம்" என்று பொய்யாகப்பேசி அவனை, அக் கிணற்றின் அருகில் அழைத்துச் சென்றது. அக்கிணறோ, இறங்கி, ஏறுவதற்கான வசதிகளற்று இருந்ததைக் கண்ட கேசவதத்தன், 'இதில் இறங்கி ஏறுவது எவ்வாறு!' எனக் கேட்டான் அதற்கு பூதம், 'ஐயா! என்னிடம் உறுதியான கயிறும், குடமும் உள்ளது. உன்னைக் கயிற்றில் கட்டி இக் கிணற்றில் இறக்குகிறேன், நீ இக்குடத்தில் அந்த நீரை நிரப்பிக் கொண்டவுடன் உன்னைமேலே இழுத்து விடுகிறேன்' என்று நம்பிக்கை ஊட்டும் தொனியில்பேசி, அவனை நம்பவைத்து, அவனைத் தான் சொல்லியவாறே கிணற்றில் இறக்கியது அவனும், ரஸ நீரைக் குடத்தில் நிரப்பிவிட, பூதம் அவனை மேலே இழுக்கத் தொடங்கி, அரை கிணறு வந்தவுடன், அவனைப் பார்த்து "அந்த ரஸக் கலவையை முதலில் நீ எனக்கே தரவேண்டும்'. வேறுயாருக்கும் நீ தரக் கூடாது; என்ன சொல்கிறாய்?'' என்று அதட்டவே, கேசவதத்தன் இதற்கு என்ன மறு மொழி கூறுவது எனச் சிறிதே சிந்தித்துக் கொண்டிருந்த போது, அம் மாயாவி பூதம் அவனை அப்படியே கிணற்றில் போகவிட்டு, விட்டு ஓடிவிட்டது. ரஸ நீரிலே

வீழ்ந்த கேசவதத்தன் 'பக்தாமர மந்திரமே நம்மை பாது காக்க வல்லது' என்று எண்ணி, திட நம்பிக்கையுடன் முன் சொன்ன சுலோகங்களைக் கூறி ஜபம் செய்தான். அக்கணமே, சக்ரேஸ்வரி யட்சி தோன்றி அவனைக் கிணற்றிலிருந்து மீட்டு "ஐயனே! உனக்கு எத்தகைய இடையூறு நேர்ந்தாலும், இம்மந்திரங்களை தியானிக்க மறக்காதே! இதனால் உனது சகல பாபங்களும் விலகும், சம்பத்தும் உண்டாகும் என்று கூறி, தான் அணிந்திருந்த இரத்தின மாலைகள் சிலவற்றை அவனுக்கு நல்கி, அவனை மேற்செல்லுமாறு தைரிய மொழிகளைக் கூறி அனுப்பிவைத்தது.

கேசவதத்தனும், தனக்கு ஏற்பட்ட இந்த இடையூற்றுக்கு இடையூறு செய்து தன்னைக் காப்பாற்றிய தேவியின் மகிமையை எண்ணியபடியே பயணம் கொண்டான். எனினும் சிறிதுநேரத்திலேயே, கள்வர்கள் சிலர் அவனைச் சூழ்ந்து கொண்டு அவனிடம் உள்ள இரத்தின மாலைகளைக் கவர்ந்து கொள்ள முற்பட்டனர். ஏதிலனாய், தனியே நிற்கும் அவன் என்ன செய்ய முடியும்? பரம பவித்ரமான பக்தாமர மந்திரத்தை, அவன் மீண்டும் நினைக்கத் தொடங்கிய அளவிலேயே, யட்சி பிரசன்னமாக, கள்வர்கள் அனைவரும், மனம் மாறி, தமககுள் ஒருவரோடு ஒருவர் மாறுபாடு கொண்டவர்களாய், சண்டையிட்டுக் கொண்டே, ஓடி பறைந்தனர். அவனும் சற்று மனவமைதி பெற்றவனாய், தேவியையும், ஜினதர்மந்தையும் வாழ்ததியவனாய் சென்று கொண்டிருந்தான்.

இடையிடையே, பல காடுகளும் மலைகளும், ஊர்களும் கடந்து செல்கின்றவனுக்கு, அடர்ந்த காடு ஒன்று குறுக்கிட்டது. அக்காட்டு வழியில் செல்கின்ற போது, அவனுக்குக் கடும் தாகம் ஏற்படவே, நீரைத் தேடி பல இடங்களிலும் அலைந்து திரிந்தான். நெடு

நேரம் தேடியும் தண்ணீர் கிடைக்காமல் பெரிதும் வருந்தினான். நாக்கு வறட்சி மேலிட்டது. நடக்கவும் இயலவில்லை. கண்கள் இருண்டன. சோர்வு அதிகரிக்க, ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து சிந்திக்கலானான். ''தண்ணீரோ கிடைக்கவில்லை, நடக்கவும் முடிய வில்லை நமக்கு ஆயுள் முடியும் காலம் வந்துற்றது போலும்! இனி, நீரைத்தேடி அலைவதைவிடுத்து பக்தாமர மந்திரத்தை ஓதினாலாவது பரகதியில் புண்ணியமாவது கிடைக்கும்'' என்று எண்ணி, சுப பரிணாமமுடன், அமர்ந்து, பரமபத பதமருளும் பக்தாமர மந்திரத்தை ஜபிக்கலானான் சத்தர்மத்தில் நாட்டம் கொண்ட அடியார்களுக்கு யாதொரு துன்பம் வந்துற்றபோதும் தாயென விரைந்து வந்து ரட்சித்தருளும் சக்ரேஸ்வரி யட்சி, அப்பொழுதே அவன் முன் தோன்றி, அன்பனே அஞ்சாதே! உனக்கு இஃது இறுதிக்காலமன்று; இந்த நீரைப் பருகி விடாய் தீர்வாயாக!" என்று கூறி, அமுதம் போன்ற குளிர்ந்த நீரினைக் குவளையில் நிரப்பி அளிக்க, அதை ஆவலுடன் வாங்கிப் பருகி, தணியாத தாகம் தணிந்தான். தேவியின் திருவடிகளில் வீழ்ந்து பல முறையும் வணங்கினான். தேவதையும் அவனுக்கு ஆசி கூறி அகன்றது.

தான் பயணம் புறப்பட்ட நாளிலிருந்து தனக்கு அடுக்கடுக்காக வரும் இடையூறுகளையும், அவை நீங்கும் முறைகளையும் சிந்தித்துப் பார்த்த கேசவதத்தன், 'இனியும் பயணம் செய்தல் தகாது' என மனதில் தீர்மானித்து, வசந்தபுரம் நோக்கிப் பயணித்து, சில நாட்களில் நகரம் சேர்ந்தான். தேவியால் அருளப்பட்ட இரத்தின மாலைகளையே முதலாக வைத்து வாணிகம் செய்து, பெரும் பொருளீட்டினான் நல்வினையும் அவனுக்குத் தோள் கொடுத்தது. நல்வழியில் இங்ஙனம் ஈட்டிய பொருளை, அறச் செயல்கள் பலவற்றிற்கும்

செலவிட்டான். இதனால் மேலும் அவனது செல்வம் வளர்ந்தது: ஜின தர்மம் செழித்தது அவனது வரலாற்றினை அறிந்து பலரும் அவனது நெறியைப் பின்பற்றி நடந்து நற்கதி பெற்றனர்.

**கேசவதத்தனைக் காப்பாற்ற உதவிய அந்த இரண்டு சுலோகங்கள்:**

**''மத்வேதி நாத தவஸம் ஸ்தவநம் மயேத**
**மாரப்யதே தநுதியாபி தவப்பிரஸாதாத்**
**சேதோஹறிஷ்யதி ஸதாம் நளிநீ தளேஷு**
**முக்தாபலத்யுதி முபைதி நநூத பிந்து'' (8)**

**''ஆஸ்தாம் தவ ஸ்தவ நமஸ்த ஸமஸ்த தோஷம்**
**த்வத் ஸங்கதாபி ஜகதாம் துரிதாநி ஹந்தீ**
**தூரே ஸஹஸ்ர கிரண குருதே ப்ரபைவ**
**பத்மா கரேஷு ஜலஜாநி விகாஸ பாஞ்சி'' (9)**

## 5 கமதி சிரேஷ்டியின் கதை

பரத கண்டத்தில் முற்காலத்தில் எல்லாவகை வளங்களாலும் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிய நகரங்களுள் 'அணிஹிலா' நகரமும் ஒன்று; அந்நகரத்தினை, பிரஜா பாலன் என்னும் அரசன் செங்கோல் தவறாமல் ஆண்டு வந்தான்.

அந்நகரத்தில் 'கமதி' என்னும் பெயருடைய ஒரு வணிகன் வாழ்ந்து வந்தான். அவனைக் காமதேவன் எனவும் அழைப்பர். பூர்வ பவத்துக் கர்ம வினையினால் அவன் செல்வங்களை இழந்து, பரம தரித்திரனாக வாழ்ந்து வந்தான். அந்நிலையில், அந் நகரத்தின் நந்தவனத்தில், ஒருநாள் ஜைன முனிபுங்கவர் ஒருவர் வந்துள்ளார் என்பதைக் கேள்விப் பட்ட 'கமதி' அவரை தரிசிக்க வேண்டும் என்னும் அவாவொடு, நந்தவனம்

சென்று அவரை வணங்கி, அவரால் உரைக்கப் பட்ட அறவுரைகளைப் பக்தி சிரத்தையுடன் செவிமடுத்து மனச் சாந்தி பெற்றான். பின்னர் அம்முனிவரிடம், தனது வறுமை நிலையை எடுத்துக் கூறி, இந்நிலை அகல, 'தான் யாது செய்ய வேண்டும்' என வினவினன். அம்முனிவர், அவனுக்கு, பக்தாமரஸ்தோத்திரமாகிய திவ்யமான மாலையிலிருந்து சுலோகங்களாகிய இரண்டு மலர்களை அவனுக்குப் பிரசாதித்து, 48 நாட்கள் விடாமல் அதை காலை, மாலை இருவேளையும் ஜபித்து வரின் அவனது வறுமை அகலும் எனக் கூறி அவனை வாழ்த்தி விடை கொடுத்தனுப்பிவைத்தார்.

'கமதி' சிரேஷ்டியும், மிகவும் மகிழ்ச்சியுடன் இல்லத்திற்கு வந்து முனிவர் கூறியபடி, மிகப் பரிசுத்தனாய் 48 நாட்களும் அவர் கூறிய பக்தாமர மந்திரத்தை ஜபித்து, ஸ்ரீ ஆதிபகவனின் திருப்பாத கமலங்களில் நீங்காத சிந்தையுடையவனாய் விளங்கினான். முடிவில், ஸ்ரீ சக்ரேஸ்வரி யட்சி அவன் முன் தோன்றி, "அன்பனே! உனது சம்யக்த் வத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன்; நீ விரும்புவது யாது?" என்று கேட்க, கமதி, தனது வறுமை யகல அருள் பாலிக்கும்படி வேண்டிக் கொண்டான். தேவியும் மகிழ்ந்து, "ஐயனே! இன்று மாலை நேரத்தில், 'காமதேனுவை' (தெய்வீகப் பசு) உன் வீட்டிற்கு அனுப்பி வைக்கிறேன். அது தரும் பாலினை, நீ வேண்டிய மட்டும் குடங்களில் நிறைத்துவை; அப்பாலனைத்தும் என்னால் தங்கக் கட்டிகளாக மாறும்" என்று கூறக் கேட்ட வணிகன் மிகவும் மனங்களிந்து, அம்மையே! என் தரித்திரம் அகல அருள்புரிந்தனை; அதோடு எனது மற்றோரு வேண்டுகோளையும் ஏற்று அருள் புரிய வேண்டும்; செல்வம் பெற்றால் மட்டும் போதாது; அதை நல்வழியிலே காப்பாற்றவும், செலவு செய்தலும், வேண்டும். எனது இச் செல்வத்தைக் கொண்டு நல்லோர்களை

உபசரிக்க எண்ணியுள்ளேன். அச்சமயம் நீயும் வந்து அருள் பாலிக்க வேண்டும்,'' என்று வேண்டிக் கொள்ள, தேவியும் அதற்குச் சம்மதித்து, அகன்றது.

அன்று மாலைப் போதே, 'காமதேனு' கமதியின் இல்லம் சேர்ந்தது. வணிகன் அதை அன்போடு வர வேற்று, அது உண்ணத்தகும் பொருள்களைக் கொடுத்து, களிப்பிக்கச் செய்த பின் அது தந்த பாலினை, தனது வீட்டிலிருந்த 31 குடங்களில் நிரப்பிக் கொண்டான். அப்பாலனைத்தும், தேவியின் கருணா கடாசத்தால், சொர்னமயமாகின. வணிகன் அவற்றைக் கண்டு மகிழ்ந்து, காமதேனுவை வாழ்த்தி வழியனுப்பிய பின், அப்பொன் செல்வத்தை, பலர்க்கும் பயன்படும் வவையில் எவ்வாறு உபயோகிப்பது எனச் சிந்தித்தபின் ஒரு முடிவுக்கு வந்தான். அதன்படி தனது பிறந்த நாள் விழாவை ஒட்டி தான் நடத்த விருக்கும் பெரிய விருந்திற்கு வரும்படி, அந்நாட்டு அரசனையும், மற்றும் சம்யக் திருஷ்டிகளையும் அழைக்க, அவர்களும் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டு விருந்திற்கு வந்தனர். வணிகன் அவர் கள் அனைவரையும் இன்முகம் காட்டி இன்சொல் கூறி வரவேற்று, அறுசுவையோடு கூடிய நல் விருந்தினை அளித்து உபசரித்தான். தனது செல்வச் சிறப்பிற்கான காரணத்தையும், தேவியின் கடாட்சத்தையும் அரசனுக்குக் கூறி மகிழ்ந்தான். அரசனும் அவனது செல்வச் செழிப் பிற்கு பக்தாமர மந்திரத்தை பக்தி சிரத்தையுடன் அவன் இடைவிடாமல் ஓதியதே காரணம் என அறிந்து ஜிந தர்மத்தின் பால் அரசனுக்கு மேலும் நல்லெண்ணமும் நம்பிக்கையும் வளர்ந்தன. இந்நிலையில், முன்னர் வணிகனது வேண்டு கோளை ஏற்றுக் கொண்டு, அவனது இல்லத்திற்கு வருவதாக ஒப்புக் கொண்டிருந்த சக்ரேஸ்வரி யட்சியும், அவர்கள் எல்லார் முன்பும்

தோன்றி, வணிகனது சிறப்பினை எல்லாரும் அறியப் பாராட்டியதுடன், அனைவரையும் வாழ்த்தி விடை கொண்டது.

அதன்பிறகு, சிரேஷ்டியானவன், தேவியின் அருளால் கிடைத்த பெருஞ்செல்வங்களைக் கொண்டு, சத்பாத்திரங்களுக் கெல்லாம் சதுர்வித தானங்களைக் செய்து புண்ணியப் புகழை அடைந்தான்.

கமதி சிரேஷ்டிக்குச் செல்வம் சேர்த்த, அந்த சுலோகங்களை நாமும் அறிந்து கொள்ள வேண்டாமா?

"நாத்யத்புதம் புவந பூஷண பூதநாத
பூதைர் குணைர் புவி பவத்த மபிஷ்டு வந்த
துல்யா பவந்தி பவதோ நநுதேந கிம்வா
பூத்யா ஸ்ரிதம் ய இஹநாத்ம ஸமம் கரோதி" (10)

"த்ருஷ்ட்வா பவந்த மநிமேஷ விலோக நீயம்
நாந்யத்ர தோஷ முபயாதி ஜநஸ்ய சட்சு
பீத்வா பய: சசிகரத்யுதி துக்த சிந்தோ
க்ஷாரம் ஜலம் ஜலநிதே ரசிதுங்க இச்சேத்" (11)

## 6 சுபுத்தி மந்திரியின் கதை

பரதக் கண்டத்தில் அங்க தேசத்தின் தலைநகரமாக விளங்கியது சம்பாபுரம் என்னும் நகரமாகும். எல்லா வகை வளங்களையும் பெற்று, நால் வகை அரண்களும் கொண்ட தாய், நாட்டின் திலகமென விளங்கிய அந் நகரத்தைச் சுற்றிலும், சிறியனவும், பெரியனவுமாகிய சிற்றூர்களும், பேரூர்களும் விளங்கி அதற்கு அழகு செய்தன. அந் நகரத்தின் அரசன் கர்ணன் என்பவன் செங்கோல் தவறாமல் நாட்டை ஆண்டு வந்தான். அவனுக்கு உறு துணையாயிருந்து, நாட்டு மக்களுக்குச் சிறு துன்பமும் வாராமல் நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்த உதவி

செய்தவன் சுபுத்தி என்னும் அமைச்சனாவான். அவ்வமைச்சன் சிறந்த அறிவாளி; இராஜ நீதியை நன்கு உணர்ந்தவன்; தன் பெயருக்கேற்ப ஜிந தர்மத்தில் செல்லும் சிந்தையன்; நல்லொழுக்கமுடையவன்; எப்போதும் பக்தாமர ஸ்தோத்திரத்தை 'ஸ்வாத்தியாயனம்' செய்து வருபவன்.

ஒரு நாள் 'தூர்த்தன்' என்னும் 'மித்யா' தாபதன் ஒருவன், துர்தேவதைகளின் வழிபாட்டினுல் தானடைந்த வித்யா சக்தியை அரசவையில் காட்டி செல்வாக்கும், புகழும் பெற வேண்டுமென்னும் தீய நோக்கத்துடன் அவைக்கு வந்து மாயா சக்தியினால், பிரம்மா, விஷ்ணு, சிவன், காளி முதலான மித்யா தெய்வங்களைப் போலும் உருவந்தாங்கி, பல விதமான நடனங்களை ஆடி, அவையோரை மகிழ்ச்சியும், பிரபிம்பும் அடையச் செய்தான். இறுதியில், ஸ்ரீ ஜிநேஸ்வரனைப் போலும் உருவம் தாங்கி நடிக்கத் தொடங்கினான். இக் காட்சி அவையிலுள்ளோருக்கு அரசனுட்பட அனைவருக்கும் நகைப்பையும், பரிகாசத்தையும் உண்டாக்கியது. ஆனால் அவையிலிருந்த அமைச்சன் சுபுதிக்கு மிகவும் மன வேதனையைத் தந்தது. ஜினனுடைய கோலத்தைத் தாங்கிய அந்த மித்யா தபஸ்வியின் மேல் சினங் கொண்டான். ஆயினும் பலரும் வீற்றிருந்து அவன் நடனத்தை கண்டு, மகிழ்ச்சியுடன் களித்துக் கொண்டிருந்த நிலையில் தனது வெறுப்பை வெளியே காட்டுவது அவ்வளவு பண்பாடுடைய செயலாகாது என எண்ணிய சுபுத்தி வேறொன்றும் செய்யத் தோன்றாமல், பக்தாமர சுலோகம் ஒன்றினைத் தியானம் செய்யத் தொடங்கினான். அவனது மனத் துயரை அறிந்த சக்ரேஸ்வரி யட்சி, அக்கணமே அவையோர் முன் தோன்றி, நடனமிடும் தாபதனை நோக்கி, ஏ! மூடனே! உனது ஆட்டத்தை நிறுத்து; ஏன் இந்த தவருன முறையைக் கையாளுகிருய்?

உன் மாயா ஜால வித்தையினால் அனைவரையும் தன் வயப் படுத்த நினைக்கிறாயா? ஐம்புலமாகிய யானைகளையும் அங்குசமாகிய மன உறுதியினால் வென்றுயர்ந்த அந்த பகவானின் உருவத்தையா நீ கொள்ளத் துணிந்தாய்? அவர் எங்கே? நீ எங்கே? வெறும் வேடத்தினால் மட்டும் அவருடைய குணாதிசயங்களைப் பெற்று விட முடியுமா என்ன? யானை சுமக்கக் கூடிய பொதியை எருதால் முடியுமா? இந்த பொய்யான சேஷ்டையை இன்றோடு நிறுத்திக் கொள்! ஸ்ரீ ஆதி மூர்த்தியாகிய பகவந்தர் பிறவிப் பெருங் கடலை நீத்த பெரும் புண்ணியர்; அவரைப் பற்றி நீ நன்கு அறியாததனால் அவருடைய உருவைத் தாங்கி நடனமிடத் துணிந்தாய்; இது பாவச் செயல்; இந்த பாவத்தினை இப்பொழுதே போக்கிக் கொள்ளவும், மனச் சாந்தி பெறவும் நீ விரும்புவாயே யானால், இதோ அவையில் மிகுந்த மன வேதனையுடன் அமர்ந்துள்ள, சம்யக் திருஷ்டியும், சீலாசாரருமான அமைச்சர் சுபுத்தியின் கால்களில் விழுந்து வணங்கி, அவருடைய மன்னிப்பைப் பெறுவாயாக!" என்று முழங்கியது.

தேவியின் மொழி கேட்டு தூர்த்தன் 'இடி விழுந்த நாகம் போல்' அஞ்சி நடுங்கினான். அவ்வம்மையின் தேஜோ மயமான ஒளி உருவமும். உறுதி மொழியும் அவனைத் திக்கு முக்காடச் செய்தன. மயக்கக் கடலிலிருந்து தெளி வென்னும் கரை சேர்க்கும் தெப்பமாயின; அவன் உடல் புல்லரிக்க, தேவியின் திருவடிகளிலும், அமைச்சனின் பாதங்களிலும் பன் முறையும் விழுந்தெழுந்து தான் அறியாமல் செய்த பிழையை மன்னித் தருளும்படி வேண்டிக் கொண்டான். அப்போது தான் அரசனுக்கும் மற்றும் அவையிலுள்ளோருக்கும், அமைச்சனுடைய மேன்மையும், மேதா விலாசமும் தெரிய வந்தன. அனைவரும் அமைச்சனைப் போற்றலாயினர். தேவியும்

அவையோரை வாழ்த்தி மறைய, தூர்த்தன் அப்பொழுதே ஜிந மார்க்கத்தில் செல்லும் சிந்தையை உடையவனானான். பக்தாகர ஸ்தோத்திரத்தின் பெருமை உணர்ந்து யாவரும் அன்று முதலே ஸ்தோத்திரங்களைச் 'சுவாத்தியாயனம்' செய்து பெரும் புண்ணியமாம் பேறுற்றனர்.

சுபுத்தியின் மனத் துயர் அகலவும் மித்யா தபஸ்வி யாகிய தூர்த்தனின் மூட மதி நீங்கி, 'சம்யக் ஞானம்' தோன்றவும் காரணமாக இருந்த சுலோகம் இது தான்.

**"யை சாந்த ராக ருசிபி பரமாணுபிஸ்த்வம்**
**நிர்மாபித ஸ்திரிபுவநைக லலாம பூத**
**தாவந்த ஏவ கலுதேப்ய ணவப்ரதிவ்யாம்**
**யத்தே ஸமான மபரம் நஹிரூப மஸ்தி"** **(12)**

## 7 'டாஹி' சிராவகியின் கதை

முன்னொரு காலத்தில் பாடலிபுத்திரம் என வழங்கிய பாட்னா நகரத்தில் 'சத்தியகன்' என்னும் வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான்; மிகுந்த செல்வம் பெற்றிருந்ததோடு, சத்தியம், சீலம், நீதி, நேர்மை இவற்றில் சிறந்து விளங்கினான். இவனுக்கு 'டாஹி' என்னும் பெயருடைய மகள் ஒருத்தி இருந்தாள். அவளும் தன் தந்தையைப் போலவே சீலம், முதலிய நற்குணங்களுக்கு உறைவிடமாய் திகழ்ந்தாள்.

ஒரு நாள் அவ்வணிகன் தன் மகளுடன் நகர் புறத்தின் நந்தவனம் ஒன்றில் வந்து தங்கியிருந்த, 'ஹேம சந்திரர் என்னும் முனிபுங்கவரைச் சென்று வணங்கி, அவர் அருளிய, உபதேசம் என்னும் அமுத பானத்தை நெஞ்சாரப் பருகினான்.

"தேவ பூஜா குரு பாஸ்தி
ஸ்வாத்யாயம் ஸம்யமம்தப :
தானம் சேதி கிருஹஸ்தானாம்
ஷட்கர்மா நி தினே தினே"

என்னும் சுலோகத்திற்கு இணங்க தினமும் காலையில் நீராடித் தூய்மையுடன் ஜிநாலயம் சென்று, தேவ பூஜை செய்து குருக்களுக்குச் சேவை செய்த பின் ஆகமங்களை ஓதி, தன் சக்திக்குத் தகுந்த படி குருவினிடத்தில் விரத மேற்றுக் கொண்டு தானமும், தருமமும் செய் தொழுக வேண்டும் என்ற முனிவரின் நல்வார்த்தைகளைக் கேட்ட சத்யகன் அவரைத் தன் இல்லத்திற்கு வருகை தரும்படி வேண்டி விரும்பி அழைத்துச் சென்று மிகுந்த அன்போ டும், ஆசாரத்தோடும் 'ஆஹாரம்' செய்வித்தான். முனிவர் ஆகாரம் கொண்ட பின் "நான்கு வகை தானங்களில் சிறந்ததாகிய ஆகார தானத்தை நல்லோர்களுக்கு வழங் கிய பிறகே தாம் ஆகாரம் எடுத்துக் கொள்ளல் வேண்டும்" என்னும் விரதத்தை, வணிகனுக்கும் அவன் மகள் டாஹிக்கும் ஏற்கச் செய்த பின் முனிவர் அவ்விடம் விட்டு நீங்கினார்.

அன்று முதல் தந்தையும், மகளும் முனிவர் கூறிய படியே விரத ஒழுக்கங்களில் தவறாது ஒழுகி வரும் நாட் களில் 'டாஹி' மணப் பருவம் எய்தினாள். வணிகன் அவளுக்கு பிருகச்ச நகரத்தில் வசித்து வந்த தனதத்தன் என்னும் அழகிய வணிகனுக்கு மணம் செய்வித்து, சகல சிறப்புகளோடும் வழி கூட்டி அனுப்பி வைத்தான்.

அவர்கள் பயணம் மேற்கொண்டு செல்லுகையில் இடையே ஆகாரத்தின் பொருட்டு மரங்கள் சூழ்ந்த அழகிய நீர் நிறைந்த குளக் கரையில் தங்கினார்கள். தன தத்தன் தன் மனைவியை உணவு உண்ண அழைத்தான். அப்போது அவள் தன் பிதாவும் தானும் ஏற்றுக் கொண்டுள்ள விரதங்களின் சிறப்பினை எடுத்துக் கூறி,

அவற்றை முடிக்காமல் தன்னால் உணவு உண்ண முடியாது எனக் கூறி தேவ பூஜை முதலான ஆறு கருமங்களையும் செய்யாமல் உணவு உண்ணுபவர்கள் பாவிகளே ஆவர்; அவர்களைச் சம்யக் திருஷ்டிகள் (நற்காட்சியாளர்) எனச் சொல்லுவதும் பாவமாகும் என மேலும் சொல்லினாள். இவைகளைக் கேட்ட கணவனும், உடன் வந்திருந்த உறவினர்களும் மிகுந்த மனக் கவலையுடன், என்ன கூறுவது என்று புரியாமல் இருந்தனர்.

'டாஹி' அப்பொழுதே தன்னைத் தூய்மை செய்து கொண்டு, பக்தாமர மந்திரத்தைத் தீவிர சிந்தையுடன், தியானம் செய்யத் தொடங்கினாள். அவளது திட சித்தத்தையும், நிர்மலமான பக்தியையும் அறிந்த 'சக்ரேஸ்வரி தேவி' அப்பொழுதே பிரசன்னமாகி, 'புத்திரியே' உன் மனோதிடத்தைக் கண்டு மகிழ்ந்தேன்; இதோ இந்த மலர் மாலையையும், குரு பாதத்தையும் பெற்றுக் கொள். இம் மாலை மிகவும் பவித்ரமானது. தூய மன விருப்பங்களைப் பூர்த்தி செய்யக் கூடியது. இந்த ப்ரகு கச்ச நகரத்தில் முனி சூவ்ரத ஸ்வாமியின் ஜிநாலயம் உள்ளது. அந்த ஆலயத்தில் உள்ள பகவானின் சரண கமலங்களில் இந்த மாலையைச் சார்த்தினால் இது இரத்தினமாலையாக மாறும். இந்த குரு பாதத்தை பக்தியுடன் வணங்கினால் வினைக்கட்டு விலகும். இரத்தின மாலையைக் கழுத்தில் அப்போது அணிந்து கொள்வாயேயானால் அதனிடையே உள்ள மாலையில் ஸ்ரீ பார்ஸ்வ நாத பகவானின் உருவம் தோன்றும்; அச்சமயம் நீ இந்த குரு பாதத்தை 'குரு பீடம்' என்று பாவித்து பூஜித்து உணவு அருந்தலாம்; உன் மனோ பாவனையில் எப்படி சம்யக்த்வ பரிணமம் உண்டாயிற்றோ அப்படியே குரு பந்தத்வமும் உண்டாகும் என்று கூறி வாழ்த்தி மலர் மாலையினையும், குரு பாதத்தையும் அளித்து மறைந்தது.

டாஹியும் தேவி கூறியபடியே தேவபூஜை, குரு பூஜை முதலானவற்றை முறையே முடித்து கணவரோடும், உறவினரோடும் உணவு உண்டாள். அதன் பின்னர் பயணம் கொண்டு தன்னிடம் சேர்ந்த பின்னர் டாஹி, தேவி அருளியபடியே மலர் மாலையை பகவானுடைய சரணத்தில் அமைந்த மாத்திரத்தில் அம்மாலை, இரத்தின மாலையாக மாறியது. அதை எடுத்து மீண்டும் கழுத்தில் அணிந்து கொண்ட போது அதனிடையே ஸ்ரீ பார்ஸ்வ நாத பகவானின் உருவம் தோன்றியது. அதைக் கண்டு அவளும் அவள் கணவனும், மற்றவர்களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். ஜிநதர்மத்தைப் பாடிப் பரவினர்.

புண்ணியவான்களுக்கு உத்தமமான 'வஸ்து'க்கள் எளிதில் கிட்டும். பாவிகளுக்கு அவை எவ்வகையிலும் கிடைக்காது என்பது சான்றோர்களின் பொன்மொழி அல்லவா?

"டாஹி கூறிய பக்தாமர சுலோகங்கள்"

**"வக்த்ரம் க்வதே சுரநரோரக நேத்ரஹாரி**
**நிஸ்ஸேஷ. நிர்ஜித ஜகத் திரித யோப மானம்**
**பிம்பம் களங்க மலிநம் க்வநிசாக ரஸ்ய**
**யத்வாஸரே பவதி பாண்டு பலாஸ கல்பம்" (13)**

**"சம்பூர்ண மண்டல ஸஸாங்க கலா கலாப**
**ஸீப்ரா குணா ஸ்திரிபுவநம்தவலங்கயந்தி**
**யே ஸம்ஸ்ரிதா த்ரிஜக தீஸ்வர நாத மேகம்**
**கஸ்தாந் நிவாரயதி சஞ்சரதோ யதேஷ்டம்" (14)**

## 8 மஹிபாலன் (சுஜனமகாராஜன்) கதை

இயற்கை வளங்களுக்கு இருப்பிடமான, கோசல நாட்டின் தலை நகரமாக விளங்கியது அயோத்தி; சொல்லேருழவர்களான புலவர்களும் வில்லேருழவர்களான

போர்வீரர்களும் நிறைந்து சிறப்புற்று விளங்கிய அந்நகரத்தின் அரசன் மஹிபாலன் என்பான்; நீதி தவறாமல் நாட்டை ஆண்டு வந்தான். அவனது கொற்றக் குடையின் கீழ், நாட்டு மக்கள், பகை, பிணி பசி ஏதுமின்றி இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

இங்ஙனம் சிறப்புற்று விளங்கிய, அரசனுக்கு, முற்பவத்துத் தீவினையால், இடையூறு ஒன்று ஏற்பட்டது ஒரு நாள், திடீரென்று அவனை, 'வியந்தர தேவதை' ஒன்று பிடித்துக் கொண்டது. அத்தூர்த்தேவதையின் பிடிப்பில் சிக்குண்ட அரசன், ஊண், உறக்கமின்றி பெருந்துன்பமடைந்தான்; அவனது பிணியை நீக்கிட, அமைச்சர்கள் படாத பாடு பட்டனர்; நாட்டிலுள்ள, பெரிய வைத்தியர்களும், வல்லமை படைத்த மாந்த்ரீகர்களும் வரவழைக்கப்பட்டு அரசனது துன்பத்தை நீக்கிய பல சிகிச்சை முறைகளும் கையாண்டும் அவனைப் பீடித்திருந்த 'வியந்திர சக்தி' விலகுவதாயில்லை. மாறாக, துன்பங்களே அதிகரித்தன. இனி என்ன செய்வது? என்னும் நிலையில், அமைச்சர்கள் திகைத்து நின்றனர்.

அந்நாளில், அமைச்சருள் மதியூகியாகிய குணசேனன் என்பவன் ஒரு ஜைந முனிவரிடம் சென்று, அரசனுக்கு ஏற்பட்ட, துயரத்தை எடுத்துக் கூறி, எவ்வாறேனும் அதை நீக்கியருள வேண்டும் எனப் பிரார்த்தித்தான். ஜைன முனிபுங்கவராகிய அம்மகான், மறுநாள் காலை தம்மை வந்து சந்திக்கும்படி சொல்லி, அமைச்சனை அனுப்பிவைத்தார்.

அன்றிரவே, முனிவர், 'சித்ரங்கி மத்ர' எனத் தொடங்கும் பக்தாமர சுலோகத்தையும், அதற்குரிய, ரித்தி, சித்தி மந்த்ரங்களையும் முறையாக ஜபிக்கத் தொடங்கினார். ஜபத்தின் முடிவில், சக்ரேஸ்வரி யட்சி தோன்றி, முனிவரின் வேண்டுதலைக் கேட்டறிந்து,

அவரது பக்தி நிலைக்கு மெச்சி, மேற்படி பக்தாமர மந்திரத்தை ஜபித்த ஜலத்தினை, அரசனுக்குப் பருகக் கொடுத்து, நீரினை முகத்தில் தெளித்தால், அரசனைப் பிடித்துள்ள வியந்தர தேவதை விலகுமெனச் சொல்லி வாழ்த்தி மறைந்தது.

மறுநாள் தம்மை அடைந்த அமைச்சரிடம், முனிவர் யட்சியால் தாமறிந்த, செய்திகளை எல்லாம் கூற, அமைச்சன் மகிழ்ச்சி அடைந்து, அம்முனிபுங்கவரை, அரண்மனைக்கு வரும்படி, பணிவுடன் வேண்டினன். அம் முனி வரும் அமைச்சனது வேண்டுகோளைத் தட்டமுடியாமல், அரண்மனைக்கு வந்து, அரசனுக்குத் தாம் மந்திரித்து எடுத்து வந்த நீரினை, பருகச்செய்து, கொஞ்சம் நீரினை மட்டும் முகத்தில் தெளித்தவுடனே அவ்வரசனைப் பீடித்திருந்த, அவ்வியந்திரப் பிசாசு, பக்தாமர மந்திரத்தின் மகிமையால், பேரிரைச்சலிட்டுக் கொண்டே ஓடி மறைந்தது. இக்காட்சியைக் காண திரள் திரளாகக் கூடி வந்திருந்த மக்கள் எல்லாம், இதைக் கண்டு பெரிதும் அதிசயமடைந்தனர். பக்தாமர மந்திரத்தின் மகாத்மியத்தை அறிந்தும், ஜைனதர்மத்தின் சிறப்பைக் கண்டும், அன்று முதலே அம்மார்க்கத்தினை பின்பற்ற விழைந்தனர்.

இக்கதையின் நாயகனான, மஹிபால அரசனின் துன்பங்களைப் போல, தமக்கு துன்பங்கள் வரக்கூடாது என்று எண்ணுபவர்கள், தினந் தோறும் காலை, மாலை ஜிநாலயம் சென்று, ஜிநபகவானை வணங்கி, பக்தாமர சுலோகங்களைத்தியானித்து, மந்திரங்களை ஜபம் செய்து வந்தால் சகல நன்மைகளும் கிடைக்கும்.

"பேயை விரட்டிய பெரு மந்திரம்"

**சித்ரம் கி மித்ர யதிதே த்ரித சாங்க நாபி:**
**நீதம்மநாகபி மநோந விகார மார்க்கம்**

கல்பாந்த கால மருதா சலிதா சலேந
கிம்மந்தராத்ரி சிகரம் சலிதம் கதாசித் (15)

## 9 கேளிப் பிரியன் (சகரராஜன்) கதை

'சகரபுரம்' என்னும் நகரத்தை சகரன் என்னும் பெயருடைய அரசன், முற்காலத்தில் ஆட்சிபுரிந்து வந்தான். தன் படைவலிமையாலும், பராக்கிரமத்தாலும், பகைவர்கள் அஞ்சி அவன் தாள் பணிந்து வாழ்ந்தனர்.

இயல்பாகவே அரசன் அறச் சிந்தையுடையவனாய், நல்லவர்களைக் காத்து, தீயவர்களின் குற்றங்களைக் களைந்து, நாட்டு மக்கள் நலம் பெற்று வாழ நன்னெறியிலிருந்து வழுவாமல் ஆண்டு வந்தான்; அதோடு, ஜிநவறத்தில் அசையாத நம்பிக்கை கொண்டு, ஜைன முனிவர்களின் அபிமான பந்துவாக விளங்கி வந்தான்.

இத்தகைய அரசனுக்கு, 'நல்ல மரத்தில் புல்லுருவி' பாய்ந்தது போல, முரண்பட்ட பண்புகளைக் கொண்டவனாய் ஒரு மகன் இருந்தான்; அவன் பெயர் கேளிப்பிரியன் என்பது.

பெயருக்கேற்ப, பயனில்லாத கேளிக்கைகளிலும், பொழுது போக்குகளிலும் ஈடுபட்டுவந்தான். நாஸ்திகம் பேசுவதே அவன் இயல்பாய் அமைந்திருந்தது. தந்தையை ஒருபோதும் அவன் மதிப்பதில்லை; ஒரு சமயம் அவன் தன் தந்தையிடமே வந்து, "தந்தையே! ஆன்மாவும் சரிரமும் வேறல்ல; புண்ணியம் என்றும் பாவமென்றும் பேசுவன வெல்லாம் அறிவில்லாதவர் செயல்களே! ஜீவன்கள் யாவும், அதனதன் விருப்பப்படியே இன்பங்களைத் துய்ப்பதற்காகவே பிறந்தவை; அவைகளின் சுதந்தரத்தில், ஒழுக்கம் என்று சொல்லிக் கொண்டு, பிறர் தலையிடுவது மிகவும் அநியாயம்,'' என்றெல்லாம் தகாத வார்த்தைகளைப் பேசத் தொடங்கினான்.

மகனது வார்த்தைகள் அரசனுக்கு வெந்த புண்ணில் வேலைச் செருகுவது போலிருந்தன. தன் மகன், தன்னிடமே தகாத வார்த்தைகளைப் பேசவும், தான் கேட்கவுமான காலம் வந்துற்றதே என மனம் புழுங்கினான். இவனை எவ்வாறேனும் நன் மார்க்கத்தில் திரும்பியே தீர வேண்டும், என உறுதி பூண்டு அன்றே புற நகர் வனத்தில் தங்கியிருந்த குணபூஷண முனிவர் என்னும் ஆசாரியர் பால் சென்று, அவரடித் தலங்களில் வீழ்ந்து, தன்மகனை நன்னெறியில் திருப்பச் செய்யும் உபாயம் ஒன்றைக் கூறியருளும்படி விண்ணப்பித்துக் கொண்டான். முனிவரும் அரசனது நிலைமைக்கு மிகவும் மனமிரங்கி, வேறொரு நாளில், அம்மகனை, எவ்வாறேனும் தம் மிடத்திற்கு அழைத்து வரும்படிக் கூறி அரசனைப் போக விடுத்தார்.

அதற்குப் பிறகு, முனிவர் பக்தாமரத்தின் தோத்திரத்திலிருந்து இரண்டு சுலோகங்களைத் துதித்து, அதற்குண்டான. சித்தி மந்திரங்களை ஆழ்ந்த பக்தியுடன் ஜபிக்க ஆரம்பித்தார். ஜபத்தின் முடிவில், சக்ரேஸ்வரி யட்சி தோன்றி, "முனிகளே! தங்களின் இந்த ஜபத்திற்குக் காரணம் யாது? என்னால் தங்கட்கு ஆகவேண்டிய காரியம் ஏதேனுமிருப்பின் கூறுங்கள்; இப்பொழுதே நிறைவேற்றுவேன்" என்று பவ்யமுடன் கேட்கவும், முனிவர், தேவியிடம் அரசன் கோரிக்கையை விளக்கிக் கூறியதுடன், அரசன் மகனுக்கு, அவன் உணரும் வகையில், நரகர் உலகத்தின் துன்பங்களை மாயையினால் காட்டி, உண்மைப் பொருளை அவன் தெளிதல் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். தேவியும் அவ்வாறே, அவரது வேண்டுதலை நிறைவேற்றுவதாகச் சொல்லி அகன்றது.

முன்செய்து கொண்ட ஏற்பாட்டின்படி, பின்னொரு நாள், வேந்தன், தன் மகனை, வேறொரு உபாயத்தால்

நயவுரைகள் கூறி, புறவனத்தில் தங்கியிருந்த முனிபுங்க வர் பால் அழைத்துச் சென்றான்.

அது மாலை நேரம்; கதிரவன் மேல்திசையில் மறைய, சந்திரன் தன் ஒளிமுகத்தை கீழ் அடிவானத்தில் காட்டிக் கொண்டிருந்தான். நந்த வனத்தின் பறவைகள், பலவித ஓசைகளை எழுப்பிக் கொண்டே, கூடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தன. இருளும் ஒளியும் கலந்த, அந்தக் கலவை வெளிச்சத்தில், முனிவர் சாமாயிகத்தில் (ஜபதபங்களில் ஈடுபட்டிருத்தல்) ஈடுபட்டிருந்தார். தியான நிலையில் அவரது கம்பீரமும், முகத்தில் நிலவிய சாந்தியும், கேளிப்பிரியனை என்னவென்று சொல்ல முடியாதபடி ஒரு மயக்க நிலைக்கு இட்டுச் சென்றன. அப்படியே, மந்திரத்தால் கட்டுண்டவனைப் போல, முனிவர் முன் அமர்ந்து அவரையே நோக்க தொடங்கினன்.

சக்ரேஸ்வரியின் திருவிளையாடல் தொடங்கியது. அரசகுமாரனுக்கும் நல்வினை கடை கூட்டும் காலம் வந்து விளைந்தது அவன் கண் முன்னே தோன்றிய மாயத் திரையில் அவன் இதுவரை. கண்டும் கேட்டுமிராத காட்சி கள் விரிந்தன.

அது ஒரு தனி உலகம்; நரகர்கள் வாழும்பூமி; இம்மண்ணில் தோன்றி, பாவச்செயலில் திளைத்தவர் களுக்காக, தண்டனைகளைப் பெறுவதற்கு என்றே இயற் கையாய் ஒதுக்கப்பட்ட இடம்; அங்கு வாழும் நரகர்களின் முகம் குரூரமானவையாக இருந்தது. பார்க்க, பயங்கர மான கோரைப் பற்கள்; பெரிய பெரிய விழிகள்: கைகளில் தரித்துள்ள அச்சம் தரும் படைக் கருவி களைக் கொண்டு ஒருவருக் கொருவர், தாக்கிக் கொண்டும், பேரிரைச்சல் இட்டுக் கொண்டும், பயங்கரப் போர்க் களத்தை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருந்த னர்; ஒருபுறம், கயிற்றால் கட்டப்பட்டு அடிக்கப்படுபவர் கள் மறுபுறம், தலைகள், ஆவி பறக்கும் எண்ணெய்

கொப்பரைக்குள், மூழ்கும்படி, தலைகீழாகப் பிடிக்கப்படுபவர் கள்; வேறுபுறம், கூர்மையான மழு ஆயுதத்தில் ஏற்றப் படுபவர்கள் – எரியும் இரும்புத் தூண்களை அணைக்க நிர்பந்திக்கப்படுபவர்கள் மற்றொரு புறம் - இப்படி எண்ணற்ற கொடுமைகள் அங்கங்கே நிகழ்ந்து கொண்டி ருந்தன – சிங்கத்தின் அருகே தள்ளப் பட்டுப் பிடுங்கப் படுபவர்கள்! மலையுச்சியிலிருந்து உருட்டப் படுபவர்கள் - அப்பப்பா! எந்த பாவங்களிலிருந்தும் தப்ப முடியாதபடி, நாம் என்ன பாவம் செய்தோம்? என்று அறியும் அறிவில் லாமலேயே அதற்குறிய தண்டனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் அந்த ஜீவன்களின் முகங்களில் தோன்றித் தோன்றி மறையும் எல்லையில்லா வேதனை இக்காட்சிகளைக் காணக் காண கேளிப்பிரியன் உள்ளமும் உடலும் நடுங்கத் தொடங்கின. மூச்சை யுற்றுக் கீழே சாய்ந்தான்.

உடன் வந்திருந்த வேந்தன் இதற்குச்சற்று முன்புதான் அவ்விடத்தை விட்டு விலகிச் சற்று வேளியே சென்றிருந்தனன். ஆதலின் மகன் மூர்ச்சையுற்று கீழே சாய்ந்தது அவனுக்குத் தெரியாது.

தியானத்தை முடித்துக் கொண்டு கண் விழித்துப் பார்த்த முனிவருக்கு நடந்த உண்மை, தெரியவந்தது. அப்பொழுது 'சில்' லென்று வீசிய குளிர்ந்த தென்றல் காற்று, முகத்தில் படவும் கேளிப்பிரியன் மயக்கம் தெளிந்து எழுந்து, தான் கண்ட காட்சிகளை முனிவருக் குக் கூறி, கண்ணீர் விட்டான். முனிவர் முறுவல் பூத்த முகத்தினராய், "மகனே! அஞ்சாதே! நீ கண்ட நரகவுலகக் காட்சிகள் அனைத்தும் ஏதோ ஒரு பூதத்தினால் இங்கு மாயமாகத் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. இவையனைத் தும் இங்கு நிகழ்வன அல்ல; நரகருலகில் நடப்பவை;

இத்தகையான துன்பங்களுக்கு அஞ்சியே, உலகோர் அற வழியில் நடத்தல் வேண்டும் எனப் பெரியோர் கூறிவருகின்றனர் எனக் கூறி தர்மத்தினுடைய பத்து லட்சணங்களையும், புண்ணிய, பாப பலன்களையும், ஆன்ம ஸ்வரூபத்தின் தன்மைகளையும், லோகம், அலோகம் இவைகளின் அமைப்பு களையும், பொருள்களின் தன்மைகளையும், இன்னும் அவன் அறிந்து கொள்ள வேண்டியவைகளையும், உபதேசித்தருளினார்; இவ்வுபதேசத்தால், வேந்தன் மகன், அறிவுத் தெளிவைப் பெற்று, நாஸ்திக வாதத்தை அப்பொழுதே விட்டொழித்தான். ஜிந தர்மத்தில் அவன் நாட்டம் திரும்பியது. அங்கிருந்து விலகிச் சென்றிருந்த அரசன் அருகே வந்து, முனிவரின் உபதேச மொழிகளை உடனிருந்து கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்; மனந்திருந்திய மைந்தனோடு, முனிபுங்கவர்க்கு, பல முறையும் வணக்கம் தெரிவித்து, விடை பெற்று மாளிகையை அடைந்தான். அந்நாள் முதலாக, அரசன் மகன் ஒவ்வொரு நாளும், முனிவரால் சொல்லப்பட்ட நன் மொழிகளை உளங் கொண்டு, பக்தாமரஸ்தோத்திரத்தை விடாமல் ஆராதித்து, ஜிந பகவானிடத்தில் பக்தியும் நம்பிக்கையும் கொண்டொழுகி, நலம் பல பெற்று வாழ்ந்தான்.

**கேளிப் பிரியனைத் திருத்த உதவிய சுலோகங்கள்.**

**"நிர்த்தும வர்த்தி ரபவர்ஜ்ஜித தைலபூர:**
**க்ருத்ஸ்நம் ஜகத்ரய மிதம் ப்ரகட கரோஷி**
**கம்யோ ந ஜாது மருதாம் சலிதா சலாநாம்**
**தீபோ பரஸ்த்வ மஸிநாத ஜகத் ப்ரகாச:"** **(16)**

**"நாஸ்தம் கதாஸிது பயாஸி நராண கம்ய**
**ஸ்பஷ்ட கரோஷி ஸஹஸா யுகபஜ்ஜ கந்தி**
**நாம் போதரோ தர நிருத்த மஹாப்ரபாவா**
**சூர்யாதி சாயி மஹிமாஸீ முநீக்த்ர லோகே:"** **(17)**

# 10 ஆதண்ட மந்திரியின் கதை

கூர்ஜர தேசத்தின் தலை நகரம் பாட்னா; அதன் அரசன் குமாரபாலன் என்பவன். நீதி தவறாமல் நாட்டைக் காப்பாற்றிவந்த இவனுக்கு, ஆதண்டன் என்பவன், தக்க அமைச்சனாக இருந்து, அரசனுக்குக் கண் என விளங்கினான். அமைச்சனுக்கு இருக்க வேண்டிய அத்தனை இலக்கணங்களும் அவனிடம் நிரம்பியிருந்தன. சொல் வன்மையும், தொலைநோக்கும், தீயன தவிர்க்கும் திறனும் நிலை பெற்றிருந்ததோடு, ஜைன மார்க்கத்தில் ஒழுகும் பக்தியும், நற்காட்சி சிந்தையும் கொண்டு விளங்கினான். நாடோறும் தேவ பூஜை முதலான, ஆறுகர்மங்களையும் தவறாமல் செய்தொழு கினான்.

இவனது இந்த பெருமையை மெச்சிய குமார பாலன், தனது ஆட்சியின் கீழிருந்த 'இலாடதேசம்' என்னும் நாட்டின் பகுதியை இவனுக்கு அளித்து, அந்நாட்டை அரசுரிமையாக்கினான். ஆதண்டனும், அரசன் விருப்பப்படியே, இலாட தேசத்தின் அரசனாகி, அந்நாட்டு மக்கள்ளுகுயாதொகு இடுக்கணும் நேராதபடி காத்துவந்தான்.

இந்நிலைலயில், தனக்கும் தன் நாட்டிற்கும் பகைவர் பலர் பெருகி வருவதை ஒற்றரால் அறிந்த ஆதண்டன், தனது படைபலத்தைப் பெருக்கிக் கொண்டு, படையெடுப்பதற்கான காலத்தை எதிர்பார்த்து, அக்காலம் நேர்வுற்றதும், தன் நால் வகை படைகளுக்கும், தானே தலைமை தாங்கி, போருக்குப் புறப்பட்டான். படைகள் பல நாட்கள் பயணம் கொண்டன. மலை களையும், பள்ளத்தாக்குகளையும் கடந்து சென்ற அப்படைவானளாவும் நெடுமரங்களும் புதர்களும் அடர்ந்த ஒரு பெருங் காட்டில் வழி தெரியாமல் சிக்கிக்

கொண்டது. கொடிய வன விலங்குகள் அங்கே நடமாடுவதைக் கண்டு, படைவீரர் அஞ்சிக் கலங்கினர். இரவு வந்துற்றது. இந்நிலையைக் கண்ட ஆதண்டன், அவர்களது அச்சத்தைப் போக்க எண்ணினான். பக்தாமர சுலோகம் ஒன்றை துதித்து, அதற்குண்டான ரித்தி, சித்தி மந்திரங்களை திட நம்பிக்கையுடன் ஜபிக்கத் தொடங்கினான். சிறிது நேரத்திலேயே, வனதேவதை ஒன்று தோன்றி, அமைச்சனுக்கு சந்திர காந்த மணி ஒன்றையும், விஷத்தை நீக்கும்படியான இரத்தினம் ஒன்றையும் அளித்து, இம்மணிகளின் பெருமையினால், உம் படைகள் செல்ல வேண்டிய வழி புலப்படும். உனக்கு ஆபத்து வருங்காலத்தில் என்னை நினைத்தால், நான் தோன்றி உதவி செய்கிறேன் என்று சொல்லி மறைந்தது. அதன் பின்பு, ஆதண்டன், அம்மணியின் மகிமையினால் செல்ல வேண்டிய வழியை அறிந்து தம் படைகளை நடத்திச் சென்று, பகைவர் நாடுகளை முற்றுகையிட்டு, அவர்களைப் போரில் வென்று, அவர்கள் நாடுகளையும் தன்னகப் படுத்திக் கொண்டு தன் நாடு திருமபினான்.

நாடு திரும்பிய ஆதண்டன் தன் தாயிடம் சென்று வணங்க, தான் பகைவர்களை வெற்றி கொண்ட செய்திகளைக் கூற, அத்தாயும் மனமகிழ்ந்து புதல்வனை ஆசீர்வாதம் செய்து, மகனே! பகைவர்கள் பலரையும் போரில் வெற்றி கொண்டு, இவ்வுலகில் சிறந்த 'பராக்கிரம சாலி' எனப் புகழ் பெற்றாய். ஆயினும், உனக்குச் சமமான வல்லமை பெற்ற வேறொருவன் இருக்கிறான். பிருகுகச்ச நாட்டை ஆண்டுவரும் 'பிரத்வீஷேணன்' என்னும் அரசனே அவன்; நீ அவனையும் வெற்றி கொண்டு, மேலும் புகழ் பெறுவாயாக!" எனக் கூறி வாழ்த்தினாள்.

ஆதண்டன், தாய் மொழிந்த வாழ்த்துரையின் உட்பொருளைக் கிரகித்தவனாய், சிறிது நாளில், மீண்டும்

படையெடுத்துக் கொண்டு சென்று பிரத் வீஷேணனோடு கடும்போர் புரிந்தான். பல நாட்கள் போர் தொடர்ந்தது. பகைவரின் படைகட்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டது. இரத்த ஆறு பெருகியோடியது. முடிவாக, ஆதன்டனே வெற்றி வாகை சூடினான். பிரத் வீஷேணன், அவன் முன் வந்து பணிவுடன் வணங்கி நிற்க, ஆதண்டன் அவனை மன்னித்தருளி, தனக்குக் கப்பம் கட்டி வருமாறு பணித்து படைகளுடன் நாடு திரும்பினான். நகரமே அவனை வரவேற்கத் திரண்டு வந்தது எனச் சொல்லலாம். நகரடைந்த ஆதண்டன், ஜினாலயங்களுக்கு உத்சவாதி பூஜைகள் செய்வித்து, சுகமுற்று வாழ்ந்தான்.

**"ஆதண்டனைக் காப்பாற்றிய அருமந்திரம்"**

**"நித்யோதயம் தளித மோஹ மஹாந்த காரம்**
**கம்யம் ந ராஹு வதநஸ்ய ந வாரி தானாம்**
**விப்ராஜதே தவமுகாப்ஜ மனல்ப காந்தி**
**வித்யோதயஜ் ஜகத பூர்வ ஸஸாங்க பிம்பம்"** (18)

## 11 "இலட்சுமண சிரேஷ்டியின் கதை"

இப்பரதக் கண்டத்தில் விசாலம் என்னும் பெயருடைய நகரம் ஒன்றிருந்தது. அது செல்வச் சிறப்பிலும், மாட மாளிகைகளின் அமைப்பிலும், தேவருலகத்து அமராவதி நகரத்தினும் சிறந்து விளங்கியது. அந் நகரத்தை ஆண்ட அரசன் 'லோக பாலன்' என்பவன் சிறந்த ஜிநபக்தி உடையவனாகவும், வீரம் பொருந்திய வனாகவும், நல்லோர்களை ஆதரிக்கும் நற்பண்புகளை உடையவனாகவும் விளங்கினான்.

அவனுடைய ஆட்சியின் கீழ் மக்கள் யாவரும் நலம் பல பெற்று வாழ்ந்து வந்தனர். அவர்களுள் 'இலட்சுமணன்' என்னும் பெயருடைய ஒரு வணிகன் நற்குண நற்செயல்களில் சிறந்து விளங்கினன். நற்காட்சியில்

தெளிந்த நம்பிக்கையும், அறிவும் பெற்று நாள் தோறும் தேவதா பூஜை செய்த பிறகே வாணிகத் தொடர்பான வேலைகளில் ஈடுபட்டான். ஸ்ரீ சந்திர கீர்த்தி எனும் முனிவர் பால் பேரன்பு பூண்டு அவரிட மிருந்து பக்தாமர சுலோகங்களையும், ரித்தி சித்தி மந்திரங்களையும் முறையாக ஜபிக்கக் கற்றுக் கொண்டு பக்தி சிரத்தையுடன் அம் மந்திரங்களைத் தியானிக்கத் தொடங்கினான். தியானத்தின் முடிவில் ஸ்ரீ சக்ரேஸ்வரி யட்சி சூரியனைப் போலும் பேரொளி வடிவுடன் அவன் முன் பிரசன்னமாகி வாணிகனே ! உன் பக்திக்கு மகிழ்ச்சி அடைந்தேன். நீ விரும்புவது யாது? எனக் கேட்க, வணிகனாகிய இலட்சுமணன் தேவியின் பாத கமலங்களில் விழுந்து வணங்கி, 'தேவியே! நீ விரும்புவதை அளித் தருள்வாயாக! எனப் பணிவுடன் விண்ணப்பித்தான். தேவி அவனுரை கேட்டு மகிழ்ந்து சந்திரன் போலும் பிர காசம் பொருந்திய இரத்தின மாலை ஒன்றை அவன் கையில் கொடுத்து, 'சம்யக் திருஷ்டியே' இம்மாலையைப் பெற்றுக் கொள்; இது தெய்வீக ஒளியினைத் தரக்கூடியது; இருட் காலங்களில் தேவைப்படும்போது ஆகாயத்தில் இதை விட்டெறிந்தால் வானத்தில் முழு மதியைப் போல் நின்று குளிர்ந்த ஒளியை வீசும் என்று சொல்லி மாலையை அவனிடம் தந்து மறைந்தது.

வாணிகன் அம் மாலையைப் பெற்று மகிழ்ச்சி அடைந்து மேலும் நன்னெறியில் செல்லும் நற்சிந்தை உடையவன் ஆயினான். இந் நிலையில் லோகபாலன் தன் பகைவர்களை வென்று வரக் கருதி தக்க படை களுடன் புறப்பட்டவன், சிநேக பாவத்தால் இலட்சுமணச் சிரேட்டியையும் உடன் அழைத்துச் சென்றான். படைகள் நாட்டின் எல்லையைக் கடக்கவும், சூரியன் மேற்கில் மறையவும் சரியாக இருந்தது. மெழுகை அரைத்துப் பூசி னாற் போன்ற கருக் கிருட்டு சூழ்ந்தது. படை வீரர் கட்குச் செல்லும்வழி புலப்படாததால் திகைத்து

நின்றனர். அந் நிலையில் வணிகன் அரசனுக்கு தைரிய மூட்டி தன் கழுத்திலணிந்திருந்த 'சந்திர காந்தி' மாலையைக் கழற்றி வானத்தில் விட்டெறிந்தான் அம் மாலையானது அக்கணமே வான் முகட்டில் நின்று முழு சந்திரனைப் போல பேரொளி பொழிவதாயிற்று. படை வீரர் கள் திகைப்பு நீங்கி வழி மேற் கொண்டனர். அரசனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. வணிகனது 'காலத் தால் செய்த நன்றி' யினை எண்ணி எண்ணி உளம் பூரித்தான். இவ்வாறு இடர் நீக்கிச் சென்ற படைகள் பகையரசர்களைப் படுதோல்வி அடையச் செய்தன. அந் நாடுகளில் கவர்ந்த பொருள்களையும், மற்றும் அரசரால் அளிக்கப் பட்ட திரைப் பொருள்களையும், யானைகள் மீது ஏற்றிக் கொண்டு நாடு திரும்பிய அரசன் தான் கொணர்ந்த பொருள்களின் சரி பாதியை வணிகனுக்கு அளித்ததோடன்றி, நாட்டின் பாதியையும் அவனுக் களித்து நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டான். வீதராக பகவானின் பாதாரவிந்தங்களில் நீங்காப் பக்தி யுடையவனாய் வாழ்ந்து சுகம் பெற்றான்.

இலட்சுமணன் துதி செய்த சுலோகம்

"கிம்ஸர்வ ரீஷு சசிநாதி விவஸ்த தாவா
யுஷ்மன் முகேந்து தளிதேஷு தமஸ்ஸு நாத
நிஷ்பந்ந ஸாலி வநஸாலினி ஜீவலோகே
கார்யம் கியஜ்ஜல தரைர் ஜலபார நம்ரை' (19)

## 12 மஹீபதி ராஜன் கதை

பரதக்கண்டத்தில் அக்காலத்தில் சிறந்து விளங்கிய நகரங்களுள் 'நாகபுரி' யும் ஒன்று. எல்லாவகை செல்வங் களும் நிரம்பி சீரும் சிறப்பும் பொருந்தி விளங்கிய அந் நகரத்தினை மஹீபதி ராஜன் என்பான் ஆண்டு வந்தான். படை வலிமை முதலான அரசர்களுக்கு இருக்க வேண்டிய

அத்தனை வலிமைகளும் அவன்பால் அடைக்கலம் பெற்றிருந்தன. அதனுல் நாடுகள் பலவற்றையும் அவன் எளிதில் கைப்பற்றி பேரரசனாகத் திகழ்ந்து வந்தான். அவனுக்கு விசாலை என்பவள் பட்டத்தரசியாக விளங்கினாள். பதிவிரதா தர்மம் சிறிதும் தவறாமல் உலகில் வாழும் உத்தம மாதர்கள் அனைவரும் தன்னைக் கண்டு நாணும் வகையில் சிறப்புற்றிருந்தாள்.

இத்தகையவளுக்கு நீண்ட காலம் 'குழந்தைப் பேறு' இல்லாமலிருந்து முற்பிறவியின் நல்வினையினால் கருவுற்றாள். அரசன் செய்தியறிந்து மட்டிலா மகிழ்ச்சி கொண்டான்; பணிப் பெண்கள் குறிப்பறிந்து ஏவல் புரிந்தொழுக, பூவில் வாழும் திருமகள் எனப்பொலிவுற்றுத் திக்ழ்ந்த அவளை அரசன் கண்ணின் மணி போல் கருதி களிப்புடன் காத்து வந்தான்.

ஒன்பது மாதங்களும் யாதொரு இடையூறுமின்றி இனிதே கழிந்தன.

இந் நிலையில் ஒரு நாள் அரசன் தன் ஆஸ்தான சோதிடர்களை அழைத்து தன் மனைவிக்குப் பிறக்கப் போகும் குழந்தை ஆணா? பெண்ணா? என கணித்துக் கூறும்படி கேட்டுக் கொண்டான். வந்திருந்த சோதிடர்கள் அனைவரும் இதைக் கேட்டு திடுக்குற்று ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கி விழிக்கலாயினர். அரசனுக்கு யாது! கூறுவது? என யோசிக்கலாயினர். அவர்களனைவரும் வைதிகப் பிராமணர்கள் ஆன படியால் "யாவும் இறைவன் செயல்" அவனைத் தவிர வேறு யாரே அறிய வல்லார்? என்று மெல்ல, மெல்ல மொழிந்தபடி ஒருவர் பின் ஒருவராக நழுவிச் சென்றனர். அரசன் இவர்களது இச்செயலைக் கண்டு மிகவும் மனம் வருந்தினான். நம் எதிர்கால வாரிசு ஆணா! பெண்ணா! என அறிந்து கொள்ளக் கூடவில்லையே! யாரே இதை அறிந்து சொல்லி

என் ஆவலைப் பூர்த்தி செய்ய வல்லார் என்று அமைச்சர் முதலானவர்களிடம் சொல்லி புலம்பத் தொடங்கினான். நகர மெங்கும் இச் செய்தி விரைந்து பரவியது. இந் நகரில் அரசனது மனக் குறையை தீர்த்து வைப்பவர் யாரும் இல்லையே என மக்களும் ஒருவர்க் கொருவர் பேசிக் கொள்ளத் தொடங்கினர். இந் நிலையில் அந் நகருக்கு எழுந்தருளியிருந்த 'வித்யாநந்தர்' என்னும் ஜைந முனிவர் ஒருவருக்கு இச் செய்தி தெரிய வந்தது. அவர், மன்னனையும், மற்றவர்களையும் நல்வழிப்மடுத்த எண்ணங் கொண்டார். உடனே பக்தாமர சுலோகம் ஒன்றினை ஜபிதது அதற்குரிய மந்திரத்தினை மொழிந்து தியானித்தார். நினைப்பாரின் நெஞ்சில் எழும் எண்ணங் களை எளிதில் தோன்றி ஈடேற்றும் தெய்வமாகிய சக்ரேஸ்வரி அக் கணமே பிரசன்னமாகி, முனிவருக்கு அரசன் மனத்தில் ஏற்பட்டுள்ள ஐயங்களுக்கான விடை களைக் கூறி விட்டு மறைந்தது.

மறுநாள் காலை முனிபுங்கவர் மஹீபதி ராஜனின் கொலுவரங்கினுள் நுழைந்தார். முனிவரைக் கண்ட அரசன் ஆதவனைக் கண்ட தாமரை போல முகமலர்ச்சி யுடன் விரைந்தெழுந்து வந்து, பணிவார்ந்த வணக்கங் களைச் செய்து, விநய பக்தியுடன் அழைத்துச் சென்று தகுந்ததோர் ஆசனத்தில் அமர்வித்து கை கூப்பி வணங்கி நின்றான். முனிவர் அரசனை அன்போடு வாழ்த்தி ஆசி கூறி அவனை நோக்கி அரசர்க்கரசே! நான் உன் மனக் குறையை அறிந்தேன். அதைப் போக்க நான் சொல்வதைக் கேட்பாயாக இன்றிலிருந்து பன்னிரண்டாம் நாள் அரச மாதேவி ஓர் அழகிய ஆண் குழந்தையைப் பெறுவாள்; அக் குழந்தைக்கு மூன்று கண்கள் இருக்கும். குழந்தை பிறந்தவுடனே உனது பட்டத்து யானை இறந்து போய்விடும் என்று மொழிந்து தாம் இந்த செய்தியை அறிந்த வரலாற்றை எடுத்துக் கூறி பக்தாமர

ஸ்தோத்திரத்தின் பெருமைகளையும், ஜிந வறச் சிறப்புக் களையும், அவ்வற நெறியில் செல்வார் அடையும் நற் பயன்களையும் விரிவாக விளக்கினார்.

அவர் மொழிந்தவாறே பட்டத்தரசிக்கு முக்கண் குழந்தை பிறந்தது. அரச யானையும் இறந்து போயிற்று. இவற்றை அறிந்த அரசனும், நகர மாந்தர்களும், பிராமண சோதிடர்களும் பெருவியப்படைந்து, பக்தாமரத்தின் பெருமை, ஜிந வறத்தின் பண்பு, முனிவரின் சிறப்பு ஆகிய வற்றை உள்ளபடி உணர்ந்து அப்பொழுதே ஜைந நெறி யை மேற்கொண்டு உய்தி பெற்றனர்.

**வித்யாநந்த முனிவர் தியானித்த சுலோகம்**

**ஞானம் யதா த்வயிவிபாதி க்ருதாவ காசம்**
**நைவம் ததா ஹரிஹராதிஷு நாயகேஷு**
**தேஜோ மயா மணிஷு யாதி யதா மஹத்வம்**
**நைவம்து காச ஸகலே கிரணா குலேபி** (20)

## 13 ஜீவநந்தி முனிவர் கதை

கூர்ச்சர நாட்டின் தலை நகரமாக விளங்கியது தேவபுரம்; இந்நகரம் மிகவும் எழில் வாய்ந்ததாய், இலங் கியது. இந்நகரத்திற்கு, 'ஜீவ நந்தி' என்னும் முனிவர் தமது சங்கத்துடன் வந்தவர், அந்நகரத்கின் சோலை யினை அடைந்து அங்கு சில நாள்கள் தங்கியிருந்தார்.

அப்போது ஒருநாள், அங்குவந்த நகரவாசி ஒரு வரைப் பார்த்து, "இந்நகரத்தில் ஜைந சமயத்தைச் சேர்ந் தவர் யாரும் இல்லையா?" என்று வினவினார். அதற்கு அம்மனிதர், "சுவாமி! இந்நகரத்தில், தற்போது ஜைந தர்மத்தை அனுஷ்டிக் கிறவர்கள் யாருமில்லை; முற்காலத்தில், நிறைய பேர் இருந்ததாக எம் முன்னோர் கள் கூறியிருக்கிறார்கள்; இப்போது வாழ்கின்றவர் அனை வரும் சிவநெறியைப் பின் பற்றும் சைவ மதஸ்தர்களே!

அவர்களுக்கு, சிறந்ததோர் சோமேஸ்வர சிவாலயமும் இந்நகரில் உள்ளது, தினந்தோரும் அவ்வாலயத்தில் பக்தர்கள் கூட்டம் வந்து சோமநாதரை வழிபட்டு செல்வது வழக்கம் என்று சொன்னார்.

அவர் கூறிச் சென்ற மொழிகளைக் கேட்டு முனிவர் மனம் வருந்தியது. எவ்வாறேனும், இந்நகரமக்களை ஜைந மதஸ்தர்களாக்க வேண்டும், என மனத்தில் தீர்மானம் செய்து கொண்டு, அங்கிருந்து, தம் சங்கத்துடன் உடனே புறப்பட்டுச் சென்று அந்நகரிலிருந்த சிவாலயத்தில் தங்கினார். 'ஒரு திகம்பர ஜைந சாது' வழக்கத்திற்கு மாறாக, சிவாலயத்தில் தம் சங்கத்துடன் வந்துள்ளார் எனக் கேட்ட அந்நகர சைவர்கள் பலரும், கோயிலுக்கு வந்து, முனிவரைப் பார்த்து, ''முனிவரே! தாங்கள் ஒரு திகம்பர ஜைந துறவியாகக் காணப் படுகிறீர்கள்! சமய நெறிக்குப் புறம்பாகத் தாங்கள் இங்குவந்து தங்கியிருப்பது வியப்பாகவும், வேதனை தருவதாகவும் உள்ளது; இதற்குக் காரணம் யாதோ?'' என்று சற்று கோபமுடன் கேட்டனர். அவர்களது உரையைக் கேட்ட, ஜீவநந்தர், அவர்களை நோக்கி கை அமர்த்தி, பேசத் தொடங்கினார். அன்புள்ள சகோதரர்களே! இவ்வுலகத்தில், எத்தனையோ தர்மங்கள் மக்களால் பின்பற்றப் பட்டு வருகின்றன. அவைகளில் ஜைந தர்மமே சிறந்தது. மற்ற தருமங்களில் எளிதில் கிட்டாத 'வீடுபேறு' என்னும் நிலை, இந்த ஜைந தர்மத்தின் மூலம் எளிதில் கிட்டும். ஜைன தர்மம் ஒன்றிலேயே, 'கொல்லாமை' என்னும்-உயர் நெறி, உயிர் நெறியாக, விரிவாகப் பேசப் படுகிறது. 'அஹிம்ஸாபரமோ தர்ம:' என்பது இச்சமய நெறியின் அடிப்படை கொள்கையாகும்.

எல்லா தேவர்களையும் விட, விருப்பு, வெறுப்பு அற்றவர்களே உண்மையில் தேவராவார்; கொலைக் கருவிகளைக் கையில் ஏந்தியும், பயங்கரத் தோற்றத்தைக்

காட்டியும், தீய பண்புகளை வெளிப்படுத்தும் குணங்கள் எங்கள் பகவானிடம் கிடையாது. அவர் பரமாத்மா; வீதராகன்; சாந்த ரூபி;

அப்படிப் பட்ட ஜிநேஸ்வரனையே, இல்வாழ்வில் உள்ளோர் பூஜிக்க வேண்டும். அவரைப் பூஜிப்பதால் துன்பங்கள் நாசமடையும். மனிதர்களது துன்பங்களைச் சாதாரண தேவர்களால் விலக்க முடியாது. பசியினால் வாடி இறக்கும் நிலையில் இருப்பவனால், பிறருடைய வயிற்றுப் பசியைப் போக்கிட முடியுமா? இவற்றை எல்லாம் நன்கு ஆய்ந்து, பதினெட்டு விதமான குற்றங் களிலிருந்து நீங்கிய கடவுள் எவனோ, அவனைப் பூஜித்து வணங்கினால், முக்தி நெறி தெளிவாகும்.'' என்று முழங் கிய, முனிவரது உபதேசத்தைக் கேட்ட சைவர்கள், சித்தம் குழம்பியவர்களாய், ''சுவாமி! எமது தேவர்களாலும், உம் சுவாமி பூஜிக்கப் படுபவரே யானால், அதை எங்கட்கு நிரூபித்துக் காட்டினாலன்றி'' நாங்கள் எவ்வாறு நம்ப முடியும்? உங்களது கொள்கையை எவ்வாறு ஏற்க முடியும்? எனக் கேட்டனர். அதைக் கேட்ட முனிவர் அவர்கள் யாவரையும் அமரச் செய்த பின், "மந்யே வரம்'' எனத் தொடங்கும் பக்தாமர சுலோகத்தைத் தியானித்து, ஜபம் செய்த அளவிலேயே அதன் மகிமையினால், பிரம்மா, விஷ்ணு சிவன், கார்த்திகேயன், சூரியன் முதலாகிய தேவர்கள். கீழிறங்கிவந்து, அங்கு கூடியிருந்த சைவ மதாவலம்பிகள் காண்கின்ற வகையில் ஜீவநந்தி முனிவ ராலும், அவர் சங்கத்தினரால், தரிசன பிம்பமாக உடன் கொண்டு வரப்பட்ட ஜிநேஸ்வரனை பக்தி பூர்வகமாக வணங்கி, முனிவர் சங்கத்தையும் வணங்கிச், சென்றூர்கள்.

இவ்வதிசயக் காட்சியைக் கண்ட சைவர்கள் பரவச ராகி, 'ஜைந தர்மமே, சம்சாரக் கடலில் உழலும் ஆன்மாக் களைக் கரையேற்ற வல்லது' என மனந்தெளிந்தவராய், மித்யாத்வமாகிய சிவமதத்தை விட்டு, ஜைந தர்மத்தை

ஏற்றுக் கொண்டார்கள். அந்நகரில் ஜிந வறம் செழித் தோங்கியது. இவ்வாறு ஜீவ நந்தி முனிபுங்கவர், பக்தாமர சுலோகத்தின் பேராற்றலால், அந்நகர மக்களனை வருக்கும், ஜிந தர்மத்தை உபதேசித்து, 'சாதுர் மாதம்' நீங்கும் வரையில் அங்கு தங்கியிருந்த பின், தமது சத்சங்கத்துடன் பல நாடுகளுக்கும் சென்று, நல்லுபதேசங்களைச் செய்து வரலானார்.

ஜீவ நந்தி முனிவர் திரனித்த சுலோகம்.

மந்யே வரம் ஹரிஹராதய ஏவத்ரஷ்டா
த்ரஷ்டேஷு ஏஷு ஹ்ருதயம் த்வயிதோஷமேதி
கிம் வீக்ஷிதேந பவதா புவியேந நாந்யா:
கச்சிந் மநோ ஹரதிநாத பவாந்த ரேபி: (21)

## 14 மதிசாகர முனிவர் கதை

பிருத்வீ திலகத்துக்குச் சமானமான, 'கௌடசாஸ்தி" என்னும் நகரத்தை, 'பிரஜாபதி' என்னும் பெயருடைய அரசன் ஆண்டுவந்தான். அவன், சிறந்த செங்கோலனாகவும், அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவனாகவும் விளங்கி; மக்கள் போற்றும் புரவலனாகவும் திகழ்ந்தான்.

ஒருநாள் அவனது அவைக்கு, 'ப்ரக்ஞ சாகரர்' என்னும் பௌத்தத்துறவியும். 'மதிசாகரர்' என்னும் ஜைநத் துறவியும், தத்தமது சமய தத்துவ சாஸ்திரங்களின் உண்மைகளை காண்பிப்பதற்காக, அவனது அழைப்பின் பேரில் வருகை தந்தனர். அரசன் அவர்களிருவரையும், அன்போடும் பணிவோடும் வரவேற்று அமரச் செய்தப்பின், பௌத்த தர்மத்தைப் பற்றி முதலில் பேசுமாறு, ப்ரக்ஞ சாகரரைக் கேட்டுக் கொண்டான். அவரும் அதற்கு ஒப்புக் கொண்டு தம் சமய தத்துவங்களை விளக்கிக் கூறினர். அவர் தெரிவித்த கருத்துக்களாவன:

இவ்வுலகில் நாம் காணும் பொருள்கள் அனைத்தும் நிலையானவை அல்ல; கணந்தோறும் அவை அழிந்து கொண்டே இருக்கின்றன. உதாரணமாக, குடமும், துணிச் சீலையும் வெவ்வேறாகத் தோன்றினும் அவை ஒன்றோடோன்று சேரும் போது, கற்பனையில் பூரண கும்பம் எனப் படுகிறது. உண்மையில் இரண்டும் சேர்ந்து ஒரே உருவமில்லை; தனித் தனியானது; க்ஷாமரையின் கேசங்கள் தனியாக இருக்கும் போது மானின் உரோமம் என்கிறோம். அவைகளை ஒன்றாகச் சேர்த்து, கைப்பிடியும் அமைந்து விட்டால் அதை 'க்ஷாமரை' என்கிறோம். ஆகவே பொள்களனைத்தும் தனித்து நிற்பவை; அழிந்து கொண்டே இருக்கக் கூடியவை" என்றார்.

மதிசாகரர் இவ்வுரைகளைக் கேட்டபின் தம் கருத்துக்களைக் சொல்லத் தொடங்கினார். எல்லாப் பொருள்களும் நாசமடையக் கூடியன என்றால், அது ஒப்புக் கொள்ளத்தக்கதாயில்லை; கணந்தோறும் பொருள்கள் நாசமடைவதாயின், 'தேவதத்தன்' என்னும் பெயருடைய ஒருவனைப் பார்த்து, 'நாம் இருக்கிரோம்' என்று சொல்லி முடித்த பிறகும், அவன் அங்கிருப்பதையும் அவன் தேவதத்தன் தான் என்பதையும் அறிகிரோம். அம்மாதிரியான அறிவு ஏற்படாவிடில் தங்களுடைய சித்தாத்த முறைப்படி, முதன் முதலில் பார்க்கப் பட்ட பொருள்கள் நாசமடைந்திருக்க வேண்டும்; இவை மாத்திரமல்ல; உலகத்தில் குடும்ப விருத்திக்காக, பெண் கொடுப்பதும் வாங்குவதுமான நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. கணந்தோறும் பொருள்கள் அழிவதாயின், இந்நிகழ்ச்சிகளுக்கு அர்த்தமே இல்லை; அவைகளும் நாசமடைந்து விட வேண்டும். ஆகையால் நீர் கூறுவது முற்றிலும் சரியானதாக இல்லை; நமது கைவிரல் களில் வளரும் நகங்களை அரிந்து கொண்டே இருக்கிறோம்; அவை வளர்ந்து கொண்டே இருக்கின்றன. பொருள்கள் நாசம் அடையும்

தன்மை உடையது என்றிருந்தால், அவை ஏன் வளர வேண்டும்! அவை வளர்ச்சி அடையாமலிருந்தால் முதலிலேயே, அப்பொருளைப் பற்றி ஞானமே உண்டாகாது; அதனதன் சந்ததிகள் யாவும் அதனதன் பரம்பரையில் எப்படி வளர்ச்சி அடைகின்றதோ அதுபோல் ஞானமும் வளர்ச்சி அடைகின்றது. ஆகவே எந்த வஸ்துவும், க்ஷண நேரத்தில் நாசமடைவதாகக் கருதக் கூடாது. பொருள்கள்யாவும் நித்தியமானது. அவற்றின், குணம், உருவம் இவைகளின் உதவியால் க்ஷண நேரத்தில் மாறுதலடைகிறது. அவற்றைத் தான் 'க்ஷணிகப் பொருள்' என்கிறோம். ஒரு பொருள் நாசமடைந்து விடுமானால் அது மீண்டும் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. பொருள்கள் அழிவது கிடையாது; மாறுதல் அடைவது அவற்றின் பண்பாகும், ஒரு பொருள், இல்லாமல் மாறுதல் உண்டாகாது, என்பது ஜைன சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை; இதுவே அறிவிற்கு ஒத்தது" என்று கூறிய மதிசாகரரின் உரைகளைக் கேட்டு, பதிலுரைக்க முடியாமல் புத்தத் துறவி, வெட்கத்துடன் தலைகுனிந்து கொண்டார்; அவையிலுள்ளோர் அனைவரும் சிரமசைத்து, ஜைந முனிவர் கூறிய கருத்துக்களே சிறந்தன, என்று கூறி ஆரவாரித்தனர். இதனால் ஏற்பட்ட, அவமானத்தால், புத்த துறவிக்கு ஆற்ற முடியாத சினமும், துவேஷமும் ஏற்பட்டு அவையை விட்டகன்றார்.

மதிசாகர முநிவரின், புகழும், செல்வாக்கும் எங்கும் பரவின. மக்கள் பலரும், அவர் கூறும் ஜிந வறங்களையும், தத்துவங்களையும் போற்றிப் புகழலாயினர். இதனாலும், புத்தத்துறவிக்கு மன வேதனை அதிகரித்தது. ஜைந முனிவரை எவ்வாறேனும் பழி வாங்க வேண்டும்; அவமானப் படுத்த் வேண்டும், எனத் தீவிர சிந்தனையுடனே இருந்து ஆர்த்த ரௌத்திர தியானத்துடனே மரணமெய்தி, தேவகதியில் யட்ச தேவனாகச் சென்று பிறந்தார்.

தேவனாகப் பிறந்தபின் முற்பிறவியில் தான் துறவியாக இருந்ததை அவதி ஞானத்தால் அறிந்து கொண்ட அந்த யட்சனை, முற்பிறவி, துவேஷமானது விடாமல் வந்து பற்றியது. மதிசாகரரைப் போற்றிக் கொண்டிருக்கும் கௌடசாஸ்தி நகர மாந்தருக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என்னும் தீய நினைவுடனே, விஷக் காய்ச்சல், அம்மை, வாந்திபேதி முதலாகிய கொடிய நோய்கள் பரவி மக்களைப் பற்றி வருத்துமாறு, மாயச் செயல் புரிந்தான்.

திடீரென்று ஏற்பட்ட இக் கொள்ளை நோய்களால் மக்கள் அளவிடற்கரிய பெருந்துன்பமுற்றனர். நகரமெங்கும் வேதனைப் புலம்பல்கள் எதிரொலித்தன. அரசனும், மற்ற பிரதானியரும் இந்நிலை கண்டு, கலங்கினர்; செய்வது யாதெனத் தெரியாது திகைத்தனர். அப்பொழுது மதிசாகரர், நகருக்குள் வந்து மக்களின் அவலநிலை கண்டு கசிந்து உருகினார். தம் தபோ மகிமையால் இவையெல்லாம், யட்ச தேவனின் திருவிளையாடலே எனத் தெளிந்து, நகரிலிருந்த அவனது கோயிலுக்கு விரைந்தார். நேரே உள் சென்று, சிலாவடிவில் இருந்த அந்த தேவனின் ஒரு காதிலே, தமது கமண்டலத்தை மாட்டித் தொங்கவிட்டார்; அச்சிலையின் பக்கமாகக் கால்களை நீட்டிக் கொண்டு, படுத்துக் கொண்டு நிம்மதியாக உறங்கிப் போனார்.

முனிவரின் இச்செயலைத் தகுந்தவர்களால் அறிந்த அரசன் யட்ச தேவனை வழிபடும் ஒழுக்க முடையவனாதலின், அவர்மீது பெருஞ்சினங் கொண்டான்; தன் படை வீரர்களை ஏவி, அவரைத் துன்புறுத்துமாறு பணித்தான்.

படைவீரர்களும், கொலைக் கருவிகளுடன், கோயிலை அடைந்து உறங்கிக் கொண்டிருந்த முனிவருக்கு இடையூறு செய்யத் தொடங்கினர். அவர்மீது சாட்டையடிகள்

விழுந்தன. வாளும், வேலும் மேனியைப் பதம் பார்த்தன; என்னே ஆச்சரியம்? சாட்டையும், கொலைக் கருவிகளும் மேனி மீது பட்டும், அவற்றால் முனிபுங்கவர்க்குச் சிறிதும் துன்பம் விளைய வில்லை. அவர், நிச்சிந்தையராய் எழுந்து அமர்ந்து கொண்டு 'ஸ்த்ரீணும்' எனத் தொடங் கும் பக்தாமர சுலோகத்தை ஜபித்துக் கொண்டு மந்திரத் தைப் பக்தியுடன் தியானம் செய்து கொண்டிருந்தார்.

ஆனால் அதே நேரத்தில் அந்தப் புரத்திலிருந்த, பிரஜாபதி அரசனின் பட்டத்தரசி பட்ட பாடுகளோ சொல்லுதற் கரியனவாயிருந்தன. முனிவர் மீது வீழ்ந்த அடிகள் ஒவ்வொன்றும், அவள் மீது இறங்கிக் கொண்டி ருந்தது; பூப் போன்ற மேனி புண் மேனியாகிக் கொண்டி ருந்தது. அரசன் இதை அறிந்து அதிர்ந்து போனான். தன் மனைவி பட்டுக் கொண்டிருக்கும் வேதனைகளின் வேர் எவ்விடத்தில் உள்ளது என நொடியில் யூகித்து அறிந்து கொண்டு, யட்ச தேவனது கோயிலுக்குப் பரி ஜனங்களும் பின் தொடரப் பாய்ந்தோடிவந்தான். அங்கே அவன் கண்ட காட்சி அவனை மெய்சிலிர்க்க வைத்தது. அடி மழைகளிடையே அவதி ஏதுமின்றி வீற்றிருக்கும் அம்மாமுனிவரின் அடிக் கமலங்கள் முடிமிசை பட கீழே விழுந்து பணிந்து தான் ஆராயாமல் செய்த பெரும் பிழைகளை மன்னித்தருளும்படி வேண்டிக் கொண்டான். தமக்குத் துன்பம் செய்தாரையும் பொறுத்தருளும் முனிவர் அவனுக்கு ஜிந தர்மத்தின் சிறப்புகளைப் பற்றி விரிவாக உபதேசித்தார். அரசனுடன் வந்த நகர மக்களும், அவருரை கேட்டு, ஆனந்தம் பெற்று, அறிவனின் அறமே அனைவர்க்கும் நல்வழி காட்டவல்லது எனத் தெளிந்து, அப்பொழுதே ஆருகத சமயத்தைத் தழுவினர். 'அரசு எவ்வழி, அவ்வழி குடிகள்' என்பது முதுமொழி அல்லவா? அந்தப்புரத்தில் அடியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த வளாகிய அரசியும் அல்லல் நீங்கினாள். இவ்வளவு நிகழ்ச்சிக்கும் காரண கர்த்தாவாக இருந்த, 'யட்ச தேவன்'

ஆணவம் அகன்றவனாய், அடிகளின் திருவடிகளில் வந்து வணங்கி நின்று, குற்றம் பொறுக்க வேண்டினான். முனிவரும் அத்தேவனுக்கும் மற்றவர்க்கும் பக்தாமரத்தின் மகிமையினையும், அதனை ஜபிப்பதால் கிடைக்கும் பலன்களையும் எடுத்துக் கூறி, அவர்களை நல்வழி படுத்திய பின், அங்கிருந்து புறப்பட்டு தேச சஞ்சாரம் செய்து ஆங்காங்கு தர்மமோபதேசம் செய்து ஜிந மார்க்கத்தைப் பரவிடச் செய்தார்.

**மதி சாகர முனிவர் தியானித்த சுலோகம்:**

**ஸ்த்ரீணாம் சதாநி சதஸோ ஜநயந்தி புத்ரான்**
**நாந்யா சுதம் த்வதுபமம் ஜநநீ ப்ரஸூதா |**
**சர்வாதிஸோ தததி பாநி ஸஹஸ்ர ரஸ்மின்**
**ப்ராச்யேவ திக் ஜநயதி ஸ்புரதம்சு ஜாலம் ||** **(22)**

## 15 ஆர்ய நந்தி முனிவரின் கதை

இப்பாரத பூமியின் புகழ்பெற்று விளங்கிய நகரங்களுள், அவந்தி நாட்டின் தலை நகராக விளங்கிய உச்சயினியும் ஒன்று; செல்வ வளம் மிக்க வணிகர்கள் அந்நகரில் சிறப்போடு வாழ்ந்துவந்தனர். அவர்களது மாளிகைகள், வானைத் தொடும்படி ஓங்கி உயர்ந்திருந்தன. அவர்கள் பெற்றிருந்த செல்வமோ, அளவிடற்கரிதாய் இருந்தது. விலை உயர்ந்த இரத்தின மணிகள் அவர்களிடம் நிறைந்திருந்தன. அவர்கள் செல்வ வளம் பெற்றிருந்தது போலவே, மனவளமும் பெற்றிருந்தார்கள். 'ஜீவதயை' என்னும் பண்பு அவர்களின் உயிர்மூச்சாய் விளங்கியது. "அஹிம்ஸா பரமோ தர்ம:" என்னும் வரிகள் எழுதப்பட்ட பட்டுப் பதாகைகள் ஒவ்வொரு மாளிகைகளின் முகப்பிலும் அணி செய்தன. ஜைந ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்த அவ்வணிகர்கள் நகரில் பெரும் பான்மையினராக இருந்தனர். சிறுபான்மையினரான மித்யா த்ருஷ்டிகளும் அந்நகரில் வசித்து வந்தனர்.

அவர்கள் நகரின் புறத்தே இருந்த வனத்தில் கோயில் கொண்டிருந்த 'சண்டிகாதேவி' என்னும் துர்த் தேவதைக்கு உயிர்ப்பலி இட்டு வழிபடுவர்; இதனால் அவ் வனமெங்கும், எலும்புகளும், மாமிசத் துண்டுகளும் நிறைந்து, நாய், நரிகள் உலவும் போர்க்களம் போல எப்போதும் காட்சியளிக்கும்

இந்நிலையில், ஒருநாள் ஆர்ய நந்தி என்னும் முனிவர் அவ்வனத்தின் வழியாக வரும்போது, மாலைக் காலம் வந்துற்றது. இருள் பரவத் தொடங்கியது; ஆகவே முனிவர் சண்டிகாதேவி ஆலயத்தின் முற்றத்திலேயே அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். சற்று நேரத்திற் கெல்லாம், ஊனையும் உதிரத்தையுமே உணவாக விரும்பி ஏற்கும் தன்மையுடையவளாகிய சண்டிகாதேவதை, மிகவும் கோபத்துடன் அங்குத் தோன்றி, இழிந்த வார்த் தைகளால் அம்முனிவரைப் பழித்துரைத்து, கொடுமை களைப் புரியத் தொடங்கியது. புலி, சிங்கம் போன்ற வனவிலங்குகளைத் தம் மாயையால் படைத்து அவர் மீது ஏவியது; பயங்கரமான, இடியும் மின்னலும் ஏற்பட்டன; அடைமழை பொழிந்தது. முனிவர் இவற்றை எல்லாம் கண்டு, சிறிதும் அஞ்சாமல், 'த்வாமா மனந்தி முநய' எனத் தொடங்கும் பக்தாமர சுலோகத்தை ஓதி, அதற் குரிய மந்திரங்களைத் தியானித்தார். அதன் மகிமையி னால் சண்டிகாதேவியால் இழைக்கப்பட்ட துன்பங்கள் அவரைச் சிறிதும் பாதிக்கவில்லை. இவ்வற்புதத்தைக் கண்ட அந்தத் தேவதை, மிகவும் பயந்துபோய் முனிவரின் திருவடிகளில் வீழ்ந்து, அறியாமையால் தான் செய்திட்ட பிழைகளைப் பொறுத்து மன்னிக்குமாறு வேண்டி, தனக்கு நல்வழி காட்டியருளும்படி மன்றாடியது. முனிவர், அதன்பால் இரக்கம் கொண்டு, "தேவதையே! இன்று முதல் நீ உயிர்ப்பலியை விரும்பாமல், உயிர்களிடம் கருணை காட்டு; மலர்களையும், பழங்களையும் தீப தூபங்களையும்

பக்தர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு; அவர்களைத் திருப்தி படுத்து; ஜிந பக்தர்களுக்கு யாதொரு துன்பமும் செய்யாமல், கருணாபாவனே அடைந்து, சம்யத்வமாகிய மூல ரத்தினங்களை ஏற்றுக் கொள்வாயாக!?" என்று கூறவும், சண்டிகாதேவதை அவ்வாறே ஜீவஹிம்சையை விட்டு ஜைந தர்மத்தை ஏற்றுக்கொள்ள, அதைக்கண்டு, மக்களும் மித்யாத்வத்தை விட்டு ஜைந தர்மத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஆர்ய நந்தி முனிவர் தியானித்த சுலோகம்:

த்வாமா மநந்தி முநய: பரமம் பவித்ர
மாதித்ய வர்ண மமலம் தமஸ: புரஸ்தாத் |
த்வாமேவ ஸம்ய குப லப்ய ஜயந்திம்ருத்யும்
நாந்யஸ்ஸிவ: ஸிவ பதஸ்ய முனீந்த்ரபந்தா: ‖ (23)

## 16 ஜிதசத்ருவின் கதை

முற்காலத்தில் 'சூரியபுரம்' என்னும் நகரம், எல்லா நலன்களையும் பெற்று சிறந்து விளங்கியது. அந்நகரம் தன் பெயருக்கேற்ப, உதய கிரியில் தோன்றும் ஆயிரக் கணக்கான சூரியர்களின் பேரொளிகளை நிகர்க்கும், ஒளிமயமான மாளிகைகள் நிறைந்து கண்கொள்ளா காட்சி தந்தது. தேவகுருவை ஒத்த, பேரறிவாளர்கள் பலரும் அந்நகரில் நிறைந்து, மேலும், புகழைச் சேர்த்தனர்.

அப்படிப்பட்ட அந்நகரத்திற்கு, 'ஜித சத்ரு' என்னும் அரசன் திலகம் போல் விளங்கினான். செங்கோல் தவறாத நேர்மையுடையவன் அவன்; அவனுக்கு, நல் வினைப்பயனால் எல்லாவகை போகங்களும் தாமே வந்து அடைந்து இன்பம் தந்தன. இந்நிலேயில், பாரினே உலுக்கும் பனிக் காலம் அகன்று செல்ல, வசந்த காலம் வந்துற்றது. சோலைகள் எங்கும் தளிர்த்துப் பச்சைப்

பட்டைப் போர்த்துக் கொண்ட மலர்கள் அலர்ந்து நறு மணம் வீசின; ஒரு நிலையில் நில்லா மனம்போல வண்டுகள் எங்கும் நிலைக்காமல் திரிந்து ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. தென்றல் காற்று நறுமணத்தை ஏந்திவந்து, இளைஞர்களின் உள்ளத்தில் இன்பக் கிளு கிளுப்பை ஊட்டியது. குயில்கள் இன்னிசை வழங்கியது; இன்ப நுகர்ச்சியை விரும்பியவனாகிய அரசன், இளமை யும் எழிலும், நிரம்பிய தன் பட்டத்து ராணியை அழைத் துக் கொண்டு, பரிவாரங்களை விட்டு நீங்கி, மரங்களடர்ந்த சோலையில் ஒரு தனியிடத்தை நாடிச் சென்று அமர்ந்து, அன்பு மொழிகளை உரைத்து அளவளாவிக் கொண்டிருந் தான். அப்போது மாலை மயங்கும் நேரம்; நெடுங்காலம், அச்சோலையின் பெருமரம் ஒன்றில் வாசம் செய்து கொண்டிருந்த வியந்திர தேவதை ஒன்று, அரசியைக் கண்டு, பொருமை கொண்டு அவளைப் பற்றிக் கொண்டது. பூர்வ வினையின் விளைவாக, தன் மனைவிக்கு வந்துற்ற பெருந்துன்பத்தினைக் கண்டு மன்னன் மனங்கலங்கி னான். தன் நகரிலிருந்த, பேராற்றல் நிறைந்த மந்திர வாதிகள் பலரையும் அழைத்து வந்து, மாந்திரீக முறை களைப் பயன்படுத்தியும், அத்தேவதை அவளை விட்டு விலகுவதாயில்லை. அந்நிலையில் நகரவாசி ஒருவன், அரசனிடம் வந்து, "அரசே! நம் நகரிலுள்ள ஜிநாலயத் தில் 'சாந்த கீர்த்தி' என்னும் முனிவரர் ஒருவர் எழுந் தருளியிருக்கிறார். அவர் தவத்தால் சிறந்தவர்; அவரை அழைத்துவரின், உமது மனைவிக்கு ஏற்பட்டுள்ள இத்துன்பம் நீங்கவும் கூடும்" என்று கூறவே, அரசன், தன் அமைச்சர்களை அனுப்பி, தக்க முறையில் அழைத்து வருமாறு செய்து. அவரை நன்கு உபசரித்து, "சுவாமியே! என்மனைவியைப் பீடித்துள்ள, இந்த பிசாசு, அவளை விட்டு நீங்கி, அவள் படும் இந்த அருந்துயரம் அகல அருள் புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தான். முனிவர் அரசனது இரக்க உரை கேட்டு, மிகவும் கருணை

கொண்டு. அங்கிருந்த ஏவலர்களில் ஒருவனை அனுப்பி, கிணற்றிலிருந்து புது நீரினை ஒரு சொம்பில் எடுத்துவரச் செய்து அவற்றை, இரண்டு பக்தாமர சுலோக மந்திரங் களைக் கூறி ஜபித்து, அந்நீரினை, அரசியின் கண்களில் தெளித்த உடனே, அவளைப் பற்றியிருந்த, அவ்வியந் திர தேவதை, பேரிரைச்சல் செய்து கொண்டே ஓடி மறைந்தது. அம்முனிவரின் தோற்றம், நெருப்பின் ஜ்வாலையாகக் காணப் பட்டதே இதற்குக் காரணமாகும். அரசியும் பழைய நிலையை அடைந்து, நிகழ்ந்தவைகளைச் சொல்லக் கேட்டு, முனிவரைப் பல முறையும் பணிந் தெழுந்தாள்; அரசனும் மற்றவர்களும் மட்டிலாமகிழ்ச்சி கொண்டு, பக்தாமர சுலோகத்தின் பெருமைகளைப் புகழ்ந்து பேசி பூரிப்படைந்தார்கள்.

அந்த சுலோகமாவன:

**த்வாமவ்யயம் விபுமசிந்த்ய மஸங்க்ய மாத்யம்**
**பிரம்மாண மீஸ்வர மநந்த மநங்க கேதும் |**
**யோகீஸ்வரம் விதித யோக மநேக மேகம்**
**ஞானஸ்வரூப மமலம் ப்ரவதந்தி ஸந்த: ॥ (24)**

**புத்தஸ்த்வ மேவ விபுதார்ச்சித புத்தி போதாத்**
**த்வம் சங்கரோஸி புவநத்ரய ஸங்க ரத்வாத் |**
**தாதாஸிதீர ஸிவமார்க விதேர்வி தாநாத்**
**வ்யக்தம் த்வமேவ பகவந் புருஷோத்த மோஸி ॥ (25)**

## 17 தன மித்திர சிரேஷ்டியின் கதை

'பாட்னா' நகரத்தில், தனமித்திரன் என்னும் வணிகன் ஒருவன் வாழ்ந்துவந்தான்; முற்பிறப்பின் பாப உதயத்தினால், அவன் மிகவும் வறுமை நிலையை அடைந்து, மிகுந்த துக்கத்தினை அனுபவித்து வந்தான். ஒருநாள் அவன், அவ்வூரின் ஜினாலயம் ஒன்றில் வந்து தங்கியிருந்த குண சேன முனிவரிடம் சென்று தனது

ஏழ்மை நிலையை எடுத்துக் கூறி அதைப் போக்கும் உபாயத்தைக் கூறி அருளும்படி வேண்டிக் கொண்டான். அவர் அவனை நோக்கி, வணிகனே! பாபோதயத்தினுல் உனக்கு இந்த வறுமைத் துன்பம் ஏற்பட்டு நிலைத் துள்ளது. நீ ஜைன தர்மத்தின்பால் நம்பிக்கை கொண்டு ஒழுகுவாயே யானால், உனது பாவம் நாசமடைந்து புண்ணியம் உதயமாகும்; செல்வமும் சேரும்; ஆகையால் நான் உனக்குச் சொல்லப் போகும் பக்தாமர சுலோ கத்தைத் தினந்தோறும், ஆதிபகவனின் இந்த ஆலயத் தில் அமர்ந்து தியானித்து, ஜபம் செய்து வருவாயே யானால், உனது துன்பங்கள் அகலக் காண்பாய்; அதோடு வேறு பெண்களைக் காணும் போது, அவர்களைத் தாயா கவும், சகோதரியாகவும் கருதி மனத்தூய்மையுடன் ஒழுகி வரவேண்டியது அவசியம்'' என்று அறிவுறுத்தினார்.

அம்முனிவர் மொழிகளைப் பொன்னே போல் போற்றி, அன்று முதல் ஆலயத்திற்குச் சென்று பக்தாமர மந்திரத்தை தியானித்து வந்தான். இவ்வாறு ஆறு மாதங்கள் கழிந்தன. ஒருநாள் அவன் ஆலயத்திற்கு வரும் வழியில், தேவ மகளைப் போன்ற அழகு நிரம்பிய ஒருத்தி, அவனை இடைமறித்து "ஐயா! நான் உம்மு டைய சிறந்த புகழைக் கேட்டு, பல நாட்களாய் தங்களைக் காண எண்ணியிருந்தேன். அந்த பாக்யம் இன்றே வாய்த்தது; என் மனமும் மகிழ்ச்சி பெற்றது. உம்முடைய குணச் சிறப்பும், எழிலும் என்னை உம் பால் கவர்ந்தன; நான் பெண்ணாய் பிறந்துள்ளதன் பயன் உம்மை அடைவதே என்பதைத் தெரிந்து கொண்டேன்; அருள் கூர்ந்து என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று பசப்பு வார்த்தைகளைக் கூறி, பின்னும், "இந்நகர மக்கள், உம்மைப் போலவே, குணசேன முனிவரின் மாய வார்த்தைகளில் மயங்கிப் போய், உண்மை இன்பம் எது வென விளங்காமல், மயங்கி, ஒழுகுகின்றனர். பரலோகத்

தன்மையையும், பாபத்தின் தன்மையையும், பொய்யாகக் கூறி, எல்லாரையும் அவர் தம் வசப்படுத்திக் கொண்டுள் ளார். இவ்வுலகில் பாவம், புண்ணியம் என்பவை எவை யும் இல்லை; பரலோகம் ஏதும் கூட இல்லை: இவ்வுல கம் தான் உண்மை; சுகபோகத்தை அனுபவிப்பதற் கென்றே, ஆன்மாவும் உடலும் ஒன்று சேர்ந்திருக்கின் றன. இவ்வுண்மைகளை அறிந்து கொள்ளாமல், இன்பம் அனுபவித்தற்குரிய இளமையை வீணே கழிக்கின்றனர்; என்னே அறியாமை!'' என்று கூறினாள்.

அந்த அழகிய இளம் பெண்ணின் தீய மொழி களைக் கேட்டு வணிகன் உள்ளம் நடுங்கினான்; தன் இரு செவிகளையும் பொத்திக் கொண்டு, ''பாவியே! என்ன கொடூரமான வார்த்தைகளைக் கூறினாய். நான் ஏகபத்தினி விரதமுடையவன் என்பதை நீ அறிய வில்லை போலும். வேறு பெண்களை நான் ஏறிட்டும் பாரேன். தயவு செய்து என்னை உன் சகோதரனாகக் கருதிப் பார்; பாவச் செயலை மனத்தாலும் நினைக்காதே! நரகமே சம்பவிக்கும்; அறியாமையின் காரணமாக, புண் ணியம், பாவம் முதலானவைகள் ஏதும் இல்லை எனக் கூறுகிறாய்; நாம் நாள்தோறும், உயிர்களின் இறப்பு, பிறப்புகளையும், செல்வம் வறுமை இவைகளையும், நோய், நோயின்மை இவைகளையும் கண்ணாரக் கண்டு வருகி றோம்; இவைகளையெல்லாம் பார்த்த பிறகும் கூட, உன் கருத்துக்கள் மாறவில்லையா''? எனக் கடிந்துரைத்தான். அந்த மங்கை, இவ்வுரைகளைக் கேட்டு, புன்சிரிப்புடன், அவனை நோக்கி, ''மித்திரனே! என்மீது கோபம் கொள் ளாதே! நான் தேவகுலத்துப் பெண்; நீ சம்யக்த்வத் தின் பால்கொண்டுள்ள பற்றினையும், உன்மனத்திட்பத் தினையும் சோதித்துப் பார்க்கவே இங்கு வந்தேன்'' என்று கூறி, தன் சுயரூபத்தைக் காட்டி, ''உன் ஒழுக்க நெறி திறம்பாத மனவலிமையைக் கண்டு மகிழ்ச்சியடைந் தேன்; நீவிரும்புவதைக் கேள்'' என்று கூற, வணிகன்

நாணமடைந்து, தன் வறுமைத் துன்பத்தைக் கூறி, அதைப் போக்கி யருளும்படியும் தன் வீட்டின் கிணற்றில் வற்றாமல் நீர் சுரக்கச் செய்யவும் வேண்டிக் கொண்டான். அத்தெய்வப் பெண்ணும், அதற்கு இசைந்து, "அன்பரே உன் வீட்டுக் கிணறு இன்று முதல் வற்றாமல் நீர் சுரப் பதாக!" எனக்கூறி, "உன் வீட்டின் அறைகளில், விறகுகளை வாங்கி நிறைய அடுக்கி விடுவாயாக! நாளை காலையில் அவை அனைத்தும், தங்கமாக மாறிவிடும்; உன் தரித்திரமும் தொலையும்" என்று மொழிந்து அவள் அகன்றாள்.

தனமித்திரனும், அப்பெண் கூறியபடியே செய்து, தன்பெயருக் கேற்ப, தனங்களுக்கு மித்திரன் ஆனான். புண்ணியவான்களுக்குப் பொருள் கிடைப்பது அரிதில்லை. தனத்தினுடைய பெருமையினால் தனமித்திரன், குபேர னுக்குச் சமமான தகுதியை அடைந்தான். அவனை எல்லாருமே புகழ்ந்தார்கள்; பக்தாமர மந்திரத்தின் பெருமையினால், 'நாம் இச்சிறப்பைப் பெற்றோம்' என எண்ணி பெருமகிழ்ச்சியடைந்து, தானடைந்த பொருளை மிகவும் நல்ல வழியில் செலவழித்தான். நகரத்தில் பல ஜிநாலயங்களை எழுப்பி, ஜிநபிம்ப ஸ்தாபனங்கள் செய்து, பிரதிஷ்டை முதலான பஞ்ச கல்யாணப் பெரு விழாக்களைச் செய்தான். கல்வி வளரவும் கலைகள் செழிக்கவும் பள்ளிகளை ஏற்படுத்திப் பேரும் புகழும் பெற்று நீண்ட காலம் வாழ்ந்து நற்கதி பெற்றான்.

**தனமித்திரனைக் குபேரனாக்கிய சுலோகம்:**

**துப்யம் நம: ஸ்த்ரிபுவனார்தி ஹராய நாத!**
**துப்யம் நம: க்ஷிதிதலா மல பூஷணாய |**
**துப்யம் நம: ஸ்த்ரிஜகத: பரமேஸ்வராய!**
**துப்யம் நமோ ஜிந பவோததி ஸோஷணாய ||** **(26)**

# 18 ஹரிபூபதி அரசன் கதை

இப்பரதக் கண்டத்தில் மஹா சிந்து எனப் புகழப் படும் கோதாவரி என்னும் நதிக்கரையில் 'பிரதிஷ்டா னம்' என்னும் நகரம் சகல வளங்களும் பெற்று சிறப்புற்று விளங்கியது. அந் நகரத்தினை 'ஹரிபூபதி' என்பவன் அரசாண்டு வந்தான். அழகிலும், வல்லமையிலும், தேவேந்திரனுக்குச் சமமாக விளங்கிய அவ் வரசனுக்கு, புத்திர பாக்கியம் இல்லாத பெருங்குறை ஒன்று நிலவி வந்தது. இக் காரணத்தினால் அவன் தீராத மனக் கவலை அடைந்து, நாளுக்கு நாள், உடலும் உள்ளமும் மெலிந் தான். இவனது இந் நிலையைக் கண்டு, மனமிரங்கிய அரசப் புரோகிதன் ஒருவன், ஒருநாள் அவனை நோக்கி "அரசர்க் கரசே! எல்லா வகை செல்வங்களையும் பெற்று சிறந்து விளங்கும் உனக்கு, 'மக்கட்செல்வம்' இல்லாத குறையே கவலையை அளித்துள்ளது. இதற்காக நீ மனம் வருந்த வேண்டாம். உனது பெருங்குறை நீங்கும் உபாயம் ஒன்றை நான் கூறுகிறேன்; கேட்பாயாக; நாள் தோறும், காலையில் எழுந்து, ஸ்நாந சுத்தனாகி, தர்ப்பாசனத்தில் அமர்ந்து, சர்வேஸ்வரனாகிய சங்கரனை ஏகாக்கிர சிந்தையுடன் ஜபிப்பாயே யானால், சங்கரன் பிரசன்னமாகி நின் குறையைப் போக்கியருளுவான்; இது உறுதி" என்று கூறினான். அரசன் இவ்வுரை கேட்டு, 'ஜிநேஸ் வரனைத் துதிப்பதையே குறிக் கோளாகக் கொண்டு "அன்யதா சரணம் நாஸ்தி" என்பதை உறுதி யாகப் பின்பற்றி ஒழுகும் நமக்கு இவனுரை எவ்வாறு பொருந்தும்? என மனதில் நினைத்து, கிலேச முற்றவ னாய், தன் மனைவியோடும் கூட, ஒருநாள் ஜிநாலயம் சென்று, அருகத் பரமேட்டியை வலம் வந்து வணங்கி, திரும்பும் நேரத்தில், ஆங்கு எழுந்தருளியிருந்த 'முனிசந் திர ஆசாரியரைப் பக்தி பரவசத்தோடு வணங்கி, தன் மனக் கவலையைத் தீர்த்தருளும்படி பிரார்த்தித்தான். முனிவர் அவனது கவலைக்குக் காரணம் வினவி அறிந்து

“அரசனே! நீ உத்தம சம்யக் திருஷ்டியாக இருப்பதைக் கண்டு மகிழ்கின்றேன்; நான் கூறுகின்றபடி கேட்டு நடந்தால் உன் குறைதீரும்'' என்றுரைத்து, பக்தாமரத்தின் ஒரு சுலோகத்தை அவனுக்கு ஓதி, அதற்குரிய மந்திரங்களையும் கற்பித்து, அனுஷ்டிக்கும் முறையையும் விளக்கிச் சொல்லி, ‘‘அரசனே! நாள்தோறும் தவறாமல் இம்முறையில் ஒழுகி வருவாயேயானால், சக்ரேஸ்வரி தேவி தோன்றி உனக்கு அருள் புரிவாள்” எனக் கூறி அனுப்பிவைத்தார்.

அரசனும் அன்றுமுதல் முனிவர் சொன்னபடியே, பக்தாமர மந்திரத்தைத் தவறாமல் தியானித்து வந்தான். ஜிந தர்மத்தின்பால் மாறாத நம்பிக்கை கொண்டு இவ்வாறு ஒழுகி வரும் அரசனின் முன் ஒருநாள் சக்ரேஸ்வரி தேவி தோன்றி, அவனது மனக்குறை விரைவில் தீரும் என்று அருள் புரிந்து மறைந்தது.

சில நாடகளுக்குப் பிறகு பட்டத்தரசி கருவுற்றாள். அரசன் இச்செய்தி அறிந்து மிகவும் மகிழ்ந்தான். நகர மக்கள் அனைவருக்கும் செய்தி பரவியது. அவர்கள், ஜிந தர்மத்தின் மகிமையினையும், பக்தாமர மந்திரத்தின் பெருமையினேயும் அறிந்து பெரிதும் வியப்படைந்தார்கள். தாமும் அவற்றின்பால் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர். அரசி, நவமாத பூர்த்திக்குப் பிறகு, அழகியதோர் ஆண்மகவினை ஈன்ருள்; அரசனுக்கு மேலும் மகிழ்ச்சி பெருகியது. ஜிந தர்மம் வளர்ந்து, ஆன்மீகமும், அமைதியும் நிலவ பல திருப்பணிகளைப் புரிந்தான். இங்ஙனம், அரசனும் பட்டத்து ராணியும் இன்ப சுகங்களை வெகுகாலம் அனுபவித்தபின் இறுதியில் சொர்க்கம் புக்கனர்.

ஹரி பூபதிக்கு உபதேசித்த சுலோகம்:

**கோவிஸ்மயோ த்ரயதிநாம குணை ரசேஷை**
**ஸ்த்வம் ஸம்ஸ்ரிதோ நிரவகாஸ தயாமுநீஸ |**
**தோஷை ருபாத்த விபுதாஸ்ரய ஜாத கர்வை**
**ஸ்வப்னாந்த ரேபி நகதாசித பீக்ஷிதோஸி ॥** **(27)**

## 19 ரூப குண்டலாவின் கதை

'தாரா' என்னும் பெயருடைய நகரமொன்று முற் காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கியது. இந்திரனால் ஆளப்படும் அமராவதி நகரத்தைப் போல அழகிய மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்து காண் போர்க்கு அதிசயத்தை விளைவிப்பதாய் இருந்தது. ஆறு போலும் அகன்ற வீதிகளும், குளிர் சோலைகளும், பொதுமன்றங்களும், பல் பொருள் அங்காடிகளும் கண்ணிற்கு விருந்தைச் செய்தன. இத்தகையான பல பெருமை கட்கும் இருப்பிடமாய் விளங்கிய இந்நகரத்திற்கு அரசனாக விளங்கியவன் பூபாலன் என்பான் ; அவன் மனைவி பிருத்விமதி என்பாள். இவ்விருவரும் சகல நற்குணங்களையும் பெற்று குண சீலர்களாய் விளங்கினர். இவர்கட்கு ஒரே மகளாகப் பிறந்தவள் 'ரூப குண்டலா' என்பவள். பெயருக்கேற்ற அழகி; கல்வியறிவும், புத்தி கூர்மையும் பெற்று விளங்கிய இவளுக்கு ஒரே ஒரு குறை; அதுதான் இவளது செருக்கு; யாரையும் எடுத்தெறிந்து பேசும் குணம்; முன் கோபம். இவற்றைக் கண்டு பெற் றோர் பெரிதும் கவலையடைந்தனர். இவளது எதிர் காலம் என்னாகுமோ? என அஞ்சினர். நய மொழிகளால் அவளைத் திருத்த முயன்றும் அவள் பண்பு மாறுவதாயில்லை.

இந்நிலையில் ஒரு நாள் ரூப குண்டலா தன் தோழிகளுடன் வேடிக்கை விளையாட்டின் நிமித்தமாக நகருக்கு வெளியே யிருந்த மலர் வனம் ஒன்றிற்குச் சென்றாள். அச்சோலையில் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்த அழகிய நானாவிதமான மலர்களைக் கண்டு இன்புற்று திரிந்து கொண்டு வருகின்ற நேரத்தில் ஆங்கு ஓர் புறத்தின் அமைதிச் சூழலில் ஆழ்நிலை தியானத் திலிருந்த பிஹிதாஸ்வர முனிவரையும், அவரது நிர்வாண தோற்றத்தையும் கண்டு அருவருப்புற்றாள். தனது

தோழிகளிடத்தில் அவரைப் பற்றி சொல்லத்தகாத வார்த்தைகளில் நிந்தித்துப் பேசியதுடன் அவர் மேனி மீது காய்ந்த சருகுகளையும், கற்களையும், மண்ணையும் எடுத்து வீசினாள். ஜைன முனிவருக்கு இவ்வாறு தீங்கு செய்வதால் பெரும் பாவம் ஏற்படும் என்று தோழிகள் தடுத்துக் கூறியும் அவள் கேட்கவில்லை. அவள் செயல்கள் தொடர்ந்தன. முனிவரோ யாதொரு சலனமுமின்றி தியானத்தில் ஆழ்ந்திருந்ததால் இவளால் இழைக்கப்பட்ட உபசர்க்கங்களை அவர் அறிந்தாரில்லை. கடைசியாக அவள் தோழிகளுடன் புறப்பட்டு வழி நெடுக அம்முனிவரைப் பழித்துப் பேசிக்கொண்டே அரண்மனை வந்தடைந்தாள்.

நாட்கள் சில நகர்ந்தன; ரூப குண்டலாவின் பொன்வண்ண மேனியில் மாற்றங்கள் தெரிய வாரம் பித்தன; மேனி ஒளி குன்றியது; சதைகள் தடிப்புற்றன. மேனி மத மதப்புற்று, தொடு உணர்ச்சி குறைந்தது; ஆம், கொடுமையான குஷ்ட நோய் வந்து பற்றியது. பெற்றோர்கட்கு இவளது நிலை பெருங்கவலையளித்தது. யாது காரணத்தினால் இக் கர்ம வியாதி வந்துற்றது எனப் புரியாமல் அவர்கள் திகைத்தனர். ஆனால் எழிலின் இருப்பிடமாய் விளங்கி இப்போது இரக்கத்திற்கு உரியவளாகி விட்டிருந்த ரூப குண்டலாவிற்கு மட்டும் இந்நோய் வந்ததற்கான காரணம் எளிதாகப் புரிந்தது. மனக் கர்வத்தினால் தான் முனிபுங்கவருக்குச் செய்த தீங்குகளே இந்நோய் வடிவில் தன்னை வந்து அடைந்துள்ளன என உணர்ந்து மனச் செருக்கு அடங்கியவளாய் அம் முனிவரிடமே மீண்டும் சென்று, தன் பாவத்திற்குப் பிராயச் சித்தம் தேடிக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துடன் தனியளாகவே அம் மலர்ச் சோலைக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

தன் பாதங்களில் வந்து வீழ்ந்து, கண்ணீர் பெருக்கிக் கொண்டிருக்கும் பேதைப் பெண்ணைக் கண்ட அம் மாமுனிவரின் உள்ளம் கசிந்தது. அவள் நல்வழிப் படுத்திட வேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அவளை நோக்கி, "பெண்ணே! இவ்வுலகில் அவரவர்கள் செய்யும் நல்வினை, தீவினைகளுக்கு ஏற்றார் போலவே இன்பங்களும், துன்பங்களும் வருகின்றனவே தவிர, எம் மாலாவது ஒன்றுமில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நீ மனதில் கொள்ள வேண்டுகிறேன். நன்னெறியைக் காட்டும் நீதிமொழிகளைக் கேட்டு நடப்பவர்கள் தப்பாமல் நன்மையை அடைவார்கள். ஆகவே உலக உயிர்கள் யாவற்றிற்கும் நன்மையைத் தருகின்ற சர்வக்ஞனான வீதராகனின் ஆகம மொழிகளின் உண்மைகளை உனக்கு இப்பொழுது தெரிவிக்கிறேன்; கேட்டுப்பயனடைவாயாக!" என்று கூறி, ஜிந தர்மங்களின் இயல்புகளை விரிவாக எடுத்தோதினார்.

இவ்வுலகம் அனாதியானது; ஆரம்பமும் முடிவும் அற்றது; இவ்வுலகில் காணப்படும் பொருள்கள் மெய் யானவை; இவற்றை ஆறு பொருள்களாகப் (ஷட்த்ரவ்யங் கள்) பிரிப்பர். ஜீவனும் ஒரு திரவ்யமே! இது உயிர் அல்லது ஆன்மா எனப்படும். உயிரற்ற பொருள்களை 5 வகைகளாகப் பிரிப்பர். புத்கலம், தருமம், அதருமம், காலம், ஆகாயம் என்பன அவைகள். கருமங்கள் புத்கல வகையைச் சார்ந்ததாகும். இவைகள் உயிருடன் கலப் பதால் உயிரின் தூய்மை கெட்டு, பிறப்பு, இறப்புகளுக்குக் காரணமாக அமைகின்றன. கர்மங்கள் ஜீவனை சேரா திருக்க அவை வரும் வழிகளை அடைக்க வேண்டும். அதுவே செறிப்பு (ஸம்வரை) எனப்படும். இதற்கு உறு துணையாக இருப்பன விரதங்கள்; இல்லறத்தார் பின் பற்றி நடக்க வேண்டியவை அணு விரதம் எனவும்,

துறவறத்தார் பின் பற்ற வேண்டியவை மஹாவிரதம் எனவும் கூறப்படும். கொலை முதலான பாபங்களைத் தன் சக்திக்கு ஏற்றவாறு கொஞ்சம் கொஞ்சமாக விடுதல் அணுவிரதமாகும். மேற் கூறிய பாவங்களே மனத்தினாலும் செய்தல், செய்வித்தல், உடன்படுதல் ஆகியன இல்லாமல் ஒழுகுவது மஹாவிரதமாகும். கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, காமமில்லாமை, பொருள் பற்று இல்லாமையே, ஐந்து மஹாவிரதங்களாகும். நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய இவை மோட்சத்திற்குச் செல்ல வழிகாட்டுபவையாகும். இவ்வகை தத்துவங்களை நம்புதலே சம்யக் தரிசனம் என்றும், நம்பாமலிருப்பது மித்யா தரிசனம் என்றும் கூறப்படும். தினமும் காலையில் நீராடித் தூய்மையுடன் ஜிநாலயம் சென்று தேவபூஜை செய்தபின் குருக்களுக்குச் சேவை செய்து ஆகமங்களை ஓதி தன் சக்திக்குத் தகுந்தபடி குருவினிடத்தில் விரதம் மேற்கொண்டு, தானமும், தருமமும் செய்தொழுக வேண்டும். கருமங்கள் யாவற்றையும் அழித்துயர்ந்த ஜிநேஸ்வரனே முழு முதற் கடவுள்; அவரே யாவற்றையும் உணர வல்லவர்; பசி, தாகம், பயம், சோகம், கோபம். ஆசை, துவேஷம், விருப்பு, வெறுப்பு முதலான பதினெட்டு தோஷங்களினின்றும் நீங்கியவர், மூவுலகத்தையும், முக்காலத்தையும் அறியக் கூடியவர். சக்ரவர்த்திகளாலும், இந்திரர்களாலும், ஞானிகளாலும் வணங்கப்படுகின்றவர்; அப்படிப்பட்ட பகவானை நாள் தோறும் தவறாமல் வழிபட்டு நம் கருமங்களை வெற்றி கொள்ள முனைய வேண்டும். ஸ்ரீ ஆதிநாத பகவானைத் துதிக்கும் பக்தாமரத் தோத்திரத்தை ஸ்வாத்தியாயம் செய்துவரின் எவ்வகை தீமைகளும் நம்மை விட்டு அகலும்'' என்று விரிவாக உரைத்து, பக்தாமர மந்திரத்தையும் ஓதக் கற்பித்து, அவளை அனுப்பி வைத்தார்.

'ரூப குண்டலா' தெளிந்த மனத்துடன் அரண்மனையை அடைந்து முனிபுங்கவர் உபதேசித்த இல்லற

தர்மங்களை நழுவ விடாமல் கடைபிடித்தொழுகி, தன்னைப் பீடித்த மஹாவியாதி நீங்கப் பெற்று, 'சம்சார சாகரம் துக்கம்' என்னும் உண்மையை உணர்ந்து, 'ஆர்யிகா' தீட்சையைப் பெற்று, நோற்று, நற்கதியடைந்தனள்.

**ரூப குண்டலாவின் ரோகம் நீக்கிய சுலோகம்:**

**உச்சைர சோக தரு ஸம்ஸ்ரித முந்மயூக**
**மாபாதி ரூப மமலம் பவதோ நிதாந்தம் |**
**ஸ்பஷ்டோல்ல ஸத்கிரண மஸ்த தமோ விதாநம்**
**பிம்பம் ரவேரிவ பயோ தர பார்ஸ்வ வர்த்தி ‖ (28)**

## 20 ஜயசேநாவின் கதை

அங்கலேஸ்வரம் என்னும் நகரத்தை ஜயசேநர் என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவர் ஜைந தர்மத்தை நேசிப்பவர்; அதன் வழி ஒழுகுபவர்; தேவபூஜை குரு பூஜை முதலியவற்றிலும், ஆகமங்களின் மீதும் அதிக விசுவாசம் கொண்டிருந்தார். அவரது மனைவி ஜயசேநா என்பவள்; அவருக்கு நேரெதிர் மாறான குணங்களைப் பெற்றிருந்தாள்; மித்யாத்துவத்தை விரும்பி ஒழுகுபவள்; சிவன், விஷ்ணு முதலிய கடவுளர்களையும், துஷ்ட தேவதைகளையும், அற்பமான ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஆராதித்து வருபவள். இவ்வாறு இவர்களிருவரும் வாழ்ந்து வரும் காலத்தில், ஒரு நாள் அரசன் வீதிவழியே நிர்வாண தாரியாய் வந்து கொண்டிருந்த குணபூஷண முனிபுங்கவரைக் கண்டு மிகவும் விருப்பத்தோடு எதிர் கொண்டு சென்று வணங்கி அதி விநயத்தோடும் அரண்மனைக்கு அழைத்து வந்து தன் மனைவியை அழைத்து அவரது மெலிவு நீங்கும்படி ஆகாரம் அளித்திட ஏவினான். ஜைந தர்மத்தைத் தூஷிப்பவளும், மித்யா திருஷ்டியுமாகிய அவள், உள் விருப்பமில்லாமலேயே கணவனுக்கு அஞ்சி முநிபுங்கவர்க்கு ஆகார தானம் அளித்தாள். அரசனும் உடனிருந்து ஆகார விஷயத்தில்

யாதொரு குற்றமும் நேர்ந்து விடாதபடி பக்தியுடன் உபசரித்தான். உணவு உட்கொண்ட பின் முநிவர் அரசனுக்கு ஜைந தர்மத்தின் சிறப்பினை எடுத்துக்கூறி அறவுரை பகர்ந்து விட்டுச் செல்லும் தருவாயில் அம் முனிவரின் செவியில் படும்படி அரசி கொடூரமான நிந்தை மொழிகளைப் பேசினாள். "இந்த முநிவன் சிறிதும் மானம் வெட்கமில்லாமல் ஆடு மாடுகளைப்போல அங்கும் இங்குமாக ஆகாரத்திற்குத் திரிகின்றான்; நாடு நகரங் களில் உள்ள வீடுகள் தோறும் பிச்சைக்காக அலைந்து திரிவது போதாது என்று அரண்மனைக்கும் வந்து விட்டான்; அறிவும், மானமும் அற்றவனாகக் காணப்படு கிறான்; இவனைப் பார்க்கவே அருவருப்பு உண்டாகிறது. காட்டில் பவித்ரமான கந்த மூலாதிகளையும், காய்கனி களையும் சாப்பிட்டுக் கொண்டிருக்காமல் இங்கெல்லாம் ஏன் வரவேண்டும்? இவனுக்கு உணவு அளிப்பதே பாபம் தரும் செயலாகும்" என்று இவ்வாறு பழித்துரைத்த வார்த்தைகளைக் கேட்ட முநிவர் சமபாவம் பெற்ற சந்மதி யாளர் ஆதலின் யாதொரு மனத் துன்பமுமின்றி அரண் மனையை விட்டு வெளியேறி நடந்தார்.

சில நாள்கள் கழிந்தபின் முனிவரைப் பழித் துரைத்த பெரும் பாவத்தால் அரசிக்கு 'பெரு நோய்' வந்து மூண்டது. அங்கங்கள் குறைந்து அழுகத் தொடங்கின. அரசன் அவளைப் பார்த்து, இப் பெரு நோய் வந்ததற்கான காரணத்தை வினவினான். அரசி பெரிதும் துன்பமுற்று, 'நாதனே! நன்மார்க்கத்தைக் காட்டும் முனி சாதுவை முன்னொரு நாள் ஆகாரத்திற்கு வருகை தந்த போது தகாத வார்த்தைகளைக் கூறி பழித்துரைத்தேன். அப்பெரும் பாவம் இப்போது பலன் தரத் தொடங்கி விட்டது போலும்! நான் என்ன செய்வேன்!' என்று கூறி கண்ணீர் சொரிந்து புலம்பி அழுதாள். அரசன் அவளுரை கேட்டு மிகவும் கோப

முற்று, "அடிப் பேதையே' ஜைந சாதுவைப் பழித்த பாவம் உன்னைச் சும்மா விடாது; இனியும் பெரும் துன்பங்கள் வரப்போகின்றன பார்; நரகமே உனக்கு காத்திருக்கிறது; இது நிச்சயம்!'' எனக் கடிந்து உரைத்தான்.

'நரகம்' என்னும் சொல்லைக் கேட்ட மாத்திரத் திலேயே அவள் உள்ளமும் உடலும் ஒருசேர நடுங்கின. "ஐயோ! நான் யாது செய்வேன்; என் கொடும்பாவம் தீர வழியே இல்லையா?'' என்று கூறி கண்ணீர் வடிப்பதைக் கண்ட மன்னன் சற்று மனமிரங்கி அவளைத் தேற்றி, அம் முனிவர் தங்கியிருந்த இடத்திற்குப் பல்லக்கில் அனுப்பி வைத்தான்.

முனிவரை அடைந்த ஜயசேநா முனிவருக்குத் தான் செய்த அபராதங்களைக் கூறி, தன்னை மன்னிக்கும் படி வேண்டிக் கொண்டு, தனது துன்பம் தீருவதற்கான உபாயமிருந்தால் சொல்லும்படிக் கேட்டாள். முனிவர் அவள்பால் மனமிரங்கி, "நான் உனக்குத் தெரிவிக்கும் படியான ஜைன தர்மத்தைக் கேட்டறிந்து, பக்தி பூர்வகமாக நடந்து கொள்வாயேயானால் வியாதி குணமடைந்து விடும்" என்று தெரிவித்தார். அதைக் கேட்டதும், 'சுவாமி! நான் அகங்காரத்தினால் செய்த பிழையைப் பொறுத்தருளினீர்; இனி தாங்கள் கூறிய படியே நடந்து கொள்கிறேன்' என்று சொன்னாள். முனிவர் அதற்கு, 'அம்மா! நீ இன்று முதல் மித்யாத்வ தர்மத்தைக் கைவிட்டு, ஜிநதர்மத்தைச் சுவீகாரம் செய்து கொள்வதுடன் நம்மால் கற்பிக்கும் ஸ்தோத் திரத்தை ஸ்வாத்யாயம் செய்து, அதன் மந்திரத்தையும் ஜபம் செய்து வருவதோடல்லாமல் தினந்தோறும் காலையில் இவ்விடம் வந்து எம்மால் மந்திரிக்கப்பட்ட ஜலத்தை உனது சரீரத்தில் தெளித்துக் கொண்டு போவாயேயானால் உனது மகா வியாதி நீங்கும்' என்று

தெரிவித்து பக்தாமர சுலோகத்தையும் மந்திரத்தையும் கற்பித்து அவளை அரண்மனைக்கு அனுப்பி வைத்தார்.

அன்று முதல் அவள் ஜைந தர்மத்தை மேற் கொண்டு, ஜைந சாதுக்களுக்கு நல்ல பரிணாமத்தோடு விநய பூர்வகமாக ஆகாரமளித்தல், பக்தாமர ஸ்தோத் திரத்தைப் பாராயணம் செய்தல், தினம் காலை, மாலை ஜிநாலயம் சென்று பகவானை நமஸ்கரித்து ஜபம் செய்தல் பின்னர் முனிவரிடம் சென்று அவரால் மந்திரிக்கப்பட்ட ஜலத்தை உடல் மீது தெளித்துக் கொள்ளல், ஆகிய நித்திய கடமைகளில் சிறிதும் தவறாமல் ஒழுகி வந்தாள். சில தினங்களிலேயே அவளைப் பீடித்திருந்த 'பெரு வியாதி' யானது நீங்க, மேனி பழைய ஒளியைப் பெற்று விளங்கியது.

இச் செய்தியை உள்ளபடி அறிந்த அந் நகரமக்கள் பலரும் ஜைனதர்மத்தின் மகத்துவத்தையும், பக்தாமரத் தின் பெருமையையும் அறிந்து, மித்யா தர்மத்தைக் கை விட்டு, அம்முனிவரிடமே ஜைன தர்மத்தை ஏற்று, சம்யக் திருஷ்டிகளாய் வாழ்ந்து சுகம் பெற்றார்கள்.

**ஜயசேநாவின் வியாதியை நீக்கிய சுலோகம்:**

**சிம்மாசனே மணிமயூக சிகா விசித்ரே**
**விப்ராஜதே தவவபு கநகாவதாநம் |**
**பிம்பம் வியத் விலஸ தம்ஸு லதா விதாநம்**
**துங்கோ தயாத்ரி ஸிரஸீவ ஸஹஸ்ர ரஸ்மே : ||** (29)

மங்களம்

## 21 கோபால க்ஷத்திரியன் கதை

சிம்மபுரம் என வழங்கப்படும் ஒரு நகரம் முற்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. அந் நகரத்தில் க்ஷத்திரிய குலத்தில் பிறந்த கோபாலன் என்னும் பெயருடைய ஒருவன் ஏழையாக இருந்தான். ஏழ்மையில் வாடிய அவன் ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டு காலம் கழித்து வந்தான் அவன் வழக்கப்படி ஒருநாள் ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு காட்டிற்குச் சென்றான். அவைகளை அங்கே மேயவிட்டு விட்டு ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டு பிடித்த மில்லாத தனது தொழிலைப் பற்றியும் ஏழ்மை நிலையைப் பற்றியும் எண்ணி மனதில் புலம்பிக் கொண்டிருந்தான்.

அந்நேரத்தில் அவ்வழியாக சமாதி குப்தர் என்னும் ஜைன முனிவர் வந்தார். பூர்வ புண்ணிய உதயத்தால் கோபாலனுக்கு அவரைக் கண்டவுடன் உள்ளத்தில் பக்தி அரும்பியது. உடனே அவன் எழுந்து சென்று அவரைக் கை கூப்பி வணங்கி, 'சுவாமி! நான் ஆடு மாடுகளை மேய்துக் கொண்டு மிகவும் தரித்திர நிலையில் வாழ்ந்து வருகிறேன். சில நாள்களில் எனக்கு உணவு கிடைப்பதும் அரிதாகி விடுகிறது. ஏழ்மை அகல ஏதேனும் உபாயம் இருந்தால் கூறியருளுங்கள்' என்று மிகவும் பணிவோடு வேண்டினான்.

முனிவர் அவனுடைய நிலையைக் கண்டு மனமிரங்கி, 'அப்பா! உனக்கு தர்மலாபம் உண்டாகட்டும், செல்வம் கிடைக்கட்டும், சொல் வலிமை வளரட்டும், தோள்களில் பலமும் வீரமும் கைகளில் கொடை வளமும் உண்டாகட்டும். உள்ளத்தில் அருளும் தூய எண்ணமும் தோன்றட்டும். உடலில் அழகு நிலவட்டும்' என்று கூறி ஆசி வழங்கி மேலும் கூறினார்: தர்மம் என்பது எல்லோருக்கும் பொதுவானது, உதவி செய்யக் கூடியது. நீயும் அந்த

தர்மத்தை ஏற்றுக் கொண்டால் அது உனக்கு உதவி கரமாக இருக்கும் என்று கூறி அந்த தர்மத்தின் லட்சணங் களை இவை இவை என எடுத்துச் சொல்லி இறுதியில் பக்தாமர ஸ்தோத்திர பாக்களைக் கற்பித்து அதில் உள்ள முப்பத்து ஒன்று முப்பத்து இரண்டாவது சுலோகங்களின் மந்திரங்களைக் கூறி அவற்றை ஆராதிக்கும்முறை ஆகிய வற்றையும் சொல்லித் தந்து அவைகளைத் தவறாமல் ஜபம் செய்து வரும்படிச் சொல்லி விட்டு அகன்றார்.

கருணாமூர்த்தியாகிய அம்முனிவர் உபதேசித்துச் சென்றபடியே கோபாலன் ஆறுமாத காலம் நாள் தவராமல் காலை மாலை இரு வேளைகளிலும் மந்திரங்களை ஜபம் செய்து வந்தான். ஒரு நாள் இரவு அவன் கனவில் முக் குடை முதலிய பிராதி ஹார்யங்களையுடைய யுகாதி தேவ ராகிய விருஷப தேவரைக் கண்டான். மறுநாள் அதிகாலை எழுந்து நீராடி பக்தியுடன் பக்தாமரத்தின் முப்பத்தோரா வது முப்பத்திரண்டாவது சுலோகங்களை நினைத்து அவற்றின் மந்திரங்களையும் ஜபம் செய்யத் துவங்கினான். அவ்வமயம் சக்ரேஸ்வரி தேவி அவன் முன் தோன்றி, 'பக்தனே! உனது சம்யக்த்வம் கண்டு மகிழ்ச்சி கொண் டேன். உனது ஏழ்மைநிலை வெகு விரைவில் உன்னை விட்டு விலகும். நீ இந்த நாட்டிற்கு அரசனாவாய். அவ் வாறு அரசனான பிறகும் இந்த தர்மத்தை மறக்கமால் அதன் வழி ஒழுகி வருவாயேயானால் மேலும் புண்ணிய பதவிகள் கிடைக்கும்' என்று சொல்லி மறைந்தது. கோபா லன் தேவியின் அருளுரைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியுற் றிருந்தான்.

சில நாட்கள் கழிந்தன. அந்நாட்டை ஆண்டு வந்த அரசன் திடீரென்று மரணமடைந்தான். அவனுக்குப் பிறகு அந் நகரத்தை ஆளக் கூடிய சந்ததியினர் யாருமில்லாமற் போகவே அமைச்சர்கள் யாவரும் ஒருங்குகூடி யாது செய் வது? என சிந்தித்தனர். முடிவாக பட்டத்து யானையை

அலங்கரித்து அதன் கையில் மலர் மாலை ஒன்று கொடுத்து அனுப்புவது என்றும் அவ்யானை யாருடைய கழுத்தில் மலர் மாலையைப் போடுமோ அவனையே அரசனாக்குவது எனவும் தீர்மானித்தனர்.

அதன் படியே ஏற்பாடுகள் நடைபெற்றன. மலர் மாலை ஏந்தியபடி பட்டத்துயானை நகரத்தின் வீதிகளை வலம் வந்தது. கடைசியாக நகரத்திற்கு வெளியே இருந்த காட்டிற்குச் சென்று அங்கு நதிக்கரையில் ஒரு குடிசை அமைத்து அதில் பகவான் விருஷபதேவர் படிமையை நிறுவி அதற்கு அபிஷேகமும் அர்ச்சனையும் செய்துக் கொண்டிருந்த கோபாலன் கழுத்தில் தான் கொண்டுவந்த மலர் மாலையைப் போட்டது. அவ்வமயம் அத்துடன் வந்த புரோகிதர்கள் அவனுக்குப் பொற் குடத்தில் நிரம்பிய நீரை அபிஷேகம் செய்தனர், குடை பிடித்தனர், சாமரை வீசினர். அவ்வமயம் ஆகாயத்தில் ஜய கோஷனை எழுந்தது. யானை தன் துதிக்கையால் அவனைத் தூக்கி தன் மீது அமர்த்தியது. உடன் வந்திருந்த அமைச்சர்களும் மற்றவர்களும் இதைக் கண்டு அதிசயித்தனர். முதலில் தீர்மானித்தபடியே அவனை அந்நாட்டிற்கு அரசனாக்கினர். கோபாலன் தன் புத்தி கூர்மையாலும் அமைச்சர்களது ஆலோசனைகளின்படியும் நாட்டை நன் முறையில் நிர்வாகம் செய்துவந்தான். இந் நாட்களில் அயல் தேசத்து அரசர்கள் பலரும் ஒன்று கூடி அறிமுகம் இல்லாத அவன் எந்த குலத்தவனோ? அவன் ஒழுக்கம் எப்படிப்பட்டதோ? முன் பின் அறியாத ஒருவன் அரசனாவது நமக்கெல்லாம் அவமானம். எப்படியாவது அவனை அரச பதவியிலிருந்து விரட்டிவிட வேண்டும் என்று தீர்மானித்தவராய் அனைவரும் சேர்ந்து நால்வகைப் படைகளுடன் அவனை எதிர்க்க வந்தனர். ஒற்றர்களால் இவற்றை முன்னமேயே அறிந்து கொண்ட கோபாலன் சக்ரேஸ்வரி தேவியின் அருளால் பெரும் படையுடன புறப்பட்டு வந்து பக்தாமர மந்திரத்தின்

தியான பலத்தாலும் முன் செய்த நல்வினைப் பயனாலும் அப்பகைவர்கள் அனைவரையும் துவம்சம் செய்து வெற்றிக் கொடி நாட்டினான். ஜின பகவானின் ஸ்துதியாகிய பக்தாமரத்தால் சொர்க சம்பத்தே கிடைக்குமெனில் ராஜ்ய சம்பத்து கிடைப்பது பற்றி சொல்லவா வேண்டும்?

ஜைன தர்மமாகிய இரத்தினத்திற்கு மூன்று உலகங்களையும் கூட உவமைகளாகச் சொல்ல முடியாது என்பதை அன்பர்கள் நினைவிற் கொள்வார்களாக!

**கோபாலனை அரசனாக்க உதவிய சுலோகங்கள் :**

**குந்தாவ தாத சலசாமர சாருசோபம்**
**விப்ராஜதே தவவபு களதௌத காந்தம்**
**உத்யச் சசாங்க ருசி நிர்ஜர வாரி தாரம்**
**உச்சை ஸ்தடம் சுரகிரேரிவ சாத கௌம்பம் (30)**

**சத்ர த்ரயம் தவ விபாதி சசாங்க காந்த**
**முச்சை: ஸ்திதம் ஸ்தகித பாநு கரப்ரதாபம்**
**முக்தாபல ப்ரகராஜல விவ்ருத்த சோபம்**
**ப்ரக்யாபயத் த்ரிஜகத பரமேஸ்வர த்வம். (31)**

## 22. மதன சுந்தரி அரசியின் கதை

அவந்தி நாட்டின் தலை நகராகிய உஜ்ஜயினி நகரத்தை மஹிபாலன் என்னும் அரசன் ஒரு காலத்தில் ஆண்டு வந்தான். அவன் மனைவி மதன சுந்தரி என்பவள். மிகுந்த அழகியாகவும் நற் குணங்களுக்கு உறைவிடமாகவும் விளங்கி வந்தாள். அதனால் அரசன் அவளிடம் மிகுந்த அன்பும் ஈடுபாடும் கொண்டு இணை பிரியாமல் இருந்தான். இத் தருணத்தில் முற் பிறவித் தீவினையினால் அவள் மேனி முழுவதும் கருமேக வியாதி பரவி ஒளி குன்றியது. காண்போர்க்கு அச்சமூட்டும் வகையில் பயங்கரமான தோற்றம் உண்டாயிற்று. இதைக் கண்டு அரசனும் அரசியும் மிகுந்த மனக் கவலை அடைந்தனர்.

அந்த ரோகம் நீங்கிட சகல விதமான மருத்துவ முறைகளையும் கையாண்டு பார்த்தும் வியாதி நிவர்த்தி ஆகாமற் போகவே அரசனுக்குக் கவலை மிகுந்தது. இந் நிலையில் அந்நகரத்தில் வாழ்ந்து வந்த ஜைநர் ஒருவர் இச் செய்தியைக் கேள்வியுற்று அரசனிடம் வந்து, "அரசே! என் குல குரு ஒருவர் இந் நகரின் புறத்தே உள்ள ஒரு சோலையில் வந்து தங்கியுள்ளார். அவர் பெயர் தரும சேனர் என்பது. அவர் தவ ஆற்றலும், மருத்துவத்திலும் தேர்ந்த புலமையும் பெற்றவர். அவரால் உம் அரசியின் நோய் நீங்கவும் கூடும்" என்று தெரிவித்தார். அவருரை யால் நம்பிக்கை பெற்ற அரசன் தன் பரிவாரங்களுடன் சென்று அவரை வணங்கி, "முனி புங்கவரே! எம் மனைவி யின் மேக வியாதி நீங்கும் உபாயத்தைக் கூறி அருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். முனிவர், "அரசனே அவ் வியாதி நீங்குமா? நீங்காதா? என்று இப்போது என்னால் உறுதியாகச் சொல்ல இயலாது. இன்று போய் நாளை வா" எனப் பணிந்து அனுப்பினார். அன்றிரவு முனிவர் கண்ணுறங்கிய போது, கனவில் சக்ரேஸ்வரி தேவி தோன்றி, 'முனிவரே! நீங்கள் கவலைப் படாதீர்கள். அரசிக்குத் தோன்றியிருக்கும் நோய் மிகச் சாதாரண மானது. அதை எளிதில் உம்மால் குணப்படுத்த முடியும். நாளை அரசன் உன்னிடம் வந்தால் அரசியை அழைத்து வரச் செய்து பக்தாமர சுலோகத்தைத் தியானித்து கமண்ட லத்திலுள்ள நீரை அவள் மீது தெளியுங்கள். அந்நோய் அப்பொழுதே குணமாகிவிடும்" என்று சொல்லி மறைந் தது. பொழுது புலர்ந்தது. முனிவர் தம் கனவில் தோன்றி உரைத்த தேவியின் திருவார்த்தைகளை நினைத்தவாறு அரசனது வருகையை எதிர்பார்த்திருந்தார். சிறிது நேரத் தில் அரசனும் வந்தான். முனிவரைப் பணிந்து தன் மனைவியின் விஷயத்தைக் குறித்து வினவினான். முனி வர் அவனை நோக்கி "அரசனே! உன் மனைவியின் வியாதியைத் தீர்த்து வைக்கிறேன். ஆனால் ஒரு

நிபந்தனை. அவளது நோய் தீர்ந்ததும் நீங்கள் யாவரும் நான் சொல்லும் வார்த்தைக்குக் கட்டுப்பட வேண்டும். என்ன சொல்கிறாய்" என்று கேட்டார். அரசன் மகிழ்ச்சியோடு அதற்கு ஒப்புக் கொண்டான். பிறகு முனிவர் அரசியை அரண்மனையிலிருந்து அழைத்து வரும்படிச் செய்து தன் முன் அமர வைத்து சக்ரேஸ்வரி யட்சி கூறிய படி பக்தாமர சுலோகங்களைத் தியானித்தும் கமண்டலத்தின் நீரை அவள் மீதுதெளித்தார். என்ன ஆச்சர்யம். அப்பொழுதே அவள் மேனி முழுதும் படர்ந்திருந்த கரு மேகம் போன்ற வியாதியானது சூரியனைக் கண்ட பனி போலவும், காற்றால் அலைக்கப்படும் கரு மேகம் போலவும் கடிதில் விலகியது. பழையபடி அழகும் ஒளியும் வந்தடைந்தன. அரசனும் அரசியும் இவ்வற்புதத்தைக் கண்டு பேசவும் முடியாதவராய் ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

அதன் பிறகு முனிவர் அவ்விருவரையும் நோக்கி முன்னர் நீங்கள் ஒப்புக் கொண்டபடி நான் கூறுகின்றவற்றிற்குக் கட்டுப்பட வேண்டும். இந் நாள் வரை நீங்கள் யாவரும் நான் சொல்கிறபடி நல்லறத்தைக் கைகொண்டு ஒழுகுங்கள். உலகத்தில் இதைக் காட்டிலும் சிறந்ததும் மேலானதும் வேறொன்றுமில்லை. எப்பொழுதும் எல்லாருக்கும் இந்த தர்மமே சாஸ்வதமான இன்பத்தைத் தரும் என்று கூறி நோய் நீக்க உதவிய அந்த அற்புத பக்தாமர சுலோகங்களையும் மந்திரங்களையும் கற்பித்து தவறாமல் ஓதி வரும்படி பணித்து அவர்களை அனுப்பி வைத்தார். அரசனும் அரசியும் மற்றும் உடன் வந்திருந்த பரிவாரத்தினரும் பிற ஜனங்களும் அன்றே நல்லறமாகிய ஜிந தர்மத்தை மேற் கொண்டு சம்யக் திருஷ்டிகளாகி ஜிந தர்மத்தை வளர்க்கலாயினர். எங்கும் தர்ம சேனரின் புகழ் பரவியது. ஜைன தர்மம் செழித்தது. மக்கள் யாவரும் நன்மைகள் பெற்று வாழ்ந்தனர். நாட்டில்

தீய செயல்கள் யாவும் நடக்காது ஒழிந்தன. சான்றோர்களின் உள்ளம் போல வானம் தவறாது மழை பொழிய நாடு வளம் பெற்று செழித்தது.

**மதன சுந்தரியின் மாத்துயர் நீக்கிய சுலோகங்கள்**

**கம்பிரதார ரவபூரித திக் விபாகஸ்**
**த்ரைலோக்ய லோக ஸுப சங்கம பூதி தக்ஷ**
**ஸத்தர்ம ராஜ ஜய கோஷண கோஷ கசந்**
**கே துந்துபிர் த்வநதிதே யஸஸப்ரவாதீ** (32)

**மந்தார சுந்தர நமேரு ஸுபாரிஜாத**
**ஸந்தாந காதி குஸுமோக்தர வ்ருஷ்டி ருத்தா**
**கந்தோத பிந்து ஸுப மந்த மருத்ப்ரபாதா**
**திவ்யா திவ பததிதே வசஸாம் ததிர்வா** (33)

## 23 மஹாசேன அரசன் கதை

கற்றவரும் மற்றவரும் புகழுடைய வாரணாசி நகரத்தை முன்னொரு காலத்தில் 'மஹாசேனன்' என்னும் அரசன் ஆண்டு வந்தான். செல்வச் செழிப்பிலும் உடலழகிலும், வலிமையிலும் நிகரற்று விளங்கிய அவனுக்கு, முற்பிறவியில் செய்திட்ட தீயவினையினால் குஷ்டநோய் என்னும் மஹாரோகம் வந்துற்றது. அவனது மெய்யழகும் மேனிஒளியும் தேய்பிறை சந்திரனைப் போல, நாளுக்கு நாள் குறைந்து வரலாயிற்று. உடலெங்கும் புண்கள் ஏற்பட்டு துர்நாற்றம் வீசத்தொடங்கியது. அரசன் தனது இந்த வெறுக்கத் தகுந்த நிலைகண்டு, ஆராத்துயரடைந்தான்.

இத் தருணத்தில், அந் நகரத்திற்கு 'பிஹிதாஸ்ரவ' முனிவர் வருகை தந்தார்; அச் செய்தியை அறிந்து அரசன் அவரிருக்குமிடம் சென்று, அதி பக்தி வினயமுடன் அவரைத் தொழுது வணங்கி, "அடிகளே என்னுடைய

பூர்வபவ கர்ம வசத்தாலும் சதா சிற்றின்ப லீலைகளில் ஈடுபட்டிருந்ததாலும் வெகு அழகாயிருந்த எனது சரீரம் இந்த இழிந்த நிலைக்கு வந்துவிட்டது. இதைத் தாங்கள் தயைகூர்ந்து நீங்குவதற்குரிய வழியைச் சொல்லி அருள வேண்டும்'' எனப் பணிவோடு வேண்டிக் கொண்டான்.

இரங்கத்தக்க அவனது துன்ப உரைகளைக் கேட்ட பஹிதாஸ்ரவ முனிவர் கருணையுடன் அவனை நோக்கி "அரசனே! உன் மனக்கவலையை விட்டொழிப்பாயாக! நீ நாளை முதல் மூன்று நாட்களுக்கும் காலை. மதியம், மாலை ஆகிய மூன்று வேளையும் தவறாமல் என்னிடம் வந்தால், உன் நோய் நீங்க வழி காட்டுகிறேன்'' என்று கூறினார். அரசனும் அது கேட்டு அவர் சொல்லியவாறே மூன்று நாளும், மூன்று வேளையும் முனிவரிடம் வந்தான். முனிவர் பக்தாமரத்தின் இரண்டு சுலோகங்களைச் சுவாத்யாயம் செய்து அவற்றின் மந்திரங்களைத் தண்ணீரில் மந்திரித்து அப்புனிதமான நீரினை அரசனது சரீரத்தின் மீது தெளித்து வந்தார்; நான்காவது நாளே அவனது நோய் குறையத் தொடங்கி கிரகணத்தினால் பீடிக்கப்பட்ட முழு சந்திரன் அம் மறைவு நீங்கி, ஒளிபெறுவதைப் போல அவனது மேனியின் இழந்த அழகும், ஒளியும் படிப்படியாகத் திரும்பின.

அரசன் மிகுந்த மகிழ்ச்சியுடன் முனிவரால் தெரிவிக்கப்பட்ட ஜிநதர்மத்தை அறிந்து அஹிம்சா விரதத்தைக் கைக்கொண்டு சிற்றின்பத்தையும் துறந்து, ஜைநதர்மத்தில் மனப்பூர்வமாக நம்பிக்கை வைத்து தன்னைச் சார்ந்தவர்களையும் அவ்வாறே நம்பிக்கை கொள்ளச் செய்து தனது ஆட்சிக்குட்பட்ட நாட்டின் எல்லைக்குள் யாரும் ஜீவ ஹிம்ஸை செய்யக் கூடாதென ஆணை இட்டான். அனைவரும் அரசனிட்ட கட்டளையை ஏற்றுக் கொண்டு ஜிநவறத்தில் ஒழுகிவரலானார்கள்.

இவ்வாறு சில காலம் கழிந்தபின் அரசன் ஒருநாள் தன் அரண்மனையில் நிலைக்கண்ணாடியின் முன் அமர்ந்து கொண்டு மீண்ட தனது அழகினைப் பார்த்து மனமகிழ்ந்து கொண்டிருந்தான் அவ்வேளையில் வானத்தில் கருமேகக் கூட்டங்கள், காற்றினால் அலைப்புண்டு ஒன்றுகூடுவதும், கலைந்துபோவதுமாக இருத்தன. தற்செயலாக இக் காட்சியைக் கண்ட அரசன் தன் உடலழகும் செல்வமும் கூட இம்மேகக் கூட்டங்களைப் போலவே நிலையற்றவைதாம் என உணர்ந்து, அப்பொழுதே இல்லறவாழ்வில் வெறுப்புற்று வைராக்யம் பிறக்க பிஹிதாஸ்ரவ முனிவரிடமே சென்று தனக்கு முனி தீட்சை அருளும்படி மன்ருடினான். முனிவரும் மிக்க மகிழ்ச்சியோடு விதிக்கிரமப்படி அரசனுக்கு முனி தீட்சையைக் கொடுத்தார். தீட்சையை சுவீகரித்துக் கொண்ட அரசன் வனத்திற்குச் சென்று பிறவி தோறும் தன்னைத் தொடர்ந்து வரும் கருமங்கள் கெடுவதாக! எனச் சிந்தித்து தவ நிலையில் நின்று தேவப் பிறவி பெற்றுயர்ந்தான்.

பூர்வ புண்யோதயத்தின் பயனால் ஜைந தர்மத்தை அவலம்பிக்கின்ற நெறியில் தோன்றிய நாம்,

> "அஹிம்ஸா சத்ய மஸ்தேயம்
> த்யாகோ மைதுன வர்ஜனம்
> பஞ்ச பேதஷு வாக்யேஷு
> சர்வதர்ம ப்ரதிஷ்டிதாம்"

என்பதற் கிணங்க கொலை, பொய் களவு, காமம் முதலியவைகளில் ஈடுபடாமல் இருந்தால் சமஸ்தமாகிய தர்மங்களும் உண்டாகி மோட்சம் அடைவது உறுதி.

**மஹாசேன அரசனை உயர்த்திய சுலோகங்களாவன:**

> **ஸும்பத் ப்ரபா வலய பூரி விபா விபஸ்தே**
> **லோகத்ரயே த்யுதி மதாம் த்யுதி மாக்ஷிபந்தீ**
> **ப்ரோத்யத் திவாகர நிரந்தர பூரி சங்க்யா**
> **தீப்த்யா ஜயத்யபி நிஸாமபி சோமசௌம்யாம். (34)**

ஸ்வர்காப வர்க்க கமமார்க விமார்க்க ணேஷ்ட
ஸத்தர்ம தத்வ கதநைக படுஸ்த்ரி லோக்யா:
திவ்யத்வநிர் பவதிதே விஸதார்த்த ஸர்வ
பாஷாஸ்வ பாவ பரிணாம குணப்ரயோஜ்யா. (35)

அறத்தின் பெருமை

அறத்தினூங் காக்கம் இல்லை யென்பதும் இதனை
ஆய்ந்து
மறத்தினூங் கில்லை கேடும் என்பதும் மதித்திவர்தம்
திறத்தினே அறிந்து கொண்மின் தீக்கதிப் பிறவி அஞ்சில்
மறத்தை நீத் தறத்தோ டொன்றி வாழும் நீர் வையத்
தீரே.
(மேருமந். 747)

இளமையும் வனப்பும் நில்லா இன்பமும் நின்ற அல்ல
வளமையும் வலியும் நில்லா வாழ்வு நாள் நின்ற அல்ல
களைமகள் நேசம் நில்லா கைப் பொருள் கள்வர்
கொள்வர்
அளவிலா அறத்தின் மிக்க தியாது மற் றில்லை அன்றே.
(நரி விருத்தம் 14).

## 24. காமலதாவின் கதை

முன்னொரு கால்த்தில் பாட்னா நகரத்தைத் 'தாத்ரிவாகனன்' என்னும் பெயருடைய அரசன் ஆண்டு வந்தான். நீதி தவறாமல் செங்கோலாட்சி புரிந்து வந்த அவனுக்கு மனைவி தாத்ர சேனா என்பவள். மிகுந்த சீலாசாரமுடையவளாய் விளங்கினாள். கணவனும் மனைவியும் கருத்தொருமிக்க காதலர்களாய் இல்லறம் நடத்தி வந்தனர். அவர்களுக்கு நீண்ட காலம் மகப் பேறு இல்லாமல் போகவே மிகவும் மனத் துன்பமுற்ற னர். இறுதியாக முற்பிறவியில் செய்திட்ட சிறிது நல் வினையால் அரசி கருவுற்றாள். உவகையில் ஒன்பது

திங்களும் கழிந்த பின் அவளுக்கு பெண் குழவி ஒன்று பிறந்தது. அக் குழவி பெரிதும் எழில் கொண்டிருந்ததால் அதற்குக் 'காமலதை' எனும் அழகுப் பேரிட்டு அன்பும் ஆசையும் பொங்க வளர்த்து வந்தனர். உற்றவரும் பெற்றவரும் சீராட்ட வளர்மதி போல் வளர்ந்து மங்கைப் பருவமடைந்த அந் நல்லாள் அழகு சுந்தரி என்றும் திரிபுவன சுந்தரி என்றும் மக்களால் அழைக்கப்பட்டு பாராட்டப்பட்டாள். அரசன் அவளது ரூபலாவண்யத்திற்கேற்ற ஒருவனைத் தேடிக் கொணர்ந்து திருமணம் நிகழ்த்துவித்தான். இங்ஙனம் காமலதையின் இல்லறம் இனிய பயணமாகத் தொடங்கிய நாளகத் தொரு நாள் தன் தோழியர்களுடன் பொழில் விளையாட்டிற்குச் சென்று களித்தாடி விட்டு மீள்கின்ற போது வழியிடையிருந்த திறந்ததோர் ஜிநாலயத்தைக் கண்ணுற்றாள். அதன் கட்டட வேலைப்பாடுகளைக் காண தோழியர்களுடன் உள்ளே நுழைந்தாள். ஆங்கு செதுக்கப்பட்டிருந்த சிற்பங்களின் அழகில் மனத்தைப் பறி கொடுத்தவளாய் ஆலயத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்த போது உள்ளே நிர்வாண கோலமாய் நிற்கும் தீர்த்தங்கரர்களின் கல் படிமங்களையும் உலோகப் படிமங்களையும் கண்டு சட்டென முகஞ் சுளித்தாள். இவ் வகை உருவங்களையும் வணங்குவரோ? இவ் வணக்கங்கள் மனிதர்க்கு யாது பயனைக் கொடுக்கும்? நிர்வாண தாரிகளாய் நிற்கும் மூர்த்திகளை வணங்குவது காட்டுமிராண்டித்தனமல்லவா? என்று இவ்வாறு தன் தோழியர்களுடன் உரையாடிக் கொண்டே வெளியே வந்தவள். ஆங்கு 'சீலபூஷணர்' என்னும் முனி புங்கவர் திகம்பர கோலத்தில் நின்று தவம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து பெரிதும் வெறுப்புற்று, 'என்னே இவன் கோலம்? மானமும் வெட்கமும் இன்றி ஆடையணியாமல் நிற்கின்றானே! தன் பசியைத் தணித்துக் கொள்வதற்காக பிச்சை வேண்டி இவன் இவ் வேஷத்தைத் தாங்கி மக்கள் பலரும் வந்து போய்

கொண்டிருக்கும் இவ்வாலயத்தின் வாயிலில் நிற்கிறான் போலும்! அறிவில்லாத மக்கள் இவனை வணங்கி ஆனந்த மடைகிறார்களே. இது மிகவும் முட்டாள்தனமான செயலா யிருக்கிறதே!' என்றெல்லாம் இழித்துரைத்தவாறு நகைத் துக் கொண்டே தோழியருடன் அவ்விடத்தை விட்டு வெளியேறினாள்.

வீதிக்கு வந்த அக்கணமே அவள் மேனியெங்கும் மேகவியாதியாளனைப் போல ஒரு வகை மினு மினுப்பு பரவியது. உடல் பருக்கத் தொடங்கியது. கண்கள் பார்வை இழக்க செவிப் புலனும் அடைபட்டன. திடீரென்று ஏற்பட்ட இம் மாற்றத்தால் காமலதா மன அதிர்ச்சிக்குள்ளாகி குழப்பமடைந்தாள். வெறி பிடித்த வள் போல ஓடத் தொடங்கினாள். உடன் வந்த தோழி யர் அவளை ஓட விடாமல் தடுத்து கட்டிப் பிடித்து பல்லக் கில் ஏற்றி அரண்மனைக்குக் கொண்டு சென்றனர். சிரித்து விளையாடிக் கொண்டே பொழிலாட்டிற்குச் சென்ற மகள் இவ்வகை அலங்கோலத்துடன் திரும்பிய தைக் கண்டு பெற்றோர் மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்த னர். பின்னர் பணியாளரால் மூர்ச்சை தெளிவிக்கப்பட்டு ஒருவாறு தெளிந்து எழுந்த அவர்கள் நகரிலுள்ள சிறந்த மந்திரவாதிகளையும் மருத்துவர்களையும் அழைப்பித்து மகளுக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்கும்படி கேட்டுக் கொண்டனர். அவர்கள் எவ்வளவு முயன்றும் காமலதா வின் துயரம் அகலுவதாயில்லை.

இந் நிலையில் செய்தி கேட்டு அவளைக் காண வந்தவர்களில் ஒரு சிராவகர் அரசனை நோக்கி, "அரசே! உம் மகள் இந் நிலையை அடைந்ததற்கு ஏதேனும் ஒரு காரணம் இருந்தாக வேண்டும். இன்று அவள் அரண் மனையை விட்டு எங்கு சென்றாள்? என்ன நடந்தது? என்பதை நான் அறிந்திடும் வகையில் கூறுவீராக!" என்று கேட்டார். அப்போது காமலதாவுடன் வந்த

தோழியருள் ஒருத்தி தாம் காலையில் சோலைக்கு விளை யாடச் சென்று மீளும் போது ஜினாலயத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை விவரமாக எடுத்துக் கூறினாள்.

அவைகளைக் கேட்ட அந்த சிராவகர் அரசனை நோக்கி, "அரசே! நின் மகளுக்கு இந்நிலை ஏற்பட்டதற்கு ஜைந முநிவரை இகழ்ந்து பழித்துரைத்தமையே காரண மின்றி வேறொன்றுமில்லை. உத்தம சாதுக்களைப் பழித்த பாவம் உடனே பயன் விளைக்கும் என்பதில் ஐயமில்லை; தாங்கள் இப்பொழுதே அவரிடம் மகளை அழைத்துச் சென்று பிழை பொறுத்திட வேண்டுங்கள்; இத் துன்பத் தினின்றும் நீங்கிட அவ்வாசாரியரே உபாயம் கூறிடுவார்'' என மொழிந்தார்.

அம்மொழி கேட்ட அரசன் மனம் நடுங்கினான். அப்பொழுதே மகளை அழைத்துக் கொண்டு ஜினாலயம் அடைந்து விருப்பு, வெறுப்பில்லா விமலன் பாதம் பணிந்து தன் மகள் செய்திட்ட அபசாரங்களைப் பொறுத்தருளு மாறும், அவள் அடைந்துள்ள இத் துயர் அகலும் உபாயம் காட்டுமாறும் வேண்டினான்.

முனிவர் அவனுரை கேட்டு கூறலுற்றார்: "அரசனே! வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத் தவன் தினை அறுப்பான் என்பது முது மொழியல்லவா? அது போல நற்காரியங்களைச் செய்தவர் நன்மையே அடைவதும் தீயவற்றைச் செய்பவர் தீமையையே அடை வதும் இயல்பேயல்லவா? அதனைத் தடை செய்ய யாரா லாகும்? ஆயினும், உன் மகளடைந்துள்ள இடுக்கண் நீங்கிட வழிஒன்று தெரிவிக்கிறேன், கேள். ஜிந தர்மமே உலகத்தில் சிறந்தது. அப்படிப்பட்ட தர்மத்தைப் பின் பற்றி ஒழுகி இல்லறத்தார், துறவறத்தார் இருவர்க்கும் நான்குவித தானங்களான அன்ன தானம், அபய தானம், ஔஷத தானம், சாஸ்திர தானம் ஆகியவற்றைப் புரிய

வேண்டும். முனிபுங்கவர்களையும், தீர்த்தங்கரர்களையும், பழித்துப் பேசாமல் அவர்களுக்குச் சேவை செய்து வந்தால் பாவ கர்மம் நாசமடையும். புண்ணிய பந்தம் வந்து சேரும். எல்லா ஜீவன்களுக்கும் உதவி செய்வது ஆதரவற்றவர் களுக்கும் உதவி செய்வது காப்பாற்றுவது இவைகளெல் லாம் சிராவக தர்மம் எனப்படும். ஆதலின் அரசனே! உன் மகள் அறியாமையினால் ஜின பகவானையும் எம்மை யும் ஏளனம் செய்து பழித்துப் பேசிய காரணத்தினால் இத்தகைய துன்பத்திற்கு ஆளானாள். அவை நீங்கும் பொருட்டு முன்பு நான் தெரிவித்த தருமங்களைக் கைக் கொண்டு நடப்பீர்களேயானால் துக்கம் அகலும், சுகம் கிடைக்கும்'' என்று உபதேசித்தருளி காமலதாவின் துன்பம் நீங்கும் பொருட்டு 'உந்நித்ர ஹேம' எனத் தொடங்கும் பக்தாமர சுலோகத்தை ஜபம் செய்து புது நீரில் மந்திரித்து அரச குமாரியின் மீது தெளித்தார். அவ் வளவிலேயே சரீர வீக்கமும் மினு மினுப்பும் குறைந்து சகல துன்பங்களும் நீங்கி பழைய உடல் நலமும் எழிலும் வந்துற்றன. காமலதா மிகுந்த மகிழ்ச்சியடைந்து தாம் அறியாமையால் செய்திட்ட பிழைகளை மன்னிக்கும்படி வேண்டி முனிவரின் திருவடிகளில் விழுந்து பன்முறை யும் வணங்கி எழுந்தாள். அரசனும் பெரு மகிழ்ச்சியுற்றான். அப்பொழுதே அனைவரும் ஜைன தருமங்களை ஏற்றுக் கொண்டு உத்தம சிராவகாசாரங்களைக் கைக் கொண்டு நற் புகழோடு சிறந்து விளங்கினர்.

**காமலதாவைச் சுகமுறச் செய்த பக்தாமர சுலோகம் :**

**உந்நித்ர ஹேம நவபங்கஜ புஞ்ச காந்தி**
**பர்யுல்லசன் நகமயூக ஸிகா பிரா மௌ |**
**பாதௌ பதாநி தவயத்ர ஜிநேந்த்ர தத்தா**
**பத்மாநி தத்ர விபுதா பரிகல்ப யந்தி ||** **(36)**

## 25. ஜிநதாசர் கதை

இந் நாவலந்தீவில் சிறந்து விளங்கிய நகரங்களுள் அக்காலத்தில் ஸ்ரீ புரமும் ஒன்று. அந் நகரில் ஜிநதாசன் எனும் பெயருடைய வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். பெருஞ் செல்வனாயும் வித்வானாயும் விளங்கிய அவன் முற் பிறவித் தீவினையால் விரைவில் தரித்திர நிலையை அடைந்தான். தனது தரித்திரத்திற்கு காரணம் யாதாயிருக்கும்? என சிந்தித்தபடி எப்போதும் மனம் வருந்தியவாறு இருந்தான். அந் நிலையில் ஒரு நாள் அந் நகரின் ஜிநாலயத்தில் அபய சந்திர முனிவர் வந்து தங்கியிருக்கிறார் என்பது அறிந்து அவரிடம் சென்று பணிந்தெழுந்து அவருரைத்த அறவுரைகளால் மனம் தெளிந்து தனது சக்திக்குத் தக்க விரதங்களை அவரிடமிருந்து ஏற்றுக் கொண்ட பின் அவரை நோக்கி, 'சுவாமி நான் வறுமையால் மிகவும் துன்பப் பட்டுக் கொண்டிருக்கிறேன். இத் துன்பம் அகன்றிடத் தக்க உபாயம் ஒன்றைக் கூறியருளுக' எனப் பணிவோடு விண்ணப்பித்துக் கொண்டான்.

அவனுரை கேட்ட முனிவர் 'அப்பா! அவனவன் செய்த புண்ணிய பாபங்களுக் கீடாகவே ஒவ்வொருவனும் சுக துக்கங்களை அனுபவிக்கிறான். உனக்கு வந்துற்ற இத்துன்பத்திற்கு நீ செய்த தீவினையே காரணம். அத் தீவினை அகல ஜிநேஸ்வரனை எப் பொழுதும் வணங்கி பூஜிக்க வேண்டும். அதனால் நல்ல பரிணாமங்கள் உண்டாகும். உன் சக்திக்குத் தகுந்தபடி விரதங்களைக் கைக்கொண்டு சத் பாத்திரமறிந்து தானம் செய்து வருவாயேயானால் உனது தரித்திர நிலை தீரும். அதோடு நான் உனக்கு இப்போது கற்பிக்கப் போகும் பக்தாமர சுலோகத்தையும் தியானித்து ஆராதித்து வருவாயேயானால் மேலும் நன்மைகள் மிகும். புண்ணியமும் உண்டாகும்'' என்று கூறி "இத்தம் யதா தவ விபூதி"

எனும் பக்தாமர சுலோகத்தைக் கற்பித்து அதைத் தியா னிக்கும் முறைகளையும் கூறி அவனை அனுப்பி வைத்தார்.

ஜிநதாசனும் அன்று முதல் முனிவர் உபதேசித்த படியே பக்தாமர சுலோகத்தையும், மந்திரத்தையும் சாதனை புரிந்து வந்தான். அவனது இந்த சம்யக்த்வத்திற்கு (நற்காட்சிக்கு) மனமுவந்த சக்ரேஸ்வரி தேவி அவன் முன் தோன்றி அவனுக்கு விலை மதிப்பிடுதற்கு அரிய தோர் நவரத்தின மாலையைத் தந்து இதனால் உன் வறுமை நீங்கும் சுகம் வந்து வாய்க்கும்'' எனக் கூறி மறைந்தது.

நவரத்தின மாலையைப் பெற்று மகிழ்ந்த ஜிந தாசன் அதை எடுத்துக் கொண்டு வாணிகம் செய்யும் நோக்கத்துடன் வெளியூர் பயணம் சென்ற போது வழியில் காவலர்களால் கள்வனெனப் பிடிக்கப்பட்டு அரசனிடம் கொண்டு நிறுத்தினர். அரசன் அவனது தோற்றப் பொலிவைக் கண்டு இவன் கள்வனாக இருக்க முடியாது. உத்தமனாகவே இருக்க வேண்டும். என நிச்சயித்து அவனிடம் இரத்தின மாலை வந்த வரலாற்றைக் கூறும் படி ஆணையிட்டான். அவனும் தான் செல்வனாயிருந்து தரித்திரவானாகிய நிலையையும் முனிவர் அறவுரையாலும் சக்ரேஸ்வரியின் அருளாலும் தனக்கு இந்த மாலை கிடைத்த வரலாற்றையும் விவரமாக எடுத்துக் கூறினான்.

அதைக் கேட்டு அரசன் அவனிடம் மிகுந்த அன் புடையவனாகி அவனைத் தன் அமைச்சர்களில் ஒருவ னாக்கிச் சிறப்பு செய்ததோடன்றி தானும் ஜிந மார்க் கத்தை விரும்பி ஏற்று நாடெங்கும் ஜைந தர்மம் பரவிட வழி வகைகள் செய்தான். அமைச்சனாகிய ஜிநதாசன் தன்னுடைய பொருளைக் கொண்டு நாடெங்கும் பல ஜிநாலயங்களை எழுப்பி விழாவும் பூஜைகளும் தவறாமல்

நடந்திட தகுந்த ஏற்பாடுகளைச் செய்து பெரும் புகழும் புண்ணியமும் அடைந்து சிறந்து வாழ்ந்தான்.

ஜிநதாசனை அமைச்சனாக்கிய அரும் சுலோகம்:

இத்தம் யதா தவ விபூதி ரபூஜ்ஜிநேந்த்ர
தர்மோப தேசந விதௌ நததா பரஸ்ய |
யாத்ருக் ப்ரபாதிநக்ருத: ப்ரஹ தாந்த காரா
தாத்ருக்குதோ க்ரஹகணஸ்ய விகாஸி நோபி || (37)

## 26. சோமராஜன் கதை

பாடலிபுத்திரம் என்னும் நகரத்தை ஒரு காலத்தில் சோமராஜன் என்பவன் அரசாண்டு வந்தான். முற் பிறவித் தீவினையினால் இளமையிலேயே அவன் பெற்றோர்களை இழந்தான். அரசும் செல்வமும் அவனை விட்டு அகன்றன. இந்நிலைக்கு யாது செய்வது? என அறியாதவனாய் பெரும் மனக் கவலையினால் பீடிக்கப் பட்டு துன்பக் கடலில் ஆழ்ந்தான். அது சமயம் அவ் வூரின் ஜிநாலயத்திற்கு ஸ்ரீ வர்த்தமான முனிவர் வருகை தந்துள்ளார் எனக் கேள்விப்பட்டு ஆங்கு சென்ற சோம ராஜன் அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ''சுவாமி! நான் எந்த பாவத்தால் இந்த இழி நிலையை அடைந் தேன் என்று தெரியவில்லை. என்னைப் பெற்றவரையும் இழந்தேன், அரச செல்வத்தையும் இழந்து அல்லலுற்று வாடுகிறேன். எனக்கு இத் துன்பக் கடலிலிருந்து கரை யேறும் வழியினைக் காட்டியருள்வீராக! என்று மனமுருக வேண்டினான். முனிவர் அவனுரை கேட்டு 'மகனே நீ அனுபவித்து வருகின்ற இத்துயரத்திற்கு முற்பிறவியில் நீ செய்த தீவினையேயன்றி வேறு காரணமில்லை. நான் கூறுகின்ற அறத்தையும் பக்தாமர சுலோகத்தையும் மந்திரத்தையும் நீ பக்தி பூர்வமாக நாள்தோறும் தியா னித்து வருவாயேயானால் உனது அல்லல் ஒழியும்'' என்றருளி கீழ்க்கண்டவாறு அருளறம் உரைத்தார்.

'விபுலம் ராஜ்யம் ரோகைர்வர்ஜிதம் ரூபமாயுஷ்யம் தீர்கம்
அந்யதபி தத் நசுகம் யத் ஜீவதயா ந கலு ஸாத்யம்.'
(குணாகரசூரி)

'பரந்த இராஜ்யம் ஆரோக்கியமும் உடற்கட்டும் அழகும் நீண்ட ஆயுளும் பெறப்படுவது கருணை மற்று நல்லறத்தின் மூலமாகும்.'

'ஜிநேந்திர பூஜா குரு பர்யுபாஸ்தி
ஸத்வாநு கம்பா ஸுப பாத்ர தானம்
குணாநு ராக: ஸ்ருதி ராக மஸ்ய
ந்ரு ஜன்ம வ்ருக்ஷஸ்ய ஃபலா ந்யமுநி. (குணாகரசூரி)

'ஜினபகவானை வழிபடுவது குரு சேவை செய்வது உயிர்கள் பால் கருணை கொள்வது தவத்தோருக்கு ஆகாரம் அளிப்பது நற்குணமுள்ளவரை பாராட்டுவது ஆகமத்தில் நன் நம்பிக்கை வைப்பது ஆகியவை மனித பிறவியில் என்றும் மரத்தின் கனிகளாகும்.'

'சர்வே வேதா நதத்குர்ய: ஸர்வேயக்ஞாஸ்ச பாரத
ஸர்வே தீர்த்தாபிஷேகாஸ்ச யத் குர்யாத் ப்ராணிஞம்தயா'
(மகாபாரதம், சாந்திபர்வம்.)

'சோதன் மாதா' எனத் தொடங்கும் சுலோகத்தை யும் அதற்குரிய மந்திரத்தையும் சொல்லி தியானிக்கும் முறையையும் கற்பித்தருளினார்.

சோமராஜன் அன்று முதல் முனிவரர் சொன்ன வாறே பக்தாமர மந்திரத்தை பக்தி சிரத்தையோடு ஓதி வரலானான். அதனால் அவன் மனத்தில் சம்யக்த்வத் தின் சிறப்பும் அச்சமின்மையும் தோன்றின. மனத் தெளிவும் ஏற்பட்டது. எனினும் வறுமைத் துயர் சூழ்ந்த நிலையில் சுற்றத்தினர் நடுவில் வாழப்பிடிக்காமல் அயல் மாநிலங்கட்குப் பயணம் மேற் கொண்டு அழகும் வளமும் கொழிக்கும் அஸ்தினாபுர நகரத்திற்கு வந்து சேர்ந்தான்.

அவன் வந்து சேர்ந்த அந்நாளில், அஸ்தினாபுரம் அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. காரணம், அந்நகரை ஆளும் அரசனுடைய பட்டத்து யானைக்குத் திடீரென்று மதம் பிடித்துக் கொண்டதால் கட்டுத் தறியை அறுத்துக்கொண்டு பாகர்களுக்கும் அடங்காமல் வீதிகளில் புயலென ஓடி எதிர்ப் படுவோரை அழித்தும், அச்சுறுத்தியும் நகரத்தைக் கலக்கிக் கொண்டிருந்தது. மக்கள் யாவரும் வீதிகளில் செல்லவும் அஞ்சி, வீடுகளில் அடங்கிக் கிடக்க நேரிட்டது. அரசன் கணக்கற்ற வீரர்களையும், மல்லர் களையும் அனுப்பி மதயானையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றும் முடியாமற் போகவே மனஞ்சோர்ந் தவனாய், தன் அமைச்சனது ஆலோசனைக்கு இணங்க இப்பட்டத்து மதயானையை அடக்குபவர் யாவராயினும் அவர்க்கு தன் நாட்டில் கால் பங்கையும், தன் ஒரே மகளை யும் தந்து மணம் முடிப்பதாக நாடெங்கும் முரசறைவித் தான். இச் செய்தியறிந்த சோமராஜன் நேராக மத யானை ஆடிவரும் வழியில் ஏகி சிறிதும் அச்சமின்றி நின்றான். குன்றெனத் தோன்றி, இடி போல் முழங்கி, மழைத் துளி போல் மதநீர் தெளிப்ப ஓடிவந்த மதயானை, இவனைக் கண்டு பெருங்கோபத்துடன் அணுகியது. உடனே, சோம ராஜன் முனிவர் தனக்குப் போதித்த பக்தாமர மந்திரத்தை அதன் செவிபட ஓதவும் அதன் மதமடங்க அமைதியுற்று சோமராஜனை வணங்கி நின்றது. வணங்கிநிற்கவும், அவன் அவ்யானையின் மடல்போலும் விரிந்த செவியைப் பற்றி ஈர்த்துக் கொண்டு சென்று அரசன் முன் விழுந்தான். அவனுடன் வந்த அரசனது பணியாளர்கள் அரசனுக்கு நடந்ததை நவின்றனர். அரசன் இதைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு சோமராஜனை மிகவும் பாராட்டிப் பேசி னான். அவையோர் அவனைப் புகழ்ந்து ஆரவாரம் செய் தனர். எனினும் அரசனின் நினைவு வேறொரு தடத்தில் செல்லத் தொடங்கியது. முன்பின் அறிமுகம் இல்லாத இவனுக்குத் தன் குணவதியாகிய புதல்வியை எவ்வாறு

தருவது? இவனது குலம், கோத்திரம் யாதெனவும் தெரிய வில்லை. இவனுடைய தோற்றமோ மிகவும் வறுமை நிலையைக் காட்டுகிறது. இப்படிப் பட்டவனுக்கு மகளைத் தருவதோடு, நரட்டின் கால் பாகத்தையும் தருவதென்பது மிகவும் அறிவீனமான செயலாகும்'' என்று இவ்வாறெல் லாம் அரசன் நினைத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் குணவதி சோமராஜனை நேரில் கண்டதும் இவனது ஆண்மைக்குத் தன் மனத்தைப் பறிகொடுத்தாள்; மணந் தால் அவனையே மணப்பதன்றி வேறுயாரையும் மணக்கக் கூடாது என நெஞ்சில் உறுதி பூண்டாள். அவளுக்குத் தன் தந்தையின் எண்ணம் என்னவாக இருக்கக் கூடும் என்பது ஒருவாறு தெரிந்து போயிற்று. அவளது தீர் மானம் பின்னும் உறுதிபெற்றது. அரசனோ, சோமராஜ னுக்கு அவன் விரும்பும் பெரும் செல்வத்தை ஏதேனும் கொடுத்தனுப்பி விடவேண்டும் என்ற முடிவில் நின்றான்.

இவ்வாறாக நாட்கள் சில நகர்ந்தன. குணவதி இதனிடையில் சோமராஜனின் நினைவால் உண்பதிலும் உடுப்பதிலும் சிறிதும் நாட்டமின்றி உடல் இளைக்கத் தொடங்கினாள். அவளது நோய்க்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளாத இறையவன் நாட்டிலுள்ள மந்திர வாதிகளையும், மருத்துவர்களையும் அரண்மனைக்கு அழைத்துவரச்செய்து அவளுக்குச் சிகிச்சை செய்து பார்த் தும் பயனின்றி போக அரசன் மிகவும் மனம் நொந்து போய் தன் அமைச்சருடன் ஆலோசித்தபின் தன்மகளுக் குற்ற நோயைத் தீர்ப்பவர்களுக்கு அவளை மணம் செய்து வைத்து, நாட்டின் சரிபாதியையும் தருவதாக மீண்டும் முரசறைந்து தெரிவிக்கும்படி செய்தான்.

முன்போலவே, இப்போதும் சோமராஜன் அரசவை யில் தோன்றி அரசகுமாரியை அழைப்பித்து மந்திரங்கள் எழுதப்பட்ட மணையில் அவளை அமர்வித்து மந்திரிக்கப் பட்ட நீரினை அவள்மேனியில் படும்படி தெளித்து அந்

நீரினை சிறிது உள்ளுக்கும் அருந்தும்படிச் செய்ததோடு, பக்தாமர மந்திரத்தை அவள் செவியில் படும்படி ஓதினான். அவ்வளவிலேயே அவளது வாடிய முகம் அலர்ந்தது; இதழ்களில் புன்னகை பூத்தது. கொடிய நாகப் பாம்பின் நஞ்சானது மந்திரத்தால் நீங்குவது போல, அவளைச் சூழ்ந்திருந்த சோகம் விலகிடவும் அவனைக் கண்டு நாணித் தலை கவிழ்ந்தாள்.

இக் காட்சியைக் கண்ட அரசன் தன் மகளது மனக் கருத்தை தெள்ளிதின் உணர்ந்தான். அப்பொழுதே சோமராஜனை அன்போடு அருகே அழைத்து ஆரத்தழுவி உத்தமனாகிய உன் பிறப்பு வரலாற்றைக் கூறுக! வெனக் கேட்டறிந்ததும் பெருமகிழ்ச்சி கொண்டு தன் நாட்டின் பாதியையும் அவனுக்கீந்து, மகளையும் மணம்புரிந்து வைத்துச் சிறப்பு பல செய்தபின் சோமராஜனை அவனது நாட்டிற்கே திரும்பச்செய்து அவனது அரசுரிமையையும் பெறவைத்து பெருமைகளை உண்டாக்கினான்.

**யானையை மதமடக்கிய சுலோகம்:**

**சோதன்மதா விலவிலோல கபோலமூல**
**மத்தப்ரம ப்ரமரநாத விவ்ருத்த கோபம் |**
**ஐராவதாப மிப முத்தத மாபதந்தம்**
**த்ருஷ்ட்வாபயம் பவதிநோ பவதாஸ்ரி தாநாம் ॥ (38)**

## 27. தேவராஜன் கதை

ஸ்ரீ புரம் என்னும் பெயருடைய நகரத்தில் முற் காலத்தில் தேவராஜன் என்னும் வணிகன் பெருஞ் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தான். அவன் இயல் பாகவே ஜைன தர்மத்தில் தோய்ந்த மனம் உடையவனாய் ஸ்ரீவீர சந்திர முனிவரிடம் அனேக விரதங்களைக் கைக் கொண்டு பக்தாமர சுலோகங்களையும் அவைகளுக்குரிய மந்திரங்களையும் முறையாகக் கற்று நாள்தோறும் காலை

மாலை இரு வேளைகளிலும் தவறாமல் தியானித்து வந்தான்.

அவர் உரைத்த உபதேசங்களாவன :

அருகதேவனை வழிபடு. விரதங்கள் பால் நம்பிக்கை வைத்து அவைகளைக் கடைப்பிடி. ஜபம் தவம் ஆகியவைகளைச் செய். நல்ல பாத்திரத்திற்கு தானம் வழங்கு. துறவியருக்கு சேவை செய். முக்தி நெறியைக் கடைபிடி என.

ஒரு நாள் அவன் சக வணிகர்கள் சிலருடன் வாணிக நிமித்தமாக சாகேதபுரம் நோக்கிப் புறப்பட்டான். பயணம் பல நாட்கள் நீடித்தது. இடையிலே ஒரு பெருங் காட்டினைக் கடந்து செல்ல நேரிட்ட போது மாலை நேரமாக இருள் கவிய இரவு வந்தது. வணிகன் நண்பர்களுடன் அவ்வடர்ந்த காட்டிலேயே தங்கினான். கொடிய காட்டு விலங்குகளின் ஓசைகள் அவர்களை உறக்கம் வர விடாமல் உலுக்கின. இந் நிலையில் பொழுதும் புலர்ந்தது. புள்ளினங்களும் புறப்பட்டன. தேவராஜன் நண்பர்களுடன் மீண்டும் பயணம் தொடங்கிய போது அவர்கள் முன் திடீரென்று ஒரு சிங்கம் தோன்றியது. அதன் கன்னத்தில் பட்ட காயத்திலிருந்து இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது.

வணிகர்கள் அனைவரும் இனி பிழைக்கப் போவதில்லை என எண்ணி நடு நடுங்கி செய்வதறியாது திகைத்து நின்றனர். அப்போது தேவராஜனுக்கு முனிவர் தனக்குக் கற்பித்த பக்தாமர சுலோகமும் மந்திரமும் நினைவிற்கு வர அச்சமில்லாமல் அச் சிங்கத்தின் அருகில் சென்று ‘பிந்நேப கும்ப’ என்னும் சுலோகத்தை ஓதி மந்திரங்களையும் கூறினான். அவ்வளவிலேயே அது நிலை பெயரவும் இன்றி அமைதியுடன் நின்றது. தேவராஜன்

கூறுவான்: 'ஹே! சிங்கராஜனே! நீ இந்நாள் வரை கணக் கற்ற உயிர்களைக் கொன்ற காரணத்தினால் கோரமான துன்பத்தை அனுபவித்து வருகிறாய். முற் பிறவிகளிலும் நீ செய்து வந்த இத்தகைய பாவங்களாலேயே உனக்கு இந்த இழி பிறவி வாய்த்திருக்கிறது. இத்தகு தீய செயல் களை இதோடு நீ நிறுத்தி விடுவாயேயானால் வரும் பிறவிகளிலாவது உனக்கு நற் பிறவிகள் வாய்க்கும். சுகம் கிடைக்க ஏதுவாகும்' என்று கூறினான். அவன் கூறிய இதமான உபதேச மொழிகளைக் கேட்ட அச் சிங்கம் முற் பிறவியில் அது செய்திட்ட ஏதோ ஒரு சிறு புண்ணியத் தால் உபதேசங்களின் உட் பொருளை உணர்ந்து அசை யாமல் நின்றது.

தேவராஜன் அவ் விலங்கிற்கு 'நல்வினை பிராப்த மாயிற்று' என உணர்ந்து கொண்டு தன் நண்பர்களுடன் மேற்கொண்டு பயணம் தொடர்ந்தான்.

சாகேதபுரம் வந்தடைந்த அவன் அங்கு பல நாட்கள் தங்கி பெருஞ் செல்வத்தைத் திரட்டிக் கொண்டு ஸ்ரீபுரம் வந்தடைந்தான். இவனது நண்பர்களால் காட்டில் நடந்த நிகழ்ச்சிகள் நகர மக்களுக்குத் தெரிய வரவே அனைவரும் இவனைப் புகழ்ந்து கொண்டாடினர். ஜைந அறத்தின் மேன்மை அனைவர்க்கும் புலனாயிற்று; வணிகன் மேலும் பல நற்காரியங்களில் ஈடுபட்டான்; நகரில் பல ஜிநாலயங்களை ஸ்தாபித்து பஞ்சகல்யாண விபவங்களைச் சிறப்புறச் செய்தான்; வசதியற்றவர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்விக்க பல வித்தியாலங்களையும் நிறுவி தன் செல்வங்களைப் புண்ணிய வழியில் செல விட்டுப் புகழடைந்தான்.

**சிங்கத்தைச் சன்மார்க்கத்தில் திருப்பிய சுலோகம்:**

**''பிந்நேப கும்ப கலதுஜ்வல சோணிதாக்த**
**முக்தாபல ப்ரகர பூஷித பூமிபாக: |**
**பக்தக்ரம க்ரமகதம் ஹரிணாதி போபி**
**நாக்ராமதி க்ரமயுகா சலஸம்ஸ்ரி தந்தே'' ||** (39)

## 28 லட்சுமிதரன் கதை

இப் பரத கண்டத்தின் கீழ் திசையில் 'பைடனபுரம்' என்னும் நகரம் முற்காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கியது. அந் நகரத்தில் லட்சுமிதரன் என்னும் வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஜைன தர்மத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு அந் நெறியில் தவறாது ஒழுகிவந்தான். மும் மூடங்களையும் போக்கிய மூதறிஞனாக விளங்கினான். நாள்தோறும் தவறாமல் பக்தாமர மந்திரங்களைத் தியானிப்பதும் அவற்றின் பெருமைகளைச் சிந்திப்பதுமாக வாழ்ந்தான். அவனுக்கு வாணிகத்தில் பெருஞ்செல்வம் கொழித்தது. மேலும் மேலும் அச்செல்வத்தைச் சேர்த்து நல்லற வழியில் செலவிட வேண்டும் என்னும் நாட்டம் உடையவனாய் தன்னை ஒத்த நண்பர்கள் சிலரைத் துணையாகச் சேர்த்துக் கொண்டு வாணிகப் பண்டங்களை மாட்டு வண்டி, ஒட்டகங்கள் மீது ஏற்றிக் கொண்டு அயல் நாட்டுக்குச் செல்லவாரம்பித்தான். வழியிடையே அக் குழுவினர் மரங்கள் அடர்ந்த பெருங் காட்டைக் கடக்க நேர்ந்தது. காட்டின் நடுவே சென்று கொண்டிருந்த போது திடீரென்று பெருங்காட்டுத்தீ தோன்றி வேகமாகப் பரவி அவர்களைச் சூழ்ந்து கொண்டது.

எதிர்பாராத வகையில் நேரிட்ட இந்தப் பெரிய ஆபத்திலிருந்து எவ்வாறு தப்பப்போகிறோம்? என்று நினைத்து வணிகர்கள் அனைவரும் தாம் நெருப்பிற்கு இரையாவது நிச்சயம் எனத் தீர்மானித்து தத்தம் மனைவி, மக்களையும், சுற்றத்தினரையும் நினைந்து, நினைந்து புலம்பத் தொடங்கினர். மரண பயம் அவர்களை முற்றிலுமாகப் பற்றிக் கொண்டது.

இந்நிலையில் லட்சுமிதரன் வாழ்வதும், சாவதும் அவரவர்களின் வினைப் பயன் என்பதைத் தெளிவாக உணர்ந்த சான்றோன் ஆதலின், தம்மைச் சூழவரும்

காட்டுத் தீக்குச் சிறிதும் சலனப் படாமல் 'கல்பாந்த கால' எனத் தொடங்கும் பக்தாமர சுலோகத்தைக் கூறி அதன் மந்திரத்தையும் மனோ உறுதியுடன் தியானித்தான். அப்போதே சாசனதேவதையாகிய சக்ரேஸ்வரி யட்சி ஒரு பெண்ணின் வடிவம் கொண்டு அவனெதிரே வந்து நீர் நிறைந்த பர்த்திரம் ஒன்றைக் கொடுத்துவிட்டு மறைந்தது. லட்சுமிதரன் வியப்படைந்து இது சாசன தேவதையின் செயலே என்று தெளிந்து பாத்திரத்திலிருந்த நீரினை மந்திர உச்சாடனம் செய்தவாறே வேகமாகப் பரவிவரும் காட்டுத் தீயின் மேல் தெளிக்கவும், "இது மாயமோ?" என்று நினைக்கும்படி வணிகக் கூட்டம் வியந்து நோக்க அது விரைந்து அணைந்து விட்டது. ஜிந பகவானுடைய வசனமாகிய அம்மந்திரத்தினால் காட்டுத்தீயே அணைந்து விட்டதெனில் சம்சாரமாகிற பெருநெருப்பினை அணைப்பது பெரிய காரியமன்று; பிறகு வணிகர் அனைவரும் அங்கிருந்து யாதொரு இடையூறுமின்றிப் புறப்பட்டுச் சென்று தாம் கருதிய நகரத்தை அடைந்து வாணிகம் செய்து முன்னைய செல்வத்தினும் பலமடங்கு அதிகமான செல்வங்களைச் சம்பாதித்துக் கொண்டு தம் நகரத்திற்குத் திரும்பினர்.

லட்சுமிதரனும் முன்னிலும் அதிகமான ஜிந பக்தியும் சம்யக்த்வமும் மேற்கொண்டு எல்லாவுயிர்களும் இன்பமுறும்படி பேருதவி புரிந்து எல்லாரும் புகழும்படி சீரும் சிறப்புமாக வாழ்ந்தான்.

**காட்டுத் தீயை அணைத்த கற்பக சுலோகம்**

**"கல்பாந்த கால பவநோத்தத வன்ஹி கல்பம்**
**தாவாநலம் ஜ்வலித முஜ்வல முத்ஸ்புலிங்கம் |**
**விஸ்வம்ஜிகத் ஸுமிவ, ஸம்முக மாபதந்தம்**
**த்வந்நாம கீர்த்தன ஜலம் ஸமயத்ய சேஷம்" ||** **(40)**

## 29 திரடவிரதையின் கதை

நர்மதபுரம் என்னும் ஒரு நகரத்தில் 'மஹேஸன்' என்னும் வணிகன் வசித்து வந்தான். அவனுக்கு திரட விரதை என்னும் மகளிருந்தாள்; அவள் அதிக எழிலும், ஆன்ம பரிசுத்தமும் ஜிநமார்க்கத்தில் தீவிர சிந்தனையும் உடையவளாகத் திகழ்ந்தாள். அஷ்டமி, பௌர்ணமி விர தங்களும் மாதோபவாஸ, பர்வோபவாஸங்களும் கை கொண்டு பெண்களின் சிந்தாமணியாய் விளங்கினாள். தன்மகளின் சீலாசாரங்களைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்த மஹேசன் அவளுக்குத் தகுந்த கணவனாக தசபுரம் என்னும் ஊரில் வாழ்ந்த 'கார்மணன்' என்ப வனைத் தேர்ந்தெடுத்து கடிமணம் முடித்து வைத்தான்.

கார்மணன் தசபுரத்து வணிகர்களிலேயே மிகுந்த கீர்த்தியும், செல்வமும் பெற்று விளங்கினான். ஆனால் இவன் சிவ பக்தனாக சைவ நெறியைப் பின்பற்றி ஒழுகி வந்தான். அதனால் இவனுக்கும் திரடவிரதைக்கும் ஆரம்ப நாட்களில் வேறுபட்ட இந்த வழிபாடுகளினால் பிரச் சனைகள் ஏதும் தோன்றவில்லை. திரடவிரதா தன் பிறந்த வீட்டில் பின்பற்றிய ஜைன தர்மத்தையே கைகொண்டு ஒழுகிவந்தாள். விரதங்களை அனுசரித்து, உபவாஸங்களை மேற்கொண்டு ஜைந முனிவர்களுக்கு வழிபாடு புரிந்து ஜிநாலயங்களுக்கு நாள் தவறாமல் சென்று வணங்கி, வழி பாடு செய்தாள். இவ்வாறு இவள் நடப்பதை நாளாக, நாளாகக் கார்மணன் வெறுக்கத் தொடங்கினான். அவள் மனத்தை மாற்றிட பல வழிகளில் முயன்றான். சைவமத வழிபாடே சிறந்து விளங்குவது என்று பல உபதேசங் களால் நிறுவிட முனைந்தான். எனினும் அவள் மனப் போக்கு மாறவில்லை. ஆனாலும் கணவன் மீதுகொண்ட அன்பும், மதிப்பும், மரியாதையும் கொஞ்சமும் குறையாமல் இவள் நடந்து கொண்டாள்; கார்மணனின் உறவினர் களோ இவளை அடியோடு வெறுத்தொதுக்கினர்;

பழியுரைகள் பல பகர்ந்தனர்; சில நாட்களில் அவர்களின் தூண்டுதலினால் சிவனை வணங்கும் குலத்தைச் சேர்ந்த வேறொரு பெண்ணை இவன் மணந்து கொண்டான். புதிதாக வந்தவளோ எரிகின்ற தீயில் எண்ணெய் வார்ப்பதுபோல திரடவிரதையின் மேல் அவனுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பினை துர்ப்போதனைகளால் வளர்க்கத் தொடங்கினாள்.

"நிர்வாணதாரிகளாகத் திரியும் ஜைன முனிவர்களை இவள் நாணம் சிறிதுமின்றி வணங்குகிறாள்; அவர்களை வீட்டிற்கும் அழைத்து வந்து உபசரித்து நம் குடும்ப கௌரவத்தையே சீர் குலைக்கிறாள்; நம் மரபைச் சேர்ந்தவர்கள் யாவருக்கும் இவளது செயல் பெரிய அவமானத்தை உண்டாக்கிவிட்டது" என்று இவ்வாறெல்லாம் கூறி சிறிது சிறிதாக அவன் மனத்தில் விஷ வித்தைத் தூவினாள். வணிகன் இதனால் பெருங்கோபமடைந்து திரடவிரதையை எவ்வாறேனும் ஒழித்துக் கட்டவேண்டும் என்னும் முடிவிற்கு வந்து, அவ்வூரிலிருந்த ஒரு பாம்புப் பிடாரனுக்கு, மிகுந்த பணம் கொடுத்து கொடிய விஷமுடைய 'ராஜ நாகம்' ஒன்றைக் குடத்திலிட்டு அதன் வாயைத் துணியால் மூடிக்கொண்டு வரச் செய்து தன் படுக்கை அறையில் வைத்தான்.

இச் செய்தி ஏதும் அறியாத நிலையில், திரடவிரதை வழக்கப்படி தன் நடவடிக்கைகளில் ஈடுபட்டாள்; அன்றிரவு வணிகன் உள்ளன்பு கொண்டவனைப் போல அவளை அழைத்து, "அன்புக் குரியவளே! விலை உயர்ந்ததோர் இரத்தின மாலையை உனக்காக நான் இன்று வாங்கி வந்திருக்கிறேன். அது மிகவும் அழகானது; யாருக்கும் கிடைக்காதது" என்று நயமாகக் கூறினான். அவனது உரையை மெய்யென்று நம்பிய அப்பேதை, "அபாக்கிய சாலியான என் மீதும் தங்களுக்கு அன்பு உண்டாயிற்றே! அதுவே எனக்கு மகிழ்ச்சி; அம்மாலையைத் தாருங்கள்

நான் அணிந்து பார்க்கிறேன்'' என்று ஆசையுடன் கேட்டாள். அவன் ''அதோ அந்த குடத்திலிருக்கிறது. போய் திறந்து பார்'' என்று கூறவும் அவள் குடத்தின் அருகில் சென்று மூடியிருந்த துணியை அவிழ்க்கத் தொடங்கிய போது உள்ளே அடைந்து கிடந்த ராஜ நாகம் கோபத்தோடு சீறும் ஒலிகேட்டுத் திடுக்கிட்டாள்; ஒரு நொடியில் அவளுக்கு யாவும் புரிந்து போயிற்று. தன் கணவனுடைய கொடுஞ்சிந்தனையை எண்ணி உள்ளம் நடுங்கினாள். இப்படிப்பட்ட கொடுங்குணம் படைத்த கொழுநனுடன் கூடியிருந்து வாழும் வாழ்வினைக் காட்டிலும் மரணமே இன்பம் பயக்கும் என மனந்துணிந்தவளாய் தான் முன் கற்றுணர்ந்த ''ரக்தேக்ஷணம்'' எனத் தொடங்கும் பக்தாமரப் பாடலை ஜபித்தவாறே குடத்தினுள் கைவிட்டு அந்த நாகத்தினைப் பற்றி வெளியே எடுத்தாள்.

என்ன ஆச்சரியம்! அவள் கைப்பிடியில் பாம்பிற்கு பதிலாக ஒரு இரத்தின மாலை. கண்களைப் பறிக்கும் ஒளியுடன் விளங்கியது. ஒரே சமயத்தில் இருவருக்கும் வியப்பும் திகைப்பும் மாறி மாறி ஏற்பட்டன. அவள் சிறிதும் தன் உணர்ச்சிகளை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அவ் வழகிய மாலையினைத் தான் அணிந்து கொண்டாள். அப்பொழுது அவள் ஒரு தேவதை போல் விளங்கினாள். அவள் அழகு மேலும் கூடியது. ஆங்கு சுவரில் மாட்டப் பட்டிருந்த நிலைக் கண்ணாடியில் சிறிது நேரம் தன்னை அழகு பார்த்துக்கொண்ட 'திரடவிரதை' அம்மாலையைக் தன் கழுத்திலிருந்து கழற்றி எடுத்தாள். எதிரே அமர்ந் திருந்த கணவன் அருகில் சென்று "அன்பரே! தாங்கள் என் பால் கொண்ட அன்பினால் வாங்கி வந்த இம் மணி மாலையைத் தங்கள் மார்பில் அணிந்தால் மிகவும் அழகாக இருக்கும்; அக் காட்சியைக் கண்டு களிக்க நான் மிகவும் ஆசைப்படுகிறேன்'' என்று கூறியவாறே அவன் கழுத்தில் அணிய முற்பட்டாள்.

அந்த நேரத்தில் மின்னல் கொடியைப் போல சக்ரேஸ்வரி யட்சி தோன்றி. 'பெண்ணே! நிறுத்து; என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? மிகவும் குணக் கேடனும் துன்மார்க்கனும் பாவியுமான இவன் மேனியைத் தீண்டிய வுடனே இம்மாலை நாகமாக மாறித் துன்பம் செய்து விடும், அவசரப்படாதே'' என்று விலக்கி விட்டு கார்ம ணணை நோக்கி, "துஷ்டனே தன்னைக் கொல்ல எண்ணிய உன்னையும் அவள் இன்னும் கணவனாக நினைத்து அன்பு செய்கிறாளே; அவளின் தூய்மை அன்பினை இன்னும் நீ புரிந்து கொள்ளாதிருக்கிறாயே! உன் அறியாமைதான் என்னே! அந்தகன் கையில் அகப்பட்ட மாணிக்கம் போல அவள் உனக்குக் கிடைத் திருக்கிறாள் என்பதை நீ உணர்ந்து நடந்து கொள், அநாதியானதும் அருக தேவனால் போதிக்கப்பட்டது மாகிய ஜைந தர்மத்தை தன் உயிர்க் கொள்கையாகக் கொண்டு ஒழுகும் இவளின் அறவுரை கேட்டு உன்னு டைய வாழ்நாளை அறப்பணியில் செலுத்து' என்று கூறி பேரோசையுடன் மறைந்தது.

அறவுரையாவன :

ராக துவேஷங்களை வென்ற ஜினபகவான்தான் தேவராவார். சம்சார சிக்கல்களை அறுத்து பஞ்ச நமஸ் கார மந்திரத்தை போதிக்கும் துறவியரே குரு ஆவார். கருணையே அறம் ஆகும். நுணுக்கமான உயிர்கள் உள்ள பொருள்களைத் தின்னக்கூடாது. இரவு வேளையில் உணவு உண்ணக்கூடாது.

தேவ பூஜை, குரு சேவை, ஆகமம் ஓதுதல். புலனடக்கம் செய்தல், விரதம் கடைபிடித்தல், தவம் தானம் செய்தல் ஆகிய ஆறு செயல்களை இல்லறத்தார் தினம் தினம் செய்ய வேண்டும்.

காய் கனிகளை வெட்டும் போதும் வேறு பொருளை துண்டிக்கும்போதும் சமைக்கும் போதும் தானியத்தை குத்தும்போதும் பாத்திரங்களைக் கழுவும்போதும் ஜீவ இம்ஸை ஆகாதவண்ணம் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும் என பல அறவுரை வழங்கி பக்தாமர தோத்தி ரத்தின் பெருமையை உணர்த்தினாள்.

மனைவியின் அறிவுரை கேட்டு மனம் தெளிந்த வணிகன் தானும் இளையாளும் செய்த பெரும் பிழை களுக்கு வருந்தி அவளுடன் கூடி ஜிந மார்க்கத்தைத் தழுவி புண்ணிய சம்பந்தர்களாகி நீண்டகாலம் நலமுடன் வாழ்ந்தனர்.

காா்மனைைக் கரையேற்றிட உதவிய சுலோகம்:

ரக்தேக்ஷணம் சமதகோகில கண்ட நீலம்
க்ரோதோத்ததம் பணிந முத்பண மாபதந்தம்
ஆக்ராமதிக்ரமயுகேந நிரஸ்த சங்க:
த்வந்நாம நாகதமநீ ஹ்ருதயஸ்ய பும்ஸ || (41)

## 30 குணவர்மன் கதை

முன்பொரு காலத்தில் மதுராபுரி நகரத்தை 'இரண கேது' என்பவன் ஆண்டு வந்தான். அவன் மிகவும் சிறந்த அறிவாளியாகவும், சகல வல்லமை படைத்தவனா கவும் விளங்கினான். அவனது நல்லாட்சியில் நாட்டு மக்கள் நன்மைகள் பல பெற்று வாழ்ந்தனர்.

அவனுக்கு 'குணவர்மா' என்னும் பெயருடைய இளைய சகோதரன் ஒருவனும் உண்டு; பெயருக்கு ஏற்ப அவன் நற்குணங்கள் உடையவனாகவும் விளங்கினான். ஜிநமார்க்கத்தில் பற்றும், பகவத் பக்தியும் அவன் அணிக ளாக விளங்கின. நாள் தோறும் ஜிந சைத்தியாலயத் திற்குச் சென்று அருக தேவனை வழிபட்டும் பக்தாமர நூலை

வாசித்தும், தியானித்தும், பூஜித்தும் வணங்கிய பின்னரே காலை உணவை உண்ணுகின்ற சீலாசாரத்தைக் கைக் கொண்டு ஒழுகினான்.

அதனால் அவனுக்கு நாட்டில் நல்ல புகழ் ஏற்பட்டது. மக்களிடையே நல்ல செல்வாக்கும் ஏற்பட்டது. இடையிடையே தன் தமையனுக்கு அரச காரியங்களில் மிகவும் உதவியாகவும் இருந்து வந்ததனல் அதிகாரிகளும் அவனை மதித்து நடந்தனர்.

இவ்வாறு இருக்கும் காலத்தில் ஒரு நாள் இரண கேதுவின் மனைவி அரசனை நோக்கி "நாதனே! நான் சொல்லுகின்ற வார்த்தைகளைத் தயைகூர்ந்து கேட்டருள் வீராக! தாங்கள் நாட்டு மக்களை நீதி தவறாமல் ஆண்டு வருகிறீர்கள். அதனால் மக்கள் அனைவரும் தங்களைப் புகழ்ந்து பேசிவருகிறார்கள்; ஆனால், தங்களின் புகழை விட, தம்பி குணவர்மாவின் புகழே எங்கும் மிகுதியாகப் பரவியிருப்பதைக் காண்கிறேன். அவர் குணசாலி; நல்ல பாக்கியவன்; ஜைந தருமத்தில் நிலையாக ஒழுகிவரும் உறுதிசாலி; ஆயினும் இவரது செல்வாக்கு நாட்டில் ஓங்குவது உங்கட்கு நன்மை விளைவிக்காது என்று என் புத்திக்குத் தோன்றுகிறது. நாட்டு மக்கள் உங்களைக் காட்டிலும் அவரையே பெரிதும் விரும்புவதனால், எப்படி ஒரு உறையில் இரண்டு வாள்களுக்கு இடமில்லையோ அப்படியே உங்களிருவரில் மக்களின் ஆதரவு பெற்றவரே எதிர்காலத்தில் மன்னராக ஆட்சி புரியும் நிலை ஏற்படும். தாங்கள் கல்வியறிவும் சிறந்த உலக அனுபமும் உடையவர்கள்; உங்களுக்கு நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை; சிந்தித்துப் பாருங்கள்!'' என்று அவன் மனம் கொள்ளும் வகையில் விஷ விதையை ஊன்றினாள்.

எவ்வளவு புத்திசாலியாய் இருந்தாலும்தான் என்ன? வினைவிளையாட ஆரம்பித்தது. வினைக்கு ஏற்ற

புத்தி ஏற்பட்டது. மனைவியின் உரைக்கு அவன் மனம் ஆட்பட்டுவிட்டது. எவ்வாறேனும் தம்பியை நாட்டை விட்டு அகற்றியே தீரவேண்டும் என்னும் தீர்மானத்திற்கு வந்த அரசன் ஒருநாள் இரகசியமாகத் தன் தம்பியை அழைத்து ', தம்பி குணவர்மா! நீ சிறிது காலம் யாருக்கும் தெரியாதபடி நாட்டை விட்டகன்று காட்டிலோ, மலைக் குகைகளிலோ இருந்துவிட்டு வா! நம் இருவரது நன்மைக்காகவே இதைச் சொல்கிறேன்' என்று இரக்க மின்றி உரைத்தான்.

குணவர்மன் இதைக்கேட்டு திடுக்கிட்டான். ஆயினும் மூத்தோன் சொல் வார்த்தையே அமிர்தம் எனக்கொண்டு யாருக்கும் தெரியாதபடி புறப்பட்டுச் சென்று மலைக்குகை ஒன்றிலே தங்கி வீதராகனைத் தியானித்துக்கொண்டும் பக்தாமர மந்திரத்தை ஜபித்துக்கொண்டும் காலம் கழித்து வந்தான்.

இவ்வாறு நாட்கள் சில உருண்டன. இரணகேது பகைவர் நாட்டை வெற்றிகொள்ள படையுடன் சென்று வெற்றிவாகை சூடி திரும்புகிறபோது வழியில் தம்பி வசித்துவரும் இடத்திற்கு அருகாக வந்தான்; அங்குதான் குணவர்மன் இருக்கிறான் என்பதை ஒற்றரால் தெரிந்து கொண்டு அவன் வசிக்கும் மலைக் குகைகளின் பாசறை களை வெடி வைத்து தகர்த்து வரும்படி தன் படைவீரர் களுக்கு ஆணையிடவும் அவர்களும் அவ்வாறே செய்யத் தொடங்கினர்.

"வேடுவர்கள் யாரேனும் வன விலங்குகளை விரட்டுகின்றார்களோ?" என நினைத்த குணவர்மன் குகையை விட்டு வெளியே வந்து பார்த்தான். அவ்விடத் தில் காட்டு விலங்குகள் வசிப்பதற்கான தடயங்கள் எவை யும் காணாமல் என்னவாக இருக்கும்? என்று யோசித்த படியே வந்தவனுக்கு திடீரென்று தன் சகோதரன் வீரர் களுக்கு ஆணையிட்டுக் கொண்டிருக்கும் குரலோசை

கேட்க நேரிட்டது. 'என் எதிரி ஒருவன் இங்கே வாழ் கிறான்; அவனை வெடி வைத்து அழியுங்கள்!' என்னும் மொழிகளைக் கேட்டு குணவர்மன் தன் அண்ணனின் தீய எண்ணத்தைப் புரிந்துகொண்டு நடப்பது நடக்கட்டும் என்று சிறிதும் அஞ்சாமல் குகைக்குள் சென்று அமர்ந்து கொண்டு 'வல்கத்துரங்க' என்னும் பக்தாமர சுலோகத்தை யும் அதை அடுத்து வரும் 'குந்தாக்ர' என்னும் சுலோகத் தையும் அவைகளுக்குரிய மந்திரங்களையும் ஜபித்தவாறே அமர்ந்துவிட்டான். அக்கணமே சக்ரேஸ்வரியக்ஷி தோன்றி, அரசனது படைகள் சின்னாபின்னமாக ஓடும் படி வெருட்டி அரசனுக்கு அனேக உபசர்க்கங்களைத் தந்ததோடு அவ்விடத்தை கரிய இருள் மூடும்படி செய்து விட்டு மறைந்தது.

சிறிதும் எதிர்பாராத வகையில் தனக்கு ஏற்பட்ட இந்த அசம்பாவிதங்களைக் கண்ட அரசன் மனம் நடு நடுங்கியது. இதற்குக் காரணம் உத்தமமான தன் தம்பிக்கு தான் செய்த தீங்குகளே என்பதை உணர்ந்து கொண்டு விரைந்து சென்று தன் தம்பியைக்கூவிஅழைத்து அவனை மார்போடு இறுகத் தழுவிக்கொண்டு அறியாமை காரணமாக பெண்ணின் உரை கேட்டு உனக்கு இப்படிப் பட்ட தீங்குகளை இழைக்கத் துணிந்தேன்; என்னைப் பொறுத்து மன்னித்து அருள்வாயாக! என வேண்டிக் கொண்டான். மனந்திருந்திய தமயனின் துன்ப உரை கள் குணவர்மனின் கண்களில் கண்ணீரை வரவழைத்தன. ஆறுதல் உரைகளால் அவனைத் தேற்றினான். இருவரும் நகரமடைந்தனர். சிறிது காலம் காணாமலிருந்து திரும்பிய இளையவனை நாடே எதிர்கொண்டு வரவேற் றது. அரசன் மனைவி வெட்கித் தலை குனிந்தாள். இரணகேது உடனடியாக தன் தம்பிக்கு முடி சூட்டி, நாட்டுக்கு அவனை அரசனாக்கினான். தன் தம்பிக்கு இழைத்த துரோகம் அவன் நெஞ்சை வாட்டியதால் யார் சொல்லியும் கேட்காமல் வாழ்க்கைமீது வெறுப்பு கொண்டு

வைராக்கியத்துடன் தீட்சை பெற்று தவம் செய்வதற்காக காட்டிற்குப் போய்ச் சேர்ந்தான்.

தமயனின் பிரிவு இளையவனின் நெஞ்சில் வருத்தத்தை உண்டாக்கியது. எனினும் நாட்டு மக்களை நன்கு காப்பாற்ற வேண்டியது அரசனது பொறுப்பென்பதை நன்கு உணர்ந்தவனாதலின், ஒருவாறு மனதை தேற்றிக் கொண்டு, நாட்டு மக்கள் பகை, பசி, பிணி முதலிய இடையூறுகள் ஏதுமின்றி மகிழ்வுடன் வாழும்படி செங்கோல் புரிந்து, நீண்ட காலம் வாழ்ந்தான். நாட்டில் ஜைந தர்மம் செழித்தது.

“ ஜன்ம ஜன்ம கிருதம் பாபம்
ஜன்ம கோடி சமார் ஜிதம் |
ஜன்ம ம்ருத்யு ஜரா துக்கம்
அந்யதே ஜிந வந்தனாத் ” ||

என்பதற்கிணங்க அனேககோடி பிறவிகளிலும் செய்து வரும் பாவங்களும் பிறப்பும், இறப்பும், மூப்புமாகிய துன்பங்களும் ஜினேஸ்வரனை வழிபாடு செய்யும் ஒன்றினாலேயே அகன்றுபோகும் என்றால், ஜிந தர்மத்தைவிட இவ்வுலகில் சிறந்த தர்மம் வேறுள்ளதோ ?

**குணவர்மன் தோத்திரம் செய்த சுலோகங்கள்**

**வல்கத் துரங்க கஜகர்ஜித பிமநாத
மாஜெளபலம் பலவதாமபிபூபதீநாம்
உத்யத்திவாகர மயூக சிகாப வித்தம்
த்வத் கீர்த்தநாத் தமஇவா ஸுபிதா முபைதி. (42)**

**குந்தாக்ர பிந்ந கஜஸோணித வாரிவாஹ
வேகாவதார தரணாதுர யோத பிமே |
யுத்தேஜயம் விஜித துர்ஜய ஜேய பக்ஷாஸ்
த்வத்பாத பங்கஜவநா ஸ்ரயிணோ லபந்தே ॥ (43)**

## 31 மஹேப வணிகனின் கதை

முன்னொரு காலத்தில் நமது பாரத கண்டத்தில் 'தமாலி' என்னும் பெயருடைய நகரமொன்றிருந்தது. செல்வ வளத்தாலும், குடிவளத்தாலும் சிறப்புற்று விளங்கிய அந்நகரத்தில் மஹேபன் என்னும் வாணிகன் ஒருவன் வாழ்ந்து வத்தான். இயல்பிலேயே ஜிந மார்க்கத்தில் பற்றுடையவனாக விளங்கிய அவன் ஸ்ரீ சந்திரகீர்த்தி முனிவரிடம் பக்தாமர சுலோகங்களையும் அவற்றிற்குரிய மந்திரங்களையும் கற்று, தவறாமல் தியானித்து வரலானான். அதனால், அவனுக்கு செல்வம் பெருகி வரலாயிற்று. எனினும், அவன் மேன்மேலும் செல்வம் சேர்க்கும் விருப்பத்தால் உந்தப்பட்டு, "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழிக்கேற்ப சிங்களத் தீவாகிய இலங்கைக்குச் சென்று வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டினான்.

ஆண்டுகள் பல சென்றன; ஈட்டிய செல்வம் போதும் என்னும் திருப்தி அவனுக்கு ஏற்பட்டதும், சேர்த்த செல்வங்களை பத்திரப்படுத்தி எடுத்துக்கொண்டு தன் நாட்டிற்கு கப்பலில் பயணமானான். அவ்வாறு வரும்போது கடல் நடுவே யாதொரு காரணமுமின்றி அவன் ஏறிவந்த கப்பல் நின்று போனது. வாணிகன் மாலுமிகளை அணுகி, கப்பல் நடுக்கடலில் நிற்பதற்கு காரணம் யாதெனக் கேட்டான்.

அதற்கு அவர்கள், "வணிகனே! இங்கு கடலில் துர்தேவதை ஒன்று உள்ளது. அதற்கு ஒரு பசுவினைப் பலி கொடுக்கவேண்டும்; கொடுக்காவிட்டால் இக்கப்பலை நகரவிடாது!" எனக்கூறி, கவலை தெரிவித்தனர். அவர் உரைத்த மொழிகளைக் கேட்ட மஹேபன் மிகவும் மனம் வருந்தினான். பசுவை பலியாகக் கேட்கும் தேவதையின் பேதமையை எண்ணி பரிதாபப்பட்டான். அப்போது

தன் குருநாதரால் தனக்குப் போதிக்கப்பட்ட பக்தாமர மந்திரங்களின் நினைவு வர, அவன் உடனே 'அம்போ நிதௌ' எனத் தொடங்கும் சுலோகத்தையும், மந்திரத்தை யும் நிச்சல சித்தத்துடன் அமர்ந்து தியானித்தான். அப் பொழுதே 'விகடாக்ஷி' என்னும் பெயருடைய அத்துஷ்ட தேவதை நேரில் தோன்றி, "வணிகனே ! உனது மந்திர பலம் என்னை மிகவும் தகிக்கிறது ; உனக்கு யாது வேண்டும் ? கேள் !" என்று கூறி மன்றாடியது. அது கேட்ட மஹேபன், "தேவதையே ! முற்பிறவி பாப பந்தத் தால் நீ இந்த துஷ்ட தேவதை பவத்தை அடைந்துள் ளாய்; நீ இப்பொழுதே சன்மார்க்க நெறிக்கு திரும்புவாயே யானால் உனக்கு விமோசனம் கிடைக்கும்; பசுவைப் பலி வாங்குவது மிகப்பெரும் பாதக செயலாகும் ; அதை இன்றே கைவிடுவாயாக ! பரமேஸ்வரனாகிய ஜிந பகவா னின் அஹிம்ஸா தர்மத்தை மேற்கொள்; அது ஒன்றே நான் இப்பொழுது உன்னை வேண்டுவது" எனக் கூறினான்.

வணிகனது அறவுரை கேட்டு கடல் தேவதை தான் அவ்வாறே நடப்பதாகக் கூறி அவனைப் புகழ்ந்து வணங்கி விடை பெற்றுச் சென்றது. கப்பலும் தடை நீங்கப்பெற்று பயணத்தைத் தொடர்ந்தது. மஹேபனும் அவனைச் சேர்ந்தவர்களும் நலமாக நாடு திரும்பினர். வணிகன் தான் ஈட்டிவந்த பெருஞ்செல்வத்தை தான் ஒருவன் மட்டுமே அனுபவிக்க விரும்பாமல் அறவழிகளில் செலவிட்டான். ஆலயங்கள் பலவற்றை எழுப்பி பூஜை களும், விழாக்களும் சிறப்புற நடந்திட ஏற்பாடுகள் செய்தான். நகர மக்கள் இதனால் ஜிந மார்க்கத்தை கைக்கொண்டு சீரும் சிறப்பும் செழித்திட வாழ்ந்தனர்.

**கப்பலுக்கு ஏற்பட்ட தடையினை கழலுவித்த சுலோகம்**

**அம்போ நிதௌ க்ஷுபித பீஷண நக்ர சக்ர**
**பாடீநபீட பயதோல்பண பாட வாக்நௌ**

ரங்கத் தரங்க சிகரஸ்தித யானபாத்ராஸ்
த்ராஸம் விஹாய பவத: ஸ்மரணாத் வ்ரஜந்தி ॥

## 32 ராஜஹம்ஸன் கதை

உஜ்ஜயினி நகரத்தை நிருபசேகரன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனது செங்கோலாட்சியில் மக்கள் யாதொரு துன்பமுமின்றி வாழ்ந்து வந்தனர். அவன் மனைவி விமலை என்பவள்; கணவனது கருத்து அறிந்து நடக்கும் குணவதியாய் விளங்கிய அவ்வுத்தமிக்கு அழகும், அறிவும், ஆற்றலும் ஒருங்கே நிறைந்த ராஜ ஹம்ஸன் என்னும் பெயருடைய மகன் ஒருவன் இருந் தான். அவன் அரச காரியங்களில் தன் தந்தைக்கு மிகவும் உற்றதுணையாக இருந்து உதவி புரிந்துவந்தான். தந்தையிடம் அளவிலாத மதிப்பும் மரியாதையும் கொண்டு இருந்தான். நாட்டு மக்கள் அவனைப் பெரிதும் விரும்பி வந்தனர்.

இந்நிலையில், அவனது தாயும், அரசனது பட்ட மகிஷியுமான விமலை திடீரென்று ஏற்பட்ட பிணியினால் காலகதி அடைந்தாள். அதன்பிறகு அரசன் கமலாவதி என்னும் பெண்ணைப் பட்டத்து ராணியாக வரித்துக் கொள்ள, அவர்களுக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. கமலாவதிக்கு இத்தருணத்தில் தீய சிந்தனை ஒன்று மனதில் தோன்றி வளர்ந்து வரலாயிற்று. மக்க ளிடையே செல்வாக்குப் பெற்ற தன் மூத்தாளின் மகன் ராஜஹம்ஸன் இருக்கின்றவரை தன் மகனுக்கு அரச பதவி கிட்டாது; கோருவதும் ஏற்கப்படாது. ஆகவே, எவ்வா றேனும் வஞ்சனையினால் பெரிய மகனைக் கொன்று விட்டால், தான் எண்ணிய எண்ணம் ஈடேறும் என்று அவர் நினைத்து அதற்கான தகுந்த காலத்தை எதிர் நோக்கி காத்திருந்தாள்.

தன் சிற்றன்னையின் தீய எண்ணம் எதும் ராஜ ஹம்ஸனுக்குத் தெரியாத நிலையில் அவளைத் தன்னைப் பெற்ற தாயெனவே கருதி அவன் அவள்பால் அன்பும் மரியாதையும் காட்டி ஒழுகி வந்தான்.

காலம் உருண்டது; அரசன் நிருபசேகரன் பகை நாடுகளை வென்று வெற்றிக்கொடி நாட்ட வேண்டும் என்னும் ஆசையினால் படைகளைத் தானே நடத்திக்கொண்டு திக்விஜயத்திற்குப் புறப்பட்டான். ராஜஹம்ஸன் நிர்வாக காரியங்களை நடத்தி வந்தான். இப்படிப்பட்ட காலத்தின் வருகைக்காக காத்திருந்த கமலாவதி, ராஜஹம்ஸனைத் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டாள். அவன் உண்ணும் உணவில் தாமதமாகக் கொல்லும் சக்தி படைத்த விஷத்தினை கலந்திடச் செய்தாள். விஷம் வேலை செய்யத் தொடங்கியது. உடல் வெளுத்தது. கண்கள் பஞ்சடைந்தன. மேனியெங்கும் வெடிப்புகள் தோன்றி நீர் கசியத் தொடங்கியது. மருத்துவர்களாலும் கைவிடப்பட்ட நிலையில், ராஜஹம்ஸன் தன் சிற்றன்னையின் நடவடிக்கைகளில் ஐயம் கொண்டவனாய் ஏதோ சூது வலை தன்னைச்சுற்றி பின்னப்படுகிறது என்பதைப் புரிந்துகொண்டான். உடனே யாருக்கும் தெரியாமல் நகரத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றான். அவ்வாறு புறப்பட்டவன் பல நாடு நகரங்களையும் கடந்து ஹஸ்தினாபுரம் வந்தடைந்தான். குஷ்ட ரோகியைப் போல அந்நகரத்தில் திரிந்து கொண்டிருந்தான். அவனை அடையாளம் காண்பவர் யாரும் அந்நகரத்தில் இல்லை. பிச்சையெடுத் துண்டும், பிணியினால் நலிந்தும் அங்கு நாட்களைக் கழித்து வந்தான்.

அந்நகரத்தின் அரசன் மானகிரி என்பான்; அவனுக்கு மகள் கலாவதி என்பாள்; ஒருநாள் இவ்விருவரும் ஒரு சோலையில் அமர்ந்து ஆத்மார்த்தமாக உரையாடிக் கொண்டிருந்தனர். கலாவதி யாவும் கர்மத்தின் வழியே நடக்கும் எனும் கொள்கையுடையவள்; ஆனால் அரசனோ

யாவும் ஈசுவர சிருஷ்டி எனும் தத்துவத்தில் நம்பிக்கை உடையவன். ஆதலின் தன் மகளை நோக்கி, ''கலாவதி! நீ உன் எதிர்கால சுகத்தில் பூரண நம்பிக்கை கொண்டு இருக்கிறாய் அல்லவா?'' என்று கேட்டான்.

அதற்கு அவள் சிறிதும் அச்சமின்றி, ''ஆம்! தந்தையே! நான் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறேன். மனிதர்கள் கர்மாவிற்குக் கட்டுப்பட்டவர்கள்; சுகத்திற்கும் துக்கத்திற்கும் கர்மாவே காரணம்; கர்மத்தை வெற்றி கொள்பவனே சுகம் அடைகிறான்; கர்மத்தினும் வலிமை வாய்ந்தது வேறு இல்லை; அதுவன்றியும் ஈசுவரனை உலகத்தின் சிருஷ்டிகர்த்தா என்கிறார்கள். ஈஸ்வரன் என்பவன் யார்? அவன் எங்கிருக்கிறான்? அவனுக்கு உருவம் உண்டா, இல்லையா? உருவம் உண்டு என்றால் அவன் கர்மபந்தம் உள்ளவனே! அவனுக்கும் நமக்கும் என்ன வேற்றுமை உள்ளது? அவனை சிருஷ்டிகர்த்தா எனில், அவனைச் சிருஷ்டித்தவன் யார்? உலகம் ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டதென்றால் அவன் எங்கிருந்து இவ்வுலகை சிருஷ்டித்தான்? எல்லாம் அவன் சிருஷ்டியானால் ஆகாயத்தில் மலரையும், கழுதைக்கும், குதிரைக்கும் மண்டையில் ஏன் கொம்பு படைக்கவில்லை?'' எனவே, இவ்வாறெல்லாம் அவள் தைரியத்தோடு பேசுவதைக் கேட்ட அரசன் அவள்மீது கோபம் கொண்டான். சகல துக்கங்களுக்கும் அவரவர் செய்யும் கர்மங்களே காரணம் என்பதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மாறாக, தன் மகள் என்பதையும் மறந்தான்; அவளுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் எனத் தீர்மானித்து அப்பொழுது அச்சோலையின் வழியாகச் சென்றுகொண்டிருந்த ராஜஹம்ஸனை அழைத்து, "பெண்ணே! யாவும் கர்மத்தால் விளைவது என்பது உண்மையானால், இதோ இந்த நோயாளியை உனக்கு நான் இப்போதே திருமணம் செய்துவைத்தால் நீ சரியென்று ஏற்றுக்கொள்வாயா?''

எனக் கேட்க, அவளும் விடாப்பிடியாக, 'இவரை நான் மணப்பது கட்டாயமானால், அதுவும் என் கர்மவினையே என ஏற்றுக்கொள்வேன்' என்று சிறிதும் கலக்கமின்றி உரைத்தாள். அரசன் அகம்பாவம் வென்றது. அவ்விரு வருக்கும் அப்பொழுதே திருமணத்தை முடித்து, அவ்விரு வரையும் வெளியேற்றச் செய்தான்.

இவ்வகைத் துன்பங்களுக்கும் முற்பிறவியில் செய் திட்ட தீவினைகளே காரணம் என நிதான சல்லியம் கொண்ட கலாவதி, நோயாளி கணவனுடன் நாட்டை விட்டு அகன்றுகொண்டிருந்தபோது வழியில் எதிர்ப்பட்ட ஜைன முனிபுங்கவர் ஒருவரால் பக்தாமர சுலோகமும், மந்திரமும் உபதேசிக்கப்பெற்று அவற்றை நாள் தவறாமல் தியானித்து வர, இராஜஹம்ஸனின் நோய் சூரியனைக் கண்ட பனிபோல அகன்றது. தன் மகளின் செருக்கு அடங்கியிருக்கும் என்று நினைத்து சந்தோஷித்துக் கொண்டிருந்த அரசனுக்கு அவ்விருவரும் நலமுடன் இருக்கிறார்கள் எனக் கேட்டபோது, தான் அவர்களுக்கு இழைத்த கொடுமைக்காக மனம் வருந்தினான். உடனே, அவன் புறப்பட்டு வந்து அவர்களை அடைந்து தான் செய்த பிழையினைப் பொறுத்தருளும்படி வேண்டி அவர் களை அழைத்துக்கொண்டு தன் நகரம் அடைந்து இராஜ ஹம்ஸனது வரலாற்றைக் கேட்டறிந்து, மிகவும் மகிழ்ச்சி அடைந்து தன் நாட்டிற்கு அவனையே அரசனாக்கி ஆட்சி புரியச்செய்தான். தானும் ஜைந தர்மத்தை மேற்கொண் டான். இது இவ்வாறிருக்க, திக்விஜயத்திற்குச் சென்று திரும்பிய உஜ்ஜயினி மன்னன் நிருபசேகரன், தன் மூத்த மகன் காணாமல் போய்விட்ட செய்தியைக் கேட்டறிந்து, துயரக் கடலில் வீழ்ந்தான். தன் ஒற்றர்களையும், படை வீரர்களையும் நாடெங்கும் அனுப்பி தேடச் செய்தான். கடைசியாக, அவன் மானகிரி அரசனின் மருமகனாக இருந்து அரசாள்கிறான் என்பதை அறிந்து மகிழ்ந்து

தானே புறப்பட்டு வந்து மகனையும், மருமகளையும் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தான். தான் திக்விஜயத்திற்குச் சென்றபின் நடந்த நிகழ்ச்சிகளை ஒருவாறு கேட்டறிந்து கொண்டபின் நிருபசேகரன் கொடிய எண்ணம் படைத்த இளைய மனைவியுடன் இனிதுகூடி வாழ்வதினும் வாழ்வை துறப்பதே மேல் எனத் தீர்மானித்து மகனை அழைத்து வந்து தன் நாட்டிற்கு அரசனாக்கி பின் வைராக்கிய சிந்தனையுடன் ஜிந தீட்சை மேற்கொண்டு கானகம் சென்றான். இவற்றை எல்லாம் அறிந்த கமலாவதியும் மனம் மாறினாள் தான் செய்துவிட்ட பிழைக்கு மனம் நாணி தன் மகனை ராஜஹம்ஸனிடம் ஒப்படைத்துவிட்டு தானும் வாழ்வை வெறுத்துப்போய் ஆர்யாங்கனையாகி அருந்தவமிருக்கத் தலைப்பட்டாள்.

இராஜஹம்ஸனும், கலாவதியும் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை, பக்தாமரம் என்னும் வாளினால் அழித்து சுகவாழ்வைப் பெற்றார்கள் எனில், அதன் பெருமையை எடுத்துக் கூறவும் முடியுமோ?

**கலாவதியின் கலக்கத்தை நீக்கிய சுலோகம்**

> உத்பூத பீஷண ஜலோதர பாரபுக்நா
> ஸோச்யாம் தஸா முபகதாச்யுத ஜீவிதாசா |
> த்வத்பாத பங்கஜ ரஜோம் ருததிக்த தேஹா
> மர்த்யா பவந்தி மகரத்வஜ துல்யரூபா || (45)

## 33 இரணதீரன் கதை

பரதகண்டத்தில் சிறந்து விளங்கிய நகரங்களுள் முற்காலத்தில் அஜ்மீரும் ஒன்று; நிறைந்த செல்வர்களால் சிறப்புப் பெற்று விளங்கிய அந்நகரத்தை நரபாலன் என்னும் பெயருடைய ஒருவன் அரசு புரிந்து வந்தான். அவனுக்கு இரணதீரன் என்னும் புதல்வன் ஒருவன் இருந்தான். பெயருக்கேற்ப அவன் பேராற்றல் மிக்கவனாக

விளங்கியதோடன்றி, சிறந்த கல்வியறிவு உடையவனாகவும், எல்லா கலைகளையும் கற்றுத் தேர்ந்தவனாகவும் புகழ்பெற்று விளங்கினான். ஜிநாகமங்களில் பயிற்சியும், குருபக்தியும், தேவதா விசுவாசமும் கொண்டு சிறந்து விளங்கிய மகனைக் கண்டு மகிழ்ச்சியுற்ற நரபாலன், அவனை தன் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பலாசகேடபுரத்திற்கு அரசனாக்கி முடிசூட்டி சிறப்பித்தான்.

இரணதீரன் தன் நகர மக்களுக்கு யாதொரு குறைபாடும் நேராதபடி கண்ணை இமை காப்பதுபோலக் காத்துவந்தான். இந்நிலையில் தில்லி நகரத்தை ஆண்டு வந்த ஜலாலுத்தீன் என்னும் சுல்தான் ஒருவன் தன் படைகளைத் திரட்டிக்கொண்டு பலாசகேடபுரத்தில் அடாவடியாக நுழைந்து யாரும் எதிர்பாராதபடி பெரும் போர் புரிந்து இரணதீரனைக் கைது செய்து நகரத்தையும் தன் வ்யப்படுத்திக் கொண்டதுமல்லாமல் அவன் கை கால்களில் பலமான விலங்கு பூட்டி தில்லி நகரத்திற்கு கொண்டு வந்து சிறையில் அடைத்துவிட்டான்.

சற்றும் எதிர்பாராத நிலையில் தனக்கேற்பட்ட கதியை எண்ணி மனம் வருந்திய இரணதீரன் சற்றும் கலங்காமல் கை, கால்களில் விலங்கிடப்பட்ட நிலையிலும், குணசந்திர முனிவர் என்பவரால் தனக்கு உபதேசிக்கப்பட்ட 'ஆபாதகண்ட' எனத் தொடங்கும் பக்தாமர சுலோகத்தை துதித்து அதன் மந்திரங்களை ஜபம் செய்யத் தொடங்கினான். அவ்வாறு செய்யத் தொடங்கிய சிறிது நேரத்திற்குள் சுலோகத்தின் மகத்துவத்தாலும், மந்திரங்களின் சக்தியினாலும், சக்ரேஸ்வரி யட்சியின் அனுக்கிரகத்தாலும் கை கால்களில் பூட்டப்பட்டிருந்த இரும்பு விலங்குகள், தானே தெரித்து வீழ்ந்தன. சிறைக் கதவுகளும் தாமே திறந்துகொண்டன. இந்த அற்புத நிகழ்ச்சிகளைக் கண்ட காவலர்கள் ஓடிச் சென்று சுல்தானிடம் நடந்தவற்றைக் கூறினர்.

சுல்தான், அவர்களின் கூற்றினை நம்பவில்லை. அக்காவலர்கள் இரணதீரனின் கையாட்களாகவே இருக்க வேண்டும் என நினைத்து, அவர்களுக்குப் பதிலாக வேறு காவலர்களை நியமித்து அவனே நேரில் புறப்பட்டு வந்து இரணதீரனுக்கு முன்னினும் வலிய இருப்புச் சங்கிலி களால் தளை பூட்டி, வாயிற்கதவுகட்கு கெட்டியான பூட்டு களை இட்டுப் பூட்டி, அவற்றின் திறவுகோல்களையும் தானே எடுத்து பத்திரப்படுத்திக்கொண்டு அரண்மனைக் குத் திரும்பினான்.

இவை யாவற்றிலும் மனம் செலுத்தாதவனாய் இரணதீரன் தொடர்ந்து ஜபங்களைச் செய்துகொண்டே இருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் முன் நடந்தது போலவே அந்த அற்புதங்கள் நிகழ்ந்து முடிந்தன. சங்கிலிகள் தாமே நொறுங்கின; கதவுகளும் திறந்து கொண்டு வழிவிட்டன.

தனக்கு எதிரே வந்து நின்ற இரணதீரனைக் கண்டு சுல்தான் திடுக்கிட்டான்; உள்ளம் நடுங்கினான்; அவன் கால்களில் வீழ்ந்து வணங்கி தன்னை மன்னிக்கும் படி வேண்டிக்கொண்டு, பலாசகேடபுரத்தை அவனுக்கே உரிமையாக்கி, தகுந்த மரியாதைகளுடன் அவன் நகரத் திற்கே அனுப்பி வைத்தான். நகர மக்கள் அனைவரும் அரசன் நலமாக நகரம் திரும்பியதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தனர். பக்தாமர சுலோகங்களின் பெருமைகளை அறிந்து அதன் ஆசிரியராகிய ஸ்ரீ மானதுங்க ஆசார்ய ரின் திருவடிகளை வாழ்த்தி வணங்கினர். நாடெங்கும் ஜிந தர்மம் செழித்து விளங்கியது. திங்கள் மும்மாரி பெய்தது. மக்கள் எல்லா வளங்களும் பெற்று சிறப்புற்று வாழ்ந்தனர்.

### இரணதீரனை சிறை வீடு செய்த சுலோகம்

ஆபாத கண்ட முருச்ருங்கல வேஷ்டி தாங்கா
காடம் ப்ருஹந் நிகளகோடி நிக்ருஷ்ட ஜங்கா: |
த்வந் நாம மந்த்ர மநிஸம் மனுஜா ஸ்மரந்த:
ஸத்ய ஸ்வயம் விகதபந்த பயா பவந்தி ‖ (46)

[ முற்றும் ]

卐

## வேண்டுகோள்

சம்யக்ஞான பிரசார சங்கத்தின் வாயிலாக மேலும் சில புத்தகங்கள் வெளிவர உள்ளன. அவை சமண நெறியும் ஆன்ம நலமும், உண்மை சுகத்திற்கு வழி, பிரதிஷ்டை பிரபந்தமும் சமணவழிபாடும், பத்தற விளக்கம் தத்வார்த்தசூத்திரம் ஆகியவை ஆகும். சங்கத்திற்கு நன்கொடை அளிக்கும் அன்பர்கள் பெயர் புத்தகத்தில் இடம்பெறும். நன்கொடையை 'சம்யக்ஞான பிரசார சங்கம்' என்னும் பெயரில் டி. டி. (அல்லது) மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

**அ. சிம்மசந்திர ஜைன் சாஸ்திரியார்,**

சம்யக்ஞான பிரசார சங்கம்.

6A
7-89